303

உ

தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர்: ௨.	அட்சய—மாசி, பங்குனி.	மலர்கள்: ௧௧, ௧௨.

உ

தமிழிற் பிறமொழிக் கலப்பு.

ஒருமொழி என்பது, சிலர் எண்ணியிருப்பது போன்று, கடவுளாற் படைக்கப்பெற்று மக்கட்கு அளிக்கப்படுவதொன்றன்று: மொழிநூல் வல்லார் கூறுவது போன்றே ஒரு மக்கட் கூட்டத்தினரால் நாளடைவிற் படைக்கப்பெற்றுத் திரண்டு வருவதொன்றே யாகும். இந்த நிலவுலகிற் பலவேறு வகைப்படும் நாட்டியற்கைகளையே துணைக்கொண் டெழுதலின், ஒவ்வொரு மொழியும், ஒலியிலும் அமைப்பிலும் வேறுபட்டு நிற்கின்றது. உயிர்ப்பொருள்கள் உயிரில்லாத பொருள்கள் யாவும், தத்தம் இயற்கைகெடுமாறு, மாறுபாடுகள் அடையத் தலைப்படின் அழிந்தொழியும். இங்ஙனமே, எந்தமொழியும் தன் இயற்கை கெடவாவதோர் மாறுபாடடையத் தலைப்படின், அஃதழிந்து போவது ஒருதலையே யாகும். ஆகவே, ஒலியிலும் அமைப்பிலும் முற்றும் வேறுபட்டு நிற்கும் வேற்றுமொழிக் கலப்பு ஒருமொழிக்கு அதன் இயற்கை கெட எய்தின், அம்மொழி விரைவில் அழிந்தொழியும் என்பது நாம் நன்கு நினைவில் பதியவைத்தற் குரியதொன்றாகும்.

இங்ஙனமாகவும், நமது தமிழ்மொழியில் 'ஆரியம் ஆங்கிலம்' எனும் இருமொழிகளின் சொற்களை—நமது மொழியின் இயற்கைக்கு முற்றுமாறான அவ்விரு மொழிகளின் சொற்களை—நமது தமிழ்மக்கள் நூல் வழக்கிலும் உலக வழக்கிலும் வரம்பிலாது கொண்டுவந்து புகுத்துகின்றனர். வைகறையிற் றுயில் எழுவது முதல் இரவிற் றுயில்பெறுங்காறும் நாம் உலகவழக்கிற் பேசும் சொற்களிற் கலக்கும் பிறமொழிச் சொற்களைக்கண்டு அளவிட்டுப் பார்க்கின், அம்ம! திம்பாலில் நாம் கலந்துண்ணும் நச்சுக்குடிநீர் போன்று, அளவிறந்து நிற்றலைக் கண்டு திடுக்கிடுவோம். இனி நூல் வழக்கில்வந்து புகும் பிறமொழிச் சொற்கள், அம்மம்ம! அளவிட்டுரைத்தல் யாவரான் முடியும்? நெடுங்கணக்குப் பயின்ற சிறார் முதன்முதற் படிக்கும் 'டங்கா டமாரம்' வகுப்பு முதல், முடிந்த படிப்பினவாம் 'பி. ஏ., எம். ஏ.' வரையுள்ள ஆங்கிலக் கல்லூரிகளின் நூற்களிலெல்லாம் நூற்றிற்குப் பத்திருபதொழிந்த வனைச் சொற்களெல்லாம் ஆரிய ஆங்கிலச்சொற்களேயாம். இங்ஙனம் வேற்றுமொழிச் சொற்கள் நம் அரிய தமிழ்மொழியில் எத்தகைய வரம்புமின்றிப் புகுந்துவரும் கடுமையினை உய்த்து நோக்கின், இன்னும் பத்தாண்டினுள், நம் இனிய தமிழ்மொழி, நம் அளிய தமிழ்மொழி, ஆரியாங்கிலமொழி யென மாறிவிடும் ஒரு அல்லல் நிலையினை அடைந்துநிற்றல் தெற்றெனப்புலனாகும். அந்தோ! பல்வகைத்திருவும் இழந்துநிற்கும் தமிழ்மக்களாம் நாம் இம்மொழித்திருவினையும் இழந்து என்செய்வேம்! ஏ! தமிழன்னாய்! நீயே நினது மக்களின் கண்களைத் திறத்தல்வேண்டும்.

இனி, எந்தமொழியும் வளர்ந்துமுற்றிய தோன்றுதல் அமையாது என்பதனையும், உலகவளர்ச்சிக்கேற்ப எந்தமொழியும் வளர்ந்துவரல் வேண்டுமெனலையும் யாம் அறியேம் அல்லேம். உலகினில் யாங்கணும் விரிந்துகிடக்கும் நாட்டினரெல்லாம் ஒரு வீட்டினர்போல ஒன்றுபடுதற்குரிய நிகழ்ச்சிகள் பலவாகிய இக் காலத்தில், ஒருமொழியாளர் ஒவ்வொருநாளும் புதிது புதிதாக உணரும் பொருளும் செயலும் அளவற்றனவேயாகும். அவ்வப் பொருளையோ செயலையோ உணரவேண்டின், உணர்த்தவேண்டின், ஒவ்வோர் சொல் வேண்டியதேயாகும். எனினும், அங்

ஙனம் புதிது புதிதாக உணரும் பொருட்கும் தொழிற்கும் ஏற்ற சொற்களை ஒரு மொழியாளர் தம்மொழியின் இயற்கைக்கேற்பப் படைத்துக்கோடலே தம்மொழியைக் காப்பாற்றும் வழியாகும். அங்ஙனம் படைத்துக்கொள்ள முயலாராய்ப் பிறசொற்களைக் கண்டாங்கு எடுத்துப்புகுத்துவோர் தம்மொழிக்குப் பெரியதோர் தீங்குசெய்வோரே யாவர்.

ஆயின், புதியனவாய கருத்துக்களைப் படைக்குந் திறன் ஒரு மொழிக்கில்லையாயின், அக்கருத்துக்களைத் தரும் பிறமொழிச் சொற்களையே அங்ஙனம் எடுத்தாள்வதன்றிப் பிறிது செயற்பாலதியாதெனின், நன்று! நன்று! ஒரு கருத்தினைக்கொண்ட ஒரு சொல்லைப் படைக்கும் திறன், ஒரு மொழியாளர்க்கிருப்பின், அத்திறன் அவர்தம் மொழிக்கும் தானேயமையும் என்க. சொற்களைப் படைப்பதென்பது எல்லோரும் எளிதிற் செயக்கிடப்பதொன்றாகுமா? ஈடும் எடுப்புமற்ற பெரும் புலவர்கள் ஒருங்கு குழீஇப் புதுச்சொற்களை யாக்கக்கோடல் வேண்டும். இப்பெற்றி யுணராரே புதுச் சொற்கள் ஆக்குவான் புகுந்து, அச்செயல் தம் எளிய முயற்சியிற் கைகூடாமையின், அந்நிலையில் தம் செயலின்மையைத் தம்மொழியின்மேலேற்றி யுரைப்பர்.

இனி, பிறமொழிச் சொற்களைக் கொள்ளுதலும் மரபெனத் தொல்காப்பியர் கூறியுள்ளாரே யெனின், ஆம், அவர் கூறியிருப்பதுண்மையே. சான்றோர் செய்யுட்களில், பிறமொழிச் சொற்களைத், தமிழ்மொழியின் இயற்கைக்கேற்ப ஆக்கிக்கொண்டனவாய மிகச்சில சொற்களைக் கண்டு, அவைகட்கு அமைதி கூறியுள்ளார். இதனை, 'இயற்சொல்லானும் செய்யுட் சொல்லாகிய திரிசொல்லானுமே யன்றித் திசைச்சொல்லும் வடசொல்லும் இடைவிராய்ச் சான்றோர் செய்யுள் செய்யுமாறு கண்டு, ஏனைப் பாடைச் சொல்லும் செய்யுட்கு உரியவோ என்று ஐயுற்றார்க்கு, இந்நான்கு சொல்லுமே செய்யுட்குரியன பிறபாடைச் சொல் உரியவல்ல வென்று வரையறுத்தவாறு' என்ற சேனாவரையர் உரையான் உணரலாகும். எனவே இதன்கண் முன்னரே வந்த மொழிகள் ஒழிய, இனிப் பிறமொழிகள் வரலாகாது என்று

வரையறுக்கப்படுதல் காண்க. இங்ஙனம் வந்தனவற்றை நீக்காது கொள்ள அமைதி கூறலே தொல்காப்பியனார் கருத்தென்பதனை 'அந்நிலத்து வழங்குஞ் சொல்லாகிச் செஞ்சொல்லின் வேறுபட்டுச் சான்றோர் செய்யுளகத்து வருவன நீக்கப்படா' என்னும் தெய்வச்சிலையார் உரையானும் அறிதலாகும். இங்ஙனம் வந்துள சொற்கள் தாமும் அவ்வம்மொழிச் சொற்களாகா: தமிழ் இயலிற்கேற்பப் படைத்துக்கொண்ட தமிழ்ச் சொற்களேயென்பது உரையாசிரியர் கருத்தாகும். இதனை, 'வடசொல்லாவது வடசொல்லோடொக்கும் தமிழ்ச்சொல் என்றால் உரையாசிரியர் எனின்' என்றெழுதிச் செல்லும் சேனாவரையர் மறுப்பான் உணரலாகும். இச்சொற்கள் தமிழ்ச் சொற்களாக. பிறசொற்களாக. தொல்காப்பியனார் முன்னுள்ளவற்றிற்கு அமைதி கூறினாராக. அன்றிப் பிறமொழிக் கலப்பினால் தமிழ்மொழி பழுதுபடாதென்றெண்ணி அதனை விதித்தனராக. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த தொல்காப்பியனார்காலத்துத் தமிழ்நிலை என்னை? அக்காலத்து வந்து விரவற்பாலதாகிய பிறமொழிக் கலப்பின் அளவென்னை? இக்காலத்துத் தமிழ்நிலையென்னை? இக்காலத்துத் தமிழ்மக்கள் கையாண்டு வரும் வேற்றுமொழிகளின் அளவென்னை? இவற்றை நாம் உய்த்துணரவேண்டுமன்றே. அன்பர்காள்! மிகவிரிந்து பரந்த அத் தொல்காப்பிய நூலினையே ஒருமுறை உற்றுநோக்கின், எழுத்துச் சொற்களையன்றி மக்களின் உளப்பாங்குகளையும் எடுத்துரைக்கவல்ல பேரியல் நூல் ஒன்று எழுதி முடிப்பதற்குரிய பல்லாயிரக் கணக்கினவாய சொற்கள் நம் தமிழ் மொழியில் அமைந்து கிடத்தலையும், எங்கோ ஒன்றிரண்டு பிறமொழிச் சொற்கள் வந்திருத்தலையுங் காணலாகும். ஆனால், அன்பர்காள்! தமிழ் எழுத்துக்களைப் பயிலும் சிறார் படித்தற்குரிய முதற்பாடம் எழுதி முடித்தற்கும் அந்தோ! எத்துணைய பிறமொழிகளை 'டம்டம்' 'டபடப' என முழக்கம் போட்டுக்கொண்டு வந்து பரப்புகின்றனர். இக்காலத்துத் தமிழ் நூல்கள், தமிழ்ச் செய்தித்தாள்கள் முதலியன நாடோறும் புகுத்திவரும் பிறமொழிக்கலப்பினால் நெருக்குண்டு வரும் நமது தமிழ்மொழியின் நிலையினை, நமது தொல்காப்பியனார்

தமிழிற் பிறமொழிக் கலப்பு.

இன்று காண்பரேல், இக்கலப்பு நம்மொழிக்குத் தீங்கு தருவதன்று என்று உறுதி கூறுவரா? தொல்காப்பியனாரே, காலங்கள் பல செல்லச் செல்ல, மக்களியல்பு, மொழியியல்புகள் மாறுமெனவும், அவ்வக்காலநிலைக்கேற்ப மக்கள் தங்கள் நிலையினையும் மொழியினையும் பேணிக்கொள்ளல் வேண்டுமெனவும் கருதிக் கடிசொலில்லைக் காலத்துப் படினே என்பது முதலாய விலக்குத் தந்தருளியுள்ளாரே. எனவே, நமது மொழியின் உறுதிபற்றி நாம் இன்று துணியக்கிடப்பதொன்று, நம் அருமைத் தொல்காப்பியனார்க்கும் உடன்பாடாவதேயன்றி மறுதலையாகாதென்க.

இனி, முன்னூல்களிற் பிறமொழிச் சொற்கள் சில பல கலந்திருத்தல், இனி நாம் தமிழ் மொழியினைப் பாதுகாத்துக் கொள்ளற்குத் தடையாகாது. மிகப் பழங்காலத்தினராகிய சங்க காலத்தினர் ஓரோவழி வேற்றுமொழிச் சொற்கள் ஒன்றிரண்டு கலந்திருக்கின்றனர் என்பது உண்மையே. அக்கலப்புமின்றி அவர்கள் நூல்கள் இயற்றியிருப்பது அரிதன்று. பின்னுள்ளோரோ ஒரு வரம்புமின்றி நூற்றுக்கணக்கு, ஆயிரக்கணக்கிற் பிறமொழிச் சொற்களை வேண்டிநின்றனர். இதனாலன்றே, இப்பின்னோர் காலத்திலேயே நூற்றுக்கணக்காய தனித் தமிழ்மொழிகள் இறந்துபடத் தலைப்பட்டன. இதனைத் தொல்காப்பியத்திற் குறித்த பலசொற்களை வழக்குவீழ்ந்தன என்றெழுதும் உரையாசிரியர்கள் உரைகளால் உணரலாகும். அந்தோ! இற்றைஞான்றோ ஆயிரக்கணக்காய மொழிகள் இறந்துபட்டன; இறந்துபடுகின்றன. அன்பர்காள்! இங்ஙனம் நம் அருமணிகளாம் பற்பல சொற்கள் மறைந்து போதற்குக் கருவியாயது என்னை? பிறமொழிச் சொற்களாம் பெருவெள்ளமேயன்றே! தமிழ்ச்சொற்களிருக்கவும், அதனை வேண்டாது பிற சொற்களைக் கையாளின், நாளடைவில் அவையிறத்தற் கென்ன தடையுளது?

இனி, பண்டைத் தமிழாசிரியர்கள் தாம் இயற்றிய அரிய செய்யுட்களைப் பெரிதும் வடமொழி முதலாய பிறமொழிச் சொற்கள் விரவாது இயற்றியிருத்தலும், எங்கோ ஒன்றிரண்டு

வருமாயினும், அவற்றைத் தமிழின் இயற்கையொலி, வடிவுகள் குன்றாதிருக்க அமைத்திருப்பதும் யாங்கணும் காணலாகும். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு காட்டுவாம்:

“இருமூன் றெய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
யுச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்(து)
ஏரகத் துறைதலும் உரிய னதாஅன் று.”

இதன்கண், அந்தணர்கள் ஏரகத்திறைவனை வழிபடுதலை எடுத்துரைக்கப் போந்த புலவர் பெருந்தகை, கோத்திரம், பிரமசரியம், ஆகவனீயம் முதலிய தீக்கள், உபநயனம் முதலிய சடங்குகள், தோத்திரம், ஆறெழுத்து மந்திரம், வேதம் முதலிய பலவற்றைக் குறிக்கவேண்டியவாகியும், அவற்றைத் தனித்தமிழ்ச் சொற்களாலேயே காண்பார் கருத்திற் பதியுமாறு குறித்துச் செல்லுதல் காண்க.

“ எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்”

இதன்கண், கரகம் என்னுஞ்சொல் ஆரியச் சொல்லாயினும், தமிழொலியும் வடிவும் பெற்று, ஏனைச் சொற்களொடு ஒன்றி நிற்றல் காண்க. இச்சொற்றொடும் அவ்வந்தணர்கட் குரியதோர் பொருளின் பெயராயிருத்தல்பற்றி அதனை நன்கு விளக்குவான் அச்சொல்லையே எடுத்தாண்டிருத்தலுங் காண்க.

இனி, இடைக்காலத்தினராய கம்பர், கச்சியப்பர், சேக்கிழார் போன்ற கல்வியிற்பெரியர்களும், சிற்சில வடசொற்களை ஆங்காங்கு அமைத்துப் பாடியிருப்பினும், தமிழினைப் பெரிதும் பேணியே இயற்றியுள்ளார்கள். இப் புலவர்பெருமக்கள் வடசொற்கள் வரலாகாது என்னுங் கருத்திலராயினும், அவைகளைக் கொள்ளலே தமிழ்ச் சிறப்பிற் குறித்தென எண்ணினர் அல்லர்.

> பின்னும் பகர்வாள் மகனேயிவன் பின்செல்தம்பி
> என்னும் படியன்று அடியாரினேவல்செய்தி
> மன்னும் நகர்க்கே யிவன்வந்திடில் வாவதன்றேல்
> முன்னம் முடியென்றனள் பான்முலை சோரநின்றாள்

என்னும் கம்பர் செய்யுளின் பொருட் சிறப்பினையும் சொற்சிறப்பினையும் நோக்குவார்க்குக் கம்பர் தாங்கருதிய எப்பொருளினையும் வட சொற்களின் துணையின்றி யெடுத்துரைக்கும் பேராற்றலுடையர் என்பது புலனாகும். இதன்கண், நகர் என்ற தமிழ்ச் சொல்லை வடசொல்லென்பார் சிலருளராயினும், செய்யுள் முழுவதும் தமிழ் நலங்கனிந்த தமிழ்ச்சொற்களின் ஒலியே சிறத்தல் காண்க. எனினும், அவர்தம் செய்யுட்களிற் சிற்சில, உரிய தமிழ்ச்சொற்களிருக்கவும், வடசொற்களைக் கொண்டு நிலவுவதே அவர் தம்மைப் பண்டைச் சங்கநூலாசிரியர் நிலையினின்று சிறிது பிரித்துவிடுங் கருவியாகும்.

> குழைக்கின்ற கவரி யின்றிக் கொற்றவெண் குடையு மின்றி
> இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் னிரங்கி யேக
> மழைக்குன்ற மனையான் மௌலி கவித்தனன் வருமென் றென்று
> தழைக்கின்ற வுள்ளத் தன்னாள் முன்னொரு தமியன் சென்றான்.

இதன்கண் தருமம் எனும் வடசொல்லின்றி அறம் எனும் தமிழ்ச் சொல்லை வைத்துப் பாடல் கம்பருக்கு ஒரு அரிய செயலாகுமா? இதற்குக் கருவியாயது பிறசொற்கள் விரவலாகாது என்னுங் கொள்கையின்மையே யன்றோ! என்றாலும் இதன்கண் தருமம் என்பதனைத் தர்மம் என்றெழுதித் தமிழியலினைச் சிதைத்துவிடாமை காண்க.

இனி, பின்னுள்ளோராய வில்லிபுத்தூரார், குமாரகுருபரர், அருணகிரியார் முதலாய புலவர்கள் சொன்னேக்கொன்றே பெரிதென எண்ணியதனோடு அச்சொன்னேக்குகளமைய, வடமொழிச்சொற்கள் இன்றியமையாதன எனவும் எண்ணியோராவர். இதனால் அவர்கள் தமிழியலமைதியை சிறிது புறக்கணித்துச் செல்லுதலை அடியிற்காணும் செய்யுட்களான் அறிக. வில்லிபுத்தூரார்,

"ஆரண னேயர னேபுவ னங்க ளனைத்தையு மன்றுதவுங்
காரண னேகரு ணாகர னேகம லாசனி காதலனே"

என்றெல்லாம் பாடிச் செல்லுதலும், இதனினும் ஒருபடி ஏறிய குமரகுருபரவடிகள்,

"வால விர்த்த குமார னெனச்சில
வடிவு கொண்டுநின் றுயென்று வம்பிலே
ஞாவ நின்னை வியக்கு நயக்குமென்
னடனங் கண்டும் வியவாமை யென்சொல்கேன்
மால லோசன பாநுவி லோசன
பரம லோசன பக்தச காயமா
கால காலத்ரி சூலக பாலவே
கம்ப சாம்பக டம்பவ னேசனே" என்றெல்லாம் பாடிச்

செல்வதும், இன்னும் ஒரு படியேறிய அருணகிரியார்,

"மகர கேதன முந்திகழ் செந்தமிழ்
மலையின் மாருத மும்பல வும்பரி
மளசி லீமுக மும்பல மஞ்சரி வெறியாடும்
மதுக ராரவ சிஞ்சினி யுங்கன
மதுர கார்முக மும்பொர வந்தெழு
மதன ராசனும் வெந்துவி ழும்படி முனிபால
முகிழ்வி லோசன முஞ்சிறு திங்களும்
முதுப கீரதி யும்புனை யுஞ்சடை
முடியர் பாதியு டம்பில் விளங்கிய வபிராமி
முகர நூபுர பங்கய சங்கரி
கிரிகு மாரித்ரி யம்பிகை தந்தருள்
முருக னேவளர் செந்திலில் வந்தருள் பெருமாளே"

என்றெல்லாம் பாடிச்செல்வதும் நோக்குவார்க்கு இப்புலவர்கள் இன்னிசை வண்ணங்கட்கு வடசொற்கள் பெரிதும் இன்றியமையாதனவென எண்ணியோராவர் என்பதன் உண்மை இனிது புலனாகும். எத்தகைய வண்ணங்கள் பாடுவதற்குரிய இன்னிசைச் சொற்கள் நம் இனிய தமிழ் மொழியில் இல்லை? எத்தகைய வண்ணங்களும் எளிது பாடற்குரிய தமிழ்ச் சொற்கள் எண்ணிறந்தன வெனலை அப்புலவர்கடம் அரிய செய்யுட்கள் சிலவற்றைக் கொண்டே நிலைநாட்டலாகுமே!

இனி, இக்கூறிய மேற்கோள்கடாமும் இறைவனைப் போற்றிசெயு மிடங்களாக, வேற்றுமொழிச் சொற்கள் மிகுந்தும் ஒருவகை ஒலி நயமுடையவாக விருத்தலின், ஓராற்றாற் போற்றப்பெறுவனவேயாகும். அம்மம்ம! இக்காலத்தார் தமிழுமறியாராய், வடமொழியுமறியாராய், எவ்வாற்றாலோ நூலெழுதவோ, அவற்றைப் பள்ளிப்பாடமாக்கவோ அறிவாராய், நம் தமிழுக்குச் செய்து வரும் தீங்குகளே நாம் மிக மிகக் கருதற்குரியனவாகும். இனிப் பிழைபட இடமின்றி எழுதியுள்ள இவர் தம் நூற்பிழைகளை எடுத்துக்காட்டல் பயனில் செயலாகும். வேண்டுவார், இத்தகையாரால் எழுதப்பெற்றுப் பள்ளிப்பாடங்களாகக் குறிக்கப்பெற்றுள நூல்களில் ஏதேனும் ஒன்றைக் கண்டுணர்வாராக.

ஆங்கிலமொழி பற்பல மொழிகளின் சொற்களையே கொண்டு நிற்பதுபற்றி அதனைக் 'கடன்படுமொழி' எனக்கூறுவர். என்றாலும், அதனுட் செல்லும் பிறமொழிச்சொற்களும் வேற்றுமொழிகளின் எழுத்துக்களுடன், ஒலியுடன் செல்லுகின்றனவா? இல்லையன்றோ? ஆனால் நம் மொழியில், ஸ், ஷ், ஜ், க்ஷ், ஹ் முதலிய ஆரிய எழுத்துக்களுடன் அவ்வச்சொற்களையே கொண்டு வந்து விடுவதாகவெண்ணி, ம்ருகம், ஸ்வயார்ஜிதம் என்றெல்லாம் எழுதித் தமிழின் அரிய ஒலியினைப் பாழ்படுத்துகின்றனரே. ஐயகோ! செந்தமிழ்ச் சீரியாம் நச்சினார்க்கினியர், 'வடசொல் தமிழில் வருமிடத்து 'உரப்பியும் எடுத்துங் கனைத்துங் கூறும் வடவெழுத்துக்களின் நீங்கி'த் தமிழொலி பெறல் வேண்டும் என்று குறித்த பொன்னுரையை இவர்கள் அறிவார்களாயின், இங்ஙனம் செய்வார்களா?

இனி, இத்தகைய பிறமொழிக்கலப்பாம் வெள்ளத்தினைத் தடுக்க, யாம் செய்தற்குரியனயாவை எனச் சிறிது எண்ணுவாம். தமிழ்மொழியென வொன்றே தமக்கு என்றும் வேண்டியதே என எண்ணும் உண்மைத் தமிழர் ஒவ்வொருவரும், தாம் தாம் பேசுங்காலும் எழுதுங்காலும் தமிழ்ச் சொற்களையே எடுத்தாளல் தமது கடமையென்று உறுதி கொள்ளல் வேண்டும். சிறார் முதற் கிழவர் ஈறாகவுள்ளார் யாவரும் பிறமொழிக் கலப்பினை எவ்வாற்றானும் வேண்டாது விட்டொழித்தலைக் கடனாகக் கொள்ளல் வேண்டும். தமிழறிஞர்கள் தாம் எழுதும் எத்தகைய நூலையும் தமிழ்ச்சொற்களையே கொண்டு எழுதுதல் வேண்டும். தமிழ் மக்கள் வாழ்க்கையில் வந்து புகுந்திருக்கும் எண்ணிறந்த பிற சொற்களில் ஏதேனும் ஒன்றைப் பேசும் போதோ எழுதும் போதோ காணின், உடனே அதனைக்களைந்து அத்தகைய சொல் இனி என்றும் பேச்சிலோ எழுத்திலோ வாராதொழிய மிகு கருத்துறல் வேண்டும். தமிழ்ச் சங்கங்கள் போன்ற தமிழ் நலங் கருதிய கூட்டத்தினர், தமிழிற் பிறமொழிகள் வந்து குவிவதன் இன்னல்களை நீக்கல் தமது கடனாகக்கொண்டு, விரிவுரை, வெளியீடுகள் வழியாக யாவர்க்கும் எடுத்துரைத்துவருதல் வேண்டும். பள்ளிக்கூடத் தமிழாசிரியர்களாவார் தத்தம் மாணவர்கட்குத் தனித்தமிழிற் பேசவும் எழுதவும் ஊக்கிப் பழக்கிவருதல் வேண்டும். மேலும் அங்ஙனம் பேசவும் எழுதவும் திறமையுற்ற மாணவர்கட்கு அத்திறமை குறித்தே பரிசில்கள் தருதல் வேண்டும். தனித்தமிழ் மொழியில் நூல் எழுதுவார்க்குப் பரிசுகள், பட்டங்கள் முதலியன தருதல் வேண்டும். பிறமொழிச் சொற்களின் கலப்பினை உடன்பட்டு நிற்பார் கலப்புமொழிநூல் எதனையும் எவ்வாற்றிலும் புகுதற்கு இடந்தருதலாகாது. சிறப்பாகக் கல்லூரி, பள்ளிக்கூடங்களில், இத்தகையார் எழுதும் நூல்கட்குச் சிறிதும் இடந்தரலாகாது. இங்ஙனம் பல்லாற்றானும் விழித்துச் செய்யப் பெறுங் கிளர்ச்சிகளே நமது மொழியினைப் பாதுகாப்பனவாகும்.

இனி, ஆரியச்சொல் மிகப்பழங்காலமுதலே தமிழிற் புகத் தொடங்கியதனோடு வரவரப்பல்கிவந்து இன்று நம் பேச்சிலும் எழுத்திலும் எண்ணிறந்து நிற்றலின், அந்த கொடிய பழக்கம்

துணையாகச் சிற்சில வடசொற்கள், எத்துணைக் கருத்துடன் பேசுவாரையும் எழுதுவாரையும் அயரச்செய்து புகுந்துகொள்ளல் இயல்பேயாகும். மிக்குப்பெருகிவரும் ஒரு வெள்ளத்தினை அணையிட்டுத் தடுத்த காலையும், கீழூற்றாகச் சிறிதுநீர் கசிந்தோடிவரும்; வரினும் அவ்வணை யிறுக விறுக அச்சிறு கசிவும் நின்றுவிடுதல் போல, இச்சிறுவரவும் நாளடைவிற் குறைந்து முற்றுமிலா தொழியும். ஆகலின் இச்சிறுவரவினையும், அங்ஙனம் வந்திருத்தலையும் ஒரு பெரும் பிழையாகக் கூறிக்கொண்டிருப்பாரையும் பொருள் செய்யாது விடுத்தல் வேண்டும்.

இனி, ஆரியச்சொற்கள் சிலவற்றைத் தமிழ்ச் சொல்லெனக் கூறி, அதற்கென வழக்கிட்டுக் கொண்டிருத்தலும் பயனில் செயலேயாகும். ஆரியச்சொல்லா, தமிழ்ச்சொல்லா என வழக்கு நிகழ்ந்துழி, அவ்விரு மொழிகளினும் வல்லார் கூறுவதே அதற்கு முடிந்த முடிபாகக் கொள்ளல் வேண்டும். ஆயினும், ஆரியச் சிதைவெனப்படும் பாகதத்தில் நம் தமிழ்ச்சொற்கள் சில சென்று கலந்திருக்கின்றன வாதலின் அவற்றைக்கண்டு, அச்சிதைவு மொழியிலிருந்தே அச்சொற்கள் நம் முதன் மொழியாகிய தமிழிற் போந்தன எனக் கூறுவார் உளராயின், அவர் கூற்றுக்களை நாம் ஒப்புதல் இயலாது. இங்ஙனமே, நம் தூயதமிழ்ச் சொற்கள் பலவற்றை ஆரியச் சொற்களெனக் கூறிவரும் பள்ளிப்பாட நூல்களின் உரையாளராம் ஒரு சாரார் உளர். அவர் கூற்றுக்களுஞ் சிறிதும் பொருத்தமில்லாதன வாதலின் அவற்றையும் பொருள் செய்தல் கூடாது.

இனி, ஆரிய மொழியையாதல் ஆங்கில மொழியினையாதல் நம் தமிழர் பயிலாது ஒதுக்கிவிட வேண்டுமென்பது எமது கருத்தன்று. அவ்விருமொழிகளையும் நன்கு பயின்று அவற்றிலுள்ள அரிய பொருள்களை நம் இனிய தமிழில் ஏற்றுக்கொள்ளுதல் இன்றியமையாததே. எனினும் அவ்வம்மொழிச் சொற்களை, நம் தமிழ்மொழிச் சொற்களின் மறப்பிற்கும் இறப்பிற்குங் கருவியாகக் கொண்டுவந்து புகுத்தலாகா தென்பதே யாம் கூறி வருவதாகும். வேற்றுமொழிச் சொற்களைப் படைத்துத் தருதற்கு, நம் தமிழ்த்தாயின் தலைமக்களாய தமிழ்த் திருவாளர்கள்,

பா. வே. மாணிக்கநாய்க்கரவர்கள், மறைமலையடிகள், மு. கதிரேசச்செட்டியாரவர்கள் போன்ற பேரறிஞர்கள் மலிமுவந்திருக்கின்றனர். ஆகவே, ஆங்கில ஆரியச்சொற்களில் எச்சொற்கேனும் நேரிய தமிழ்ச்சொல் வேண்டுவார் அன்னவர்களைக் கேட்டுணர்ந்து கொள்வார்களாக. செந்தமிழ்ச் செல்வியும் நமது தமிழ்ப் பொழிலும் பிறமொழிச் சொற்கட்கு நேரான தமிழ்ச்சொல் வேண்டுவார்க்கு இயன்றவரை உதவி செய்தவரும்.

இனி, இக்கட்டுரையை முடிக்குமுன், தமிழிற் பிறமொழிக் கலப்பின் தீங்கினை நெடுங்காலமாக உணர்ந்து, அக்கலப்புக் கூடாதென எழுதியும், விரிவுரைகள் கூறியும் வரும் நமது மறைமலையடிகளை வாழ்த்துதல் இன்றியமையாத தொன்றாகும். இப்பெரியார் நம் சங்கத்து ஆண்டுவிழாத் தலைமை கொண்டு, விழாவின் முடிப்புரை கூறிவருங்கால், தமிழ்மொழியில் பிறமொழிக் கலப்புக்கூடாதென்பதனை மிக மிக வலியுறுத்திக்கூறினர். [இவ்விடைப் பிறிதொன்று நினைவில் வருகின்றது. அடிகள் முடிப்புரையில் நமது புலவர் கதிரேசச் செட்டியாரவர்கள் மனவொருமை யடைந்திலரெனவும், வேற்றுமொழிக் கலப்பினை நீக்குவதில் நமது செட்டியாரவர்கள் விருப்பமில்லாரெனவும் சிலர் பிழைபட உணர்ந்தனர், எழுதினர். செட்டியாரவர்கள், 'பண்டை நூலாசிரியர்கடாமும் வேற்றுமொழிச் சொற்களைக் கலந்தது ஒரு பிழையே' என்ற கருத்தினை ஒவ்வாது, தம் கருத்தினை வெளிப்படுத்தச் சில வினாவினார்களேயன்றி, நம் தமிழ் மொழியில், குறித்த வரைவின்றிப் பிறமொழிச்சொற்களை நாம் கொண்டுவந்து விடல் நன்றென எண்ணினாரல்லர். இவ்வுண்மையினை விழாவில் உடனிருந்து நன்கு நோக்கிவந்தவர்களும், பிற்றைஞான்று அடிகளும் செட்டியாரவர்களும் அளவளாவிக் கருத்தொன்றுபட்டதை உடனிருந்து அறிந்து மகிழ்ந்தவர்களும் நன்கறிவர். சுருங்கக்கூறுவாம். தமிழ்மொழி, தமிழர் நலங்களில் செட்டியாரவர்கட்கிருக்கும் மனவெழுச்சி வேறெவர் மனவெழுச்சிக்கும் குறையாததென்பது உறுதி. நிற்க,] அடிகள் கட்டுரையினைக் கேட்டு மகிழ்ந்த தமிழ்மக்கள் அவ்வுரையினைப் பொன்னேபோற் போற்றி அதுமுதல் தூயதமிழில் பேசியும் எழுதியும் வருகின்றனர்.

பள்ளிச்சிறுவர்கள் உறுதியோ மிக வியக்கத்தக்கதாகின்றது. தங்கள் தங்கள் பாடங்களில் உள்ள எண்ணிறந்த வடசொற்களைத் தாமே கண்டும் ஆசிரியர்களைக் கேட்டும் உணர்வதினும், அவ்வவற்றிற்குரிய தமிழ்ச்சொற்களை அங்ஙனமே கண்டுங்கேட்டும் உணர்வதினும் அவர்கள் காட்டிவரும் ஊக்கம் மிக மிகப் பாராட்டற்குரிய தொன்றாகும். ஆ! தங்கள் பெயரைத் தூயதமிழ்ப் பெயராக மாற்றிக்கொண்ட மாணவரும் சிலருளர்! மிக்க இளைஞராய சில சிறார் தத்தம் தாய்மார்களுடன் 'இரசம்' 'சாம்பார்' முதலாய சொற்கட் கீடாகச் சாறு குழம்பு முதலாய சொற்களைக் கூறுமாறு போராடுகின்றனராம்! அம்ம! இத்தகைய இளைய வீரர்களாலன்றோ, நமது தமிழ் மொழியும் தமிழகமும், நம்மொழியும் நம் நாடும் ஆகும். இங்ஙனம் தமிழ் மக்கட்கெல்லாம் தமிழ் மொழியைப் பேணிக்கொள்ளும் புத்துயிர் தந்துவரும் நமது மறைமலையடிகட்கு நமது நன்றியறிவும் வாழ்த்தும் தெரிவிக்கின்றோம். அடிகள் நீடுவாழ்ந்து தமிழ்மொழிக்கும் தமிழர்க்கும் நன்மைகள் பல செய்து வருவார்களாக. நலம். வே.

உ

திருக்குறள் அதிகார அடைவு.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், வடமொழிக் கல்லூரி, திருவையாறு.

இது, திருவள்ளுவ நாயனார் இயற்றிய திருக்குறள் முப்பாலுள் ஒவ்வொரு பாலும் இத்தனை அதிகாரம் உடையது, அவை இன்னின்னவை என நூற்பாவால் அடைவுபடுத்துக் கூறுதலின், இப்பெயர் பெற்றது. ஆசிரியர் பெயர் முதலியவை தெரியவில்லை. பழைய ஏட்டினின்றும் எழுதப்பெற்றது.

நூல்.

அறத்துப்பான் முப்பத் தெட்டவை தன்னுட்
பாயிர நான்கில் லறமிரு பத்தோ

டோதிய் துறவற மொருபதின் மூன்று
மேதமி லூழொன் றெனவிசைத் தனரே.

பொருட்பா லெழுபதி லரசிய லையைந்
தழுக்கி லமைச்சிய லவையி ரைந்தா
மாணிரண் டொருகூ ழுடற்படை யிரண்டு
படர்தரு நட்புப் பதினே ழாகுங்
குடிமைபன் மூன்றெனக் கூறினர் புலவர்.

காமத் துப்பால் கருதுமை யைந்தி
வேழுறு மாண்பா வேழவை யன்றிப்
பெண்பா லாறிரண் டொடும்பொது விருமூன்
றன்பா லூற்றமுப் பத்துமூன் றவையே.

திறத்தமிழ் வேதத் திருவள் ளுவர்தொகை
யறப்பான் முப்பத் தெட்டா சியலாம்
பொருட்பா லெழுபது காமப் பாலை
யைந்தவை நூற்றுமுப் பத்து மூன்றே.

அறப்பான் முப்பத் தெட்டவை தன்னுண்
மறைப்பொருட் கடவுள் வாழ்த்துவான் சிறப்பு
நீத்தார் பெருமை யறன்வலி யுறுத்தலென்
றூர்த்த நான்கு மறப்பாற் பாயிரம்.

இல்லற மிருபா னில்வாழ்க் கையே
வாழ்க்கைத் துணைநலம் புதல்வரைப் பெறுதல்
அன்புடைமை விருந்தோம்ப லினியவை கூறல்
செய்ந்நன்றி யறிதல் நடுவு நிலைமை
அடக்க முடைமை யொழுக்க முடைமை
பிறனில் விழையா மைபொறை யுடைமை
அழுக்கா றாமை யொடுவெஃ காமை
புறங்கூ றாமை பயனில சொல்லாமை
தீவினை யச்ச மொப்புர வறித
லீகை புகழென் றியம்பினர் புலவர்.

துறவறம் பன்மூன் றருளு டைமை
புன்புலான் மறுத்த லன்பொடு புரிதவம்

கூடா வொழுக்கங் கள்ளாமை வாய்மை
நல்வெகு ளாமை யின்னாசெய் யாமை
கொல்லாமை நிலையாமை துறவுமெய் யுணர்தல்
அவாஅ வறுத்த லெனவேண் டினரே.

ஊழொன் றுரைப்ப வப்பான் முற்றே.

பொருட்பா லெழுபதி லரசிய லியைத்
திறைமாட்சி கல்வி கல்லாமை கேள்வி
கற்றறி வுடைமை குற்றங் கடிதல்
பெரியாரைத் துணைக்கோடல் சிற்றினஞ் சேராமை
தெரிந்து செயல்வகை செய்வலி யறிதல்
கால மறிதல் கருதிட னறிதல்
தெரிந்து தெளிதல் தெரிந்துவினை யாடல்
சுற்றந் தழாலொடு பொச்சா வாமை
செய்ய செங்கோன் மைகொடுங் கோன்மை
வெருவந்த செய்யா மைகண் ணோட்டம்
உலவுமொற் றூட லூக்க முடைமை
அலைமடி யின்மை யாள்வினை யுடைமை
யிடுக்கணழி யாமை யென்றனர் புலவர்.

அமைச்சிய லீரைந் தாவ தமைச்சு
சொல்வன் மைவினைத் தூய்மைவினைத் திட்பம்
வினைசெயல் வகைதூது மன்னரைச் சேர்ந்தொழுகல்
குறிப்பறித லவையறித லவையஞ் சாமை
ஆக வீரைந் தமைச்சிய லென்க.

அரணிரண் டாவது நாடட னரணே.

கூழொன் றென்ப குறிப்புணர்ந் தோரே.

பொருள்செயல் வகையிற் படையிரண் டாவன
பொருபடை மாட்சி யொடுபடைச் செருக்கே.

நட்புப் பதினே ழாவன நட்பு
நட்பா ராய்தல் பழமைதீ நட்பு

கூடா நட்பு பேதைமை தன்னொடு
புல்லறி வாண்மை யிகல்பகை மாட்சி
பகைத்திறந் தெரிதல் பகரு முட்பகை
பெரியோர்ப் பிழையாமை பெண்வழிச் சேறல்
வரைவின் மகளிர் கள்ளுண் ணாமை
சூது மருந்தெனச் சொற்றனர் புலவர்.

குடிமை பன்மூன் றுவன குடிமை
மானம் பெருமை யொடுசான் றாண்மை
சேர்பண் புடைமை நன்றியில் செல்வம்
செய்ய நாணுடை மைகுடி செயல்வகை
உழவு நல்குர விரவிர வச்சங்
கயமை யென்றிவை கட்டுரைத் தனரே.

காமத் துப்பா லையைந் ததனுள்
எழுறு மாண்பா லேழவை யுரைக்கில்
தகையணங் குறுத்தல் தான்குறிப் பறிதல்
புணர்ச்சி மகிழ்தல் நலம்புனைந் துரைத்தல்
காதற்சிறப் புரைத்தல் நாணுத்துற வுரைத்தல்
அலரறி வுறுத்த லாமிவை யென்ப.

பெண்பா லாறிரண்டு பிரிவாற் றாமை
படர்மெலிந் திரங்கல் கண்விதுப் பழிதல்
பசப்புறு பருவரல் தனிப்படர் மிகுதி
நினைந்தவர் புலம்பல் கனவுநிலை யுரைத்தல்
பொழுதுகண் டிரங்கல் உறுப்புநல னழிதல்
நெஞ்சொடு கிளத்த லொடுநிறை யழிதல்
அவர்வயின் விதும்பலென் றுங்குரைத் தனரே.

பொதுவதி கார மிருமூன் றவைதாம்
குறிப்பறி வுறுத்தல் புணர்ச்சி விதும்பல்
நெஞ்சொடு புலத்தல் நீங்கரும் புலவி
புலவி நுணுக்க மூட லுவகையென்
றவகினா வறிஞ ரறைந்தன ரிவையே.

முற்றிற்று.

௨

குமரகுருபரவடிகளும், அவர் நூல்களும்.

திருவாளர். இ. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள்,
வடமொழிக் கல்லூரித் தமிழாசிரியர், திருவையாறு.

முற்றொடர்ச்சி. (206-ம் பக்கம்).

நல்வளமீக்கூர் நால்வகை நிலமுடைப் பாண்டி நாடாகிய நங்கைக்கு, அழகிய முகமனையதாய், வயிணவர்கள் வைகுண்டமெனவும், சைவர்கள் திருக்கயிலாயபுரமெனவும் பேரிட்டழைக்கப் பெறும் பேரூரிலே, அறநெறிபிழையாப் பெருநெறியாளராகிய பாண்டிவேளாளர் மரபிலே, அடியார் திறத்தும் கடவுட்பாங்கினுஞ் செம்மனமுடைய சீலர்களுள்ளே, இல்லறநிலையே நல்லற நிலையாக்கொண்டு எவ்வாற்றானும் பிறரிணையாகாவண்ணம் ஒழுகும் பெருந்தகையா ரொருவர், பொற்புறு கற்பிற்சிறந்த தம் மனைவியாரொடு, மகப்பேறு கருதிச், சீரலைவாய்த் தேவனை, ஒழுக்கமுந் தவமுமுயர்வுறக்கொண்டு நோன்புழக்க, அத்தேவனருளால் அந்நங்கையர் வயினுதித்தனர் ஒருவர்; இவரே, இங்குக் குறிக்கப்படும் அடிகள்.

அங்ஙனந்தோன்றிய புதல்வருக்குத் தாய்தந்தையர் மகிழ்ச்சியொடு பிறப்புரிமைச் சடங்கு முதலியவற்றை மறைபுணர் பெரியாரற் செய்வித்து, பெறற்கரும் பேறுகளிற் சிறந்த மகவாகலின் மிக்கவருமையொடும் வளர்க்க, அம்மதலையார் வளர்பிறை நிகர்ப்ப வளர்ந்து வந்தார். அங்ஙனம் வளரும் பிள்ளையார், சிலவாண்டுகள் காறும் பேசாமையின், இருமுதுகுரவர் துயருறுமுளத்தொடு குழவியாரைக் கையகத்தேந்தி, மூங்கையேயாய விப் பிள்ளையை யாவனமக்குத் தந்தனனோ, அன்னவனருளாலே விம்மூங்கை திருமன்றி வேறியாவரானுந்தீர்த்தல் முடியாதெனத் தேறித் தம்மனைவிட்டு, மறுகிடைப்புக்கு, நற்குறிகள்பல எதிர்ப்பட, உளமகிழ் பூத்துத் திருச்செந்தூரைச்சென்றெய்தினர். அக்காலை அம்மதலையார், ஐயாட்டைபளவினராவர். பல்வகை வனப்புடை

யவ்வூர்க் காட்சியைக் கண்ணாரக்கண்டு, செவ்வேள் திருமுன் சென்று, இலவிபூதி முதலியபெற்று, அன்னவன் பொன்னடிகளைப் பல்லாற்றானும் பாடிப்போற்றித், தம்பிள்ளையை யாண்டே விட்டு, 'இப்பிள்ளை நின்னடைக்கலம், கருணை பொழிதல் வேண்டு' மென வேண்டிக்கொண்டு பெற்றவரிருவருந் தம்மூர்ப் புக்கனர்.

இஃதிவ்வாறாகத், திருமுன்னின்ற ஊமைப்பிள்ளைக்குச் செந்தூரா னல்லருட் பெருக்கத்தா லறிவுபெருக, சண்முகவிலாசம் எனுமிடத்தை யம்மதலையார் சார்ந்து, அறுமுகவனறிவுருவாய்த் தோன்ற விருந்தனர், இப்படிச்சின்னாள் கழிந்த பின்றை, சேவலங்கொடியோன், ஓர் குமரன் வடிவு கொடு அத்தோன்றலார் முன்றோன்றித், 'தோன்றல்! உன்னுள் இலகுவானியானே, யெனக்கூறிக், 'குரிசிலாய் நீயா' ரென்ன, வாய்திறந்து அடியேனென்று பகரக், குன்றமெறிந்த வென்றிவேலுடையையன் அப்பிள்ளையாருக்கு, முப்பஃதெழுத்துமுடை முதன்மொழியாஞ் செந்தமிழ்மொழியையும் ஐம்பத்தோரெழுத்துடை யாரியமொழியையும் அவைகளிலுள்ள இயலையும் அரிறபத்தெரித்து, இலக்கியமுமறிவுறுத்திப், பெரும்புலமைபுந்தந்து, செய்யுள் செய்யுந்திறனும் சொற்பொழிவாற்றுஞ் சொல்வன்மையு முதவிச், சமய முதலாய தீட்சைகளையுஞ் செய்து, மறைபுணரா மலரடிகளை முடியினிருத்திச், சைவசித்தாந்தவுண்மையைத் தெரிக்கும் பதிபசு பாசமாம் முப்பொருளையுந் தெளிவித்து, நூலுரை நவலும் நுண்ணறிவின் நோன்மையோனாகியென்றுபுகன்று, மீண்டு நீ கல்லாடை தரித்துச் சடைமுடிதாங்கி யெம்மெய்ம்மையினை யுல்கினர்க்கறிவுறுத்தியெனப்பகர்ந்து, நீறுதந்து, தந்திருவுருக்கரந்தனன். அறுமுகன் பணித்தாங்கு அப்பெருந்தவமுடையார், கல்லாடை முதலிய குறித்தாங்குடீஇக் கோலமாமயிலோன் குமரனாகி வந்து, குருபரனாகியென மொழிந்தருளினமையான், குமரகுருபரனெனப் பெயர்தாங்கிப் பன்னிருகையுடை யையன் பன்னரும் பான்மையுணர்ந்து. அடங்காமகிழ்வெனும் பெருக்கிடைப்பட்டனர். அன்னணங்களிப்புற்ற குமரகுருபர முனிவரர், தடுத்தாட்கொண்ட சத்திவேற்படை யெங்குமரனுக்கு, இருமொழியினு

மிகமேம்பாடுற்றதும், தெய்வத்தன்மை யேயப்பெற்றதுமாகிய செந்தமிழ்மொழியில், 'பூமேவு செங்கமலப்புத்தேள்', என்னு முதலையுடைய கலிவேண்பா வொன்று பாடிமுடித்துப் பலபுலவர் பெருமக்கள் பாங்கிற் சூழ வாண்டேவதிந்தனர்.

இப்பெற்றியறிந்த பெற்றவர், நாஞ்செய் நற்றவநன்று நன் றெனச் செந்தூர்ப்போந்து, தஞ்சேயின் நற்செயலைச் செவ்விதி னோர்ந்து, தங்குலத்தெய்வமெனக்கருதி வணங்கி, மீண்டெய்தி னர் தம்மூர்ப்பக்கலை. முனிவரும், முருகனற்றுளை முன்னி, யன்னவனோடு புறவிடைபெற்றுத், தம்மூரையணைந்து, திருக் கோயில் கொண்டருளிய மால்விடைப்பாகற்குக் கயிலைக்கலம்பக மொன்று பாடித்துதித்து அப்பதிவிட் டரிதினகன்று, நெல்வேலி முதலிய வானமர் நகரிற்புக்கு, வழிபாடுசெய்து, வடநாட்டிற் கேகுங்கருத்துட்கொண்டு புறப்பட்டு, அடியவர் பலர் முடி- சாய்த்து வழிபடவந்து, செந்தமிழ் மணந்திகழ் நந்தலில்வளமுறு மதுரையை யண்மி யந்நகர்க் காட்சியை யாண்டுள வடியவர் காட்டக்கண்டுவந்து, ஆலவாயடிக ளமர்ந்துறை ஆலயம்புக்கு, எத்திறத்துஞ் சித்திதரு மூத்தபிள்ளையாரையும், வள்ளிதன் அரக் காம்பலூறற்குத் தள்ளாடித் தடியூன்றிக் கிழவனுய்ச் சென்றிரந்த இளையபிள்ளையாரையும் முறையேவணங்கி, அங்கயற்கண்ணி யாரருட்டிருக்கோலங் கண்டு எல்லாம்வல்லனுதலை சித்தனு யுலகிற் குணர்த்திய விறைவனையும் வழிபட்டுக்கொண்டு இருதிறப் பொருளுமீன்ற வம்மையார் திருமுன்னுன மறுகில் அமைக்கப் பட்ட மடத்திலமர்ந்து வளம்பலதரு மிளந்தருக்கோலமுடைய நாயகியார்மீது இணையற்றசுவைபலவுடைய பிள்ளைக்கவியொன்று பாடி முடித்தனர்.

அக்காலை அங்கயற்கண்ணியம்மை தண்ணருளால் ஆலவா யாளும் அரயாராம் திருமலை நாயகர் கனவிற்றோன்றி யெம்மிளஞ் சேயார் திருவருளுற்றொருவர், ஈண்டுற் றெம்மீதுபாடியுள்ள பிள்ளைக்கவியைக்கேட்பாயெனக்கூறி மறைய, அம்மன்னனுடனே துயினீத்துத் தம்மமைச்சரைக்கொண்டு நம்மூரின்கண் யாது சிறப் புளதென்று வினவி யுள்ளவாறறிந்து பின்னரமைச்சரும் படையும்

புடைசூழச் சென்று குமரகுருபரனாரைக் கண்டவர் தம் அடிகளை முறைபுறவணங்கிப் பலபடவுயர்மொழிகூறிச் செந்நெறிச்செல்வரா முனிவர்! தாம் செய்தநியாது? என, பற்றறுநெறியார், பிள்ளைத் தமிழ்என னுநூலென, இச்செய்தியை மலையரையன் மகளிராங்கயற் கண்ணியார், எளியேற்குக் கனவினி லறிவுறுத்தினரென்று மீண்டுமொருமுறை வணக்கம்புரிந்துநின்ற நாயகருக்கு, நிலையிற் பெரியராங் கலைபுணர்தலைவர் திருநீறுதந் தாசிபலபுகல அம்மன்னன் மகிழ்ந்தேற்றுப் பிள்ளைக்கவியாங்கேற்றற்குரிய நன்னாளொன்று கண்டுமீள, அந்நன்னாளன்று, அப்பெரியரையும் பிள்ளைக்கவியையு முடன்கொண்டு, உலகமீன்ற அம்மையார் திருமுன்னிருக்கையி லிருத்தி அப்பெருநூலை யரங்கேற்றியருளல் வேண்டுமென்று வேண்டிநிற்க, புலவரேறனைய நலமுறுபெரியர் நாளொன்றுக் கொவ்வோர் பருவ விழுக்காடாகப் பத்துநாட்களுள் கேட்டார்ப் பிணிக்குந்தகையவாய்க் கேளாரும் வேட்ப எண்பொருளவாக நுண்பொருளை யெல்லாம் மொழிந்தருளினர்.

அங்ஙனமாக அரங்கேற்றுகையில் ஆறுவது வாரானைப்பருவந் தொடங்குகையில், அம்மையார் இளந்திருக்கோலத்தொடு நாயகர் மடிக்கண் மேவியிருந்தனர்.

இங்ஙனமாகத் திருவருட்டிறம்பல நிகழக்கண்ட திருமலை நாயகரும் பிறரும், அகமிகமகிழ்வுற்றனர். பின்னர்த் திருமலை மன்னன் தன் அரண்மனைக்கு அம்முனிவரரை யெழுந்தருளுவித்து அரியணைமீதமருமாச்செய்து, பொன், மணிமுதலியவைகளான் முனிவரர் நன்மெய் முழுதுமுழுகுதலைச்செய்து, வீரக்கழற்றனை வலக்காலினில் மிலைந்து, யானை, குதிரை முதலியவும், சிவிகை, குடை, கொடை முதலிய விருதுகளும், அம்மெய்ந்நெறித் தூய்மை யாளருக்குச் சிறப்புறவழங்கிப், பாண்டியன்மகளார் திருமுன்னுன மறுகினில் திருத்தளி யொன்றுஞ் செப்பமுறக் கட்டுவித்து அம் மடத்தமர்ந்தருள வேண்டி மகிழ்வித்தனன்.

மீண்டும் அம்மன்னவன் அன்பின்படியே மிக்கவருவாயுடைய அரியநாயகபுரமெனு மூரைப்பெற்று, வள்ளுவர் தந்நூலைச்சுருக்கித் தெள்ளுதமிழுடை- நீதிநெறிவிளக்க மெனு நூலுமியற்றிப் பல

அன்பர் அவாவியாங்கு மதுரைப் பெருமான்மீது மதுரைக்கலம்பகம் எனும் பெரிய நூலொன்றும்பாடி முடித்துப்பின்னர் நாய்கரிடம் அன்புறு செலவுபெற்று, அவணின்றுமகன்று, திரிசிராப்பள்ளியைவந்துற்று, அந்நகராளும் காவலனும் நாயகரொருவர் எதிர்சென்றழைப்ப அவணிரீஇ அன்னவனகமகிழ்ப்பூப்ப விரிவுரையொன்றுற்றுகையில், பிள்ளைப்பெருமாளையங்கார், இப்பாலணுகி நாயகர் பொருட்டால் துறவறப்பெருந்தகையாளரிடந் தோல்விபுறுமொழி சில சொல்லி, முன்னிற்கமாட்டாது நாயகர் மகிழப் பின்னுற்றனர். அப்பெற்றிமுற்றிய இருந்தவமுனிவார், அவ்விடத்தினின்றுமொருவி, வாட்போக்கி முதலிய பல கோயில்கள் புக்கு ஆங்காங்கெழுந்தருளிய முதல்வர்களை மனவாக்கு வணக்கமும் உடல் வழிபாடும் செய்து மீண்டுஞ் செவ்வந்திபுரமேவினர்; நாயகருமகிழ்வுற்றனர்.

அப்போழ்தத்து முன்னர் முன்னிற்க மாட்டாதோடிய வயிட்டினவையங்கார், இன்னுஞ்சில வயிணவர்களையுமுடன் கூட்டிக்கொண்டு முனிவரர் பக்கலேபோந்து சமயவாதம்புரிந்தனர். அக்காலை அத்துறெநறித் தோன்றலார், பொது, சிறப்பு எனுமிரு பெருநூல்களானுந் தெரிக்கப்படும் அளவைகளானே, சைவ சமயமே மெய்ச்சமயமென நிலைநாட்டி, வயிணவர் வாயடங்க மடக்கி வெருட்டினர். இவ்வருஞ்செயல் கண்ட அரயராகிய நாயகர், மிக்க மகிழ்வுகொண்டு ஓர் மடஞ்சிறப்புற அடிகட்கமைப்பித்தனர்.

பிறகு, குமரகுருபரமுனிவரர் வழியிடைப்பட்ட அன்பிலாலந்துறை முதலிய சிவபிரானுர் மேவிய கோயில்கள்புக்கு, மெய் வாய் மனங்களான் முறைபுற வணங்கித், திருவாவடுதுறை போந்து, மாசிலாமணியாரையும் அம்மையாரையும் அரசரையும் வழிபட்டு, மருண்மலி மனத்தருட்புகாத மாண்புசால் பொருண்மலிதிருமடம்புக்கு, அறிவே வடிவுடை நமச்சிவாயகுரவன் நளினமலர்புரை நற்றுளை நலமுற நச்சித் துதித்து, மெய்த்தவ வுருவுடையடியார்களைக்கண்டு நால்வகை நெறியுடை நன்நெறியாளரைக் கண்குளிரக்கண்டு, நமச்சிவாய குரவனற்றுளை நினைந்து நினைந்து

அகமகிழ்ந்து, மீண்டுமக்குரவன் உவகையொடு பெயரிட்டழைக்கக் குமாரகுருபரர் அன்னார்பக்கலையண்மி, முப்பொருள் விளக்கும் சிற்பநூலை வினவி யுள்ளனவற்றைத் தெள்ளிதினுணர்ந்து, நம் குரவனே யாவனென்றுளத்துன்னினர். (தொடரும்.)

உ

பிறப்போக்கும் : சிறப்பொவ்வர்.

(ஓர் ஆங்கிலநூலிற் கண்டபடி).

திருவாளர். ஔவை. சு. துரைசாமி பிள்ளையவர்கள்,
ஆசிரியர், க. த. சங்கம்.

வடுவிலா வையத்து மன்னிய மூன்றனுள் நடுவணதெய்த இருதலையுமெய்தும் என்னும் செம்பொருளுணர்ந்து, அந்நடுவணதாய பொருளீட்டல் கருதித் திரைகடல்வழியும், மைவரைவழியும் பல நாடுகளுக்குச் செல்லும் மக்கள் உளராதல்போல, சிற்றுயிர்களுள் தேன் தேடிப்பலதிசைகளுக்குஞ் செல்வன பலவுள. அவற்றிற்குத் தேன் எனவும், அளியெனவும், வண்டெனவும், சுரும்பெனவும் பலபெயர்கள் உண்டு. நிற்க, ஈண்டுத் தேன் தேடிச்சென்ற வண்டொன்றின் வரலாற்றினையே யான் கூறத்தொடங்குகின்றேன்.

புதுத்தளிர் தோன்ற, பூக்கள் மலர, நறுமணம் எங்கும் நன்கு பரவ, மலையாநிலம் மருங்குவந்தசைய, யாண்டும் இன்பமே இலகித்தோன்றும் இளவேனிற்காலத்து முதுபகலொன்றின் பிற்பகலில், தேனீயொன்று நறுந்தேன் வேண்டிக் காவும், சோலையும், கவின்பூந்துருத்தியும் புக்கு, ஆண்டாண்டு மலர்ந்து வயங்கும் பூத்தொறும் சென்று, கொளற்கரிய தேன் மிகைபடக்கொண்டு, அதனாலெழுந்த உவகையால் விரைந்தெழுந்து, தன்கூடு நோக்கிச்செல்லத்தொடங்கிற்று. ஆயினும், அதுபோது, அது பூவியல்

நறவம் மாந்திப் புந்தி மயக்குற்றிருந்தமையால், வழியறியாது மேலெழுந்து சென்று, அருகிருந்த ஓர் பேரகத்தின் மேற்சாளரத்தினூடே அதன் உட்புற மடைந்தது.

அக்காலை அப்பேரகத்தின்கண் ஏதோ ஒருசிறப்பு நடைபெற்றது: இனியவும் மணமிக்கவுமாய பண்டங்கள் பல மலிந்திருந்தன. மிகப்பலமக்களும் கூடியிருந்ததோடமையாது சொல்லாடலானும், இசைக்கருவிகளானும் பிறவற்றானும் பேரோசையும் செய்வாராயினர். இவற்றைக்கண்ட தேனீயின் கருத்தில் அச்சந்தோன்றி ஒருபுடைவருத்தினும், பண்டங்களின் சுவையும் மணமும் அதனை வெளியேகவிடாது ஒருபுடைத் தகைந்தன. தகையவே, தேனீயும் நறுமணப்பண்டங்கள்வைத்துள்ள தட்டொன்றின் புறத்தேதங்கி, அவற்றின் மணத்தை நுகர்ந்தும் சுவையைத் தேர்ந்தும் சிறிதுபோது கழித்து நிற்க, "ஆ! இதோ பார். தேனீ! தேனீ!!" எனக்கூறிக்கொண்டே சிறுவர் இருவர் அதனருகேவந்தனர். இச்சொற்களைக்கேட்ட அவ்வீயும், உடனே அச்சத்தால் உடல் நடுங்க வெளிச்செல்வான் முயன்று ஒருசாளரத்தின் மேற்பாய்ந்தது. பாவம்! அதன் கதவு கண்ணாடியா லாயதாகலின், அக்களிவண்டு அதனையுணரவியலாது மயங்கி, ஆடியில் மோதுண்டு கலங்கிக் கீழேவீழ்ந்து, பின்னர்ச் சிறிது தேறி, சாளரச்சட்டத்தின் கீழ்ப்புறத்தே தான் மயக்கத்தாலும் அச்சத்தாலும் இழந்த மனவமைதியும் வன்மையையும் மீட்டும் பெறற்பொருட்டு விழுந்து கிடந்தது.

நிற்க, இதனைக்கண்ட சிறுவர்களிருவரும் அருகேபோந்து, இதைப்பற்றிய ஒரு சொல்லாடல் நிகழ்த்துவாராயினர்.

சிறுவன் :—தங்காய்! இதுதான் தேனீ. இதனைத் தொழில்புரி தேனீ என்பதும் வழக்கு. இதன் இருதுடைகளுக்கு மிடையிலுள்ள மெழுக்குப் பையினையும் காண். ஆ! என்ன ஊக்கமும் உழைப்பு முடையது இது தெரியுமா!

சிறுமி :—அண்ணல்! மெழுக்கையும் தேனையும் ஆக்குவது இத் தேனீதானே?

சிறுவன் :—ஆம். பூக்களின் உள்ளிருக்கும் இனியதேனை இது அவற்றின் உட்சென்று கொணர்கிறது. முன்னொருநாள் நாம் நம்பூம்புதரின் அகத்தும் புறத்தும் "கம் கம்" என எண்ணிறந்த ஈக்கள்மொய்த்து இசைத்தது கண்டோ மன்றோ! அவை அங்குமிங்கும் பறந்து திரிந்ததைக் கண்டு நகைத்தோமல்லவா? இளந்தளிர்களின் மீது இவை படருங் காலத்து இவற்றின் மெய்யழகு நம் உள்ளமெல்லாம் கொள்ளை கொள்ளவில்லையா? நிற்க, இது இன்று காலையில் தேனீட்டுங் காலத்தும் யான் பார்த்ததுண்டு. இதற்குத் தேனீட்டலொன்று தான் தொழிலெனல் ஆகாது. இதனொடு வேறுபல காரியங்களும் இது செய்தல் வேண்டும். தேன் கூடு கட்டுதல், அதனை யழகு செயல் முதலிய எல்லாக் காரியங்களையும் இதுதான் செய்தல் வேண்டும். இது பற்றியேதான் இது தொழில்புரி தேனீ என்றழைக்கப் பெறுதலும் காண்க. பாபம்! பாபம்!!

சிறுமி :—தொழில்புரிதேனீ என்பது யாது? அண்ணு! தாங்கள் "பாபம்! பாபம்!" என்று இதன்மாட்டு இரங்குவதேன்?

சிறுவன் :—ஏன் தெரியாது? நம் அத்தான் நேற்று நமக்குச் சொன்னதை மறந்துவிட்டாய் போலும்: தம்மைச் சிறிதும் ஓம்பாது பிறர்நலமே யோம்பி யவர்க்கே ஆட்பட்டுச் சிறு தொழில் புரியும் மக்களனைவரும் இரங்கற்பாலரே! அவர் வகையின் பாற்படுவதே இத்தேனீயுமாகலின், யான் இதன் மாட்டும் மனமிரங்கல் வேண்டிற்று. இவ்வீக்களுக்கு அரச ஈ ஒன்றுளது. அதனை ஈயரசி யென்பதுவே பெரு வழக்கு. அது ஒரு சிறுதொழிலும் செய்யாது, எஞ்ஞான்றும் தொழிலீக்கள் அமைத்த கூட்டின்கண்ணே இருந்து, அவை கொணரும் தேனையுண்டலும், கொணர்ந்த ஈக்கட்கு வேறுபணி பணித்தலும், தான்பயந்த சிற்றீக்களைப் புரத்த லும், இவற்றோன்ன பிறவுமே செய்து கொண்டுவரும். அதற்கு வேண்டும் சிறுபணிகளை, மருங்கிருந்து ஆர்க்கும் வண்டுகள் செய்யாநிற்கும். இவற்றிற்கு வேறாக வெற்றீக்

கள் பலவுள. அவை ஒரு தொழிலும் செய்யாது வீணே அங்குமிங்குந் திரிந்துகொண்டிருப்பவை. ஏனையவை யாவும் இவ்வீயைப்போன்று தேனீட்டிப் பிறவற்றிற் களித்தலோடு, அவற்றிற்காம் சிறுதொழிலைப் புரிபவையே யாகும். இக் கூறியவற்றை நம் அத்தான் அறிவாரேல் அவரால் நகைத்து அடங்குதல் முடியாது.

சிறுமி:—ஆனால் இச்செய்திகள் அத்தானுக்குத் தெரியாவோ?

சிறுவன்:—இல்லை. அவருக்குத் தெரியும் என்று யான் நினைக்கவில்லை. தெரியுமாயின், அவர் இவற்றைப்பிடித்தலும், பிடித்துத் துன்புறுத்தலும் செய்யாரன்றே. யான் எவ்வாறு அறிந்தேனெனின், எனக்கு நம் சோலைக்காவலன் கூறினன். நிற்க; நெருநல் அவர் கூறியவற்றை நோக்கினையா? இவ்வுலகில், அரசர், அரசியார் என உயிர்களுட் சிலரிருத்தல் இயற்கைக்கே மாறனதாம்; எல்லாரும் ஒரே அச்சாக இருப்பதே இதற்குப்போதிய சான்றும்; இயற்கையிற் றோன்றும் ஒவ்வொரு பொருட்கும் பிறப்பினுல் ஒருவகை வேறுபாடும் இன்றும்; எனவே, அரசர் எனவும் அரசியரெனவும் இருப்பவர் நடுநிலைவரம்பைக் கடந்தவரே யாவராம்.

சிறுமி:—ஆனால், இவற்றை உய்த்துணர்ந்து கோடல் இவ்வீக்களுக்கு இயலாதென யான் நினைக்கின்றேன்.

சிறுவன்:—நினைப்பதென்ன! உண்மையிலே அது அவற்றிற்குக் கிடையாதுதான். சோலைக்காவலன் கூறியவற்றைமட்டில் இத்தொழிலீக்கள் கேட்டிருக்குமாயின், எத்தகைய சினங் கொண்டிருக்கும்! நீயே நினைத்துப்பார்!!

சிறுமி:—அவன் கூறியதென்ன?

சிறுவன்:—அரசியையும் ஆட்பட்டோமுகும் சிற்றீக்களையும் சீர் தூக்குங்கால், பிறப்பினுல் அவற்றிற்கிடையில் ஒருவகை வேறுபாடும் இல்லை. பிறப்பும் தோற்றமும் ஒன்றே. எனினும் இவ்வேறுபாட்டைத்தருவன உண்டிவகையும், உறையுளின் தன்மையுமேயாம். இச்சிற்றீக்களை வளர்க்கும் பெடை வண்டுகள், சிலவற்றிற்கு ஒருவகை உணவும், வேறு சிலவற்றிற்கு

ஒருவகை உணவும்; சிலவற்றிற்கு ஒருவகைக்கூடும், வேறு சிலவற்றிற்கு வேறுவகையான கூடும் தருகின்றன. அதனால் சில ஈயரசிகளாகவும், சில தொழிலீக்களாகவும் மாறுகின்றன. இக்கருத்தே நெருநல் நம் அத்தான் மன்மக்களையும் தொழில் மக்களையும்பற்றிக் கூறியவற்றுள் அமைந்து கிடந்தது. "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்." என்பது தமிழ்மறை. நிற்க, உண்ணுங்காலம் ஆயிற்று. வா, போகலாம்.

சிறுமி:—அண்ணல்! சிறிது நில்லுங்கள். யான் இவ்வீயை வெளியே விடுத்துவருகிறேன்.

இங்ஙனம் கூறிக்கொண்டே, அச்சிறுமி தன் கைத்துணியால் அதனைப் பைய வெடுத்து அருளொழுக நோக்கி, "அந்தோ! ஏ! கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி! குழவிப்பருவத்தே உன்னை வளர்த்தோர் உனக்கு உண்டியும் உறையுளும் உயர்ந்தன கொடுத்திருப்பரேல், ஆ! இன்றுநீயும் ஒரு ஈயரசியாக இருப்பா யன்றோ! என்ன இழிந்த நிலையை உனக்கு அவர் தந்துள்ளார்! அறிதியோ? கிடக்க, நீ இனி வெளிச்சென்று, உன்வாணாள் முற்றிலும் மெழுகு செய்தலிலும், தேனீட்டலிலும் செலவிடல்வேண்டும். செல்க. செல்க. நீ மேற்கொண்ட சிறுதொழில் சீர்த்தொழிலாமாக!" என வாழ்த்தி, சாளரத்தின் புறத்தே விடுத்தனள். வெளிப்போந்த வண்டு, கழிபேருவகைகொண்டு தன் வழிச்செல்கை தொடங்கிற்று.

ஆ! என்ன இனியமாலைக்காலம்! காட்சிக்கினியமாலைக்காலம்! காதலர்கூடிக் கலந்துரையாடும் மாலைக்காலம்! இங்ஙனம் இளவேனிலின் முதுமாலை, மன்னுயிர்க்குப் பேரின்பம் பயந்து இனிதாய்த் தோன்ற, அத்தொழிலீக்குமட்டில் அத்தன்மையின் மாறுபட்டுத் தோன்றிற்று. அதன் மனம் ஏதோ ஓர் பொருளாற் பற்றப்பெற்றுத் துயர்பூண்டிருந்தது; அடிக்கடி அது ஒருவகை புணர்ச்சியால் நாணி மிக வருந்தத் தொடங்கிற்று. இவ்வாறு வருத்தமும் துயரமும் மயங்கிய உள்ளமொடு அது தன் கூட்டை—பணிசெய்து கிடப்பதே தன்னறமாகும் என்னும் கொள்கையுடன்

அன்று காலையில் விட்டுப்பிரிந்த தன் கூட்டை—அடைந்தது. அடைதலும், அடக்கலாகா வெறுப்பும் வெகுளியும் அதன் உள்ளத்துத் தோன்ற, அது தான் கொணர்ந்த தேன்பையை நெகிழ்த் தெறிந்து, மனம் சலிப்படைய, "எல்லாவுயிரினும் கடைப் பட்டேன் யானே காண்" என அறைந்தது.

அக்காலை, அங்குச் சிறுதொழில் செய்துகொண்டிருந்த மற்றொரு தொழிலீ இதனைக் கேட்டு, "என்னை செய்தி? என்னே நின் செய்கை யிருந்தவாறு! வெறிமிக்க வேங்கையின் தேன் உண்டனைகொல்லோ? அன்றி அக்கொடிய பச்சிலைப்புழு நம் கூடுகளில் தன் முட்டையிட்டுளதுபற்றிச் சினங்கொண்டனையோ? என்னைகாரணம்?" என வினவிற்று. அதற்கு இது, "நீ கூறிய யாதேனும் வேண்டுங் காரணமாகாது. ஐயோ பாவம்! அவை யென் செய்யும்? தாந்தாமுன் செய்தவினையைத் தாமே துய்ப்பதல்லது பிறர் செய்வதென்?" எனவிடையிறுப்ப, அது, "பின்னர் என்னையோ காரணம். உரைத்தி" என மீட்டும் வினவ, இது கூறும்:— "இல்லை. அன்ப! இன்று காலையிற் சென்ற யான் மிக்க சேணிற் சென்றேன். சென்றவிடத்து யான், இதுகாறும் கேட்டறியாதனவெல்லாம் கேட்டேன். கேட்டவற்றின் கருப்பொருள் "நாமெல்லோரும் இழிதொழில்புரியும் இழித்தக்க உயிர்களாவோம் என்பதே."

இவ்வுரை அதன் செவிப்படலும், அது திடுக்கிட்டு, "நீ இதுகாறும் அறியாத இதனை உனக்கு உணர்த்தியவர் யாவர்?" எனக் கேட்ப, இது சாலவெகுண்டு, "உண்மையை யுணர்த்துபவர் யாவராயினுமென்! யான் இன்று அறிந்தது முற்றிலும் உண்மையே. இதுமட்டில் உறுதியே." என்றது.

எனவே, அது, "ஒருகாலும் நீகூறியது உறுதியுடைத்தன்று. பேதைச்சிற்றுயிரொன்று இங்ஙனம் பிதற்றியதுகொண்டு, பிழைபட்டொழுகுதல் பெருந்தகைமையயன்று. நீ இழித்தக்கோய் என உணர்வுணர்த்தினோரா லுரைக்கப்பட்ட அச்சிறுபொழுதுகாறும் நீ அப்பெற்றியை யல்லை யென்பதை நீயே நன்கறிவாய். ஆகவே, அவர் உரைத்தாரென நீ கூறும் உரை வெற்றுரையென்ப

தனினும் வெளிற்றுரையெனவே யான் கூறுவேன். இனி இதைப் பற்றிக் கூறுதலும் அறமாகாது.'' எனக் கூறிக்கொண்டே தான் முன்னர்க் குறைபடவிட்ட காரியத்தைச் செய்யத்தொடங்கிற்று.

எனினும், இவ்வுரைமுழுதும் செவிடன் காதில் ஊதப்பெற்ற திவவொலியே போலப் பயனின்றி யொழிந்தது. ஆனால், இதுமட்டில், தன்னொத்த ஈக்கள் பலவற்றை ஒருங்கழைத்துத் தான் தேன்றேடிச் சென்றவிடத் தறிந்தவை யனைத்தையுந் தெளிவாகக் கூறிற்று. கேட்டவற்றுட் சில பெருவியப்பும், சில பெருங்கலக்க முங் கொண்டன; முடிவில் அவ்வீக்குழாத்தி னிடையில் ஒரு பெருங்குழப்பம் உண்டாயிற்று.

பின்னர்ச் சில ஈக்கள் எழுந்து, உண்மையில் தாம் பிறப்பி னுல் ஒப்பானவை யெனினும், தம்மை அரச ஈக்கள் நடாத்து முறை இழிவானதே யெனவும், அது தம்மை யடிமைப்படுத்துவ தொன்றெனவும், அதனை விரைவிற் போக்குவது முதற்கடன் எனவும் முடிபு செய்தன. இடையிற் சில ஈக்கள் முன்வந்து தாம் தொடங்கிய இயக்கத்துக்குத் தலைமை தாங்கித் தம்மை உரிய நெறியில் நடத்துவதற்கேற்றவர் அச்சிறுவர் தம் அத்தானே யாவர் எனவும் கூறின. அதுபோது, வேறு சில எழுந்து, முன்னர்க் குறிக்கப்பெற்றவரே தலைவராயின், அவர் தம்மை ஒருங்கே யரசஈக்க ளாக்குதலோ டமையாது தம் கூடுகளையும் செவ்வனம் புரந்து, தமக்கு ஒரு மேதக்க சிறப்புரிமையும் தந் தருள்வாரெனவும் வழிமொழிய, ஒக்கும் ஒக்கும் என்னும் பேரொலி கம்மென அக்குழாத்திடை யெழுந்தது.''

ஆ! இதுவும் தகுமா? யாவரும் சிவிகையூரத் தொடங்கின், அதனைக் காவுவார் யார்! இந்நிலையில், சிறிது நாள் முதிர்ந்த தொழிலீயொன்று, அக்கூட்டத்திடைத் தன் தலையை நீட்டி, ''பிறர் நலத்துக்கெனத் தொழில்புரியும் ஈக்களனைத்தும் அரச ஈக்களாக மாறின், நன்று! நன்று!! அவற்றிற்கு ஆம்பணியைப் புரிபவை யாவோ?'' என்றது. கல்லா அறிவிற் கயவர்பாற் கற் றுணர்ந்த நல்லார் தமது கனம் நண்ணுவரோ? நண்ணாரன்றே! ஆகலின், அவ்வீக்க ளனைத்தும், இதனைக் கேட்டதும் சால

வெருண்டு, மதியிலி எனவும், தன்னுரிமை யறியாத் தறுதலையென வும் கூறி, "நாம் அனைவரும் அரசாக்க ளாகுங்கால், இற்றைப் போது அரசு பூண்டிருப்பனவும், அவற்றின் வழித்தோன்றல்களும் தாம் உள்ளளவும் நமக்குப் பணிசெய்து கிடக்கலாமே!" என்றன. என்றாலும், அவ் ஈ மறுமுறையும் எழுந்து, "அவற்றிற்குப் பின்னர் அத்தொழிலை மேற்கொள்ளுவோர் யார்" எனக்கேட்ப, கம், கம் என்னும் பேரொலி ஆங்கு மிக்கெழுந்தது. உடனே, அதுவும் தன் நாவை யடக்கிக்கொண்டது.

மற்றொரு ஈ எழுந்து, "அன்புடையீர்! எனக்கு முற்பேசிய ஈக்கு நிகழ்ந்த வசை அழகற்றதாகும். அது நமக்குட் பிளவை யுண்டுபண்ணினும் பண்ணும். பண்ணுங்கால், நாம் கைக் கொண்ட இயக்கம் வெற்றிபெறாது. நம் கொள்கைக்கு மாறாக வுள்ள, பழைய நிலையிலே தம் வாணாளைச் செலவழித்தார்க்குப் புதிய கொள்கைகளும், உணர்ச்சிகளும், இயக்கங்களும், பிறவும் வெறுப்பைத் தருவனவாகலின், அவ்வெறுப்பை யுடையவரையும் நம் இயக்கத்திற்குக் கொணர்தல் இன்றியமையாது.

"நிற்க, தேனீட்டலும் மெழுகு செய்தலுமாய தொழில் களைச் செய்யும் நாம் அனைவரும் ஈயரசிகளாக மாறிவிடுவோ மாயின், நமக்காக அத்தொழில்களைப் புரிபவை யிலவாக, நம் நிலை மிக்க துன்ப நிலையாய் முடியும். இது நீங்கள் நன்கறிந்த தொன்று. இதனை நீங்களே எண்ணிப்பாருங்கள்.

"என்றாலும், எனக்கு ஒரு எண்ணம் தோன்றுகிறது; அதனை அசட்டை செய்யாது கேட்டு, அமைவுடைத்தாயின் ஏற்றுங் கொள்ளுங்கள். அது யாதெனின், நாம் அனைவரும் ஈயரசிகளாதலினும், அவ்வரசுரிமையையே முற்றிலும் களைந்து விட்டு, அரசா முதல் வெற்றீவரையுள்ள அனைத்தீக்களும் தொழி லீக்களாகமாறி, நமக்குள் ஒருவகை யுயர்வு தாழ்வுமின்றி ஒரு மித்து வாழ்தல் வேண்டும்" என்றோர் சொற்பொழிவு செய்தது.

இடையில், முன்னர் வசைபெற்றுச் சென்ற தொழிலீ மறு முறையும் எழுந்து, "நாம் அனைவரும் இன்றுவரைத் தொழிலீக்க

ளாகவே உள்ளோம். அற்றாகலின், நமக்கு இவ்வியக்கத்தால் ஒரு வக்கப்பயனும் எய்துதல் முடியாதென நினைக்கிறேன்" என்றது.

என்றது: என்றலும் எழுந்தன ஈக்கள். புகைப்படலம் போலத் திரண்டெழுந்து கம் கம் எனப் பேரொலி செய்து, தம் சினத்தை எவ்வெம்முறையில் அதற்குக் காட்டுதல் கூடுமோ அவ் வம்முறையிற் காட்டின. கிரீட்டக்கண்டஞ்சிய் அது முன்போலவே தன் இருப்பிடம் அடைந்தது. அடைதலும், பகலவனும் மறைந் தனன்; பறவைப்பாட்டு அடங்கின; எங்கும் இளையிருள் பாந் தது; நீலவானத்து நித்திலம் பதித்தாற்போலக் கோல மீனினம் தம் சிற்றொளி பரப்பின; பிற்பகல் முற்றும் குழப்பத்திடை யுழந்த ஈக்கள் தத்தம் கூடடைந்து உறங்குவவாயின. பின்னர் அவ்விரவு முற்றும் வேறு குழப்பமின்றி யொழிய யாண்டும் அமைதியே தலைசிறந்து நின்றது.

வெள்ளி முளைப்ப, விடியல் வந்தது; தாமரையிற் றுஞ்சிய காமர் வண்டினம், கட்கமழும் நெய்தலுக்குச் சென்று, தாதூதிப் பின்னர், கண்போல் மலர்ந்த காமர்சுனைமலரை யடைந்து ஒலி செய்யா நிற்ப, முன்னாள் நிகழ்ந்த குழப்பத்தில் ஈடுபட்ட ஈக்கள் மட்டில் ஒருங்கு கூடி மீட்டும் தம் நிலைமையையும், அதற்கேற்ற முறைகளையும் பன்னிப்பன்னிப் பேசத்தொடங்கின. வேறு சில, கூடுகளில், அரசியர் ஏவிய பணிகளை இனிது செய்து வந்தவை, இக்குழப்பத்தைப் பற்றியேனும், அதனிடையே நிகழும் விரி வுரைகளையேனும் ஒரு பொருளாக நினையாது தம் தொழிலிலே தம் கருத்தைச் செலுத்தி நின்றன. நிற்க, குழப்பத்திற் கலந்த ஈக்குழாத்தினிடை நிகழ்ச்சிகள் பல நிகழ, முதிரா ஈக்களிற் சில முனிவு மீதூரக்கொண்டு, அதனால் தம்மையும், தம் மனத்திண்மை யையும் இழந்து, பெருங்கலகத்தை விளைவிக்கும் நிலைமையெய்தின. அதுபோது, இக்குழப்பத்திற்கு முதற்காரணமாகவிருந்த ஈ அவற் றின் முன்னர், "அன்பர்களே! நீங்கள் கைக்கொண்ட இயக்கம் நன்மை பயக்கக் கூடியதே. எனினும், இடையிலிருக்கும் ஒரு பொருளை நீங்கள் எண்ணாது போய்விட்டீர்களே! அப்பொருள் தான். எதுவெனின், நீங்கள் அனைவரும் முதிர்ந்துவிட்டமை

யன்றோ? நாள் முதிர்ந்த உங்களை எவ்வாறு இனி அரச ஈக்களாக மாற்றுவது, கூடாதன்றோ. ஆயினும், நாம்கொண்ட இயக்கத்தின் வெற்றிக்கடையாளமாக யாதானுமொரு புதிய முடிபை எய்துதல் வேண்டும். என் அறிவிற்கெட்டிய முடிபொன்றைக் கூறுகிறேன் கேளுங்கள். பிறகு உங்கள் விருப்பம்போற் செய்யுங்கள்'' என்றது. உடனே, அவ்வீக்களனைத்தும் ஒருபடியாக நீ கூறுகின்றவற்றை யாங்கள் மிக்க விருப்புடன் எற்றுக்கொள்ளுகிறோம். சொல்லியருள்க'' எனப் பேரொலியிட்டுக் கூறின. கூறலும், அது புன்னகை தவழும் இன்முகங்கொண்டு, "அன்பர்களே! நாளின் முதிர்ந்த நமக்கு இனி அரசியர் வேண்டுவதில்லை. நாம் அனைவரும் இன்றிருப்பது போலவே தொழிலீக்களாகவே யிருப்போம்; நாம் இனி ஒருவருக்கு அடிமைப்பட்டு அவர்கள் காலாலிடும் எவலைத் தலையாற் செய்தல் வேண்டா. நாமார்க்கும் குடியல்லோம்! நலமே வாழ்வோம். நம்மைக் கேட்பவர்க்கும், தூய வீரத்தோடும் "யாம் யார்க்கும் குடியல்லோம். யாதும் அஞ்சோம்'' எனவே நாம் இனிக்கூறுவோம். இதுவே என் சிற்றறிவிற் கெட்டிய முடிபாகும். யான் கூறியவற்றில் குற்றங்களிருந்தாற் பொறுத்துக் கொள்ளும்படிக் கேட்டுக்கொண்டு, இம்மட்டோடு என் சிறிய விரிவுரையை நிறுத்திக்கொள்ளுகிறேன், என்றது. எனவே, வண்டினம் முற்றும் கம்மெனும் இசை செய்து "இது தகும். தகும்! தகும்!!'' என உடன் பட்டன. பின்னர், அவைகள் ஒருங்கே திரண்டு தாம் இனித்தமிந்து வாழ்தற் கேற்ற இடம் நிறுவுதற் பொருட்டு மறுமுறையும் ஒரு கூட்டம் கூடின. இதுபோது இவற்றிற்குத் தலைமைபூண்டு இயல் நெறியிற் செலுத்த வல்லதாய ஒன்றும் வரவில்லை. ஆகவே, அக்கூட்டத்தில் ஒருவகைக்கட்டுப்பாடும் ஒழுங்கும் இலவாயின. என் செய்வது! இதுவும் உலகவியற்கையே!!

நிற்க, இடம் நிறுவுதற் பொருட்டு நிகழ்ந்த இக்கூட்டத்திடை, "ஒன்று எழுந்து, காட்சிக்கினியவும் கள் நிறைந்தவுமான மலர்கள் செறிந்துளதும், இதோ நம்முன்னர்த் தோன்றுவதுமாய சோலையே நாம் இனிது வாழ்தற்கேற்ற இடமாகும்'' என்றது; மற்றொன்று எழுந்து, "அச்சோலையினும், அதற்குச்

சிறிது செய்த்துள்ள் வயலே இனிதாகும். சோலைக்கு வருவாரும், வருவன்வும் பல்வாதலானும், காற்றும் எஞ்ஞான்றும் விரைவுடன் மோதியலைத்தலானும் நமக்கும், நம் கூடுகட்கும் தீங்குவிளையினும் விளையும்.'' என்றது; வேறொன்று, "நன்கனம் அமைத்துள்ள வீடொன்றின் கூரையே மேற் கூறப்பட்ட விரண்டினும் நன்றாகும். அன்றியும் அது நம்மை மழைக்காலத்தில் இனிது காக்கவல்லதாகும்'' என்று சொல்லிற்று. நான்காவதாக, வேறொன்று, "பழுமரமொன்றின் கொழுவிய கிளையே நல்லது'' என, மற்றொன்று, மலை முழைஞ்சினையும், வேறொன்று கற்பாறையையும் குறித்தன. இங்ஙனம், ஒவ்வொன்றும் தன்தன் கருத்திற் புலனாய இடங்களைக் கூறிச் சென்றனவே யொழிய, உறுதியான இடம் ஒன்றேனும் குறிக்கப்பெறவில்லை. அன்றியும், ஒன்று கூறியது மற்றொன்றின் கருத்துக் கொவ்வா தொழிந்தது.

இவ்வண்ணம் ஈக்கள் ஒன்றுக் கொன்று முரணிய கருத்துக் கொண்டு, கலாய்த்து நிற்பக் காலமுஞ்சென்றது; பிற்பகல் எய்திற்று. அதுபோது, அத்தேனீ—இவ்வியக்கத்துக்குக் காரணமாயிருந்த அத்தேனீ—வேறோரீயினை நோக்கி, "என்னே உங்கள் அறிவின்மை யிருந்தவாறு! உங்களைக் காணுந்தோறும் என் உளத்தில் வெகுளி யெழுகின்றதே யன்றி விருப்புண்டாகின்றதில்லை. எத்தகைய அறிவுள்ள சிற்றுயிரும் இவ்வண்ணம் வீணே காலத்தைக் கழிக்காது. அந்தோ! இதனை அறிவின்மை யென்பதா? அறியாமை யென்பதா?'' என, அது சாலவும் சினந்து, என்னை கூறினை? ஏ, அறிவிலி! உனக்கு ஈயரசு பெறவேண்டும் எனும் எண்ணம் உளதுபோலும்! அறிந்தேன். அறிந்தேன். இன்றேல், நீ என்னை இங்ஙனம் கேட்டல்கூடுமா? நிற்க, யாங்கள் காலத்தை வீணேகழிப்பதால் உனக்கு உண்டாகும் இழவென்னை? யாங்கள் எதையேனும் செய்கிறோம். அது பற்றி நீ வெகுளுதல் எற்றுக்கு? நீ உன்காரியத்தைப் பார்த்துக்கொள்க.'' என்றறைந்தது. இத்தகைய மாற்றத்தை எதிர் நோக்காது பெற்ற அத்தேனீ, மனமுளைந்து, தனக்குண்டான மானத்தையும், இழிவையும், உன்னியுன்னிப் பெரிதும் வருந்தத் தொடங்கிற்று. அப்போது, தான் அக்கிளர்ச்சிக்குக் காரணமாயிருந்தமையை

யும், அதனால் தனக்கே துன்ப மெய்தினமையையும் அது எத்துணையோ அடக்கிக்கொள்ள முயன்றது. மற்று, அம்முயற்சியாற் பயனென்று முண்டாயிற்றன்று. ஆகவே, அது மற்ற ஈக்களின் முகத்தைக் காணுதற்கே வெட்கி, சிவ்வென் றெழுந்து பூம்புதரொன்றையடைந்து, பண்டேபோல் தேன்றேடத் தொடங்கிற்று. புதர்க்குட் புகுந்து, ஆண்டு அழகு ஒளிர மலர்ந்து நின்ற மலரொன்றின் உட்புகுந்து, தான் இதுகாறும் கண்டறியாத சுவையும், திருந்திபுமுடைய தேனுண்டு களித்தது. ஆ! இது போதன்றோ அது களிவண்டென்னும் பெயர்க்கு இலக்காயிற்று! அது இதுபோது கொண்ட களிப்புக்கு ஓர் எல்லையுமின்று! அது தன் வாணாளி லோர்நாளிலேனும் இதுபோன்ற களிப்பினை யடைந்த தின்றெனின் வேறு கூறுவதென்னை! வேட்கை முற்றுங் காறும் நறவமுண்டு, வேண்டுவனவும் உடன்கொண்டு தன் கூடு நோக்கி, என்றும் அறியாத ஒருவகைப்பற்று, அன்று அதன் மனத்தை ஈர்ப்ப, அது விரைந்தெழுந்தது. எழுதலும், அதன் முன்னர், பண்டு தான் கேட்டறிந்தனவற்றை முதன் முதலுரைப்பக் கேட்ட முதிர்ந்தவண்டு போதந்தது. கண்டதும், அதற்குப் பெருநாண் எழுந்து அறிவை மயக்க, அருகிருந்த மலரொன்றிற்குச் சென்று மறைந்தது. ஆயினும் அம்முதிர்வண்டு, நடந்தனவற்றைக் குறிப்பாக வுணர்ந்தும், ஒன்றும் தெரியாததையொப்பக் கூர்த்த நோக்கத்தோடு, "என்கொல்! நீ ஏன் இங்கு வந்தனை? உனக்கு உற்ற தென்னை? நீ வந்திருப்பாய் என யான் ஒருகாலும் நினைத்த தின்றே! ஓ! உன் உழைவண்டுகள் யாண்டுள? அவற்றை நீ பிரிதற் கேய்ந்த காரணம் யாதோ? கூறுதி" என வினவிற்று.

இதைக்கேட்ட அக்களிவண்டு, பெரிதும் நாணி, "யான் அறியேன்; சோலையின் புறத்தே யான் அவற்றைப் பிரிந்து போந்தேன் ஆதலின்" என்றது.

மு. வண்டு:—அவை யாது செய்துகொண்டிருக்கின்றன?

க. வ:—க-லா-ய் க்-கி-ன்-ற-ன-போ-லு-ம்-

மு. வ:—(விரைந்து) என்னோ காரணம்?

க. வ:—தாம் இனிச்செய்ய வேண்டுவனபற்றி.

மு. வ:—ஆ! என்ன அருந்தொழில் புரிதல் நேர்ந்தனன்! நன்று!! இளவேனிற்காலத்து இனிய காலையில் மேற்கொள்ளப்பட்டதன்றோ இத்தொழில்! நன்று! நன்று! செயற்கரிய செய்வதன்றோ பெரியோரது தொழில்!

க. வ:—எள்ளுதல் வேண்டாம் ஏ! அன்னாய்!! இனியும் இன்னணம் இழித்துக்கூறற்க. என்னைப் பொறுத்தருள்க. இனி யான் செய்யவேண்டியவற்றையும் பணித்தருள்க ஒன்று மட்டில் கூறுகின்றேன்: யான் முன்னர்ச் சென்றிருந்த ஞான்று இயற்கையின் இயல்பையும், நம்மனோரின்றன்மையையும்பற்றிக் கேள்விபுற்ற உரை முற்றிலும் வாய்மையாகவே தோன்றிற்று; எனினும், நாம் அவ்வுரைவழி நிற்பான் முயலுங்காலத்து, வீணே கலாய்த்தலும் வெறுத்தலும் செய்தல் நேர்கின்றதேயன்றிப் பெரும் பயனொன்றும் பெறுமாறில்லை. என்னை?

மு வ:—நிற்க, நின் வயதென்னை.

க. வ:—(இளமைத் தன்மையொடு நாண்மீக்கொள) ஏழு நாட்களே.

மு. வ:—என் வயதென்னை யறிதியோ?

க. வ:—பல திங்களாம்போலும்.

மு வ:—ஆம். ஆம்! பல திங்கள் முதிர்ந்து உளேன். நீ கூறிய துண்மையே. யான் நாள் முதிர்ந்த ஒரு வண்டே. நிற்க. வருக நாம் இருவரும் பொருது பார்ப்போம்.

க. வ:—ஓ! ஓ! அது கூடாது; கடவுளாணையாக அது ஒருகாலும் கூடாது. யான் கட்டிளமையுடைமையின் பயனாய வலியுடையே னாகலின், நினக்கு ஊறு இழைக்கினும் இழைப்பன்.

மு. வ:—எனவே, நம்மிருவருள் வன்மையற்ற எளியன் யானன்றே. அற்றாக, இளமையும் வன்மையு மிக்க நின்னை

என்மாட்டு அறிவுரை கேட்கத்தூண்டியது யாது கொல்? இஃதோர் வியப்பையன்றோ தருகிறது!

க. வ:—அற்றன்றி. மெய்வன்மைக்கும் அறிவின் வன்மைக்கும் தொடர்பொன்று மின்று. யான் நின்மாட்டறிவுரை கேட்பான் துணிந்தது நீ அறிவுடையை என்பதை யான் நன்குணர்ந்தமையே யாகும். யான் அஃதில்லேனாகலின், இதுபோது இழித்தக்க நிலையை யெய்தியுளேன்.

மு. வ:—முதுமையும் இளமையும்—வன்மையும் மென்மையும்—அறிவும் அறியாமையும்—ஆ! ஏனோ ஒத்த பிறவியும், ஒத்த நிலையும் பொருளாகக் கிளர்ச்சிசெய்த வண்டுகட்கு? எனினும், வருந்தற்க. நாம் இவற்றையோர் ஒழுங்கிற்குக் கொணர்தல் கூடும். நிற்க, இனி நாம் இருவரும் ஒத்து வாழ்தலாமா? என்னை நின் கருத்து?

க. வ:—என் இன்னுயி ராணையாக; யான் இன்றே, என்! இன்னே உடன்படுகின்றேன். நாம் வாழ்தற்கு இடம் யாது?

மு. வ:—அஃதன்று நாம் முதற்கண் வேண்டுவது. நம் இருவர்க்கும் கருத்துக்கள் முரணுங் காலத்து இடைநின்று தகுதி நோக்குவார் யாவராதல் வேண்டும்.

க. வ:—நீயே! என்னெனின் நீயே முதுமையும், அறிவின் திண்மையும் உடையை.

மு. வ:—நன்று, நமக்கு நல்லுணவாய தேன் நாடிச் சென்று கொணருநர் யாவராதல் வேண்டும்?

க. வ:—யான். யானே!

"இளைஞன் வலியன் ஏவின செய்யும்
உளையா முயற்சியன் ஒருவன் யானே."

மு. வ:—மிகவும் நன்று. ஆகவே, நீ என்னை இதுபோது அரசனாகவும் நின்னைத் தொழிலியாகவும் கருதிவிட்டனையன்றோ.

க. வ:—ஆம். ஆம்.

மு. வ:—என்னே நின் அறியாமை! இது முடிபாயின், நமது பண்டையகூட்டுக்கும், நாம் பேணிநின்ற அரச ஈக்கும் நேர்ந்த குறை யாதோ? அன்றியும் நீம் இருவர்மாட்டே, ஒருவர் தலைவராக ஒருவர் ஏவலிளைஞராதல்வேண்டும் என்பது பெறப்படுகின்றதன்றோ, ஆகவே, பல்லோர்கூடிய கூட்டத்துள் இவரன்ன தலைவராவா ரொருவர் வேண்டப்படுவதனை உரைத்தலும் வேண்டுமோ?

இதனைக்கேட்டலும் அவ்வீக்கு நல்லுணர்வு தோன்ற, அது மிக்க உவகை பூத்துத் தன் ஏனைய இனங்களை நோக்கிச் சிவ்வென் றெழுந்தது. அதுபோழ்து, ஏனைய ஈக்களெல்லாம் குழப்பம் செய்துகொண்டே யிருந்தன. அவற்றுட் சிலமட்டும் தம் வன்மையும், எழுச்சியும் குன்றாதிருந்தனவே யன்றிப் பிறவனைத்தும் குன்றிப் பசியால் வருந்தின. சிறிது பொழுது கழிதலும், சில தம் வழக்கப்படியே தேன் தேடச்சென்றன; சில தம் கூட்டை யடைந்தன.

இங்ஙனம் இவை பெருங்குழப்பங் கொண்டு உழலாநிற்ப, இளமையும் ஊக்கமும் மிகுதியாக்கொண்ட பல ஈக்கள் புடைசூழ, அம்முதிர்வண்டு, நறுந்தேன்கொண்டு ஈயரசியிருந்த வெழிற் பெருங்கூட்டைச் சென்றடைந்தது. ஆண்டுக் காவல்புரிந்து நின்ற சிற்றீயொன்று, அதனையுட்புக விடாது தகைந்தது. அவ்வண்டு அதனைக் காரணம்வினவ, அது தன் ஈயரசி யிறந்துபட்டதாகவும், அதற்காங்கடன்கள் நடைபெறுவதாகவும், ஆண்டு ஏனைய ஏகுதல் கூடாதெனவும் கூறிற்று.

கூறலும், அக்களிவண்டு, உளங்கலங்கி, "ஐயோ! எவ்வாறு இறந்தனர் நம் அரசியார்! ஆ! நெல்லு முயிரன்றே நீரு முயி ரன்றே, மன்ன ருயிர்த்தே மலர்தலை யுலகம்! ஆ! இனி நமக்குத் தலைமை தாங்கி நம்மை நன்னெறியில் நடாத்துவார் யாவரோ! ஏ! காவல்! நம் அரசியார் இறந்தது உண்மையோ! கூறுக." என இனைந்து கூறலும், அது, "ஆம். ஆம். இன்றுகாலை கூட்டைக் காக்கும் ஈக்களுட் சில வெளிச்சென்றிருந்த பொழுதை நோக்கி,

இளமைமிக்க ஈயாசியொன்று, வெளிப்போதல் கூடாது எனினும், போந்து, நம் அரிசியொடு கலாய்த்துக் கொன்று விட்டது" என்றது.

முடிவில் அக்களிவண்டு தன் அரசி சாதற்கு அடிப்படையாக நின்றது தானே என்பதையும், தன்னு னிகழ்ந்த குழப்பத்தின் பயனே இது வென்பதையும் நினைந்தொறும் அதன் நெஞ்சு அதனைச் சுட்டது; பின்னர் அம்முதிர்வண்டு களிவண்டை நோக்கி, "ஈயாசுகட்கே ஒத்ததில்லைமையின்று; அவை பிறப்பினுல் ஒத்தன வேனும் தம் தொழிலாற்றான் சிறப்படைகின்றன: ஆதலின், பிறப்பொத்த தோற்றத்தேம் எனினும் சிறப்புறு தொழிற் செய்து உயர்வுபெறுதலன்றோ அமைவுடைத்தாம்" என்றது.

நெஞ்சு சுட வருந்திய அவ்வண்டும் பின்னர்த்தன் தொழிலுடி மலர் வனம் புக்கது. யாண்டும் அமைதியே நின்று விளங்கிற்று.

உ

மூவர் தமிழ்.

(ஆராய்ச்சி).

(2) தமிழ் மறை.

உலகில் நிறுவப்பெற்ற பல்வகைச் சமயங்களும் எவ்வாறு தங்கட்கு ஒவ்வொரு முதல்வனை யுடையனவோ, அவ்வாறே தங்கட்கு ஒவ்வொரு முதனூலையு முடையனவாகும். முகம்மதிய சமய முதல்வராகிய முகம்மது நபி (Mahommed the Prophet) இயற்றிய கொரானும் (Koran), கிறித்துவ சமயாசிரிய ராகிய இயேசு கிறித்துவின் (Jesus the Christ) பிறப்பு, வளர்ப்பு, போதனை முதலியவற்றைக் கூறும் விவிலிய நூலும் (Bible), புத்த சமயத் தலைவராகிய புத்தர் போதித்த கொள்கைக ளடங்கிய பிடக நூலும், சமண் முதல்வரு ளொருவராகிய மகாவீரரின் சமணாக

மங்களும், மறைநெறித்(1) தலைவராகிய இறைவரியற்றிய திருநான்மறைகளும் அவ்வச்சமயங்களுக்குப் பற்றுக் கோடாய் விளங்கும் முன்னூல்களாம். இவற்றுள் முந்திய சமயநூற்கள் யாவும் காலவரையறைக்குட்பட்ட சிலபல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றி நின்றழிந்த சில மானுடரால் இயற்றப்பெறும் சிறுமை யுடையனவாக, இறுதியிற் கூறப்பெற்ற மறைகளோ முதலீறில்லா ஒருதனி முதல்வனால் முதறீக ணியற்றப்பெற்று என்று மழியா வியல்பினவாகிய அருமை பெருமை யுடையனவாகும்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த இம்மறை யாவென நோக்குமிடத்து இவை இருக்குமுதலாய நால்வேதங்களே யன்றி வேறல வெனக் கூறி வருகின்றனர். எனினும் இதன் உண்மையைத் தேவார முதலாய திருவருணூற்கொண்டு ஆராய்ந்தே முடிவு காண்டல் வேண்டும்.

"சொற்பிரிவிலாத மறைபாடி நடமாடுவர்(2) என்றார் திருஞானசம்பந்தர். இம்மறை மேற்கூறிய ஆரிய வேதமாகா. என்னை? அவை சொற்பிரிவுடைமையின். பின் இம்மறை யாவென நோக்குவாம். மாதவச் சிவஞானமுனிவர் "மகா சங்கார கால முடிவின்கண் உலகங்களை மீளப் படைத்தற்பொருட்டுப் பரமான்மா வாகிய பரமசிவத்தினுடைய பராசத்தி குடிலையை நோக்கியவழி வேதாகமங்கள் குடிலையினின்று நாதவடிவாயும் அதன்பின் விந்துவடிவாயுந் தோன்றின "(3) என்றார். இவ்விரு தத்துவங்களையே திருநாவுக்கரையர்

"பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போ
யிருங்கடன் மூடி யிறக்கு மிறந்தான்க ளேபரமுங்
கருங்கடல் வண்ணன் களேபர முங்கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே"(4)

(1) மறைநெறி, மறைவழக்கு, வேதநெறி என்னுஞ் சொற்றொடர்கள் 'இந்துமதம்' என்னும் பிறர் கூற்றுக்கு நேர் தமிழ்ப்பெயர்களாம். (2) திருவேதிகுடி-திருவிராகம்-பண், சாதாரி-(2ம்பாட்டு). (3) சிவஞானபாடியம்-சிறப்புப்பாயிர உரை. (4) தனித் திருவிருத்தம்-முதற்பதிகம்—7.

என்று வீணையின் காரியமாகவும், மற்றொரு பாசுரத்தில் "உரை கடந் தோத்தீர்மை"(1) யுடையதாகவும், வேறொரு பாசுரத்தில் "அமரர் காணா மறை வைத்தார்"(2) என்றுங் குறிக்கின்றனர். இதனால் இறைவனும் "நாதமெழிலுரு வனைய நள்ளாறர்" (3) என்றும் நாதனை "நாதமிகுத் தோசைய தானவனை"(4) என்று மழைக்கப்படுகின்றனர். இந்நாத விந்துக்களை உணரக்கூடிய முதல்வரே தக்க பணிவலியற்றுந் தகுதியாளராவ ராதலின், அத் தகுதியுடையா ருறைகின்ற திருவீழிமிழலையை

"உன்னிய வருமறையொலியினை முறைமிகுபாடல்செய்
இன்னிசை யவருறையெழிற்திகழ்பொழில்வீழிமிழலை"(9)

என்றார் திருஞானசம்பந்தர். இவ்வாறே சேக்கிழாரும் பிரணவத்தை "எல்லையிலா மறைமுதல்"(5) என்று குறிப்பதிலுள்ள எல்லையிலாமறை ஒலியுடைய இருக்குமுதல் வேதங்களைக் குறியாது சிவஞானமுனிவருளியபடி பிரணவத்தினின்றெழுந்த நாதவிந்துக்களையே குறித்தல் தெளிவாகும். இத்தத்துவங்கள் "மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி"யே யாதலின் யாதொருமொழியையாவது நூலையாவது குறிப்பதாகக் கொள்ளல் பொருந்தாது. இத்தத்துவங்களும் இவற்றின் மூலப்பொருளாங் குடிலையும் அருள்ஞானம் பெற்றவரன்றி பிரமனைப்போன்ற பெருந்தெய்வங்களின் உள்ளுணர்விற்கும் மறைந்து கிடத்தலின் மறையெனப்பட்ட தியல்பே.

இரண்டாவதாகத் திருஞானசம்பந்தர், "பலவேதமங்கமாறும் மறைநான்கவையுமானார்"(6) "மறைகள் வேதம் விரித்தோதுவர்"(7) என்றும், திருநாவுக்கரையர், "அருமறையோடாறங்கமாய்ந்துகொண்டு பாடினார் நால்வேதம்"(8). "அங்கமாறாதியாய் வேதமாகி யருமறையோ டைம்பூதந் தானே

(1) குறைந்த திருநேரிசை-முதற்பதிகம்—4. (2) திருநல்லூர்-திருத் தாண்டகம்—6. (3) சம்பந்தர்—திருநள்ளாறு—திருவிராகம்—சாதாரி—2. (4) சுந்தரர்-புறநீர்மை-திருக்கானப்பேர்—9. (5) சம்பந்தர் சாதாரி-திருவிராகம்—11. (6) திருஞான சம்பந்தர் புராணம்—75. (7) திருச்சண்டை-தக்கேசி—1. (8) திருவேகம்பம்-இந்தளம். (9) திருப்பாசூர்-திருத்தாண்டகம்—5.

யாகி"(1) "மறைபுடைய வேதம் விரித்தாய் போற்றி"(2) என்றும், திருமூலனர், "நாயோட்டு மந்திரம் நான்மறை வேதம்"(3) என்றும், மறை வேத மென்னு மிருசொற்களையும் அடுத்தடுத்து அருளிச்செய்திருப்பதை நோக்க, மறை வேறு, வேதம் வேறு, என்பது விளங்கும். இன்னும் மேற்கண்ட மேற்கோளி லுள்ள திருநாவுக்கரையரின் முதலாவது, மூன்றாவது அருண்மொழிகளால், வேத மியற்றுதற்கு மறையே ஆய்ந்து கொள்ள வேண்டிய பொருளென்பது தெற்றெனத் தெளிவடைகின்றது. வேதத்தின் பொருள் அறம் பொரு ளின்பம் வீடே யாதலை

* "முன்னம் படைத்தனன் நான்மறைகள்—அம்மறைதான்
மன்னு மறம்பொரு ளின்பம்வீ டென்றுலகில்
நன்னெறிமேம் பட்டன நான்கன்றே"

"அழிந்த சிந்தை அந்தணாளர்க் கறம் பொருளின்பம் வீடு மொழிந்த வாயான்"(4) "ஆலதன்கீழிருந்து நால்வர்க் கறம் பொருள் வீடின்ப மாறங்க வேதந் தெரித்தானை"(5) என்னும் அருண்மொழிகள் அறிவுறுத்தும். ஆதலின் முற்குறித்த அருண் மொழிகளி லுள்ள நான்மறை அறமுதல் நாற்பொருளேயாம். இஃதே இச்சொல்லின் இரண்டாவது பொருளாம்.

இந்நாற்பொருளும் எவ்வாறு மறையெனப்படு மெனின், இவை மெய், வாய், கண், மூக்குச் செவி யென்னும் ஐம்பொறி களுக்கும் மறைந்த நுண்ணிய பொருளாதலி னென்க. இவற்றுள் அறமும் இன்பமும் பண்பும் பயனு மாதலானும், வீடு சிந்தைக்கெட்டாச் செய்மைத்தாதலானும், இம்மூன்றும் ஐம் பொறிகளுக்கும் மறைந்த பொருள் என்னும் பொருளுக்கிலக் காய் இருப்புழி, நாற்பொருளுள் இரண்டாவதாகிய பொரு ளொன்றே பெண்டுபிள்ளை யென்னும் பொறிக்குப்புலனும் பருப்

(1) நின்ற திருத்தாண்டகம்—6. (2) திருக்கைலாயம் 2-வது போற்றித் திருததாண்டகம்—1. (3) திருமந்திரம் சில பிரதிகளில் மிகுதியாகக்காணப்படும் பாடங்கள்—8. (4) சம்பந்தர்-திருமுதுகுன்றம்-பழந்தக்கராகம்—6. (5) அப்பர்-திருத்தாண்டகம்-திருநாகேச்சுரம்—2.
* திருமங்கையாழ்வார் பெரியதிருமடல் 10, 11.

பொருளாதலின் மறையாகா வென்பார், ஈண்டு பொருளென்றது உள்ளப்பொருளாங் கல்வி, கேள்வி, அறிவுடைமை முதலிய வற்றையும், பொருள் செயல்வகையாம் வினைத்தூய்மை, வினைத் திட்பம், முயற்சி முதலிய பல்வேறு குணங்களையுமே குறிக்கு மென்றுணர்வாராக. இதனையாவர்க்கும் பொதுமறையாம் தமிழ் மறையாகிய திருக்குறளின் பொருட்பாவின் அதிகாரமுறைமையா லறிக.

இம்மறைப்பொருளாய நான்கினையும், நாதவிந்து தத்துவங் களையும், இவற்றின் மூலப்பொருளாங் குடிலையையும் நுண் பொருள் ஆராய்ச்சி செய்யும் ஆற்றலுடைய அறிவர் ஒன்றையும் ஓதாதுணரப் பெறுவராதலின், திருஞானசம்பந்தர் போன்ற உள் ளுணர்வுடையோர் பிள்ளைப்பருவத்துந் தாமாகவே முதனூலியற் றும் முடிவிலாற்ற லுடையராவர். இஃது இப்பெரியார் தம்மைக் குறிக்கும் பொழுது கூறும்,

"வித்தக மறைமலி தமிழ்விர கன்மொழி" (1)
"ஆய்ந்த நான்மறை ஞானசம் பந்தன்" (2)

முதலிய சொற்றொடருள் விளங்கும். நான்மறை நாற்பயனும் நாற் பொருளே யென்பதை இன்னார் ஒவ்வோர் பதிகத் திறுதியிலுங் கூறியுள்ள நாற்பயனும் நாற்பொருளே நன்குவிளக்கும். இன்னும் இதனை இவ்விளைய பெருந்தகையார் தம் அருந்தமிழ் மறையால் வற்கடஞ் சென்ற காலத்துப் பல்லாயிரவர்க்கு அன்னமிட்டு அற மியற்றியும், படிக்காசு, முத்துச்சிவிகை, முத்துப்பந்தர், உலவாக் கிழி முதலியனபெற்றுப் பொருளீட்டிப் பொருளளித்தும், அடியார்க்கு நோய் தீர்த்தும் விடந்தீர்த்தும், வேண்டிய வேண்டி யாங்களித்து இன்பருளியும், கூற்றைப் பிடர்பிடித்துத் தள்ளிக் கொள்ளை கொள்ள வீடுதவியும் பெருமையெய்திய பெருஞ்செயல் களும் நன்குவலியுறுத்தும். மேற்குறித்த முதன்மேற்கோளில் உள்ள "மறைமலி மொழி" என்னுஞ் சொற்றொடர்க்கு வேதம்

(1) சம்பந்தர், வியாழக்குறிஞ்சி, திருவிராகம், திருவீழிமிழலை—11.
(2) ஷை சீகாமரம், திருப்புறவார் பனங்காட்டூர்—11.

மலிந்திருக்கிற பாடல் என்று பொருள்கொள்வதினும் நாற் பொருள் நிறைந்த பாடலென்று கொள்வதே பொருந்தியதென் பதைப் பின்னர் விளக்குதும். இரண்டாவது மேற்கோளில் உள்ள 'ஆய்ந்த நான்மறை' முன்னர்க்காட்டிய "நான்மறையோ டாறங்க மாய்ந்துகொண்டு பாடினார் நால்வேதம்" என்பதற்கிணங்க நூற் பொருளையே குறித்தலைக் கண்டுகொள்க. இவ்வாறே

"மாறா மறை நான்காய்.....வேறா யுடனானை"(1)

என்றபடி இறைவன் மாறாமறை நான்குந் தானே யான தன்மையை நோக்குழி ஈண்டு இச்சொற்றொடர் ஒரு காலத்து மூன்றாயும், பின்னர் நான்காயும், அந்நான்கினும் முன்னர்த் தைத் திரியம், பௌடிகம், தலவகாரம், சாமமாகியநான்காயும், பின்னர் இருக்காதி நான்காயும் இவ்வாறு காலந்தோறும் வேறு படும் ஆரிய வேதத்தைக் குறியாது இம்மாறுதல்களிலெல்லாம் மாறாத நாற்பொருளையே! குறித்தலுங் காண்க. இவ்விரண்டாவது பொருளிலும் இம்மறை யென்னுஞ் சொல் ஒரு மொழியை யாவது நூலையாவது குறிக்காததுங் குறிக்கொள்ளத்தக்கது. மூன்றாவதாக இச்சொல் "பொய்யாமறைபாடல் புரிந்தான்"(2) 'பண்டு நான்மறை யோதிய பாடலன்"(3) "மறையோதீ மங்கைபங்கா"(4) என்றற் றொடக்கத்த பல்வேறிடங்களில் சிலநூற்களைக் குறிக்கின்றது. மறைந்தபொருளைக் குறிக்கும் மறையென்னுஞ்சொல் பொறிக்குப்புலனாம் நூற்களை எவ்வாறு குறிக்குமெனின், "மறை புனைபாடலர்"(5) "மறை கலந்த வொலிபாடலோடாடலர்" (6) என்புழி விரித்துக்கூறியுள்ள வாறு அறம்பொருளின்பம் வீடாகிய மறைபொருளைப் புனைந்துங், கலந்தும், இயற்றப்பெற்ற நூற்களே ஆகுபெயரால் மறையென் றும், நான்மறையென்று மழைக்கப்படன வென்பது விளங்கும்.

---

(1) சம்பந்தர், நட்டபாடை திருவீழிமிழலை—2. (2) சம்பந்தர் குறிஞ்சி-கோயில்—3. (3) அப்பர், திருக்குறுந்தொகை-திருப்புகலூர்—6. (4) சுந்தரர், இந்தளம்-திருவெண்ணெய்நல்லூர்—9. (5) சம்பந்தர், காந்தாரபஞ்சமம்-திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்—3. (6) சம்பந்தர், நட்டபாடை-திருப்பிரமபுரம்.

இத்தகைய நூற்களும் நாற்பொருளுஞ் சொல்லிற்கும் பொருளிற்குமுள்ள வேறுபாட்டின் இயைபுடைமையின் இவை ஒன்றிற் கொன்று தாரமாவதைச் சிலவிடங்களில் "அருமறை யோடாறங்கமாய்ந்துகொண்டு பாடினர் நால்வேதம்" "மறை யுடைய வேதம் விரித்தாய்போற்றி" என்று வேதத்தின்மூலம் மறையே, அதாவது நாற்பொருளே யென்றும், வேறு சில்விடங் களில்—

"வேதந்தாம் பன்னுநன்பொருள்பயந்தவர்" (1)
"எண்ணிலி மறைப்பொருள் விரித்தவர்" (2)
"அருமறையின் பொருள்பாடினர்" (3)

என்று (நாற்) பொருளின்வழி மறையே (சொற்களே) யென்றுங் கூறுகின்றனர். இவ்வாறு இவ்விரண்டிற்குமுள்ள இயைபே மறையென்னுஞ்சொல் ஆகுபெயராய் நாற்பொருளை யுணர்த்தும் நூற்களைக் குறித்தலை நிறுவும். இன்னம் இந் நாற்பொருளுக் கேற்ப நான்மறை யியற்றப்பெற்றதுங் கூர்ந்து நோக்கத்தே.

இவ்வாறு ஆகுபெயராய் நாற்பொருளை இச்சொல் லுணர்த்துவதை யுணராது "தமிழுக்கு மறைக்கப்பட்டு ஆரிய மொழியால் வேதம் வெளிப்பட்டமையின் மறையென்ற காரணப் பெயரை நம் மூதறிவாளர்கள் சூட்டினார்கள்"(4) என்று கூறவுந் துணிவர் சில்லோர். 'நவீன நாகரீகக்' கொள்கை யுடைய சிலரைத் தவிர பண்டைத் தமிழாசிரியர் ஒருவரும் இப்பெரும்பிழை யிழைக்கவில்லை யென்பது தமிழறிஞர் நன்குணர்ந்ததே. அஃ றிணைப் பொருளாம் தமிழ் மொழிக்கு வேதம் மறைக்கப்பட வாவது உணர்த்தப்படவாவது முடியுமா? முடியுமென்று மூதறி வாளர் செப்பார். பின் தமிழ் மக்களுக்கு மறைக்கப்பட்ட தாகாதோ வெனின், அஃதுமன்று. என்னை? தமிழகத்தந்தணரும் அரசரும், வணிகரும் வேதம் ஓதற்குரிகான்றோ? "உலக மென்பது உயர்ந்தோர் மாட்டே"(5) என்னும் உயர்மொழி

(1) சம்பந்தர்-கட்டபாடை-திருசிரபுரம். (2) சம்பந்தர்-இந்தளம் திருவையாறு. (3) சம்பந்தர்-கொல்லி-திருமுதுகுன்றம்-9. (4) திரு. மா. சாம்பசிவம் பிள்ளையவர்களியற்றிய திருநான்மறை விளக்க ஆராய்ச்சி. (5) தொல்காப்பியம்.

இவர்களை நீக்கி எஞ்சிய சிலரையா குறிக்கும்? இல்லை! இல்லை!! ஒருவாறு குறிப்பதாகக் கொள்ளினும் வேதத்தின் கருமபாகம் நான்காம் வருணத்தாருக்கு மறைக்கப்பட்டதே யன்றி ஞான பாகம் ஒருவருக்கும் மறைக்கப்படவில்லையே! இதனைத் தெளிவாகச் சைவசமய நெறியில் "வேதவாக்கியங்களின் அருத்தங்களைக்கேட்கச் சூத்திரருக்கு அதிகாரமுண்டு"(1) என்றும், அன்னார் அறிவுறுத்துவோராய் அந்தணருக்கும் அருளும் ஆட்சியுடையவ ரென்பதை "பிராமணர் முதலிய மூன்று வருணத்தாருள்ளும் ஞானசிரியனில்லாது நான்காம் வருணத்தாராகிய சூத்திரருள் ஞானசிரிய னுண்டாயின் அவனிடத்தே பிராமணர் முதலாயினோர் ஞானோபதேசம் பெறலாம். வைதிகத்திலே பிரமவிருடிகளாகிய துருவாசர் முதலாயினோர் பிராமணர் முதலிய முதன்மூன்று வருணத்தாருள்ளும் ஞானசிரியரில்லாமையால் நான்காம் வருணத்தாராகிய விதுரரிடத்திலே ஞானோபதேசம் பெற்றார்களென்பது பாரத பாகவதங்களிற் பெறப்படுகையாலும், சைவத்திலே திருத்துறையூரிலிருந்தருளிய ஆதி சைவராகிய சகலாகம பண்டிதரென்னும் ஏதுப்பெயரை யுடைய அருணந்தி சிவாச்சாரியார் திருவெண்ணெய்நல்லூரிலிருந்தருளிய நான்காம் வருணத்தாராகிய மெய்கண்டதேவ ரிடத்திலே ஞானோபதேசம்பெறக் காண்கையாலுமென்றறிக."(2) என்றும் விளக்கியுள்ளார். மிகச்சிறந்த பகுதி அனைவருக்கும், அதற்கடுத்த பகுதி மிகச் சிலருக்கும் வெளிப்பட்டிருக்கத் தமிழ் மக்களுக்கு வேதம் எவ்வாறு மறைக்கப்பட்டதாகும்? ஒருவாறு வேதத்திற் கருமகாண்டமே மிகுந்துளதாதலானும், அவற்றை ஓதற்குரகரல்லா நான்காஞ் சாதியினரே உலகில் மிக்கோராதலானும் அவருக்கு மறைக்கப் பட்டமையின் மறையாயிற்றென்போர் ஒருசாதியினர்க்காக ஒரு பொருளிற் கொரு பெயரிடல் அத்துணைப் பொருத்தமுடைத்தன் றென்பதையும், அன்னார் எண்ணிக்கையா லெவ்வளவு பெரியோராயினுஞ் செய்தொழிற் றாழ்மையாற் சிறப்புடையராகா ரென்பதையும், அன்னார்க்குங் கோயிற் றிருவிழாக்களினும் மற்றுஞ்சில வேள்விகளினும் புலனும்படியே கருமங்

(1) சைவசமயநெறி—30. (2) சைவசமயநெறி-27, 28-ம்பக்கங்கள்.

களைக் குறிக்கும் மந்திரங்களும் ஓதப்பெறுகின்றன வென்பதையும் "பிரமற்குக் கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டரும், வசிட்டர்க்குச் சண்டாளி வயிற்றிற் பிறந்த சத்தியரும், சத்தியர்க்குப் புலைச்சி தோள் சேர்ந்து பிறந்த பாராசரும், பாராசருக்கு மீன் வாணிச்சி வயிற்றிற் பிறந்த வியாசரும், வேதங்களோதி மேன்மைப்பட்டு மாதவராகி வயங்கினர்"* என்பதையும் உற்றுநோக்கித் திருந்துவாராக். இவற்றைப் பழங்கதை யென்றும், தவறனவென்றுங் கொளினும் முற்காட்டியபடி உற்று நோக்கித் திருந்துவாராக. அன்றியும் ஆரியரென்று கருதப்படுபவருள் உள்ள சூத்திருக்கும் வேதம் மறைக்கப்பட்டிருப்பதால் அதற்கு மறையென்ற பெயர் ஆரிய மொழியினும் இருந்திருக்கலாமே. அஃதில்லாததால் அதற்கு ஒரு வகுப்பினருக்கு மறைக்கப்பட்டதால் மறையென்ற காரணப் பெயருண்டாயிற்றெனல் பொருந்தாது. பின் தமிழ் மொழியில் வேதம் வெளிப்படவில்லை என்னுங் கருத்தே இவ்வாறு "தமிழ்ப்பாஷைக்கு மறைத்து வைக்கப்பட்டதால்" மறையாயிற்றென்று கருதப் பட்டதெனின், அஃது அறியார் கூற்றும். என்னை? ஆரியமறையினும் மிகப் பெருமை வாய்ந்த தமிழ்மறையாகிய நால்வரோதுந் தமிழிருக்கின்றதே! இது தமிழ் வேதமென்றும் ஆரிய வேதத்தின் சாரமுடைய தென்றுங் கருதப் படுகின்றதே. இஃதியற்றப்படுமுன் தமிழில் வேதமின்றெனின் இத்தகைய தமிழ் மறைகள் தோன்றி நின்றழிந்து பின்னுந் தோன்றித் தோன்றி யவ்வாறே யாயின வென்பதையும், ஆரிய வேதத்தின் றன்மையுமற்றே யென்பதையும் பின்னர் காட்டுதும். இஃது எவ்வாறாயினும் தமிழ் மொழியில் வேதம் வெளிப்படாததால் மறையென்ற காரணப் பெயரதற்குண்டாதலை எவ்விலக்கண விதி விதிக்குமோ வறியேம்.

இவ்வாறன்றிச் "செந்தமிழி னின்பவிறு வாயலது செப்பார்"(1) என்றும் "அகத்தியனுருந் தொல்காப்பியனுரும் வீடு பேற்றிற்கு நிமித்தங்கூறுதலன்றி வீட்டின்றன்மை யிலக்கணத்

* திருமங்கையாழ்வார் பெரியதிருமடல் 10, 11.

(1) சிவ தருமோத்திரம்-சிவஞானயோக வியல்-123.

தாற் கூறுரென் றுணர்க" (1) என்றும் முன்னோருணர்த்த மொழியின்படி வீட்டியல் தமிழிற் கூறப்பபடாததால் தமிழில் வெளிப்படாது ஆரியத்திலியற்றிப்பெற்ற வீட்டுநெறி கூறும் வேதத்திற்கு மறையெனப் பெயரிடலியற்கையே யெனக் கூறுவாருமுளர். இன்னார்க்கு வீட்டுநெறி கூறுவது ஆரியவேதமன்றென்பதைப் பின்னர்க்காட்டுதும். இதுபோது இக்கூற்றுக்களை உற்று நோக்குவாம். மேற்கூறிய இரண்டு மேற்கோளுள் முந்தியது மறை ஞானசம்பந்தருரை. அன்னார்தாம் மொழி பெயர்த்த சிவ தருமோத்திரம் என்னும் உப ஆகமத்திலே, சிவஞான யோகவியலென்னு மதிகாரத்திலே வீட்டுநெறியை எவ்வளவு சுருக்கமாகவும் விளக்கமாகவுங் கூறலாமோ அவ்வாறு நூற்றிருபத்திரண்டு பாக்களாற் கூறிவிட்டுப் பின் விரிவஞ்சி

"செந்தமிழி லின்பமிறு வாயலது செப்பார்
அந்தமிலி யாதியுமி லானுரையை யாய்ந்தார்
செந்தமிழி னுங்கவுட மாகவுரை செய்தார்
இந்தயுக காலகலி யிடறநல் வீடும்"

என்றார். இதற்குரைகண்ட பெரும்புலவர், (அவரின்னரென்று தெரியவில்லை) கூறுவதாவது :—"தேவர் செந்தமிழில் அறத்துப்பால் முதலிய முப்பாலுமோதி வீட்டுநெறியை விரித்துச் சொன்னரில்லை, சிவ வாக்கியத்தை யுணர்ந்தவாதலாற் பக்குவான்மான்களே மோக்ஷமடையும் பொருட்டுங் கலிகாலத்தின் வலிதொலைதற் பொருட்டுங் கவுடமாக மெய்யுணர்தலென்னு மதிகாரத்தாற் கூறினர்" என்று இப்பாவிற்குப் பொருள் திருவள்ளுவரொருவரையே குறித்ததாகக் கொண்டார். எனினும் இவரே அடுத்தவாக்கியத்தில் "ஆளுடையதேவ நாயனர் திருவுந்தியாரென்னுஞ் சாத்திரத்தைக் கூறியதனாற் றமிழாற் கூறினுங் குற்றமில்லை என்றவாறு" என்று உய்யவந்த தேவ நாயனரை யாவது வீட்டுநெறி கூறிய ஆசிரியாராகக் கண்டார். கண்டாரேனும் பல்லூழிக் காலமாய்ப் பல்லாற்றானும் பாந்துயர்ந்து பெரும்புகழ் கொண்ட இத் தமிழணங்கின்மீது பொறாமை

(1) தொல்காப்பியம்-சிறப்புப்பாயிரம்-நச்சினர்க்கினியம்.

கொண்ட ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புபவரின் ஆழ்ந்த சூழ்ச்சியினின்றுந் தப்பினரில்லை. உடனே இப்பொழிப்பிற் கடுத்த விரிவுரையில், பரிமேலழகருரையாகிய "வீடு என்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப் படாமையின் நூல்களாற் கூறப்படுவன எனை மூன்றுமேயாம்" என்னும் வாக்கியத்தை எடுத்துக் காட்டி, இதற்குமப்பேருரை காண்பதாவது :—"ஈண்டு (இப்பரிமேலழகருரையில்) எனை மூன் றென்பது அறம் பொருள் இன்பங்களை, நூல்களென்றது தமிழ் நூலை" என்பதாம்.

ஆ! அருந்தமிழன்னையே! நீ யாது காரணம் பற்றி இவ் வாறு ஊருக்கிளைத்தவளானாயோ, அறியேன்!! நின்னாற் கூறப் படும் இயற்கைத்தாகாத சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத் தாகிய வீட்டு நெறி ஆரிய மொழியைப் பயின்ற மாத்திரையிலே யாவர்க்கும் சிந்தையும் மொழியுஞ் செல்லும் நிலைமைத் தாய் அம்மொழியாற் காரணவகையாலன்றி இலக்கணவகை யானுங் கூறவும் படுமோ! அந்தோ! உன் வயிற்றிற் பிறந்த கொடுமையால் யாங்கள் உன்னைக் கதறிக்கதறியும் வீட்டுநெறி கைகூடாது வருந்துகின்றோமே; உன் மாற்றாளாகிய ஆரியத்தை நவின்ற அளவிலே, அவள் மக்கள் பறந்து வீடு செல்லக் காண் கின்றோமே! அவ்வாறு சென்றோரிற் சிலர் தலை கீழாகவுந் தொங்குகின்றார்களே! ஐயகோ! உன்னை மறந்து அவளை வழி பட்டு அவளாலாவது வீடு செல்வோமென்று முனைந்தால் அவள் எங்களுக்கு மாற்றாந்தாயின் கொடுமைகளனைத்தையுங் கூட்டு கின்றாளே! எங்கள் காதில் அவள் ஒலி பட்டால் காதறுபடு கிறதும், உருக்கிய ஈயம் ஊற்றப்படுகிறதுமே கண்கூடாகின்றதே! வாயால் ஒதின் நாக்கறுப்படுவதே கிடைக்கும் நன்மை! இவ்வாறு ஊறுபட்ட வலி பொறுக்காது மாண்டாகிலும் மற்றுறப் பிறவி யில் அவள் வயிற்றிற் பிறக்கலாகாதா வென்று விரும்பினால், அவளொலியைக் கேட்டதாலும் நவின்றதாலும் மறுமையிலும் அண்ணுத்தல் செய்யாத அளறையே அடைகின்றோமே! அந்தோ!! அந்தோ!!! உன் பிள்ளையாய்ப் பிறந்த பெரும்

பிழையினால் ஒருகாலமும் உய்யும் வழியில்லாது உழல்கின்றேமே யென்று அறிவிழந்தலறி அயர்ந்த அடியேற்கு எம் மன்னையாகிய அமிழ்தினு மினிய தமிழணங்கு எங்கனவிற் கனிந்து வந்து களிப்பூட்டினுள். அவளால் அறிவடைந்ததின் பயனாக இவ்வுரையாளரின் கூற்று உறுதி பயப்பதாகாதென்று கண்டதைக் காட்டுதும்.

பரிமேலழகர் "வீடென்பது சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்து" என்றதனால் அஃது ஆரியர் சிந்தையுந் தமிழர் சிந்தையும், எவ்வெவர் சிந்தையுஞ் செல்லாப் பொருளே யன்றி ஆரியமொழிக்குந் தமிழ்மொழிக்கும் எம்மொழிக்கும் எட்டாப் பொருளே யாமென்பது பெற்றாம். இவ்வாறன்றித் தமிழ் நூல்களுக்கு மாத்திரங் கிட்டாப் பொருளென்றும், ஆரிய நூற்களுள் அடங்கும் பொருளென்றுங் கொளல் ஒரு சிறிதும் பொருந்தாது. இவ்வாறே பரிமேலழகர் வீடு "துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாதது". என்னும் பொழுதும், தமிழிலக்கணத்தாலன்றி ஆரிய விலக்கணத்தானும் எம்மொழி யிலக்கணத்தானுங் கூறப்படாத பொருளென்றே கொளல்வேண்டும். இதனையே தமிழிலக்கணத்தைக் குறித்துப் பேசும் பொழுது, நச்சினார்க்கினியரும் "அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் வீடு பேற்றிற்கு நிமித்தங் கூறுதலன்றி வீட்டின்றன்மை இலக்கணத்தாற் கூறாரென்றுணர்க. .... இக்கருத்தானே வள்ளுவனாரும் முப்பாலாகக் கூறி வீடுபேற்றிற்கு நிமித்தங்கூறினார்" என்றார். இதனால் வீட்டின்றன்மை தமிழால் மட்டுங் கூறப்படாது ஆரியத்திற் கூறப்பெறுமென்று கொள்வோர், அஃது உணர்ந்தார்க்கு முரைப்பரிதென்பதை யுணராதோராவர். பின் பதியிலக்கணம், பசுவிலக்கணம், பாச விலக்கணம், அணைந்தோர் தன்மை முதலியன கூறும் நூற்கள் வீடு கூறிற்றிலவோ வெனின், அவை வீட்டு நெறி கூறிற்றன்றி வீட்டின்றன்மை கூறிற்றிலவென்று மறுக்க. எனவே இச் சிவதருமோத்திர உரையாசிரியர் ஆரியத்தாலும் நாயனாராலும், உய்யவந்த தேவராலுங் கூறப்பட்டதாகக் கருதியது வீட்டு நெறியே யன்றி வீட்டிலக்கணமன்றாம்.

இவ்வீட்டு நெறியையுங்கூட இவ்வுரையாசிரியர் திருவள்ளுவ நாயனுரும் உய்யவந்த தேவநாயனுருமே கூறியதாகக் கூறுவர். இன்னுஞ்சிலர் "செந்தமிழிலின்ப மிறுவாயலது செப்பார்" எனச் சிவ தருமோத்திரஞ் செப்புதலினுல் வீட்டு நெறியை மேலோர் முன்னுளிற் றமிழாற் கூருரென்பதும் பெறப்படும் (1) என்று முன்னுளிற் கூறப்படாத வீட்டு நெறி பின்னுளிற் கூறப்பட்ட தாகவுங் கூறுவர். இருவாராலன்றிப் பலராலும், பின்னுளி லன்றி முன்னுளிலும், ஆரியத்தன்றி அருந்தமிழிலும் இந்நெறி கூறப் பட்டதை நிறுவுதும்.

இவ்வுலகில் வழங்கிவரும் நூல்களிலெல்லாம் மிகப்பழமை யானதாகச் சரித்திர ஆராய்ச்சியாளராலேயே ஒப்பப்பெற்ற தொல்காப்பியத்திலே வீட்டு நெறி கூறப் பெற்றிருப்பதைப் புறத்திணையியல் 88, 89 முதலிய சூத்திரங்களிலும், வேறு பல விடங்களினுங் காணலாம். இதனைத் தமிழறிஞருட் சிறந்த திருவாளர். பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள் "அஞ்ஞானத்தின் வழக்கீடு" என்னும் அரிய நூலின் முகவுரையில் இதற்குப் பல்லா யிரம் ஆண்டுகளுக்கு முன் வழங்கி வந்ததும், வைதீக சித்தாந்தத் திற்குச் சிறிது மாறுபட்டதும், தொல்காப்பியத்தில் விரவிக் கிடப்பதுமான கந்தழிக்கொள்கை.........இயற்கை உண்மை களுக்கும், அறிவுநூல், எண்ணூல், அளவைநூல் முதலாயின வற்றேடும் முரண்படாது நிற்கின்றது." என்றும்; தமது தமி ழலைகத் தொடர் (முதற்சுவடி) என்னும் நூலின்கண் தமிழ்மறைக் கும் ஆரியமறைக்குமுள்ள வேற்றுமையைத் "தொல்காப்பியஞ் சொன்ன தமிழகத்தந்தணர் மறை ..ஆரியவேத மன்றென்பதற் குச்சான்று தொல்காப்பிய நூலிலேயே பல்லிடங்களிற் காண லாம். ......தமிழகத்தந்தணர் மறையோ தெய்வம் அஃறிணை யென்பது; மந்திரங்கள் மாந்தர் கிளந்தவை யென்பது; அம் மந்திரங்களுக்கு, ரிக்குகள் போன்ற அளவு முதலிய கட்டுப்பாடில வென்பது; கொடிநிலை, கந்தழி, வள்ளியென்ற வடுநீங்கு சிறப்

(1) திருநான்மறை விளக்க ஆராய்ச்சி-93.

பின், மூன்றும் முதலன வென்பது; ழ, ற, ன, எ, ஒவ்வுமன்றி ஆய்தம் முதலிய முச்சார்பு வகைத் தொகையாகச் சாரவரும் எண்ணிறந்த 'எல்லா எழுத்துக்களுக்கும் அகத்தெழு வளியிசை அளவுநுவல்வது" என்றுங் குறிக்கின்றனர். இவை யாவும் இப் பெரியார்க்கு மறையாயின போலும்.

2. "மண்ணின்மேற்-கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு-மொண்டொடி கண்ணே யுளவென்று-பண்டை யோர் கட்டுரை" யென்று சேரமான் பெருமான் நாயனர் ஞானவுலாவிற் கூறியுள்ளபடி, பண்டையோராகிய வள்ளுவர் பண்டைக் காலத்திலேயே வீட்டுநெறி கூறிற்றிலரோ? இன் றென்போர் திருவள்ளுவமாலையில் சங்கப்பெரும்புலவராம் உக்கிரப் பெருவழுதியார், மாமூலனர், நல்லந்துவனர், சிறுமேதாவியார், தொடித்தலை விழுத்தண்டினர், நரிவெரூஉத்தலையார், கோவூர் கிழார், இழிகட்பெருங்கண்ணனர், களத்தூர் கிழார், கொடிஞான் மாணி பூதனர் கூறியுள்ளவற்றை உற்று நோக்கித் தெளிவாராக.

3. இதுவுங் காரணவகையாற் சுருங்கக் கூறியுளரென்பா ராயின், எவ்வாறுயினுங் கூறியுளரென்பதை வற்புறுத்திப் பண் டைத்தமிழ்க்குரவருட் பண்டையோராகிய மணிவாசகனரியற்றிய திருவாசகத்திலாவது விரித்துக்கூறவில்லையோ வென்று வினவு வேம். ஆங்குச் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவர் செல்வர் சிவனடிக்கீழ்ப் பல்லோருமேத்தப்பணிந்து" என்று கூறியிருப்பதற்கிணையாக ஆரியத்தில் ஒரு செய்யுளாவது காட்ட முன்னழைப்பேம்.

4. இதுவும் போதாதெனின் 'வேதந்தமிழால் விரித்த' தமிழ் விரகர்களாகிய மூவரியற்றிய இணையற்ற தமிழ் மறைகளில் இன்ப மிறுவாயலது செப்பவில்லையோ வென்றுங், கவுடமாகவன்றி வெளிப்படையாகவு முரைக்கவில்லையோ" வென்றும் வினவுவேம். இன்னும் நம்மாழ்வாராதி திருமாலடியார் பலரும், அருணகிரி நாதர் முதலிய குமரனடிபேணுங் கூட்டத்தாரும் யாது கூறி யுளரோ வெனக்கேட்பேம்.

5. இனி அறிவு நூலில்லை யென்பர் போலும். இன்னார் "போதமிகு நெய்யினுறு சுவையாம் நீள் வெண்ணெய் மெய்கண்டான் செய்த தமிழும் அதன் உதவி நூல்களுமாய பன்னூன்கு பகுதிகளிலும் அவற்றின் அருட்பொலிவு நிறைந்த விரிவுரைகளிலும், அருந்தமிழாம் ஔவைக்குறள், வள்ளலார் சாத்திரம் முதலிய பல்வேறு நூல்களிலும் அகப்படாப் பொருள் ஆரியத் திலதென்பதறியார் போலும்!

6. இன்னும்,

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"(1)

என்றுணர்ந்து ஒருநூலாந்திருநூல் செய்த திருமூலர் எவற்றைத் தமிழுக்கு ஆடாதென்று விட்டனரோ அறியேம். அன்னார்

"சிலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே"(2)

"அந்தி மதிபுனை யரனடி நாடொறுஞ்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற்றேனே"(3)

என்று கூறிக்கொள்வது பொய்யுரைபோலும்! அன்னாரை

"உள்ளுணர்வான ஞான முதலிய வொரு நான்குண்மை
தெள்ளு தீந்தமிழாற் கூறுந் திருமூலர்"(4)

என்றும், அவர் நூலை

"ஊனுடம்பிற் பிறவிவிடந் தீர்த்துலகத் தோருய்ய
ஞானமுத னான்குமலர் நற்றிருமந் திரமாலை"(5)

என்றுஞ் சேக்கிழார் செப்பியது தமிழ் அஞ்ஞான மயத்ததென்றுணர்த்துவதற்கே போலும்!! இந்நூலும் மிகப்பண்டையதென்பதை இந்நூல் செயற்கே மூவாயிரமாண்டாயிற்றென்பதைக் கொண்டு கணக்கிடுக.

சதாசிவ தத்துவமே முத்தமிழ் வேதமாக விளங்குதலானும்.(6) கல்லாநிழற்கீழ்க் கண்ணுதலோன் காமர்காட்சியுடன்

---

(1) திருமந்திரம்-திருமூலர் வரலாறு—9. (2) திருமந்திரம்-திருமூலர் வரலாறு—5. (3) திருமந்திரம்-திருமூலர் வரலாறு-1. (4) பெரிய புராணம்-எயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்—409. (5) பெரிய புராணம், திருமூல நாயனார் புராணம்—26. (6) திருமந்திரம் திருமூலர் வரலாறு—4.

கலித்துறையது பயந்திருத்தலானும் (1), முதல்வனாலேயே முத்தமிழடைவானது முற்படுகிரிதனில் முற்பட எழுதப்பட்டிருத்தலானும் (2), தென்றமிழ்க் கடவுளாம் திருமுருகன் திருமுகத்திலொன்றதா வவ்வெழுத்திருத்தலானும் (3), அவ்வெழுத்தின் பொருளை இறைவற்கு அவன் கொஞ்சித் தமிழிற் பகர்ந்திருத்தலானும் (4), அவ்விறைவனும் ஆரியமுந் தமிழும் உடனே சொல்லிக் காரிகையார்க்குங் கருணை செய்திருத்தலானும் (5), அவ்வாறு சொல்லப்பட்ட தமிழ்ச் சொலும் வடசொலும் அவ்விறைவன் றாளிணையே சேர்ந்திருப்பதுடன் (6) அவனை யுணர்த்தியும் வரலானும் (7) அவற்றுள் தண்டமிழ்ச் சொல்லானது தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலிய ஆரியத்தாலியலாத அரியபல அற்புதச் செயல்களை ஆற்றியிருத்தலானும் (8) அச்சொற்களாலாய தமிழ் மறையானது சிச்சிலி பண்டருந்தத் தேடுமதுபோலன்றே விருத்தலானும் (9) வீட்டுநெறி கூறற்கு இவ்விருமொழியும் ஒத்த உயர்வுடையன என்பதும், இன்னும் ஆரியத்தினும் அருந்தமிழே மிகவும் உரிமையுடைய மொழியாகும் என்பதும் முரணாகா.

இன்னுஞ் சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய வீட்டினிலக்கணத்தையும் இயன்றவரை விரித்துக்கூற முன்வந்தது தமிழ்மொழியொன்றே யன்றோ! இம்மொழியின் முதுநூல்களாய முச்சங்கத்தமிழிற் கண்டுள்ள அகப்பொருள் வீட்டின்ப விலக்கணத்தையுங் குறிக்கு மென்பதைப் பரிமேலழகர் காமத்துப் பாலுரையினிறுதியில் "இக்காமத்துப் பாலுக்குக் காமத்தைக் குறித்துச் செம்பொருளாகச் சொல்லப்பட்ட இச்சிற்றின்பப் பொருளன்றி மோக்ஷத்தைக் குறித்துக் குறிப்புப் பொருளாகச் சொல்லப்பட்ட பேரின்பப் பொருளும் உண்டு"

---

(1) தொல்காப்பிய முகவுரை. (2) திருப்புகழ்-விநாயகர் துதி–1. (3) கந்தபுராணம்-அயனைச் சிறைபுரி படலம்–10; அவ்வெழுத்தென்றது குடிலையை. (4) திருப்புகழ். (5) திருமந்திரம்-ஆகமச்சிறப்பு–9. (6) சம்பந்தர்-குறிஞ்சி-திருஅச்சிறுபாக்கம்–4. (7) திருமந்திரம்-ஆகமச்சிறப்பு–10. (8) திருவிளையாடற்புராணம். (9) திருமுறைகண்ட புராணம்–17.

என்று கூறியுள்ளதைக் கொண்டு தெளியலாம். இவ்வாறு இவ்வரும் பொருளும் பயத்தலாலன்றே ஆளுடைய நம்பியும் இச்சங்கப் புலவர்களைப் "பொய்யடிமை யில்லாத புலவர்" என்று புகழ்கின்றனர். இப்புலவர் யாவரென நோக்குவார்க்கு நம்பியாண்டார் நம்பியும்

> "தாணியிற் பொய்ம்மை யிலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
> பரணர்க் கீரர்முதனாற்பத் தொன்பது பல் புலவோர்"

என்று விளக்கியதோடு நில்லாது அன்னார் பாடும் பாடல்களும்

> "அருணமக் கீயுந் திருவால வாயரன் சேவடிக்கே
> பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே"

என்று இறைவன் திருவடியே பொருள்பட வுரைக்குமென்று தேற்றினர். இதனையே அருண்மொழித் தேவரும் இன்னுந் தேற்றமாக

> செய்புணிகழ் சொற்றெளிவுஞ் செவ்வியநூல் பலநோக்கு
> மெய்புணர்வின் பயனிதுவே யெனத்துணிந்து விளங்கி
> மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே யாளானார் [யொளிர்
> பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார்.
> பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமையல்லாற்
> சொற்பதங்கள் வாய்திறவா தொண்டுநெறித் தலைநின்ற
> பெற்றியினின் மெய்யடிமை யுடையாராம் பெரும்புலவர்
> மற்றவர்தம் பெருமையா ரறிந்துரைக்க வல்லார்கள்

என்று தெளிவித்தார். இதனாலன்றே கண்ணுதற் கடவுளும் இக்காமத்துப்பாலே கழறுங் கழகமோடமர்ந்தனர். இதனாலன்றே இப்பரமன் எடெழுதிய சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே காமுகர் காமநன் னூலதென்ப ரேனும் அந்தணர் ஆரணங்கா ணென்பர், யோகியர் ஆகமத்தின் காரணங்கா ணென்பர், எண்ணர் எரணங்கா ணென்பர், இன்புலவர் எழுத்தென்பர். இதனாலன்றே, இக்கோவையின் பொருள்கேட்ட முட்டாத முச்சந்தி மூவாயிரவர்க்கும் மணிவாசகனார் இதன் பொருள் இஃதேயென்று சிற்றம்பலவனைக் குறித்து மறைந்தனர். இதனாலன்றே, இக்கோவையின் உண்மைப் பொருளுரைக்கப்

புகுந்த விசாகப் பெருமாளையாவர்கள் தமது முகவுரையில் "திருக் கோவையாரில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆகிய ஐந்தவத்தையும் முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்திணைகளாகவும், பக்குவான்மாவும் பரம்பொருளும் முறையே தலைமகனுந் தலைமகளுமாகவும், திருவருள் பாங்கியாகவும், ஆன்மபோதம் பாங்கனாகவும், திரோதாயி செவிலித்தாயாகவும், பரை நற்றாயாகவும், அவற்றினனுபவம் காண்டல் முதலிய நானூறு துறைகளாகவும் அமைக்கப் பட்டிருக்கின்றன; இத்துறைகளையே பரமசிவம் மதுரைச் சங்கத்து ளொருவராகிய இறையனாராயிருந்து இறையனாரகப் பொருளிலக்கணமாகத் திருவாய் மலர்ந்தருளினர்." என்று ஆராய்ந்தறிவுறுத்தியதோடு நில்லாது அந்நூலின் இயற்கைப் புணர்ச்சி முதலிய இருபத்தைந்து கிளவிக் கொத்துகளுக்கும், ஒவ்வொரு கொத்திலுமுள்ள துறைகளுக்கும் உண்மைக்கருத்து முகாரத்திருக்கின்றனர். இவையாவும் ஆரிய மொழியால் ஒரு சிறிதும் அறிவிக்கப்படாததால், வீட்டிலக்கணம் அம்மொழியை யுணர்ந்தோரால் ஒரு சிறிதுங் கூறப்படவில்லை யென்பது விளங்கும். இஃது இவ்வாறாக, ஆரியத்திற்றான் வீட்டு நெறியு மிலக்கணமுங் கூறப்பட்டுளவென்பது எட்டுணையும் பொருந்தாது.

எனவே, தமிழ் மொழிக்கு மறைக்கப் பட்டதனாலாவது, தமிழ் மக்களுக்கு மறைக்கப்பட்டதனா லாவது, வீட்டுநெறி தமிழிற் கூறுரென்பதனாலாவது ஆரிய வேதத்திற்கு மறையென்ற பெயரெய்திற் றென்பது அறிவுடைக் கொள்கையாகாது; இவற்றிற்கு யாதொரு ஆதாவு மின்மையின். ஆதலின் நான்கு மறைப் பொருளையு முணர்த்துதலின் ஆகுபெயராய் மறையென்றழைக்கப் படுகின்றதென்பதே உண்மையாம்.

இவ்வாறாயின் இச்சொல் ஆரியவேதத்தை மட்டுங் குறியாது ஆரியத்துள்ள நாற்பொருள் நூற்கள் யாவற்றையுங் குறித்தல் வேண்டுமன்றோ? "பன்னுன் மறைபாடுதிர்" (1)

---

(1) சுந்தரர்—திருக்கோத்திட்டை—இந்தளம்-6.

"நண்ணியோர் வடத்தினிழ லல்வர்முனி வர்க்கன்று—
எண்ணிலி மறைப்பொருள் விரித்தவர்" (1)
"மைபுலாவரு களத்தினன் அளப்பிலா மறைகள்—
செய்ய வாகமம் பற்பல புரிந்தனன்" (2)
"பரந்த அருமறையநேகமுங் குவிந்தும் அறியாத—
அறிவுமறியாமையுங் கடந்த அறிவ" (3)
"ஆயிரமறைக்கு மெட்டாச் சென்னி" (4)

என்னும் பலவாக்கியங்களிலுள்ள மறைகள் இருக்கு முதல் நால் வேதமட்டுமாகா, இவை ஒரு நான்மறையே யாதலானும், எண்ணிறந்தும் அளவிறந்து மடங்கியதாலுமென்க. பின் இறைவரா லியற்றப்பட்ட 'பல', 'எண்ணில்லா', 'அளப்பிலா' மறைகள் யாவையென நோக்குவோர்க்கு அவை காலந்தொறும் இயற்றப் பெறும் வேதமன்றி ஆகமத்தையுங் குறிக்குமென்பதை

"மறையாயின பலசொல்லி யொண்மலர்ச் சாந்தவைகொண்டு
முறையால் மிகுமுனிவர் தொழுமுது குன்றடைவோமே" (5)

என்பனவாதிய பலபாடல்கள் நிறுவும். இறைவனை முறையாற் றொழும் வழியை ஆகமங்களே அறிவித்தலா லென்க. இவ்வாறே ஆறங்கமும், பதினெண் புராணங்களும் நூற்பொருளை இயம்புதலானும்,

"தொகுத்தவனருமறையங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழிற் கூகமேவினன்" (6)
"பதினெட்டொடாறும் விரித்தார்க்கிடம்...கேதாரமே" (7)

என்ற வாக்குக்கிணங்க இறைவனா லியற்றப் பெற்றமையினானும், பின்னர்க் காட்டப்படும்படி இவையாவும் வேதமென்றே அழைக்கப்படுகையானும் இவையாவும் மறையாம். பின் இவைகளை யாண்டும் மறையென்னாது பிரித்தோதுவானேனெனின், மறையென்று தொகுத்துக் கூறியதை வகுத்துக் கூறுவதற்கே யென்க.

(1) சம்பந்தர்-இந்தளம்-திருவையாறு—4. (2) கந்தபுராணம்-அயனைச் சிறைபுரிபடலம்—7. (3) திருப்புகழ்-பொதுப்பாடல் 'குகையில் நவநாதரும்' என்னும் பாடல். (4) சேக்கிழார் பிள்ளைத்தமிழ்-செங்கீரைப்பருவம்—5. (5) சம்பந்தர்-நட்டபாடை-திருமுதுகுன்றம்—5. (6) சம்பந்தர், காந்தார பஞ்சமம்-திருவிற்கோலம்-6. (7) சம்பந்தர், செவ்வழி-திருக்கேதாரம்-2.

எனவே மறையென்ற சொல் ஆரியத்திலியற்றப்பெற்ற ஆகமம், ஆறங்கம், புராணம் முதலியவைகளையுங் குறிக்கும்.

இஃதன்றி, இருமொழிக்கும் முதற்குரவர் இறைவரேயாதலானும், இறைவர் "பண்ணா ரின்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே"(1) யென்றழைக்கப்படுதலினாலும், 'பன்னூன் மறையுள்' தமிழ் நூற்களுமடங்கும். நாற்பொருள் பயத்தலின் திருக்குறளுந் தேவார திருவாசகங்களும் மறையென்றழைக்கப்படல் தமிழ் வழக்கே. இவ்வழக்காற்றிற் கிணங்கவே தேவார திருவாசகங்களிலும் மற்றுந் தமிழ் நூற்களிலும் மறையென்னுஞ் சொல் தமிழ் நூற்களையுங் குறித்தே வழங்கப் பட்டிருக்கின்றன வென்பதைப் பல்லாற்றானும் நிறுவுதும்.

1. "அகோர தேவரியற்றிய வேதாரணியத் தலபுராணம், நாமச்சருக்கம் என்னுஞ் சருக்கத்தில் வேதாரணியத் தலத்திற்கு அப்பெயரெய்தியதற்குக் காரணங் கூறப்பட்டிருக்கிறது. அதன் சுருக்கமாவது :— ஓர் பிரளயகாலத்தில் அங்கம், மிருதி, புராணம் ஆதிய நூல்களெல்லாம் வேதத்தில் ஒடுங்கின. வேதம் புருட ரூபங்கொண்டு சத்தியகிரித்தலத்தைச் சார்ந்து, வேத அமிர்தமென வோர் தடாகமுண்டுசெய்து அத்தடாகத் தீர்த்தத்தால் அத்தலத்தில் எழுந்தருளியிருந்த சிவகிரி நாதனை அபிடேகித்து அநேக காலம் வணங்கியது............... அவ்வழிபாட்டால் சிவபிரான் சகளீகரித்து எழுந்தருள, வேதபுருடன் கேட்ட வரங்கள் மூன்று. முதலாவது 'தீண்டரும் பதிதர், தூர்த்தர், செறிந்தபாசண்டர், தீயோர், மாண்டருங் குணமிலார் மறையவரென்ன நாமம் பூண்டுறைந்திட வாலாமை பூண்டனம் புனிதமற்றே'' 'ஆதலின் வீரிய சத்தியாவும் வீந்தன, மீளநின்னால் ஆரியமாகி யாக்க மடைந்துறு வலியினோடும், பேரியல் புனிதமாகப் பிறங்கலொன்று ....'' (2) என்பதாம்.

---

(1) சுந்தரர்-நட்டராகம்-திருமழபாடி—5. (2) இது மறையென்னுஞ் சொல் தமிழ் நூற்களை ஒருகாலுங் குறிக்காதென நீண்டதோர் கட்டுரையெழுதிய திரு. மா. சாம்பசிவம் பிள்ளையவர்களாலேயே சுருக்கித் தமது திருநான்மறை விளக்க வாராய்ச்சியிற் கூறப்பட்டுள்ளது. (பக்கம் 15).

இதனால் வேதம் ஆதியில் ஆரியத்திலில்லாது பலருந் தீண்டத் தகுந்த தமிழ்மொழியி லிருந்திருக்கவேண்டு மென்பதொருதலை. அதன் பிறகுதானே இறைவன் அவற்றை ஆரியத்திலியற்றுவித்திருக்க வேண்டும். ஆதலின் ஆரிய மறையின் அரிய மூதாதை அருந்தமிழ் மறையன்றோ? இம் மூதாதையைக் குறித்தே திருஞான சம்பந்தர் 'மறை', 'வேதம்' என்னுஞ் சொற்களை

"சதுரம் மறைதான் துதி செய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ் மறைக்காட்டுறை மைந்தா"(1)
"பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
மலரால் வழிபாடு செய் மாமறைக்காடா"(2)
"வேதம்பல வோமம் வியந்தடி போற்ற
வோதம் முலவும் மறைக்காட்டி லுறைவாய்"(3)

என்பனவாதிய பலபாடல்களில் பதித்திருக்கின்றனர். இவ்வாறே ஆளுடைய அரசு, நம்பி அடிகள் ஆகிய அருண்மொழித் தலைவர் குறித்திருப்பதையும் ஆண்டாண்டுக் கண்டு கொள்க. இதற்கிசையவே

"சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்"; "கல்லாலங் கண்ணிழற் கீழ்க் கவித்துறையது பயந்த காமர்காட்சி"; "ஒன்றைக் கொஞ்சித் தமிழிற் பகர்வோனே"

என்பனவாதிய பல அருண்மொழிகளும் அருமறை ஆதியில் அருந்தமிழி லுரைக்கப் பெற்றிருந்ததை அறிவுறுத்தும். இக்கருத்தையும், சைவம் தென்றமிழ் நாட்டிற்றான் முன்னர்த் தலையெடுத்துப் பின்னர் வடநாட்டிலும் பரவிற்றென்னும் சரித்திர ஆராய்ச்சியாளர் கருத்தையும், "தேவர் முனிவர்க் கோத் தளித்த" திருவோத்தூரும், வலை வீசி மணம் புரியப்பட்ட மலைமகளுக்கு "வேதப்பயனெலாந்திரட்டி முந்நீர்ப் பொங்கிருஞ் சுதை போலட்டிப் புகட்டிய" பொழுது வீற்றிருந்த திரு உத்தரகோசமங்கையும், வேதங்கள் பூசித்த திருவேதிகுடியும், திருமறைக்காடும், திருவழுந்தூரும், வேதத்திற்குப் பொருளருளிய

(1–2–3) சம்பந்தர்-இத்தளம்-திருமறைக்காடு-1, 6, 10.

திருவாலவாயும் தமிழ் நாட்டுப் பதிகளாயிருக்கிற கருத்தையும் உற்று நோக்க, மறை தமிழில் முன்னதாக விளங்கிப் பின் ஆரியத்திலியற்றப் பெற்றதன் காரணம் நன்கு புலனாகின்றது. சைவம் முதலிற் றமிழ் நாட்டிலுண்டானதால் மறையும் முன்னர்த் தமிழிலேற்பட்டிருக்கவேண்டும். சைவம் பின்னர் வடநாட்டிலும் பாவி வடநாட்டாரும் சைவரான பின் யாவர்க்கும் விளங்கக் கூடிய பொதுமறை யொன்றியற்றுங் கருத்து இத்தேயப் பெரியார்க்குண்டாகவே அன்னார் வடமொழி தென்மொழிகளிலுள்ள(1) முக்கிய பாகங்களைச் சேர்த்து ஆரியமென்னுமோர் மொழியுண்டாக்கி அதில் வேத ஆகம புராணங்களை இயற்றியிருக்கக் கூடுமென்பதே பல உண்மைகளுக்கிசைந்த கொள்கை யாகின்றது. பின்னர் ஆரிய மறையே இந்திய நாடு முழுவதும் வழங்குவதானமையின், தமிழ் மறை, ஆகம, புராணங்கள் கடல் கோளாலோ, வழங்குவா ரதிக மின்மையாலோ, தேசத்தை ஐக்கியப்படுத்தும் பெருமையுடைமையால் ஆரியமறை ஆன்றோரால் அதிகம் போற்றப்பட்டுத் தமிழ் மறை முதலியன அத்துணை போற்றப் படாததாலோ இறந்துபட்டிருக்கலாம். இஃது எவ்வாறாயினும் மறைகள் முதலிற் றமிழிலிருந்த தென்பதும், பின்னர் ஆரியத்திலியற்றப் பெற்ற தென்பதும், ஆகலின் அஃது எம்மொழியிலிருப்பினும் மறைப் பொருளாம் நாற் பொருள் பயத்தலின் மறையென் றழைக்கப்பட்ட தென்பதும், எனவே அது தமிழ் நூற்களையுங் குறிக்கு மென்பதும் மறுக்க முடியாச் செய்தியாம்.

2. திருஞான சம்பந்தர் கூற்றும் "மறை கொண் மிழலையீர்"(2) என்னும் வாக்கியம் இறைவன் ஏற்றுக்கொள்ளும் அடியார் சொன் மாலைகளையே மறையென்று குறிப்பிடுகிறது. ஆரிய மறையில் மிழலையுள் விளங்கும் இறைவனை எத்தும் பாடல் ஒன்றுமிலாததால் இச்சொல் சம்பந்தர் பாடிய மறைகளையும்,

(1) ஈண்டு வடமொழி யென்றது இந்துஸ்தானி, உர்டு, வங்காளி, குஜராத்தி, மராத்தி முதலிய மொழிகளை. தென் மொழி யென்றது தமிழ், தெலுங்கு, மளையாளம் முதலிய மொழிகளை. (2) சம்பந்தர்-குறிஞ்சி-திருவீழிமிழலை—2.

அவர் போன்ற திருநாவுக்கரையர் முதலிய அடியார்களியற்றி யுள்ள தமிழ் மறைகளையுமே குறிக்கின்றது. இதற்கிசைய வேறோரிடத்தும்

"உன்னிய வருமறை யொலியினை முறைமிகு பாடல் செய்
இன்னிசை யவருறை யெழில்திகழ் பொழில் வீழிமிழலை"

என்று இன்னிசைப் பனுவலியற்றும் அடியாருறைகின்ற வீழிமிழலை யென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. தம் பாடலும் மறையாவதை

"ஞாலம் புகழ்காழி ஞானசம்பந்தன்ற-னுலு மறையோது நாலூர் மயானத்தை" (1), "ஞான முனிவனிடு மறை" (2), "ஞான சம்பந்தன் சொன்ன கலைகளிவை வல்லார், கவலை களைவாரே" (3)

என்று பல்வேறிடங்களிற்றாமே குறித்திருப்பதும், நம்பாண்டார் நம்பி "ஞான சம்பந்தனிடுஞ் சுருதிக் கழைவளர் குன்று" (4) என்று குறித்திருப்பதும் நன்கு நிறுவும். 'இவ்வாறே திருமாலடியாருட் பெரியாராகிய நம்மாழ்வாரின் திருவாய் மொழிகள் அருளாளப் பெருமா ளெம்பெருமானாரால் அருமறை யென்றழைக்கப்படுதலை "ஆசிரியப் பாவதனு லருமறைநூல் விரித்தானை" (5) என்னும் பாடலிற் கண்டு கொள்க,

3. திருஞான சம்பந்தர் தம்மையே குறிக்கப் பல்வேறிடங்களிற் பயன் படுத்தும் "மறை ஞானசம்பந்தன்" என்னுஞ் சொற்றொடர் அவ்வாறே பலமுறை பயனுறுத்தும் "தமிழ் ஞான சம்பந்தன் என்னுஞ் சொற்றொடரை யொப்ப விருத்தலின், இவை இவர் தமிழில் நூலியற்று மாற்றலை எவ்வாறு ஓதாதுணர்ந்தனரோ அவ்வாறே நாற்பொருளையும் ஓதாதுணர்ந்ததையே குறிக்கும். இவ்வுணர்வு தமிழிலேயே வெளிப்பட்டமையின் நூற்களைக் குறிப்பதாகக் கொள்ளின் இச்சொல் தமிழ் நூற்களையே குறிக்கும். எடுத்துக்காட்டாக—

---

(1) சீகாமரம்-திருநாலூர்த்திருமயானம்—11. (2) பியந்தைக்காந்தாரம்-திருநனிபள்ளி—11. (3) குறிஞ்சி-திருநல்லம்—11. (4) பதினோராந் திருமுறை, திருஞானசம்பந்தர் திருவந்தாதி—48. (5) திருவாசிரியத்திற்கு முன்னுள்ள தனியன்.

"நம்பன்றன் கழல்பரவி நவில்கின்ற மறை ஞான-சம்பந்தன்"(1)
"புகலி நகர்தன்மேலுரைக்குந் தமிழ்ஞான சம்பந்தன்"(2)
என்னு மிருவாக்கியங்களையும் உற்று நோக்குக. இவ்வாறே இன்னாராற் கூறப்பெறும்

"நான்மறைவல்ல ஞான சம்பந்தன்"(3) என்பதற்கும், "நல்ல செந்தமிழ் வல்லவன் ஞான சம்பந்தன்"(4) என்பதற்கும், சுந்தரராற் கூறப்பெறும், "நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்"(5) என்பதற்கும் வேற்றுமை காண்கிலன். ஈண்டு வல்ல என்னுஞ் சொல் "மாணப்பாடி மறைவல்லானையே-பேணப்பறையும் பிணிகளானவே"(6) என்னும் வாக்கியத்திற் பொருள்படல்போல 'இயற்ற வல்ல' வென்றே பொருள் படுமாதலின் தற்றமிழியற்ற வல்ல ஞான சம்பந்தனே நான்மறை யியற்ற வல்லனெனின் இம் மறை இவர் பாடுந்தமிழ் மறையன்றி வேறியாதோ அறிகிலன். இச்சொற்றொடருள் தமிழும், மறையுஞ் சொல்லும் பொருளு மாதல் காண்க. இதனையே "முத்தமிழ் நான்மறை ஞானசம்பந்தன்"(7) என்று கூட்டிக் கூறுதலுங் காண்க.

இனி வல்ல வென்பதற்குக் கற்றுவல்ல அல்லது கேட்டு வல்லவெனப் பொருள் கொண்டு இவர் கற்று வல்லதுங் கேட்டு வல்லதும் ஆரிய நான் மறையே யாகலாமென்றும், அதனையே "நான்மறை வல்ல ஞான சம்பந்தன்" என்று குறித்திருக்கலாமென்றும் ஐயமுறின், இவர் கற்று வல்லது(8) தமிழ்மறை யன்றென ஒருவருங் கூறத்துணியார், இவர் தமிழ்ப் பேராசிரியராதலின். இவ்வாறே இவர் தன்னை,

---

(1) பஞ்சமம்-திருப்பெருவேளூர்—11. (2) தக்கராகம்—திருப்புகலி—11. (3) காந்தாரபஞ்சமம் - கோயில்—11. (4) காந்தாரம் - திருத்தேவூர்-11. (5) தக்கேசி - திருபுன்கூர்-4. (6) தக்கராகம் - திருக்கோலக்கா-3. (7) திருப்பூந்தராய்-காந்தாரபஞ்சமம்—11. (8) இன்னார் ஏனையோரைப் போன்று வருந்திக் கற்றோரன்றென்பதும், யாவற்றையும் ஓதாதுணர்ந்தோ ரென்பதும் இவர் சரித்திரத்திலிருந்து விளங்கும். ஆதலின் "நான்மறை கற்றவன்' என்று தம்மைக்குறிக்கும் பொழுது இவர் ஓதாதுணர்ந்ததையே குறிப்பதாகக் கொள்வதே பொருந்தும். அவ்வாறாயின் இவர் உணர்ந்தது தமிழ் மொழிவரையறையும் நாற்பொருளுமேயாம். இவ்வாறே இவர் தமிழ் கேட்டதும் ஓர் புலவரிடத்திருந்தும் அன்று: இவருள்ளத்து ஒளிர்ந்த அருட்பொலிவே இவரைக் கேட்பித்ததாகும்.

"சந்தமார் தமிழ் கேட்ட மெய்ஞ்ஞான சம்பந்தன்"(1) என்றழைப்பதால் இவர் கேட்டு வல்லதுந் தமிழேயாம். இதனால் இவர்க்கு ஆரியமறையின் அறிவில்லை யென்று கூற முன் வந்தோமில்லை. அவற்றைப் பயிலவேயில்லை யென்பதே கருத்தாம். பயிலாது விட்டதைப் பின்னர்க் காட்டுதும். பயிலாவிடினும் இரண்டினும் வல்லுநராதலின் ஆரியந்தமிழ் மறைகளை மாற்றி மாற்றி மறைவல்ல வென்றுந் தமிழ் வல்ல வென்றுங் கூறிக்கொண்டு சென்றிருக்கலாமெனின் தமிழ் கூறும் பொழுது ஆரியமறையின் தேர்ச்சி கூறல் அகங்காரத்தையே அறிவிக்கும். ஆரியமறை நாற்பொருளுடைத்தாதலின் அப்பொருள் கூறுந் தமிழ் மறைக்குத் தனிமுதல் ஆரிய மறையே யென்று அறிவிக்கவே அத்தேர்ச்சியுங் கூறப்பட்டதெனின்? நாற்பொருள் எம்மொழிக்கும், எந்நூலுக்கும் பொதுவே யாதலின் அவற்றை ஆரியமறைக்கே உரியனவாகக் கூறல் உண்மையன்று. அன்றியும் ஆரியத்தில் மறையியற்றப் படுமுன்னரேயே தமிழ் மறையியற்றப் பெற்றிருந்ததை முன்னர் விளக்கினும். அம்மறையினுந் தமிழ் மறைகள் சிறப்புறுதலைப் பின்னர் விளக்குவாம். எனவே 'மறை ஞானசம்பந்தன்,' 'நான்மறை வல்ல ஞானசம்பந்தன்' என்னுஞ் செற்றொடருள் விளங்கும் 'மறை' தமிழ் மறையைக் குறிக்கும்: அன்றி நாற்பொருளையுங் குறிக்கும்.

4. இன்னுந் திருஞான சம்பந்தர்—

"நாமலிந் தோங்கு நான் மறை ஞானசம்பந்தன்"(2) "நான்மறை நாவன் நற்றமிழ்க் கின்றுணை ஞானசம்பந்தன்"(3) "மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான சம்பந்தன்"(4) "செழுமறைகள் பயிலு நாவன், பன்னிய சீர் மிகு ஞான சம்பந்தன்"(5), "நாவினலம் புகழ்சீர் நான்மறையான் ஞானசம்பந்தன்"(6), "செழுமறை நிறைநாவன், அரவெனும் பணிவல்லவன்"(7)

(1) திருவாலவாய்-கௌசிகம்—11. (2) சம்பந்தர், தக்கராகம்-திருப்பாம்புரம்-11. (3) சம்பந்தர், குறிஞ்சி-திரு இலம்பையங்கோட்டூர்-11. (4) சம்பந்தர், மேகராகக்குறிஞ்சி - திருவையாறு-11. (5) சம்பந்தர், மேகராகக்குறிஞ்சி-திருவீழிமிழலை—11. (6) சம்பந்தர், காந்தாரம்-திருப்பிரமபுரம் - திருச்சக்கரமாற்று—11. (7) சம்பந்தர், நட்டராகம் - திருமாந்துறை-11.

என்பன போன்ற பல்வேறு வாக்கியங்களுள் இறைவன் தம் முண்ணின்று தம் நாவாற்பாடுஞ் சிறப்புறுத்தப்பெற்ற திருமுறைகளையே மறையென்று குறித்தலுங்காண்க. இஃதன்றி மறையென்னுஞ் சொல் ஈண்டும் ஆரியமறையைத்தான் குறிக்குமென்றும், அவர் தமிழ்மறை பாடுங்காலமொழிந்த எனைக்காலங்களில் ஆரியமறையையே பயின்றிருத்தல் கூடுமென்றும், அதனையே இச்சொற்றொடர்கள் குறித்திருக்கலாமென்றுங் கூற முன் வருவோர் பின்வரும் மறுப்புக்களை யுற்று நோக்குவாராக:—

a. இன்னார் தம்மைக்குறிக்கும் பொழுது பன்முறை தமிழ்விரகன் என்னும் காரணப்பெயரையே சிறப்புப் பெயராக எடுத்தாளுவதன்றிப் பலவிடங்களில் 'தமிழ் ஞானசம்பந்தன்', 'நற்றமிழ்க்கின்றுணை' என்றும், ஒவ்வோரிடங்களில் 'தமிழ்க் கிழமை ஞானன்'.(1) 'செந்தமிழ்க் தடங்கடல்'.(2) 'அருந்தமிழ் சுற்றுமுற்று மாயினன்'(3) என்றும் குறித்திருப்பதை நோக்கியும், பிறர் இவரைக் குறிக்கும்பொழுதும் இவ்வாறே 'தமிழாகரன்', 'தீந்தமிழோர் கண்ணென வோங்குங் கவுணியர் தீபன்', 'தண்டமிழ்விரகன்', நற்றமிழ் விரகன், வண்டமிழ் விரகன், மாதமிழ் விரகன், 'முத்தமிழ் நூலெல்லாம் முழுதுணர்ந்த பிள்ளையார்'(4) முதலியபல அருந்தமிழுடைமொழியா லழைத்திருப்பதை நோக்கியும், ஓரிடத்திலாவது ஆரியம் வல்லவனென் றழைக்காதிருப்பதை நோக்கியும் இன்னார் ஆரியத்தை இடையீடுகளில் பயின்றிராரென்பது வெள்ளிடை.

b. பதினாறாயிரம் பதிகம் பதின்மூன்றாண்டின் பாடியருளிய வொருவர் தமிழ் மயமாகவே இருந்திருக்கவேண்டுமேயன்றி இடையீடுகளிலும் ஆரியம் பயிறல் இயற்கைத்தன்று.

c. இன்னார்தாம் தமிழ் பாடாக்காலங்களையும், இறைவனை சந்தித்துப் பூசை செய்யாக் காலங்களையுங் கழிக்கும் விதத்தை

---

(1) சம்பந்தர், இந்தளம்-திருவிராகம்-திருப்புறம்பயம்—11. (2) சம்பந்தர், யாழ்மூரி-திருத்தருமபுரம்—11. (3) சம்பந்தர், நட்டராகம்-திருத்துருத்தி—11. (4) பதினோராந் திருமுறை-நம்பாண்டார் நம்பி பாடியருளிய பாடல்கள்.

"வந்தியொடு பூசையல்லாப் போழ்தின் மறைபேசிச்
சந்திப் போழ்திற் சமாதி செய்யும்.....ஞானசம்பந்தன்"(1)

என்று மறைபேசியுஞ் சந்திப்போழ்திற் சமாதி செய்துங் கழிப்பதாகத் தாமே கூறுகின்றனர். ஈண்டு மறையை வழக்கம்போல் ஓதுவதாகக் குறியாது பேசுவதாகக் குறித்திருப்பதால் அஃது ஆரிய மறையே யாகாது என்பதும், நாற்பொருட் செய்தியேயாமென்பதுந் தேற்றம்.

d. "சேக்கிழாரும் இவருக்கு நிகழும் இத்தகைய காலப் போக்கைக் குறிக்கும் பொழுது இவர் திருநாவுக்கரையர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர், திருநீலகண்டத்து யாழ்ப்பாணர், முருகர், நின்றசீர் நெடுமாறர், மானியார் முதலிய அடியார்களுடன் கூடிக்குலாவுவதன்றி ஒருவர் பெருமையை மற்றொருவருக்குச் சொல்லிக்களிப்பார் என்று குறித்திருக்கின்றனர்.

e. இன்னர் 'தோலொடு நூல் தாங்குங்'காலே இவர் பெருமையை யுணராத இவரறிவர் (ஆசிரியர்) இவர்க்கு ஆரிய மறையின் அறிவில்லை யென்று கருதி, 'வருதிறத்தின் மறை நான்குந் தந்தோமென்று மந்திரங்கள் மொழிந்தவர்க்கு' இவர், தாமு மாரிய மந்திரங்களையு முணர்ந்திருத்தலைக்காட்ட "பொருவிறப்ப வோதினர் புகலிவந்த புண்ணியனர் எண்ணிறந்த புனித வேதம்"(2) என்று சேக்கிழார் செப்புகின்றனர். இதனல் இவர் ஆரிய முணர்ந்திருத்தலை ஒருவரு மறிந்திலரென்பது வெள்ளிடை. இதன் காரணம் இவர் ஆரிய மறையைப் பயிலாததன்றே? ஆதலின் இவர் தமிழில் நாற்பொருளை யியம்பியே காலங் கழித்தனர் என்பதும், இவர் கூறும் "நான்மறை நாவின்" என்பனபோன்ற சொற்றொடருள் உள்ள நான்மறை தாம்பாடும் நாற்பொருட் டமிழ் நூல் அல்லது நாற்பொருட் செய்தியே யாகல் வேண்டுமென்பதுமொருதலை.

f. ஒரு நெறிய மனம் வைத்துணர்பவரும்(3), வேணுபுரந்தன்னைப் பாதத்தினில் மனம் வைத்தெழுபவரும்(4) கைச்சிறு

(1) சம்பந்தர், தக்கேசி-திருச்சண்பைநகர்-11. (2) திருஞானசம்பந்தர் புராணம்-264. (3) சம்பந்தர், நட்டபாடை-திருப்பிரமபுரம்-11. (4) சம்பந்தர், நட்டபாடை-வேணுபுரம்-11.

மறிப்பவன் கழலலாற் பேணாக் கருத்துடையவரும்(1); அண்ணல் சரிதைகள் பரவி நின்றுருகுபவரும்(2), காழியீசன்கழலே பேணுபவரும்(3), கழுமலத்தினுட் கடவுள் பாதமே கருதுபவரு(4)மாகிய வம்பரு வரிவண்டு மணநாற மலரு மதுமலர் நற்கொன்றையானடியலாற்பேணா எம்பிரான் சம்பந்தர்(5) 'பலருண்டெனும் பனுவ(6),லாகிய ஆரியவேதம் பயிறல் அதிக வியப்புடைத்தே! இவ்வாறே சுந்தரரும்

'நானே னும்மடி பாடுத லொழியேன்'(7)

'அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே'(8)

'அண்டா வுன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே'(9)

'வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை மறந்தென்னினைக்கேனே'(10)

'நள்ளாறனையமுதை நாயினேன் மறந்தென்னினைக்கேனே'(11)

'என்னை நான்மறக்கு மாறெம்பெருமானை
யென்னுடம்படு பிணிபிடர் கெடுத்தானை'(12)

'ஒழிந்திலேன் பிதற்றுமா றெம்பெருமானை
உற்ற நோயிற்றையே யுறவொழித்தானை'(13)

என்று தஞ்சிந்தை இடையறாது நீரொழுக்குப் போன்று இறைவன் திருவடியிலேயே நிலைத்து நிற்பதைக் குறிப்பதுடன் இறைவனின் இயற்கை பெரிதுமுடைய மூத்த பிள்ளையார் இளைய பிள்ளையாரையுங் குறிக்கொள்ளாதிருப்பதை

"மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்(14)
எண்ணிலி யொண் பெருவயிறன் கணபதியொன்றறியான்"(15)

என்றும் மற்றைத்தேவரைக் கனவிலுங் கருதாததை

---

(1) சம்பந்தர், குறிஞ்சி-திருஅச்சிறுபாக்கம்—11. (2) சம்பந்தர், குறிஞ்சி-திருஇடைச்சுரம்-11. (3) சம்பந்தர், காந்தாரம்-சீர்காழி-11. (4) சம்பந்தர், பழம்பஞ்சுரம்-ஈரடி-திருப்பிரமபுரம்-12. (5) சுந்தரர், கொல்லிக்கௌவாணம்-தில்லைவாழ்-5. (6) உமாபதிசிவம், திருமுறைகண்ட புராணம்—17. (7) சுந்தரர், திருநாட்டியத்தான்குடி-தக்கராகம்—1. (8) சுந்தரர், திருமழபாடி-நட்டராகம்—1. (9) சுந்தரர், நட்டராகம்-திருகாளத்தி—1. (10) சுந்தரர், தக்கேசி-திருவாழ்கொளிபுத்தூர்—1. (11) சுந்தரர், தக்கேசி-திருநள்ளாறு—1. (12) சுந்தரர், காந்தாரம்-திருத்துருத்தியும், வேள்விகுடியும்-1. (13) சுந்தரர், காந்தாரம்-திருத்துருத்தியும், வேள்விகுடியும்-5. (14) சுந்தரர், கொல்லிக்கௌவாணம்-திருநாகைக்காரோணம்.9. (15) சுந்தரர், தக்கேசி-திருவொற்றியூர்.7.

"மற்றுத் தேவரை நினைந்துனை மறவேன்"(1)
"பேணு தொழிந்தே னுன்னையல்லாற் பிறதேவரை"(2)

என்றுங் குறித்திருப்பதை நோக்க இன்னாரும் "சென்று நாஞ் சிறு தெய்வஞ் சேர்வோ"(3) மென்னும் பாடலாகிய ஆரிய மறையை எவ்வாறு பயின்றிருத்தல் கூடும்? இன்னும் இன்னார் தம்மை 'உளங்குளிர் தமிழூரன்'(4) என்றுதம் முள்ளமே தமிழாற் குளிர்ந்து இருப்பதாகக் குறிப்பதுங் கூர்ந்து நோக்கத் தக்கதே. இவர்—"வழுக்கி வீழினுந் திருப்பெயரல்லால்
மற்று நானறியேன் மறுமாற்றம்"(5)

என்று கூறுவதற்கிணங்க இறைவன் திருப்பெயரை நடராஜா, சிதம்பரநாதா, வேதாரணியா, பஞ்சநதா, மத்தியார்ச்சுனா, கமலாலயா, விருத்தாசலா, சோணாசலா, ஜம்புகேச்சுரா, வைத்தீஸ்வரா முதலிய ஆரியப்பெயர்களால் அழைக்கின்றனரோவென்று ஆராயின், இப்பெயர்கள் வாயினும் நுழையாது விக்குகின்றதை நோக்கியும் நட்டப்பெருமானே, திருச்சிற்றம்பலவா, மறைக்காடரே, ஐயாறுடையவடிகளே, இடைமருதா, புள்ளிருக்கும் வேளூரா வென்பனவாகிய தமிழ்ப் பெயர்களையே தங்குதடையில்லாது நவிலுவதை நோக்கியும் இத்தமிழ் மூவரும் 'அசிக்க ஆரியங்களோதும் ஆதர்' அல்லரென்பது பொருந்தியதேயென்க. சுந்தரரும், சம்பந்தரும் தாம்

'நான்மறை யங்கமோதிய நாவன்'(6)
'மாமறை நான்கினோடு அங்கமாறும் வல்லவன்'(7)

என்றியம்பியுள்ளபடி, ஆறங்கமுடையது ஆரிய வேதமேயாதலின் ஈண்டுக் குறிக்கப்பட்டதும் ஆரியவேதமேயெனின், ஈண்டு அங்கங்களென்றது தமிழ்மொழிக்குரிய எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் இசையிலக்கணம், நிகண்டு, சோதிடம், சமயநெறி

(1) சுந்தரர்-தக்கேசி - திருவொற்றியூர் 7. (2) சுந்தரர் - குறிஞ்சி- திருப்புக்கொளியூர் அவிநாசி 8. (3) அப்பர் - திருமறுமாற்றத் திருத்தாண்டகம். (4) சுந்தரர் - திருவாழ்கொளிபுத்தூர் 12. (5) சுந்தரர் - தக்கேசி - திருவொற்றியூர் 1. (6) சுந்தரர்-தக்கேசி- திருவொற்றியூர் 10. (7) சுந்தரர்-பழம்பஞ்சுரம்- திருத்தோணிபுரம் 11.

ஆகிய ஆறு மொழிவரையறையே யென்பதைப் பின்னர் காட்டுதும். ஆதலின் ஈண்டும் மறையென்னுஞ் சொல் தமிழ் மறைகளைக் குறித்ததென்று தெளிக.

5. இவ்வாறே தொல்காப்பிய மாகிய பழந்தமிழ்நூல் குற்றமற்றதென்று தெரிவிக்க வேண்டி அஃது நான்மறை முற்றக் கற்ற அதங்கோட்டாசாற்கு அறிவிக்கப் பெற்றதால், அவ்வாசான் ஆரியமன்றி அருந்தமிழ் மறையும் அறிந்திருக்க வேண்டுமன்றோ?(1) என்னை? ஆரியம் முற்றமுணர்ந்த மூதறிவாளரிடத்தும் தொல்காப்பியத்தை யுரைத்தால், அவர் தமிழ் கற்றிலரேல் அதன் தலைகால் புரியாது தடுமாறுவரன்றோ? தமிழறிஞர்க்கே அதன் கருத்து விளங்கப் பன்னெடுங் காலப்பயிற்சி வேண்டுமெனின் தமிழறிவிலார்க்கு என்னும்? உலக வழக்கொடு செய்யுள் வழக்கு முணர்ந்த தமிழ்ப் பெரும் புலவராம் நச்சினார்க்கினியர், பேராசிரியர், கல்லாடர், இளம்பூரணர், சேனாவரையர் முதலிய உரையாசிரியருள்ளே பலமாறுபாடுகளுங், கண்டனங்களும், மறுப்புக்களுமுளவேல் தமிழ்மண மறியாத் தான்றோன்றிகளுக்கு 'அவற்றிற் குற்றங்கூறி விடுப்பல்'(2) என்றெழல் எவ்வாறியலும்? அன்னார் எவ்வளவு ஆரியமும் ஆசற உணர்ந்து மென்னை? அஃது தமிழறிவை எவ்வாறு வளர்க்குமோ அறியேம்! அன்னர் ஒரு ஆரிய வேதத்திலும், ஒருமொழியிலுமில்லா அகப்பொருளிலக்கணத்தை யெவ்வாறு தேர்ந்து தெளிவரோ அறியேம்! அன்னார்க்குரைக்கும் பொழுது எழும் மனக் கலக்கங்களைத் தொல்காப்பியனாரே தெளிவிக்க வேண்டினமையின் அன்னார்க் குரைப்பதினுங் "கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்குமவை" யினும் நல்ல மரங்களுக் குரைத்தல் மதியன்றோ? பின் "வடநூலுணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்காதென்பது முணர்ந்து கோடற்கன்றே பாயிரத்துள் 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' என்றதூஉமென்க" என சிவஞானமுனிவர் தொல்காப்பிய விருத்தியில் எற்றுக்

(1) இஃது திரு. மா. சாம்பசிவம்பிள்ளையவர்கள் தமது திருநான்மறை விளக்கவாராய்ச்சியில் ஈண்டு மறையென்றது ஆரியமறையேயாமென்றதற்கு மறுப்பு. (2) தொல்காப்பியம்-பாயிரம்.

கெழுதினரெனின் அதனால் வடசொல் வழக்கையும், ஒன்றொடொன்று உறழ்ந்து பிறழும் இவ்விரு மொழியிலுமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையு முணர்ந்து விளக்குவதற்கேயாம். இஃதன்றி வடமொழி வேதத்தையும் ஐந்திரத்தையு மாத்திர முணர்ந்தோர், தமிழ் நூற்களை நன்குணராதிருந்தும், தமிழிலக்கணத்தை ஆராய்ந்தறியுமறிஞராவா ரென்பது பனைமரத்திற்றேள் கொட்டினால் தென்னைமரத்தில் 'அண்டைகட்டும்' என்பது போலாம். எனவே அதங்கோட்டாசா னறிந்த 'நான் மறை' இருமொழிகளிலுமுள்ள அரிய நூற்களேயா மென்பதும், அவை அறமாதி நாற்பொருளையு முணர்த்து நூற்களானமையின் நான் மறை யென்றழைக்கப்பட்டன வென்பதுமே பொருந்துமென்க. இவ்வாறே இது போன்று 'மறை' என்னுஞ் சொல் வருமிடங்களிலும் பொருள் கொள்க.

இனி இறைவரியற்றிய 'பன்னான் மறை', 'எண்ணிலி மறை', 'அளப்பிலா மறை' முதலிய சொற்றொடராற் குறிக்கப் பெறுந் தமிழ் மறையாவை யெனின் அவை பன்னிரு திருமுறை, பன்னான்கு சாத்திரம், இறையனாரகப்பொருள் முதலியனவாம். இவற்றுள் பன்னிரு திருமுறையை இறைவன் சம்பந்தராதி அடியார்களுண்ணின்றியற்றி, நம்பியாண்டார் நம்பியாதிய அடியார்களாற் றொகுத்து வகுத்ததாலும், இவ்வாறே பன்னான்கு சாத்திரத்தையும் இறைவன் சந்தனாச்சாரியர் முதலியோருண்ணின்றியற்றி அன்னார்வழி வந்தோராற் றொகுத்து உலகிற்கருளியதாலும் இவையாவும் இறைவரியற்றிய மறைகளேயாம். ஆயினும் மூவரால் இறைவரியற்றியதாகக் குறிக்கப் பெற்ற மறை தாமியற்றிய மறைகளையே எங்ஙனங் குறிக்குமென ஐயுறுவோர்க்குப் 'பன்னான் மறை பாடுதிர்' என்பதிலுள்ள வினை செய்வினையன்றிச் செயப்பாட்டு வினையாதலையும், முக்காலமுங் காட்டி நிற்றலையும் இறைவர் தம் முண்ணின்று இயற்றியதை அவருணர்ந்ததையும், ஆரியவேதமும் இவ்வாறே இயற்றப் பெற்றுத் தொகுத்து வகுக்கப்பட்டதையும் பின்னர்க் காட்டுவாம். கடையிற் கூறிய இறையனாரகப்பொருள் ஒன்றே இறைவன் எங்குமில்லா வியற்கைத்தாகத் தாமே, புறத்தார்க்குப் புலனாகாம

லியற்றி, அகப்பொருணூலின்றி அகங் கரைந்துருகு மன்பர்க் குற்றுழியுதவிச், சொற்றொறுஞ் சொற்றொறும் மூங்கைப் பிள்ளையாம் முருகவேள் பெருமிதமெய்து முறை நூலியற்றுவித்தருளியதாதலின் எல்லா நூற்களினும் பிறப்பாற் சிறந்த மறையாதல் என்று கொள்ளத்தக்கதே(1)

நான்காவதாக 'மறை' என்னுஞ் சொல் மறைந்த பொருளுடைய மந்திரமொழிகளை யுணர்த்தும். இவற்றையே ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார் 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரமென்ப' வென்றார். இவற்றிற்குப் பொருள் கூறிய உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரும் "புறத்தாற்றுப் புலனாகாமன் மறைத்துச் சொல்லுஞ் சொற்றொடரெல்லாம் மந்திரமெனப்படும் என்றவாறு. அவை வல்லார் வாய்க்கேட்டுணர்க. தானே யென்று பிரித்தான் அவை தமிழ் மந்திரமென்றற்கு" என்றார். இவை திருவைந்தெழுத்து(2) திருவாறெழுத்து முதலியன. இவற்றின் உட்பொருள் உபதேச வாயிலாக உணரவேண்டினமையின் இவை மறையாம். உபதேசஞ் செய்யப்படுவதும் பிறர் கேளாவண்ணம் மறைத்தே செய்யப்படுமென்பதை

முற்றொருங் குணரு மாதி முதல்வகே ளுலக மெல்லாம்
பெற்றிடு மவட்கு நீமுன் பிறருண ராத வாற்றாற்
சொற்றதோ ரினைய மூலத் தொல்பொருள் யாருங் கேட்ப
விற்றென வியம்ப லாமோ மறையினு லிசைப்ப தல்லால் (3)

என்னுஞ் செய்யுளானுணர்க. இம்மந்திரங்களையே

(1) இதன் பிறப்பைப்பற்றித் திருவாளர் டா. வெ. மாணிக்கநாய்க்கரவர்கள் போன்ற அறிஞர் ஐயுறுவர். அஃது இயற்கைக்கு மாறாகவிருப்பதால், தமிழில் இம்மாறுபாடுகள் இயற்கையாகவே யிருத்தலின் அக்காரணம் ஒப்பத்தகுந்ததன்று; வேறுகாரணங்காட்டும்வரை இவ்வாறு கொள்ளல் பொருத்தியதே. (2) திருவைந்தெழுத்திலுள்ள சகரம் வல்லினத் தமிழ்ச்சகரமன்றென்றும், அதனால் அது வடமொழி மந்திரமென்றுங் கூறுவோர் பசு, காசு, சேவல், சாவு முதலிய தனித்தமிழ்வார்த்தையிலுள்ள சகரத்தை உற்று நோக்குவாராக. இன்னும் சூக்கும, காரண, மகாகாரண பஞ்சாக்கரங்களுக்கு ஆரியத்திலொரு இயற்பொருளு மில்லையாதலின் இவை ஆரியமந்திரமேயாகாமை தெரிக. (3) கந்தபுராணம்-அயன் சிறை நீக்குபடலம் 38.

"உலகெலா மென்னுமறை யாதியாக் கொண்டு";(1) "நலமலி
தரு மறைமொழியொடு நதியுறுபுனல் புகையொளிமுதன்
மலரவைகொடு வழிபடுதிறன் மறையவனுயி ரதுகொளவரு
சலமலிதரு மறலிதனுயிர் கெடவுதைசெய்த வான்"; (2)
"ஒருவார்த்தையுட் படுத்துப்பற்றினாய்"; (3)

என்பனவாதிய பல திருவாக்குக்களாற் குறித்தனர். இம்மறையையே ஞானநூலோர் மறைக்காது வெளிப்படுத்தும்போது

"இறைசத்தி பாச மெழின்மாயை யாவி
யுறநிற்கு மோங்காரத் துள்";
"ஊன நடன மொருபா லொருபாலாம்
ஞானநடந் தானடுவே நாடு" (4)

என்று விளக்குவர். இத்தமிழ்மறையை ஓதும் முறையைத் தொல்காப்பியனார் விளக்குவதாவது

"எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற்
பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே"

என்பதாம்.

கண்டபெரு மந்திரமே மூவர்பாடல்"(5) என்றும்
"மந்திரங்க ளெழுகோடி யாதலினான் மன்னுமவ
ரிந்தவகை திருமுறைக ளேழாக வெடுத்தமைத்து" (6)

என்றும் உமாபதிசிவமே உணர்ந்துரைத்திருத்தலின் மூவர் பாடலாகிய ஏழுதிருமுறைகளும் மந்திரங்களாம். அப்பாட்டிலேயே

"பந்தமறு மந்திரங்கள் பதினொன்று மாதலினா
லந்தமுறை நான்கினொடு முறைபதினொன் றாக்கினார்"

என்று அன்னாரே உரைத்திருத்தலின் திருமுறைகள் பதினொன்

(1) சேக்கிழார் பிள்ளைத்தமிழ். (2) சம்பந்தர்-நட்டபாடை - திருவிராகம் - திருவீழிமிழலை 5. (3) திருவாசகம் - செத்திலாப்பத்து 2. (4) திருவருட்பயன் - ஐந்தெழுத்தருணிலை 2, 3. (5) திருமுறை கண்ட புராணம் 73. (6) திருமுறைகண்டபுராணம் 28.

றும் மந்திரங்களாம். இவற்றை மறையென்ற தமிழ்ச்சொல்லால் மந்திரமென்னும் பொருளிலுங்குறித்தல் இயல்பே.

இவ்வாறு வழக்காற்றிலேயே நாற் பொருளுடைய மறையென்னுஞ் சொல்லை யாண்டும் ஒரு பொருளே குறிப்பதாகவும், அப்பொருளும் ஆரிய வேதமே யென்பதாகவுங் கொள்ளல் என்றுகொள வியலாத செய்தியாம் (1). இவ்வாறு மேற்கண்ட நாற்பொருளை விளக்குவது அச்சொல்லின் அடைமொழியே யாதலின் அஃதில்லாத பொழுது அச்சொல் அவ்விருக்காதி வேதங்களையே குறிக்குமெனின், அடைமொழியில்லாது வினையைக்கொண்டும், வருமிடத்தின்றன்மையைக்கொண்டும் பொருள் பட்ட இடம் மேற்கண்ட மேற்கோளுள் பலஇருப்பது கண்டு கொள்க. அன்றியும் மனிதன் என்னுஞ்சொல் அடைமொழி யடுத்துவாராத பொழுதெல்லாம் மனிதப்பொதுவையே குறிக்குமன்றி வெள்ளை மனிதனையாவது பிராமணனையாவதுதான் குறிக்குமெனல் பொருந்தாது. ஆனால் சில வெள்ளையரும் பிராமணரும் தாங்களே மனிதர் மற்றெல்லோரு மலரென நினைக்கலாம், அல்லது நினைப்பதைச் செய்கையாற்குறிக்கலாம். அஃது யாவர்க்கும் ஒத்த எண்ணமன்றாதலின் ஏற்பமுடியாதாம். அஃதேபோல் மறையென்னுஞ் சொல் முன்பின் அடைமொழி யாலாவது வருமிடத்திலாவது விளக்கப்படாதவரை மேற்குறித்த நாற் பொருளின் பொதுக்குணமாகிய மறைப்பொருளைக்குறிப்ப தன்றி அல்லது அதனை விளக்கும் நூற்களைக் குறிப்பதன்றி இருக்காதி நால்வேதத்தைக் குறிப்பதாகக்கொள்ளல் ஒரு சிறிதும் பொருந்தாது. இவ்வாறே நான்மறை யென்றவிடத்து அஃது நூற்களைக் குறியாதவரை அறமாதி நாற்பொருளையே குறிக்கும். நூற்களைக்குறிப்பின் எல்லா நான்மறை நூற்களையும் நாற் பொருள்விளக்கும் பொதுத்தன்மையாற் குறிக்கும். ஆனால் முக்கண்ணன் என்புழிச் சிறப்புடைய இறைவனைக் குறித்தல்

(1) இவ்வாரிய வேதங்களைமட்டுங் குறிக்கும்பொழுது சில்விடங்களில் தக்க அடைமொழியாற் குறித்திருப்பதை நம்மாழ்வார் திருமொழி. 8-ம் பத்து 9வது பதிகம். 3வது பாடலில் "வடமொழி மறைவாணர் வேள்வி" என்னும் மேற்கோளிலிருந்து தெளிக.

போல் மறையென்புழிச் சிறப்புடைய ஆரிய வேதத்தையே குறிக்குமெனின் அஃது தமிழ்மறையினுஞ் சிறப்புறாமையைப் பல தமிழ்ப்பெரியார் ஒப்பியுரைத்ததைக்கொண்டு பல ஆதாரங்களுடன் பின்னர் விளக்குவாம். பண்டைய உரையாசிரியர் பலர் அவ்வாறே அச்சொல் ஆரிய வேதத்தைக் குறிப்பதாக உணர்கண்டாரெனின் அன்னார் அடையடுத்தவல்லது இடமடுத்தபொருளை நோக்கி யவ்வாறு குறித்திருத்தல்வேண்டும். அன்றேல் தமிழ் மறையாம் மூவர் தமிழை நன்கோதியுணராததாற் கூறியிருத்தல்வேண்டும். அவ்வாறு ஓதியுணர்ந்த நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், உமாபதிசிவம் முதலிய செந்தமிழ்ச்சீரியர் இம்மூவர் தமிழை மறை, வேதம், சுருதியென்ற அடையடுத்துவராச் சொற்களாற் குறித்திருப்பதை முன்னுங்காட்டினும், பின்னுங் காட்டுவாம். ஆதலின் இச்சொல்லின் பொருளை எற்புழிக்கோடலே பெருத்தமுடைத்தெனவும் அஃதின்றி யாண்டும் ஆரிய வேதத்தையே குறிப்பதாகக்கொள்ளின் மேற்காட்டிய பல அருட்கூற்றுக்களுக்குத்தகுந்த பொருள் கூறவியலாது இடர்ப்பட வேண்டுமெனவுமறிக.

இக்கட்டுரைக் கருத்து யாதெனின் மறைநெறியே காலமுறைமையினும் ஆக்கியோன் பெருமையினும் மாண்புடை நெறியென்பதும், அம்மறைதானும் அதிநுட்பமாய் நாதவிந்து தத்துவங்களை முதலாவதாகவும், ஐம்பொறிகளுக்கும் மறைந்த அறம் பொருளின்பம்வீட்டை இரண்டாவதாகவும், ஆகுபெயராய் இப்பொருள்களை விளக்கிக்கூட்டுவிக்கும் நூற்களை மூன்றாவதாகவுங் குறிக்கின்றதென்பதும், ஒரு மொழிக்காவது வகுப்பினருக்காவது மறைக்கப்பட்டதால் மறையாகுமென்பது தவறென்பதும், வீட்டுநெறி தமிழிற் கூறாரென்று கருதுதலே கண்டிக்கத்தகுந்ததென்பதும், மறையென்னுஞ்சொல் ஆரிய நூற்களிலும் பலவற்றைக் குறிக்குமென்பதும், அச்சொல் தமிழ்மறைகளையுங் குறிக்கிறதென்பதற்கு ஐம்பெரும் அடிப்படைகளாம் வேதம் ஆதியிற்றமிழிலிருத்தல், திருஞான சம்பந்தர் பாடல் மறை சுருதியென்று குறிப்பிடப்படல், அன்னார் தமிழ்கற்று, கேட்டு, இயற்றுவதில் வல்லுநராதலைக் குறிப்பிடல், அன்னார் தம்மை

மறை நாவினென்று குறிப்பிடுவதிலுள்ள மறை தமிழ்மறையேயென்பதற்கும் ஆரியமறையன்றென்பதற்கும் ஆருதாரங்களின்னின்னவெனல், தொல்காப்பியமாராய்தற்கு வேண்டியது தமிழ்மறையேயெனல் ஆகிய இவைகளின் விரிவும், இறைவரியற்றிய தமிழ்மறை யின்னவென்பதும், நான்காவதாக இச்சொல் மந்திர மொழிகளைக் குறிக்குமென்பதும் ஆதலின் இச்சொல்லின் பொருள் ஏற்புழிக்கோடற்பாலதன்றி யாண்டும் ஆரிய வேதங்களையே குறிக்குமெனல், குற்றமுடைய கொள்கையேயென்பதும், எனவே தமிழர் தமிழ்மறை வழக்கமிலாத மாபாவிகளென்றென்பதுமாம்.

இனி இவ்வாறே இதற்கடுத்த கட்டுரையில் வேதம், இருக்கு, சாமம், ஆறங்கம் என்னுஞ் சொற்களின் பொருளை ஆராய்வாம்.

உ

பல்கலைக்கழகங்களின் பாட நூல்கள்.

திருவாளர் : மு. வே. மா : வீ. உலகவூழியர் அவர்கள்,
தமிழாசிரியர், பூளைமேடு.

அறிவினை வளர்க்கும் கல்வியையும் மொழியையும் வளர்த்தற் பொருட்டே பல்கலைக்கழகங்கள் தோன்றி மிளிர்கின்றன. ஆனால் நமது தமிழ்மொழியை எவ்வாற்றான் நமது பல்கலைக் கழகத்தைச்சார்ந்தார் பேணுகின்றனர் எனின், எச்சில் இலைக்குத் தமிழ்மக்கள் எவ்வளவு உயர்வு அளிக்கின்றனரோ அவ்வளவு உயர்வைக் குறையாமல் அளிக்கின்றார்கள் என்பதனை அறிவுடையாவரும் மறார். ஆங்கில முதலிய பிறமொழிகட்கு நன்மைபுரிய வேண்டியது இவர்கள் கடமையே எனினும் செந்தமிழன்னைக்குத் தீங்கு புரியவேண்டும் என்பது இவர்களது இன்றியமையாத பண்பாக இருந்துவருகின்றது. அந்தோ!

375

நன்மைபுரியாராயினும் புரியாராகுக. இத்தகைய தீமையை என் நோக்கிச் செய்கின்றனரோ அறியேம்! நன்மையின்மைகள் பல. அவற்றை ஒன்றொன்றாக வரையப்புகின் இக்கட்டுரை விரிந்து விடும். அவ்வாறு விரிந்து பரக்க எழுதினும் உற்றுநோக்கல் அரிது அரிது. ஆதலின் அவையெல்லாம் நிற்க, அன்னவர்கள் வைத்துள்ள பாடபுத்தகங்களையே ஈண்டு நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்வோம். இவ்வியாண்டு S. S. L. C. தேர்தற்கு வைத்துள்ள பாடங்களில் எழுவாய் பயனிலை இல்லாத சொற்றொடர்கள் பல. அவ்வாறு சொற்பிழைகள் தொடர்ப்பிழைகள் இருந்தாலும் இருந்தொழிக. பொருட்பிழையும் ஓரோர் இடத்துக் காணப்படுதலை நோக்கத் தமிழறிந்தார் உள்ளம் உளைகின்றது. எடுத்துக்காட்டாக ஒன்று கீழ்க்காட்டுதும். இவ்வியாண்டுக் குரிய (S. S. L. C. Tamil Nondetailed. துணைப்பாடம்) வள்ளல்களின் வரலாறு என்னும் புத்தகத்தில் கீழ்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

III. குமணன் (பக்கம் 94)

"அக்காலத்தில் வெளிமான் என்னும் பெயர்வாய்ந்த மற்றொரு புலவர் இருந்தார். அவர் ஒரு சமயம், ஒரு சிற்றரசனைப் பாடிப் பரிசில்வேண்டினார். அவ்வரசன் அவருடைய பாட்டைக் கேட்டு உவக்காமல் வாளா இருந்ததுமன்றி அவருக்கு ஒன்றையும் அளிக்கவில்லை. அதனால் அப்புலவர் மிக வருந்தி அவ்வரசனுக்குப் புத்திகற்பிக்க விரும்பினார். உடனே அவர் கடை எழுவள்ளல்களில் ஒருவனும் நம்சரித்திரத்தலைவனுமான குமணனை அடைந்து அவனைப் புகழ்ந்துபாடினார். கற்பகத்தருப்போன்ற குமணன் அவரைவியந்து அவருக்கொரு யானையைப் பரிசிலாக அளித்தான். அப்பாவலரும் மகிழ்வுடன் அந்த யானையைப் பெற்றுச்சென்று அதை முன்னர்ப் பரிசுகொடாதிருந்த அரசனது ஊரின் எல்லைப் புரத்தில் ஒரு மரத்தில் கட்டிச்சென்றார்."

இப்பகுதியின்கண் உள்ள பொருட்பிழைகளை ஆராய்வாம் "அக்காலத்தில் வெளிமான் என்னும் பெயர்வாய்ந்த மற்றொரு

புலவர் இருந்தார்" என நீளமாக எழுதியுள்ளார். அந்தோ! வெளிமான் என்னும் புலவன் யாண்டிருந்தனன்? அவனை இவர் எவ்வாற்றால் அறிந்தனரோ யாம் அறியகில்லேம்.

"வெளிமானுழைச் சென்றார்க்கு அவன்துஞ்ச இளவெளிமான் சிறிதுகொடுப்பக் கொள்ளாது பெருஞ்சித்திரனார் (இரங்கிப்) பாடியது." (புறம் 237.) எனவும், "வெளிமான் துஞ்சியபின் அவர் (பெருஞ்சித்திரனார்) பாடியது (புறம் 238.) எனவும் காணப்படுதலானும், மற்றோரிடத்தில் "வெளிமான் தம்பி இளவெளிமான்" எனக்காணப்படுதலானும், வெளிமான் என்னப்படுவோன் சிறந்ததோர் கொடையாளியாயும் சிற்றரசனாயும் இருந்தவன் என்பதனை உணராது அவனை ஓர் புலவன் என்றும் அவன் ஓர் அரசனைப் பொருள்கருதிப் பாடினான் • என்றும் எழுதுதற்கு வள்ளல்களின் வரலாறு எழுதினார் துணிந்தவாறென்னே! வெளிமானின் வரலாற்றைப் புறநானூற்றில் அறிந்தவாற்றால் வெளிமான் என்பவன் கொடையாளி என்பதும், சிற்றரசன் என்பதும், அவனுக்குத் தம்பி இளவெளிமான் என்பவன் ஒருவன் இருந்தான் என்பதும், வெளிமான் இளவெளிமானுக்கு முன்னரே இறந்துவிட்டான் என்பதும், குமணனும் அதியமான் நெடுமான் அஞ்சியும் அவனும் ஒருகாலத்தவர் என்பதும்; குமணவள்ளற்கு முன்னர் அதியமான் இறந்தான் என்பதும், பெருஞ்சித்திரனால் வெளிமான் பாடப்பட்டுள்ளான் என்பதும், வெளிமான் தம்பி இளவெளிமான் இவறன்மைக் குணமுடையான் என்பதும்; குமணவள்ளல் காலத்திற்கு முன்னரே வெளிமான் இறந்தும் அவன் புகழுடம்பு நிலைத்துள்ளதென்பதும் பெறப்படுகின்றன. இவையொழிய இவர் எழுதியுள்ள கொடிக்குத் துணிவு எங்ஙனோ? அந்தோ! அந்தோ!! மற்றும், இவ்வரலாற்றாசிரியர், "கடை எழுவள்ளல்களில் ஒருவனும் கம்சரித்திரத்தலைவனும் ஆகிய குமணன்" என ஒன்றும் எழுதியுள்ளார். இதனையும் ஆராய்வாம். கடைச் சங்க மருவிய பத்துப்பாட்டினுள் மூன்றாவது பாட்டாகிய சிறுபாணாற்றுப்படையுள் எறுமாநாட்டு நல்லியக்கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர்

நத்தத்தனார் சிறப்பித்துப்பாடுமுகத்தான் கடை எழுவள்ளல்களையும் பாடியுள்ளார். அப்பகுதி

"வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும், சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழும் சாரல்
பறம்பிற் கோமான் பாரியும், கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையக மருள
ஈர நன்மொழி இரவலர்க் கீந்த
அழல்திகழ்ந் திமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்
கழல்தொடித் தடக்கைக் காரியும், நிழல்திகழ்
நீல நாக நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயும், மால்வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த
உரவுச்சினங் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
அரவக்கடற் றானை அதிகனும், கரவாது
நட்டோ ருவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும், நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும் எனவாங்கு
எழுசமங் கடந்த எழுவுறழ் திணிதோள்
எழுவர்" என்பதாம். (பத்து: சிறுபாண்: 84-113)

இதனால், பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி என்னும் வள்ளல்களின் பெயரும், அவர் எழுவர் என்னும் தொகையும், அவர் கொடைத்திறனும் கூறப்பட்டவுண்மை தெற்றென விளங்கும். இஃதிற்றைதல் அறியாது "கடையெழு வள்ளல்களில் குமணன் ஒருவன்" என இவர் எழுதுதற்குச் சார்பு யாண்டுளதோ? சிறுபாணாற்றுப்படையுள் இவ்வாறு கூறப்பட்டது; வேறு நூல்களில் பூட்கையுண்டு என்பாராயின் அதனையும் ஆராய்வாம். குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியதாக வுள்ள

முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும், பிறங்குமிசைக்
கொல்லி யாண்ட வல்வில் ஓரியும்
காரி யூர்ந்து பேரமர்க் கடந்த
மாரி ஈகை மறப்போர் மலையனும்,
ஊரா தேந்திய குதிரைக் கூர்வேல்
கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினியும்,
ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை
அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமையப்
பெருங்கல் நாடன் பேகனும், திருந்துமொழி
மோசிபாடிய ஆயும், ஆர்வமுற்று
உள்ளி வருநர் உலைவுநனி தீரத்
தள்ளா தீயும் தகைசால் வண்மைக்
கொள்ளா ரோட்டிய நள்ளியும் எனவாங்கு
எழுவர் மாய்ந்த பின்றை ......
... ...
அதிரா யாணர் முதிரத்துக் கிழவ!
... ... குமண!
... ...
பகைமேம் படுகநீ ஏந்திய வேலே" (புறம்–158)

இச்செய்யுளால் கடை எழுவள்ளல்கள் பாரி, ஓரி, மலையமான் திருமுடிக்காரி, எழினி (அதிகமான் நெடுமான் அஞ்சி), பேகன்,

ஆய், நள்ளி என்னும் எழுவரே என்பதும், இவர் எழுவரும் குமணனுக்கு முன்னரே இறந்துவிட்டனர் என்பதும் அறியக் கிடத்தலை அறியார் யாவரே? இவ்வெழுவரும் மாய்ந்த பின் றைப் புரத்தற்குரிய எட்டாவது வள்ளலாக உள்ளவன் நீயே குமண! நீ எற்குப்பரிசில் தருதல் வேண்டும்" என் அவனைப் புலவர் பெருஞ்சித்திரனார் பாடுதலை யறியாத தமிழறிவார் யாரே? அஃதற்றாகவும் ஐயகோ! தலைக்கொடையாளியாகிய குமண வள்ளலைக் கடையெழு வள்ளல்களுள் ஒருவன் என்று வள்ளல்களின் வரலாறு எழுதியார் எழுதியமைக்கு யாம் பெரிதும் கவல்கின்றோம். நிற்க, இத்தகைய பிழையுடைய புத்தகத்தை S. S. L. C. வகுப்புக்குப் பாடமாக வைத்தற்குப் பாடபுத்தகக் கழகத்தார் ஒருப்பட்ட தெவ்வாறோ? அவர்களுக்கு இத்தகைய பிழைகள் பொருட்டாகா போலும்! அப்பிழைப் பகுதிபோன்ற இடங்களை மாணவர்கட்குப் பாடம் சொல்லும் தமிழாசிரியர் பாவிடை யாடுகுழல்போல் துன்புறுகின்றனர். என்னை? உண்மையை மாணவர்கட்கு எடுத்துக்கூறல் வேண்டியிருத்தலானும், இத்தகைய வழு இடங்களில் தேர்தற் காலத்தில் வினா வந்து விட்டால் என் செய்வதென்னும் மாணவர் விடையுண்மையானும் என்க.

கல்வியிலாக்காதார் இதனை உற்று நோக்கி ஆவனபுரியுமாறு வேண்டுகின்றோம்.

உ

திருவிழா.

(திருவாளர், பண்டிதர், மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்.)

விழவு என்பது கொண்டாட்டம் அல்லது களியாட்டத்தைக் குறிக்கும் தமிழ்ச்சொல். இது சாறு என்னும் பெயராலும் வழங்கும். நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படையில் 'ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்' என்றும், 'சாறயர்களத்து வீறு பெறத்தோன்றி' என்றும் இரு சொல்லும் பயின்றிருத்தல் காண்க. மக்கள் யாவரும் இன்பத்தையே விரும்புகின்றனரென்பது கண்கூடாய உண்மை. இவ்வுலகிலே மக்கள் இன்பநுகர்ச்சியின் பொருட்டுச் செய்யும் கொண்டாட்டமெல்லாம் விழவு என்னும் பெயரால் வழங்குதற் குரியனவே. யாற்றிலே புதுப்புனல் வந்துழி ஆடவரும் மகளிரும் சென்று நீராடி இன்பந் துய்க்கும் விளையாட்டுகள் புதுப்புனல் விழவு எனக்கூறப்படும். இங்ஙனமே கடற்கரைக் கானல்விளையாட்டு, உண்டாட்டு ஆய விழாக்கள் மிக்கிருந்தனவென்பது பழைய தமிழ் நூல்களினால் அறியப்படுகின்றது. முன்பு காட்டிய 'ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்' என்னும் தொடரே அக்காலத்து ஒவ்வொரு ஊரினும் விழாக் கொண்டாடப்பெற்று வந்ததென்பதற்குச் சான்றாகும். அகப்பொருளிலே ஊர்துஞ்சாமை யென்பதோர் துறையுளது. ஊரிலுள்ளாரெல்லாரும் விழாக்கொண்டாடுதலால் இரவில் துயிலாதிருப்பர் எனபது அதனாற் பெறப்படுகின்றது. இங்ஙனம் நக ங்களிலும், ஊர்களிலும் விழாச்செய்தல் மிக்கிருந்த செய்தியானது அக்காலத்து மக்கள் செல்வத்திலும் இன்பத்திலும் சிறந்திருந்தன ரென்பதைப் புலப்படுத்தாநிற்கும். செல்வமும் இன்பமும் நாட்டினை அழகு செய்வன என்பது

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் எமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

என்று தெய்வப் புலவராலும் கூறப்பெற்றுளது. பழைய புலவர்கள் 'விழவு மலி மூதூர்' 'விழவு மேம்பட்ட பழவிறல்

மூதூர்' என்று இங்ஙனம் அக்காலத்துப் பதிகளைச் சிறப்பித்துக் கூறியிருப்பது விழா ஒன்றிலிருந்தே செல்வப் பெருக்கு முதலிய வற்றை அறிந்து கொள்ளலாகும் என்பதனைக் காட்டுகின்றது.

இனி, தெய்வங்கட்குச் செய்யப்படும் இத்திருவிழாக்கள் தாமும், குறிஞ்சி முல்லை முதலிய வெவ்வேறு நிலத்து மக்களால் வேறு வேறு பெயரினையுடைய கடவுளரைக் குறித்து வெவ் வேறு முறைமையாகச் செய்யப்படுவனவாகும். அவையெல்லாம் ஈண்டு விரித்தற்கு இடனின்று. இரண்டொரு திருவிழாக்கள் பண்டு நடந்த முறைமையை அறிந்து கொள்ளுதல், அதனொடு இப்பொழுது திருவிழா நிகழும் இயல்பினை ஒப்பிட்டுப் பார்த் தற்கும், சீர்திருத்தம் செய்வதற்கும் உதவியாயிருக்குமாகலின், அதுவே இங்குக் கூறக் கருதியதாகும்.

இறையனாரகப் பொருளுக்கு நக்கீரர் இயற்றிய உரையின் 'மதுரை ஆவணி யவிட்டம், உறையூர்ப் பங்குனி யுத்திரம், கருவூர் உள்ளி விழா, என மூன்று பெரிய திருவிழாக்கள் கூறப் பெற்றுள்ளன. அக நானூறு முதலியவற்றிலும் இத்திருவிழாக் கள் குறிக்கப்பட்டுள்ளன. ஆனல் இவை இவ்விவ்வாறு நடந் தன வென்று நன்கு அறிந்து கொள்வதற்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை. கார்த்திகைத்திங்களிலே திருக்கார்த்திகை நாளில் இரவிலே தெருக்களில் விளக்குகளை நிரை நிரையாக வைத்து, மாலைகளால் அணிவித்துப் பலரும் கூடி மகிழ்வுடன் விழாவயர்வர் என்ற செய்தி அகநானூற்றிலுள்ள நக்கீரர் பாட்டு ஒன்றினுல் வெளியாகிறது. இவ்வாற்றல் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்பே தமிழகத்தில் இத்தகைய திருவிழாக்கள் நடைபெற்றுவந்தன என்பது நாம் பெரிதும் பாராட்டுதற்கும் மகிழ்ச்சி யடைதற்கும் உரிய செய்தியன்றோ?

இனிப் பழைய நாளிலே காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திர னுக்கு விழாச்செய்த வரலாறு சிலப்பதிகாரம், மணிமேகலை என் னும் இருபெருங் காப்பியத்தும் விளக்கமாகக் கூறப்பெற்றுள் ளது. மணிமேகலை விழாவறை காதையால் அறியப்படும் செய்தி பின் வருவது.

'காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த பல சமயவாதிகளும், சோதிடரும், அமைச்சர் முதலிய ஐம்பெருங்குழுக்களும், எண் பேராயத்தாரும், பிறரும் ஒருங்கு கூடியிருந்து, பண்டு அகத்திய முனிவர் கட்டளையால் தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் சோழ மன்னனால் இந்திரனது உடன்பாடு பெற்றுப் புகார் நகரிலே இருபத்தெட்டு நாள் நடத்தியதும், பின்னர் ஆண்டுதோறும் அங்ஙனமே நடத்தப்பெற்று வருவதுமாகிய இந்திர விழாவை நடத்தத் தவறினால் நிகழக்கூடிய தீமைகளையெல்லாம் நன்கு சூழ்ந்து விழாவினை நடத்துவதென்று உறுதி செய்துகொண்டு, அதனை நகரத்தாருக்கு அறிவிக்கும்படி முரசறைவோனுக்குச் சொல்லினர். முரசடிக்கும் முதுகுடியிற் பிறந்தோனாகிய அவன், வச்சிரக்கோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த முரசினை யானையின் பிடரிலேற்றி, முதற்கண் ஊரினை வாழ்த்தி, வானம் திங்கடோறும் மும்மழை பொழிக; மன்னவன் கோட்கள் நிலைதிரியாமைக்குக் காரணமாகிய செங்கோலினன் ஆகுக; அறிஞர்களே! இந்திரவிழா நடக்கும் காலத்தில் எல்லாத்தேவரும் இங்கே எழுந்தருளுவர் என்பது பெரியார் துணிபாதலின் வீதி முதலியவற்றில் நிறை குடங்களும், பொற்பாலிகைகளும், பாவை விளக்குகளும் ஆகிய இவற்றைப் பரப்புங்கள்; குலைக்கமுகும், குலைவாழையும், வஞ்சியும், பூங்கொடியும், கரும்பும் ஆகிய இவற்றைக் கட்டுங்கள்; திண்ணைகளின் மேல் தூண்களில் முத்து மாலைகளைத் தொங்கக் கட்டுங்கள்; வீதிகளிலும் மன்றங்களிலும் பழமணலை மாற்றிப் புதுமணலைப் பரப்புங்கள்; பலவகையான துகிற் கொடிகளையும் மாடங்களிலும் வாயில்களிலும் கட்டுங்கள்; கண்ணுதற் பெருமான் முதலாகச் சதுக்கப் பூதம் இறுதியாகவுள்ள தெய்வங்கள் உறையும் கோயில்களில் அவ்வத் தெய்வங்கட்கு ஏற்ப வெவ்வேறாகச் செய்யப்படும் கடன்களை அறிந்தோர் செய்யுங்கள்; அறவுரைகள் புரிதற்குரிய அறிஞர்களே! பந்தரிலும் அம்பலங்களிலும் சென்று விரிவுரைகள் புரியுங்கள்; சமயவாதிகளே! பட்டி மண்டபத்தை யடைந்து முறைப்படி வாதம் புரியுங்கள்; யாவரும் யாரிடத்தும் பகைமையும் வெகுளியும் கொள்ளாதிருங்கள்'

என்று கூறி முரசறைந்து, 'பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க' என வாழ்த்தி இங்ஙனம் விழாவினைத் தெரிவித்தனன்.

இதிலிருந்து அவ்விழாவின் நோக்கம் எவ்வளவு உயர்ந்ததாகக் காணப்படுகின்றது, பாருங்கள்! ஓர் பெரிய திருவிழாச் செய்வதென்றால் நகரத்திலுள்ள பலவகை மாந்தர்களும் ஒருங்கு கூடியிருந்து ஆராய்ந்து முடிவுசெய்வதென்ற வழக்கம் அக்காலத்து மக்களின் ஒற்றுமையையும் ஆளுந்திறத்தையும் நன்கு விளக்குகின்றதன்றோ? திருவிழா நடக்கும் ஒவ்வொரு நாளிலும் நகரத்தின் பல பக்கங்களிலும் அறவுரைக் கட்டுரைகளும், சமய வரலாற்று ஆராய்ச்சிகளும் நிகழுமென்பது திருவிழாவின் பயனை எவ்வளவு மிகுதிப்படுத்திக் காட்டுகின்றது! கல்வியும், சமய அறிவும் குறைந்துள்ள இக்காலத்தில் திருவிழாக்கள் நடைபெறும்பொழுது இத்தகைய செயல்கள் நிகழுமேல் எவ்வளவு பெரும் பயனுண்டாகும். இக்காலத்தில் திருவிழாக்களை நடத்தி வைக்கும் அறநிலையத் தலைவர்களும், அறப் புரவலர்களும், பிறரும் இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்பு நம் முன்னோர் செய்து காட்டிய வழிகளை இனியேனும் பின்பற்றி யொழுகுமாறு பெருமான் திருவருள் பாலிப்பானாக!

'பற்று மாக்கள் தம்முட னாயினும்
செற்றமும் கலாமுஞ் செய்யா தகலுமின்'

என்று இதிற் குறித்திருப்பதை ஒவ்வொரு மதத்தினரும் சிந்தித் துணர்வரேல் திருவிழா நடைபெறும் தூய நாட்களில் கலகமும், கொலையும் நிகழுதற்கு இடனுண்டாமோ?

இனி, சங்க காலத்திற்குச் சிறிது பின்னிருந்த சமய குரவர்கள் காலத்தில் தமிழ்நாட்டிலே திருவிழா நடைபெற்றமைக்கு ஓர் மேற்கோள் காட்டி நிறுத்துதும்.

சைவ சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரும், திருநாவுக்கரசரும் அடியார் குழாத்துடன் திருப்பதிகள் தோறும் சென்று இறைவனை வழிபட்டுத் திருப்பதிகம் பாடி வருநாளில், திருப்புகலூரில் எழுந்தருளியிருந்த பிள்ளையார்

திருநாவுக்கரசடிகள் திருவாரூரினின்றும் புகலூர் நோக்கி வருவது கேள்வியுற்று அடியார்களுடன் சென்று எதிர்கொண்டு அளவளாவி 'அப்பரே! நீர் வருநாளில் திருவாரூரிற் நிகழ் பெருமை வகுத்துரைப்பீர்' என்னலும், திருநாவுக்கரசர் திருவாரூரில் திருவாதிரைத் திருவிழா நடந்த சிறப்பினை ஒரு திருப்பதிகத்தால் அருளிச் செய்தனர். அதன் பெற்றியை அறிந்து கொள்வதற்குச் சில பாட்டுகள் இங்கே காட்டப்படுகின்றன:—

முத்துவி தான மணிப்பொற் கவரி முறைமையாலே
பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்த னாரூர் ஆதிரை நாளாவதுவண்ணம்"
"வீதிக டோறும் வெண்கொடியோடு விதானங்கள்
சோதிகள் விட்டுச் சுடர்மாமணிக ளொளிதோன்றச்
சாதி களாய பவளமு முத்துத் தாமங்கள்
ஆதி யாரூர் ஆதிரை நாளா வதுவண்ணம்"
"துன்பம் நும்மைத் தொழாத நாள்க ளென்பாரும்
இன்பம் நும்மை யேத்து நாள்க ளென்பாரும்
நும்பி னெம்மை நுழையப் பணியே யென்பாரும்
அன்பன் ஆரூர் ஆதிரை நாளாவது வண்ணம்."

585

உ

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

திருவாளர், K. சோமசுந்தரம்பிள்ளையவர்கள், தஞ்சை.

(முற்றொடர்ச்சி. (206-ம் பக்கம்).

அரியதந்து குடியகற்றிப்
பெரியகற் றிசைவிளக்கி
முந்நீர்நாப்பண் ஞாயிறுபோலவும்
பன்மீனடுவட் டிங்கள்போலவும்
பூத்தசுற்றமொடு பொலிந்தினிதுவிளங்கிப்
பொய்யாநல்லிசை நிறுத்தபுனைதார்ப்
பெரும்பெயர்மாறனும் நெடுஞ்செழியன் அரி

யணை எறி இன்புற்றிருக்குநாளில், தமிழகத்தே செல்வத்திலும் புகழிலும் தம்மைவிடச் சிறந்தார் யாவருமில்லென தம்முள் செருக்குண்ட முடியுடை நெடுநிலவேந்தர்களாம் சேர சோழ மன்னர்கள் பாண்டிய மன்னன் மீது செற்றங்கொண்டு, அஃதோடமையாமல் பாண்டியன் இளையவனெனவும், பாண்டியவள நாட்டை ஆளுந்தகைமை சிறிது மில்லானெனவும், இச்சிறியானிடம் போர் புரியின் கொண்டியைப் பெரிதும் கொள்வோமெனவும் எனையபல சிறு சொற்களையும் உளையக்கூறி 'விழுமியம் பெரியம்யாமே' எனப் பெரிதும் உவப்புறுவாராயினர். இவ்வாறு போர்புரிவதே தக்கதெனத் தம்முள் மன ஒருமைபட்ட இருமன்னர்களும் எளிதே பாண்டிய நாட்டைப் பெறற் பொருட்டுக் குறுநில மன்னர்களாம் திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்ற ஐம்பெரும் வேளிரைப் போர்த்துணைக்கொண்டு தலையாலங்கானப் பதிக்கே நால்வகைப் பெரும் படையொடு வந்துற்றனர். பாண்டியன் நெடுஞ்செழியனோ சிறிதும் மனம் புழுங்காது, வம்ப மன்னரைப் போன்று செருக்கடையாது அவர்களையும் இக

மாது, பகைவர்களைப் போரின்கண் சிதறவடித்து முரசினைக் கைப்பற்றி, மீட்டும் தன்புகழுடன் தலையெடாவண்ணம் சிறை செயல் வேண்டுமென்ற தனிச் சிந்தையைச் சிறிதும் தளரவிடாது பெருமூக்கமுடையவனாய், 'மூதூர் வாயிற் பனிக்கய மண்ணி, மன்ற வேம்பி னொண்குழை மிலைந்து,'

'சூழ்சுடர்,
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னுருகெழ பெரியார்க்குத்'

தூரியம் கறங்க நறும்புகை யெடுத்துச் சிறப்பு விழாச்செய்து,

'ஈண்டிய
மழையென மருளும் பல்தோல் மலையெனத்
தேனிறை கொள்ளு மிரும்பல் யானை
யுடலுந ருட்க வீங்கிக் கடலென
வானிற் காக்குந் தானை யானது
கடுவொடுங்கெயிற் றரவுத்தலை பனிப்ப
விடியென முழங்கு' முரசினோடும்,
'சுருட்டமயிர்ப் புரவி யுராலிற் பரிநிமிர்ந்து
காலெனக் கடுக்குங் கவின்பெறு'

தேர்ப் படையினோடும்,

'வில்லைக் கவைஇக் கணைதாங்கு மார்பின்
மாதாங் கெறுழ்த்தோள்'

மறவருடன் தெளிந்த ஓசையையுடைய பறைமுன்னர்ச்செல்லக் களிறே போன்று பெருமித நடையுடன் வெம்போரியற்றத் தலையாலங்கானத்தே உய்க்கும் கூற்றத்தே போன்று வந்து சேர்ந்தான். இகல் கொல் இருபடையும் ஒன்றினொடொன்று தாக்கப் போர் ஒலியும், களிற்றின் முழக்கமும், அதிர்கழல் வீரரது ஆர்ப்பும், புரவிகள் எழுமொலியும் தலையாலங்கானத் தெண்திசைகளிலும் ஊடுருவிச் சென்றன. போர்புரியும் ஊக்கமும் மனவெழுச்சியும் சிறிதும் குன்றாதிருந்த இருவகைப்படைஞரும் போர் நிகழுங் காலத்துக் கூதிர்காலம் குறிக்கிடவே சமர்நிறுத்தித் தத்தம் பாசறையிற் றங்கியிருந்தனர். இவ்வமயத்துப் பாண்டியன் துயில் சிறிது மில்லாது செய்யும் போர்த்தொழில் மிகவும் வியக்கத்தக்கது. 'வேப்பந்தாரைத் தலையிலே கட்டின,

வலிய காம்பினையுடைய வேலோடே முன் செல்கின்ற படைத் தலைவன் புண்பட்ட வீரரை அடைவே காட்டப், பின்னுக மணிகளைத் தன்னிடத்தேயிட்ட பெருமையையுடைய தாளினையுடைய குசையோடே பக்கரை வாங்காத பாய்ந்து செல்லுஞ் செலவினையுடைய செருக்கின குதிரைகள், கரிய சேற்றையுடைய தெருவிலே தம் மேலே வீசும் துளிகளையுதற, இடத் தோளினின்றும் நழுவி வீழ்ந்த அழகினையுடைய ஒலியலை இடப் பக்கத்தே பிணைத்துக்கொண்டு, வாளைத்தோளிலேகோத்த கறுகண்மையையுடைய வாளெடுப்பான் தோளிலே வைத்த வலக் கையை யுடையனுய்ப், புண்பட்ட வீரர்க்கு அகமலர்ச்சிதோன்ற முகம் பொருந்தி நூலாலே சட்டத்தைக் கட்டின முத்தமாலையினையுடைய கொற்றக்குடை தவ்வெனு மோசைபட்டு அசைந்து பறக்கின்ற துளியைக்காக்க, நள்ளென்னு மோசையையுடைய நடுவியாமத்தும் பள்ளி கொள்ளானுய்ச், சில வீரரோடே புண்பட்டோரைப் பரிகரித்துத் திரிதலைச் செய்புமாசன் என வருவது காண்க. [நெடுநல்வாடை]. கூதிர் காலம் கழிய, தொடங்கின போரில் பாண்டியன் நெடுஞ்செழியன் எழுவர் நல்வலமும் இசையும் தம்முள் மாயப்பொருது வெற்றிபெற்றுன். இளமன்னன் இஃதோடு நில்லாது சோழ மன்னரை உறையூருக்கும், சேரரைக் கருவூருக்கும் சென்றடையும் வண்ணம் துரத்திப்பின்னர் அவ்வவர்கள் நகரிலன்று தங்கள் தங்கள் 'மாணிழை மகளிர் நாணினர் கழியப்' பகைமன்னர்களைக் கொன்று வீழ்த்தினுன்.

'கண்ணு

ரரண்டலை மதில ராகவு முரசுகொண்

டோம்பரண் கடந்த வடுபோர்ச் செழியன்'

[நற்றிணை].

தலையாலங்கானப் போர் பாண்டியனது வெற்றியுடன் முடிந்த பின்னர், மாண்ட பகைமன்னரது நாட்டின் நிலைமையினைப் பெரும் புலமைவாய்ந்த கல்லாடனுர் எடுத்துக்கூறுவது அறியற்பாற்று. எங்கும் களிற்றினுல் கலக்கப்பட்ட துறையும், மறவர் தம்மால் விரும்பப்படும் பொருள்களைக் கைக்கொண்டு, கொள்ளாது சிதறிவிடுத்த ஒழிபொருளும், ஊர்தோறும் கோடரியால் வெட்டுண்ட

காவல் மரங்கள் நிலைகலங்கிய காவையும், 'நெடுநகர் வினைபுனை நல்லில்லைத் தீவாய்ப் படுத்தி அழித்த அகன்ற இடமும்; ஏனைய பலவும் அப்புலவர் கூடலுக் கேகும் வழியிற் கண்டார். பாண்டிய மன்னன் பகை மன்னர்களைக் கொன்றவழி அவர் பெண்டிர் தம் சிறு புதல்வரைக் காக்கும் பொருட்டு அடகு தின்று தம்மைக் காத்துக் கொள்ளும் அவரது இரங்கற் பாலதாய நிலைமை மீட்டும் கல்லாடர் பாட்டால் நன்குணரப்படும்.

கண்ணகல் ஞாலம் களிகூரத், தலையானங் கானத்தில் வெற்றி பெற்ற மன்னர்மன்னன் இனி 'நனி புகன்று உறைதும் என்னுது' பிறதேயத்தைத் தன் வயமாகக் கொள்ளும் தள்ளா முயற்சியும் உவகையோடுகூடிய ஊக்கத்தையு முடையவனாய் 'உயர்ந்து இலங்கு அருவிய வரை' யுடைக் குறிஞ்சி நிலமன்னர்களையும் பரதவர்களையும் வென்று சிறப்பெய்தி, சாலியூர் ['சீர்சான்ற வுயர் நெல்லி, னூர்கொண்ட வுயர் கொற்றவ'] குட்டநாடு ['பல் குட்டுவர் வெல்கோவே']. முதுவெள்ளிலை ['சிறுகுடிப் பெருந் தொழுவர், ஒலியோவாக் கலியாணர், முதுவெள்ளிலை'] சோழ மண்டலம், தொண்டமண்டலம் ['வியன்கண் முதுபொழில் மண்டிலம் முற்றி'] மிழலை ['ஓம்பாவீகைமாவேளெவ்வி, புனலம் புதவின் மிழலை'] முத்தூர் ['பொன்னணியானைத் தொன் முதிர்வேளிர்.........முத்தூர்'] அழும்பில் [நிலனும் வளனுங் கண்டமை கல்லா, விளங்கு பெருந்திருவின் வானவிறல்வே, ளழும்பில்] முதலிய பல்லூர்களைத் தெவ்வர் ஆக்கம் கெட்டுச்சிதைய, வெற்றியினல் தன்னுட்டுடன் சேர்த்தனன். இவ்வாறு போரினில் மறம் காட்டிப் பிறநாட்டைத் தன் வயம் கொண்டு இன்புற்ற பாண்டியன், தன்னிலம் பெரும்பரப்பினை வாய்ந்ததினுல் அதில் வாழும் குடிகள் நலமெய்தற் பொருட்டுத் தனிச் செங்கோல் செலுத்துதல் வீரமென்றுன்னி

'கங்கையம் பேரியாறு கடற்படர்ந்தாங்
களந்துகடை யறியா வளங்கெழு தாரமொடு
புத்தே ளுலகங் கவினிக் காண்வர
மிக்குப்புக ழெய்திய பெரும்பெயர் மதுரை'

யில் அரசாளுவானயினன். [மதுரைக்காஞ்சி].

'மழைவறங்கூர்ந்து வறுமையெய்த வெப்பு நோயுங் குருவுந் தொடர்ந்துள்ள பாண்டிநாட்டைத் தனிப்பெருஞ் சீரிய நிலையில் கொணரப் போற்றலுடையவனாய் நெடுஞ்செழியன் அந்நாட்டினுட் குழப்பங்கள் யாவையும் தொலைத்து நாடுவளம் பெறுவதற்குரிய இன்றியமையாதனவாகிய உழவும், வாணிகமும், கல்வி நலமும் பிறவும் சிறப்புடன் தழைத்தோங்கப் பெரும்பாடு பட்டுக் காவற்றொழில் புரிந்து வந்தான். நல்லிசைப் புலமை வாய்ந்த புலவர் பெருந்தகையார் குடபுலவியனார் நெடுஞ்செழியனுக்கு வேளாண்மையினைப் போற்றுவதனாலுண்டாகும் நலனும் அதனை மேம்படுத்தற்குரிய இன்றியமையாக் கருவியும் ஈண்டு எடுத்துக் கூறுவது அறியற்பாற்று.

'நீரின் றமையா யாக்கைக் கெல்லா
முண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
யுண்டி முதற்றே யுணவின் பிண்ட
முணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரு நிலனும் புணரியோ ரீண்
டுடம்பு முயிரும் படைத்திசி னோரே
வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினு நண்ணி யாளு
மிறைவன் றாட்குத வாதே யதனா
லடுபோர்ச் செழிய விகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே' [புறம். 18].

இப்பாட்டின்கண் அறியக்கிடப்பன: 'நீரை இன்றியமையாத உடம்பிற்கெல்லாம் உணவு கொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தார்; உணவை முதலாகவுடைத்து, அவ்வுணவாலுளதாகிய உடம்பு; ஆயின் உணவென்று சொல்லப்படுவது நிலத்தொடு கூடிய நீர்: அந்நீரையும் நிலத்தையும் ஒருவழிக் காட்டினவர்கள் இவ்வுலகத்து உடம்பையும் உயிரையும் படைத்தவராவர்; நெல் முதலாய்வற்றை வித்தி மழையைப் பார்த்திருக்கும்

புல்லிய நிலம் இடமகன்ற பெரிய நிலமாயினும் அது பொருந்தியாளும் அரசனது முயற்சிக்குப் பயன்படாது: ஆதலால் கொல்லும் பேரையுடைய செழிய, இதனைக் கடைப்பிடித்து விரைந்து நிலங்குழிந்த விடத்தே நீர் நிலை மிகும் பரிசு தளைத்தோர், தாஞ்செல்லு முலகத்துச் செல்வமுதலாகிய மூன்றினையும் இவ்வுலகத்துத் தம்பேரோடு தளைத்தோராவர்: அந்நீரைத் தளையாதவர், இவ்வுலகத்துத் தம்பெயரைத் தளையாதோர்' என்பனவாம். உழவின் பெருமையும், அது பயக்கும் நலனும், அதனை ஓம்பாதுவிடில் அதன்கண் தோன்றும் பல துன்பமும் நன்கெடுத்து நல்லிசைப் புலவரால் அரசன் அறிவுறுக்கப்பட்டமை, அம்மன்னனுக்கு முன்னர் உழவு நிலைகெட்டுத் தளர்ந்த தன்மையினாலுண்டாகிய வற்கடம் பாண்டிய நாட்டில் தோன்றி அளவிலாத் துன்பங்கள் தோற்றுவித்ததென்பதை நிலைநிறுத்தும். பாண்டியநாடு பன்னீராண்டு பஞ்சத்தால் இடருற்ற பின்னர்ப் பாண்டியன் நெடுஞ்செழியன் அந்நாட்டை ஆண்டனனென்பது மனதில் பதிப்பிக்கற்பாற்று. நெடுஞ்செழியன் ஆறுகள், வாய்க்கால்கள் பல அமைத்து நீர் நிலைகள் முதலியன தொட்டு நாஞ்சிலல்லது படையு மறியாரைப் பாது காத்தனன்.

இனி வாணிபநலத்தைப் போற்றவாமெனண்ணிப் பாண்டியன் வேறுபட்ட தேயத்தோடு கடல் வாணிபத்தினிமித்தம் ஏற்றுமதி இறக்குமதிகட்கேற்ற துறைமுகமாகக் கொற்கையினையமைத்தான்.

விளைந்து முதிர்ந்த விழுமுத்தி
னிலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப் பாக்கத்து
நற் கொற்கை. [மதுரைக் காஞ்சி].

... ... நீர்
முத்துப்படுபரப்பிற் கொற்கை. [நற்றிணை].

இத்துறைமுகத்தே

வானியைந்த விருமுந்நீர்ப்
பௌவநிலைஇய விரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர

'நெடுங்கொடிமிசை யிதையெடுத்
தின்னிசைய முரசமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்கிழிதரு
மாடியற் பெருநாவாய்

இயக்கும் பரிசினையும், நாட்டினிற் செல்வநலம் பெருக்கும் வகையையும் 'மதுரைக் காஞ்சியில்' நன்குணர்க.

தமிழ்மக்கள், வாணிப நலத்தில் பெரிதும் ஈடுபட்டுள்ளவராகலின், தம் வாழ் நாட்களை வீணாட்களாகக் கருதிக்கழிக்காது பிறர் கைவினைப் பொருளை நாடினால்லர். வாணிபத்தில் தமிழ் மக்களை ஊக்கம் உணர்த்திவிட்ட பாண்டிய மன்னன் பிறநாட்டினின்றும் வாணிபத்தினிமித்தம் போந்த யவனர் முதலானோரைத் தம் குடிமக்களே போன்று காத்து அவர்களுக்குப்பல உயர் சிறப்புக்களைத் தந்துதவினான். இந்த யவனர் முதலோர் பின் தமிழகத்திலே குடியிருப்பினை யுடையவர்களாய் அரசியலிலும் சில பதவியினையும் தாங்கினர். யவனர் தேயத்திலிருந்து குதிரைகள் தமிழகத்தில் கொணரப்பட்டனவென்பதை

விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கல னுய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவி [மதுரைக்காஞ்சி]

என வருவதனால் அறிக. இவர்கள் பின்னும் பவளம், நன்முத்து தூமடி, நுகரப்படும் அரியபண்டங்கள், மிளகு முதலியவற்றைப் பொதி செய்து, அவைகளில் தம் பெயர் பொறித்து, ஆயத் துறையினில் பாண்டிய மன்னரது இலாஞ்சினையைப் பெற வைத்து மரக்கலங்களில் அவைகளை ஏற்றும் செய்தி ஈண்டுக் குறிக்கத்தக்கது,

'வம்பமாக்க டம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த வெண்ணு நும் பல்பொதி
கடைமுக வாயிலுங் கருந்தாழ்க் காவலும்'

தமிழ்மக்கள் தமக்கெனச் செய்து கொண்ட கைவினைப் பொருள்களைப்பிறநாட்டு வணிகர்கள் கைப்பற்றிக்கொள்வார்களே

யொழிய, பிறநாட்டுக் கைவினைப்பொருள்களைத் தாம் கொண்டா ரில்லையாதலின் நாகரீக நிலைமையைக்காட்டும் கைத்தொழில் வல்லார் பலர் தமிழ்மக்கள் பாண்டிய மன்னனது பாதுகாப்பில் மகிழ்ச்சிபெற்றுத் தமிழகத்தை வாணிபத்துறையில் சிறப்பெய்திட ஊக்கங்கொண்டனர். பாண்டிய நாட்டினில் கைத்தொழில் வல்லார் பலரிருந்தனரென்பதை இம் மதுரைக்காஞ்சி வரிகள் காட்டும்.

'கோடுபோழ் கடைநருந் திருமணி குயினருஞ்
சூடுறு நன்பொன் சுட்டிழை புனைநரும்
பொன்னுரை காண்மருங் கலிங்கம் பகர்நருஞ்
செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்
பூவும் புகையு மாயு மாக்களு
மெண்வகைச் செய்தியு முவமங் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள்வினை ஞரும் பிறருங் கூடி' [511—518].

வேளாண்மையினையும் வாணிபத்தினையும் பெருக்கிய பின்னர்க் கல்விநலம் சிறப்பெய்தற் பொருட்டுப், பாண்டிநாடு வற்கடத்தில் மெலிவுற்று இடாடைந்த காலத்தில் வேற்று நாட்டில் சென்றடைந்த தமிழ்மொழியினில் கற்றுத்துறைபோகிய நல்லிசைப் புலமை வாய்ந்த சான்றோர் பலரைப் பாண்டிய நாட்டில் இன்புற வாழும்படி நெடுஞ்செழியன் கூட்டுவித்தனன். இப்பாண்டியன் காலத்தில் தமிழ்த் தொகை நூற்கள் தொகுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பது சிந்திக்கற்பாலது. அறுபது சூத்திரமுடை அகப்பொருள் இலக்கணமாகிய இறையனாரகப்பொருள் இப்பாண்டியன் காலத்தே பெறப்பெற்ற தென்பதை யாமெழுதிய நெடுஞ்செழியன் காலவரையினைக் குறிக்கும் கட்டுரையில் கண்டுகொள்க.

'ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை.' [புறம்]

பல்சாலை முதுகுடுமியி
னல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பி
னிலந்தரு திருவி னெடியோன் போல
வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர்
பலர்வாய்ப் புகாறு சிறப்பிற் றோன்றி

[மதுரைக்காஞ்சி].

என்பதனால் பல்வேறிடஞ் சென்ற பல் நுண்மாண் நுழைபுல முடையாரைப் பாண்டிய நாட்டில் தம் கல்விச் செல்வத்தோடு இனிதிருக்க நெடுஞ்செழியன் அரும்பெருமுயற்சி செய்தனனென்பது பெறப்படும்.

ஓர் நாட்டிற்குரிய உயரிய நிலையினைப்பயக்கும் செல்வங்கள் யாவும் நெடுஞ்செழியன் பாண்டிய நாட்டில் நிலைப்படுத்தித் தம் நாட்டின் பெருமையினை வளர்த்தனனென அறியப்பட்டபின்னர் அம் மன்னனது அரசியலின் தன்மையினை ஆராயப்புகுவாம். தென்னவர்க்குத் தலைத்தொன்னராகிய கூடலில் நெடுஞ்செழியன் அரசு கட்டிலேறித் தம் பெரும் பரப்பினையுடைய நாட்டைக்குறு நில மன்னர்கள் தன் தொழும்பு பூண்டு தன்னாணையின் முறையில் அரசியல் நடாத்தும்படிப் பணித்தாண்டதோடு, குடிமக்களுக்கு மாற்றாரிடமிருந்து தோன்றும் துன்பம் நேரிடாவண்ணமும் இனிதாண்டனன். மற்றும் இவன் அக்குடிகளிடத்துப் பேரன்பு பூண்டு, அவர்களை வருத்தாது ஆறிலொன்றாகிய பகுதியைக் கொண்டனன்.

'ஊறின் றவைகயுள் வைக வுயிரோம்பி
ஆறிலொன் றாக தளித்துண்டு — மாறின்றி
வான்காவல் கொண்டான் வழிநின்று வைகலும்
தான்காவல் கொண்டல் தகும்.'

இதனாற்றான் இம் மன்னனிடத்தே அரசியலுக்குரிய செல்வம் மிகுந்திருந்ததென அறிகுதும். இவன் இறைகொள்ளும் நெறியை முறைமையுட னறிந்தவனாதால் இவனுடு கலைச்செல்வம், வாணிப நலம், உழவின் பெருநலம் ஆகிய இவற்றோடு அரசியற் செல்வமும் கூடப்பெறலரும் பெருமைதாங்கி செழிப்புற்றோங்கியது.

பாண்டியன் நெடுஞ்செழியன், அந்தணர், அமைச்சர், சேனுதிபதியர், தூதர், ஒற்றர் முதலோரால் புணர் கூட்டுண்ட ஐம்பெருங் குழுவினில் தலைமை வகித்து அக்குழுவின் சூழ்ச்சியின்படி நாட்டிற்கு நன்மை பயத்தற்குரிய அரசியற் காரியங்களைச் செம்மையாக நடாத்தினன். இக்குழு வேளாண்மை, வாணிபம் முதலிய செல்வ வளர்ச்சிக்குரிய கருவிகள் நிலைபெற்றுப் பெருகப் பெறுங்கருத்தினை யுடையதாயிருந்தது. அந்தணர்கள் மறைநுவன்று, முத்தீ எற்றி, வேள்வி செய்து அரசனுக்கு ஆசிகூறிப் பீடுசெய்யும் 'ஆன்ற கேள்வி யடங்கிய கொள்கை'யினை யுடையார். மற்றும் இவர்கள், மன்னன் மாற்றாரசனோடு போர்புரிய எழுந்த காலத்து நல்லோரையில் விழா ஏற்படுத்தி, மீண்டும் மன்னன் வெற்றியுடன் தம்நாட்டில் சேரவேண்டுமென மிக்க கவலையுடையவரா யிருந்தார்கள். அரசன் போர்க்கெழுந்தகாலத்து அவனெதிர்ப்படும் நல்வாய்ப்புள் முதலிய நன்னிமித்தங்களையும் அவற்றின் நன்மைதிமைகளையும் அவனுக்கு எடுத்துக்கூறுவர். இவர்கள் நடுநிலையினின்றும் பிறழாது தத்தம் கடமையினை நடாத்தும் செந்தண்மை பூண்டவர்கள். பாண்டியன் நெடுஞ்செழியன் அந்தணர்களுக்குத் தனிப்பள்ளிகள் ஏற்படுத்தினனென்பது 'மதுரைக்காஞ்சி' வரிகள் தெளியப்படுத்தும்.

'சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீ ரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத் தொருதா மாகி
யுயர்நிலை யுலக மிவணின் றெய்து
மறநெறி பிழையா வன்புடை நெஞ்சிற்
பெரியார் மேஎ யினிதி னுறையுங்
குன்று குயின்றன்ன வந்தணர் பள்ளி.

இவ்வந்தணர் 'சென்ற காலத்தையும் வருகின்ற காலத்தையும் இன்று இவ்வுலகிற்றோன்றி நடக்கின்ற ஒழுக்கத்தோடே புணர்ந்து உலகத்தார்க்குச் சொல்லுதல் வரும்படி, தேவருலகையும் அதன் செய்கைகளையும் எல்லா நிலங்களின் செய்திகளையும் தாம் நெஞ்சாலறிந்தும், தமக்கறிந்த விரதங்களியற்றி, அவ்

விரதங்களால் இளையாத மெய்ப்பினையுடையாராய்க் கல்விகளெல்லா நிறைந்து களிப்பின்றி யடங்கின அறிவினையுடையார்" [நச்சினார்க்கினியார்]

மன்னன் பிறிதொரு நாட்டினோடு அமர்புரியச் சென்ற காலத்து, அமைச்சர்கள் அரசநீதி கெடாமல் குடிகளைக்காத்து வந்தனர். இவர்கள் அரசனுக்கு அறிவுபுகட்டி, அரசன் நண்ணரிடத்தும், நட்டோரிடத்தும், குடிகளிடத்தும் நடந்துகொள்ள வேண்டிய விதிகளையும் அவற்றிற்குரிய வழிகளையும் கற்றவந்தனர். வேற்றரசன் நாட்டைப் படையெடுத்து வருங்கால் அமைச்சர்கள் தம் அரசனுக்கு விரகு கூறி அப்போர்க்கு வேண்டிய கருவிகளை எற்படுத்தி அவற்கு உதவிபுரியவேண்டும். மற்றும் இவர்கள் எளிதில் வழக்கறியமுடியாத பொய் வழக்குகளை அறிந்து நடுநிலை திறம்பாது நியாயத்தைக்கூறும் ஆற்றலுடையர். இவ்வுயரிய அமைச்சுத்தொழிலை யுடையார்க்கு மன்னன் காவிதிப் பட்டஞ்சூட்டுவான். அமைச்சரது தன்மையினை

'அச்சமு மவலமு மார்வமு நீக்கிச்
செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன் கோலன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை யறங்கூ றவையமு
நறுஞ்சாந்து நீவிய கேழ்கிள ரகலத்
தாவுதி மண்ணி யவிர்துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி
யன்பு மறனு மொழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்கள்'

[மதுரைக்காஞ்சி]

என ஈண்டு அறியப் பெற்றும்.

'கடுஞ்சினத்த கொல்களிறுங்
கதழ்பரிய கலிமாவு
நெடுங்கொடிய நிமிர்தேரு
நெஞ்சுடைய புகன்மறவருமென'

நான்குவித படைகளுக்குத் தனித்தனியே சேனதிபதித்தலைவர்களுண்டு. இவர்கள் போரினில் படைகளை அணிவகுத்துப் படைகளுக்கும் போர்செய்யும் முறைமையினைப் புகட்டுவார். இவர்கள் மற்றும் போரினில் வீரச்செயல்கள் காண்பித்து அரசனிடம் பரிசு பெறுவார்கள். இவர்களுக்கு அரசன் 'ஏனதி' யென்ற பட்டம் சூட்டுதலுமுண்டு.

உற்ற பண்புரைப்பவர் தாம் தூதுவர். பிறநாட்டினில் நடக்கும் காரியங்களை அவ்வப்போது தம் அரசருக்கு யாவரறியாவண்ணம் அறிவிப்பவர் தாம் ஒற்றர். இவ்வைம்பெருங் குழுவினல் பெரும் பரப்பினையுடைய பாண்டியநாடு குழப்பமில்லாது அமைதி வாய்ந்தும் செங்கோன்மை பெற்றும் விளங்கியது. இக்குழுவல்லாது அறங்கூறவையங்கள் பல, சிற்றூர்களிலிருந்தனவெனக் கூறப்படுகின்றது. மற்றும் காரிருளில் உலவும் கள்வர்களைக் கடிதிற் கொணரும் ஊர் காப்பாளர் இப்பாண்டியன் காலத்திலிருந்தனரென மதுரைக் காஞ்சியில் அறியப்பெற்றும்.

இரும்பிடி மேஎந்தோ லன்ன விருள்சேர்பு
கல்லுமரனுந் துணிக்குங்கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்
குறங்கிடைப் படுத்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்கற
னிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ வேணிப் பன்மாண் சுற்றினர்
நிலனக ழுளியர் கலனசைஇக் கொட்குங்
கண்மா ருடலவ ரொடுக்க மொற்றி
வயக்களி று பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ண ரஞ்சாக் கொள்கைய
ரறிந்தோர் புகழ்ந்த வாண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி
யூர்காப் பாளர்.

ஆகவே இதுகாறும் கூறியவாற்ருல், நாம் பாண்டியன் நெடுஞ்செழியன் வாணிப நலத்தைப் போற்றுவதில் நோக்கமும்

வேளாண்மையினை மேம்படுத்துவான் பெருங்கருத்தும், தமிழ் மொழியை வளர்ப்பதில் ஆர்வமுங்கொண்டு புறமதங்களை இகழாது தன் சைவ வுணர்ச்சியைத் தன் குடிமக்கள்பால் எழுப்பிக் கூடல்மாநகரினைத் தலைநகரமாகக் கொண்டு பெரும் புரப்பினையுடைய பாண்டிய நாட்டை நடுநிலைபிறழாது ஐம்பெருங் குழுவினது பேருதவியால் ஆண்டுவந்தான் என அறியப்பெறும்.

௨

முடத்தாமக் கண்ணியார்.

திருவாளர். ஔவை. சு. துரைசாமி பிள்ளையவர்கள்,
ஆசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

உலகத்தில் பலதிறப்பட்டு விளங்கும் நாடுகள் ஒவ்வொன்றின் சிறப்பையும் நுணுகி யாராயின், அது அந்நாட்டின் பெருஞ்செல்வமுடைமையைப் பற்றிநிற்றல் ஒருபுடை தேற்றமாயினும், மறுபுடை, அந்நாட்டின் சான்றோருடைமை ஒரு ஏதுவாக நிற்றல் தோன்றும். அச்சான்றோர் கல்வித்துறைபோகிய கலைமையுடைய ராவர். அவரை நக்கீரனார் பொருண்மொழி கொண்டு, 'யாவதும் கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்" என்பது மிகையாகாது. நாடும், மக்களும் நன்னிலை யடைதற்குக் காரணர் அவரே யென்பது, "ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழு மூரே" எனப் பிசிராந்தையார் தாம் நரையின்று நின்றமைக்குக் காரணங் கூறியவழிக் கூறியவாற்றானும் தெளியப்படும். படவே, சான்றோர் பலர் உளராதலே ஒரு நாட்டின் சிறப்புடைமைக்கு அடிப்படை யென்பதும் துணியப்பட்டதாம்.

இத்தகைய சான்றோர்கள் நம் நாட்டில் மல்கியிருந்த காலம் சங்க காலமென்பது யாவராலும் கொள்ளப்படுவ தொன்று. அக் காலத்தின் பெருமையும், அக்காலத்து நம் நாடடைந்திருந்த பெருமையும், அக்காலத்து நூல்களைப் படிக்கும் ஒவ்வொருவருடைய மனத்தும் தோன்றி மிளிரும். அவர் தம் சொல்வன்மையும், அச் சொல்வழித் தோன்றும் செம்பொருட்டன்மையும், அவற்றை நுனித்துணர்ந் துணர்த்தும் அவரது நுண்புலமையும் நினைத்தொறும் இன்பம் பயக்கும் நீர்மையவாம்.

நிற்க, இச்சான்றோர்கள் பாடிய கவிகளும் பலவுள. அவற்றின் உண்மையே தமிழராய நமக்கும், நம் மொழிக்கும் பெருமையைத் தந்து நிற்கின்றது. இவ்வுண்மையை யுணர்ந்து, உழைத்த சான்றோர்கள் மிகப்பலர். நம் தமிழ்நாட்டில் சங்கம் நின்று நிலவியகாலத்து, இவர்தம் கவிகளைத் தொகுத்து வைத்த சான்றோர்கள் மிகப் பலர். அவர்களால் தொகுக்கப்பட்ட நூல்களும் பல. ஆயினும், அவற்றைக் காலமென்னும் கடல் மண்டிக்கொள்ளச் சிலவே எஞ்சி நின்றன. நின்றவையும், பேணுவாரின்மையிற் சிலம்புரும் தருவா யடைய, நம் தமிழ்நாட்டுப் புலவர்களுக்குப் புலவராய உயர்திருவாளர். உ. வே. சாமிநாதையரவர்கள் அந் நிலையை யுணர்ந்து, விரைந்து சென்று உடலுயிர் பொருளெல்லாம் ஒருங்கே செலுத்தி முயன்று, விரும்புவோர் கைக்குக் கொணர்ந்தனர். அவர்மாட்டு என்ன கைம்மாறு ஆற்றுங்கொல்லோ இவ்வுலகு!

இப்பெருந்தகையார் முயற்சியின் பயனாய் வெளிவந்துள்ள பண்டைத் தமிழ்நூல்களின்கண், மேற்போந்த சான்றோரின் சான்புடைமையும், சான்றுந்தன்மையும் தோன்றுகின்றன. அந் நூற்களுட் பத்துப்பாட்டென்ப தொன்று. அதன் பெருமையை என் நாவாற் கூறுதலினும், "பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ—எத்துணையும் பொருட்கிசைவில் இலக்கணமில் கற்பனையே" எனவரும் திரு. சுந்தரம்பிள்ளையவர்கள் பாவாற் கூறுதல் சாலச் சிறப்புடைத்தாம். இப்பெருநூற்கண் பத்து நூல்களிருக்கின்றன; அவற்றின் தொகையே இந்நூல்; இந்நூற்களைப்பாடிய

சான்றோர் எண்மராவர். இது சங்ககாலத்தே தொகுக்கப் பெற்றது. பெறினும் அகநானூறு, குறுந்தொகை முதலியவற் றின்கட்போல இந்நூற்கண் தொகுத்தார் பெயர் காணப்பட வில்லை. எனினும், இந்நூற்கண்ணுள்ள "மலைபடுகடாம்" என் னும் நூலுரையால் இது சங்ககாலத்துத் தொகுக்கப்பெற்ற தென்பது தோன்றுகிறது. அதுவருமாறு:—

தீயின் அன்ன ஒண்செங் காந்தள்—நெருப்பினை யொத்த ஒள் ளிய செங்காந்தள்.

"இதற்கு நன்னனென்னும் பெயர் தீயோ டடுத்தமையின், ஆனந்தமாய்ப், பாடினாரும், பாட்டுண்டாரும் இறந்தாரென்று ஆளவந்தபிள்ளை யாசிரியர் குற்றங் கூறினாலெனின், அவர் அறியாது கூறினர்! செய்யுள் செய்த கௌசிகனர் ஆனந்தக் குற்றமென்னுங் குற்றமறியாமற் செய்யுள் செய்தாரேல், இவர் நல்லிசைப்புலவ ராகார்; இவர் செய்த செய்யுளை நல்லிசைப் புலவர் செய்த ஏனைச் செய்யுட்களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்குவார்; அங்ஙனம் நீக்காது கோத்தற்குக் காரணம் ஆனந்தக் குற்றமென்பதொரு குற்றம் இச்செய்யுட்கு உறுமையானென் றுணர்க".

எனவே, இப்பத்துப்பாட்டும் சங்ககாலத்தே தொகுக்கப் பெற்றதென்பதும் துணியப்பட்டதாம்.

இனி, மேற்கூறிய எண்மருள், ஈண்டு யான் கூறத்தொடங் கிய சான்றோரும் ஒருவராவர். இவர் பாடிய நூலொன்று இப் பாட்டின்கணுளது. அது பொருநாற்றுப்படை யென்பது. இவர் பாடியதாக வேறு நூல்கள் இற்றைப்போது பெறப்படும் தொகை நூல்களுள் உள்ளனவாகத் தெரிந்தில. ஆகவே, இவர்க் கமைந்த உயர்குணங்க ளனைத்தும் இவ் வொருநூலைக் கொண்டே நாம் உய்த்துணர்தல் வேண்டும். அன்றியும், இவரது இயற்பெயர் ஈட்டில் "முடத்தாமக்கண்ணி" யென்பது தொல்காப்பியச் சேனாவரையத்தா னுணரப்பெறுகின்றது. இவருடைய பெற் றோர், மரபு, சமயம் முதலியவை நமக்குத் தெரிந்தில.

இனி, இவர் கரிகாற் பெருவளத்தானையே இப்பாட்டுடைத் தலைவனாகக் கொண்டமையான், இவரது காலமும் அவன் காலமே யாம் என உணர்ந்தோர் கூறுகின்றனர். அன்றியும், இவர் அவன் அவைக்கண் இருந்தாரெனவும், அவனால் புரக்கப்பெற்றா ரெனவும் "சோழன் கரிகாற்பெருவளத்தான்" என்னும் நூல் கூறுகின்றது. கூறவே, இவரது காலம் ஏறக்குறைய இரண் டாயிர மாண்டுகட்கு முன்னாதல் தோன்றுகின்றது.

இனி, இவரது நல்லிசைப் புலமை நலத்தையும், அதனைப் புலப்படுத்து மாற்றான் வெளிவரும் இவரது சீரிய குணங்களையும் ஆராய்ந்து காண்பாம். இவ்வாராய்ச்சிக்குக் கருவி பொருநராற் றுப் படையென யான் முன்னரே கூறியுள்ளேன்.

பொருநராவார் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடு வோர், பரணி பாடுவோர் எனப் பலராவர் என்பர் ஆசிரியர் நச்சி னார்க்கினியர் ஆயினும், புறப்பொருள் வெண்பாமாலை உரைகாரர் இவர் கிணைகொட்டுமவர் என்பர். ஆற்றுப்படை யென்பது தலைவ னொருவனிடத்துச் சென்று மிக்கப் பரிசுபெற்ற ஒரு இரவலன், எதிர்ந்தோரைக் கண்டு தான் பெற்ற பெருவளத்தை அவர்க்குக் கூறி, அவரையும் தன்னைப்போற் சென்று பெறுமாறும், அவ் வாற்றிற்குரிய தலைவனது நாடுசேர் ஆற்றின் அருமை, தலைவன் பண்பு முதலியவற்றையும் கூறிவிடுத்தலாம். இத்தொழிற்குரி யோர் கூத்தர், பாணர், பொருநர், விறலியர், புலவர் முதலியோ ராவர். இது,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்" எனவரும்

தொல்காப்பியத்துட் பெறப்பட்டது. சிறிது விரிவாக நோக்கின்,

"புரவலன் பரிசு கொண்டு மீண்ட
இரவலன் வெயிறெறாஉ மிருங்கா னத்திடை
வறுமை யுடன்வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கந்தப்

"புரவலன் நாடுூர் பெயர்கொடை பாஅய்
ஆங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை
ஒங்கிய வதுதா னகவலின் வருமே" எனவரும்

பன்னிருபாட்டியலுட் காண்க. ஈண்டு ஆற்றிடையெதிருறும் இரவலர் பொருநராகலின், அவரை யாற்றுப்படுத்துக் கூறும் இந்நூலும் அவர் பெயராலே "பொருநராற்றுப்படை" யென்றாயிற்று.

இனி, இந்நூலின் கருப்பொருள் வருமாறு:— பெருவளம் பரிசிலாகப்பெற்ற ஒரு பொருநன் அது பெறுதாளொருவன் தன் எதிர்வரக்கண்டு, தான் அதனைப்பெற்ற வாலாற்றினை அவற்குக் கூறுகின்றான். "ஏ பொருந! இடையறாத செல்வ வருவாயினையுடைய அகன்ற இப் பேரூர்களில் நடைபெறும் விழாக்கள் கழிந்த பின்னரும் ஆண்டுத் தரப்பெறும் சோற்றை விரும்பாது அவ்விழாக்கள் நிகழும் வேற்றுப்புலங்களைக் கருதிச்செல்லும் பொருந! நின் அறிவே அறிவு! பெடைமயில் அருகுநின்ற மயில் போலும் சாயலும், கல்விப்பெருமையும் தக்கிருப்பவளும்; நின்னோடு தொடர்ந்து வருபவளுமாய இப்பெருமை மிக்க பாடினி, சாதிலிங்கத்தை யுருக்கி வார்த்தாற்போலும் சிவந்த இந்நிலத்தில் நடத்தலால், வழியிற் கிடக்கும் சிறுசிறு சுக்கான்கற்கள் அவளுடைய சிறடியிற் றைப்புண்டு அவட்குச் சால வருத்தத்தைத் தந்ததுமன்றிப் பரற்பழங்க ளொத்த கொப்புளங்களையும், அவள் தன் காலில் எழுப்பி நோய் செய்கின்றன. செய்யினும், அவள் அதனைத்தாங்கி நடந்தனளாக, நீயும், காலம் உச்சிக்காலமான சந்தியென்பதை யுணர்ந்து, மேற்செல்லுதலையுந் தவிர்த்துக் கொழுவிய நிழலில்லாத மராஅமரத்தின் கீழ்த் தங்கினை. இவ்வழியின்தன்மை யறியாய்கொல்! இது நாடோறும் பலியானைகள் நெருங்கிச் சென்றுகொண்டிருக்கும் காட்டுவழியாகும்; இம்மரத்திடத்தும் இலைகள் இல்லாமையால், படர்ந்து நாற்றிசையும் செல்லும் இதன் கிளைகளின் நிழல், வலையொன்றை மேலே கட்டினாற்போல் மெல்லிதாக விருக்கின்றது. இந்நிலையில் நீ அவளோடும் இங்குத் தங்கினை. ஆ, நின் நிலையை என்னென்பேன்!!

நிற்க, அவள் தன்னிடத்துள்ள,

ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின்

பாலையாழைக் காத்தேந்தி, அதன் நரம்புகளை இசையோடு கூடு மாறு தழுவியும், உருவியும், தெறித்தும், ஒன்றைவிட்டொன்றைத் தெறித்தும், வடித்தும், சீர், பாணி, தூக்கு முதலிய தாளங் கட்கியைய, தேவபாணிகளை நீர்மையுடன் பாக்கப் பாடினள். நீ, அவள் பாடின தாளத்திற்குப் பொருந்தவும், இக்காடுறைபும் தெய்வதங்களின் மனம் களிக்கவும் நின்னுடைய தடாரியை வாசித்தாய். இதுபோது நின்னை, யான் என் இன்மை தீர்ந்து வரும் வழியில் எதிர்வது பெருமைமிக்க செல்வமும், பெரிய பெயரும், வலியமுயற்சியும், முரசுமுழங்கும் தானையுமுடைய சேரசோழபாண்டியர்கள் தம்மிற்பகைமை நீங்கி ஒருங்குசேர்ந்து, செல்வக் குறைபாடின்றி அரசவையிருக்கும் தோற்றமொத்துள்ளது.

நன்று. இனிப்,

"பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ! கொண்ட தறிக!"

வழிபறியாமையின்ல் வேறுவழியிற் புகாது இவ்வழியே போந்து எம்மைக் காண்பது நும்முடைய முற்பிறப்பில் நீங்கள் செய்த நல்வினைப்பயன் எனினும் அமையும். எ, புகழ்மேம் படுந! யான் கூறப்போவனவற்றை இனி நீ விரும்பிக் கேட்பாயாக.

நீயோ இதுபோது அடுகின்ற பசிப்பிணியால் நின்னுடைய இரும்பெருஞ் சுற்றத்தோடு வருந்துகின்றாய். அத்தொன்று தொட்டுவரும் பசிப்பிணியை நின்னைவிட்டு நீக்கிக்கோடலை நீ விரும்புவாயாயின், காலம் நீட்டித்தலின்றி இன்னே எழுவாயாக. எழுமதி! வாழி!! எ, எழின் கிழவ! யான் என் வறுமை நீங்கி ஈண்டு எய்துமாற்றைக் கூறுவல். கேள்:

பண்டையில் யானும் நின்னெப்ப நீடு பசியால் மிகவும் உழந்தது மன்றிப் பழுமரத்தேரும் பறவைபோல வேறு வேறு புலங்களை முன்னிச் சென்று வருந்தினேன்; வருந்தி முடிவில்,

கரிகாற் பெருவளத்தானைத் தேர்ந்து அவனது பெரும்பதிக்குப் படர்ந்து சென்றேன். அங்கு அவனது திருவீற்றிருந்த கோயில் வாயிலும் திறக்கப்பெற்றே யிருந்தது. இருப்பினும், செல்வோர் வாயிலோனுக்குக் கூறிச்சேறல் வேண்டும்; மற்று யான், என் மிடி தீர்தல் காரணமாக, அவனுக்குங் கூறாது கோயிலுக்குட் புகுந்து, ஓர்புடைநின்று, போந்த இளைப்பினை, உட்புகுந்த உவகையைத் துணையாக்கொண் டாற்றிக்கொள்ளாநிற்ப, இரவு வந்தது. வரவே, யான் அவ்விடத்தே துயில் கொண்டேன். பின்னர் வெள்ளி முளைப்ப விடியல் எய்தலும், யான்; சிவ்வென்றெழுந்து, என் கண்ணகன்ற உடுக்கையை யெடுத்து இரட்டைத் தாளத்திற்குப் பொருந்துமோர் பாட்டினைப் பேணிப் பாடத் தொடங்கினேன். இந்நிலையில் என் உடுக்கையி னழகை எவ்வாறுரைப்பல்! சுருங்கக்கூறின், அது என் கைவடுப் பட்டுப் பாம்பின் படப்பொறிபோ லிருந்தது. இருப்பினும், அப் பாட்டினை யான் பாடுவதன் முன்னமே, அப்பெருவளத்தான் உடுக்கை வாசிக்கும் என் முற்போந்து, தன்னொடு பொருந்திய பழைய நண்பன்போல் என்னோடு உறவு கோடலை விரும்பி,

> "வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
> கண்ணிற் காண நண்ணுவழி யிரீஇப்
> பருகு வன்ன வருகா நோக்கமொடு
> உருகுபவை போல்"

என்பு குளிரச் செய்தனன். அது போது யானிருந்த நிலைமை இதுபோது சொல்லுந் தரமுடைத்தன்று. ஏனெனின் யானுடுத்திருந்த உடை ஈரும்பேனும் இருந்து குடிவாழ்தற் கிடனாய்ப் பலவாறுகக் கிழிந்து, தையல்க ணிறைந்து மிருந்தது. இந்நிலையில் அது வேர்வையால் நனைந்து மிருந்திருப்பின், அதனைப்பற்றி வேறு யான் கூறவேண்டுவதில்லை. இதனைக் கண்டதும், அவன் முதற்கண் அத்துகிலைப் போக்கிவிட்டு "இது இழைபோன வழி" யென்று குறித்துப் பார்க்க வாராத நுண்மையும், பூத்தொழில் முற்றுப்பேறும் அமைந்து பாம்பின் தோலையொத்து விளங்குவதாய பூந்துகில் ஒன்றைத் தந்து என்னை யுடுக்கப்பண்ணினன். பின்பு, இழையும், அழகும் சான்றவரும், இசையாளும், பாட்டா

லும், கூத்தாலும், மொழியாலும் அரசனுக்கு மிக்க மகிழ்ச்சியைச் செய்பவருமாகிய மகளிர்கள் போந்து, மழையென்னும்படி மாடத்திடத்தே பலகாலும் தேறலை வார்ப்ப, ஓட்டற்ற பொன் வட்டிலில் ஒன்று யான் தாப்பெற்று, அது நிரம்பமுகந்து என் வழிவருத்தம் போமாறு மிகவும் உண்டதோடு, "கள்ளுண்ணப் பெறுகிலேம்" என என் னெஞ்சிற் கிடந்த பெரிய வருத்தத்தையும் போக்கி, நின்ற அந்திப்பொழுதையும் இனிது களித்து, இரவில், அச்செல்வக் கோயிலின் ஓர் புறத்தே கிடந்து அயர்ந்தனன். மிக்க தவத்தைச் செய்கின்ற மாக்கள் தம்முடைய தவஞ்செய்த வுடம்பைப் போகடாதே யிருந்து, அத்தவத்தாற்பெறும் பயனைப் பெற்ற தன்மையை யொப்ப, வழிபோன வருத்தம் சிறிது மின்றி என்னிடத்தினின்றும் போக்கியதுமன்றிக் கள்ளின் செருக்கினுலுண்டான மெய்ந்நடுக்கமல்லது வேறு யான் மனக் கவற்சி சிறிது மின்றி இனிது துயின்றேன்.

துயிலெழுந்த பின் யான் அவனைக் காண்பதற்கு முன்னுள் மாலை யுற்றிருந்த சொல்லுதற்கெட்டாத மிடியையும், கண்ட மற்றை நாளில் கண்டார் "இவன் நெருநல் வந்தவனல்லன்" என்று மருளும் வண்ணம் வண்டுகள் இடையறாது மொய்க்கும் தன்மையையும் கண்டு மயங்கி "இது கனவுபோலும்" எனக் கலங்கிய என் நெஞ்சம் பின்னர் "நனவே" யெனத்துணிந்து, தான் கொண்டிருந்த வல்லளுர் நீங்கி மகிழ்ச்சி தலைசிறந்தது.

அவ்வமயம் தத்தம் சிறுதொழிலன்றி வேறொன்றுங் கல்லாத இளைஞர் பலர் வந்து, தலைவனுய கரிகாற் பெருவளத்தாற் குரிய புகழ்களை யாங்கள் கூறக்கற்று அவற்றையே மீட்டுஞ் சொல்லிக் காட்டியதோடு எனக்குற்ற வேறுபாட்டையுங் கூறினர். அதன் குறிப்புணர்ந்த அவன், தன் வாயிலோர்க்கு அக் கல்லா விளைஞரை, என்னையும், என்னுடன் வந்தாரையும் செல்லவிடுத்து, அணுக அழைத்து வருமாறு பணித்தனன். அக்காட்சி யிடத்துச் செய்தற்பாலனவாய முறைகளையும் யாங்கள் செய்து முடிப்ப, அவன் அருளொழுக நோக்கி, எங்களை உண்டிக்குப் போக்கியருளினன். ஆண்டுள்ளார், யாங்கள் வருதலை முன்

னரே ஏவலரால் உணர்ந்து, மிக்க உவகையும் உள்ளன்பும் முகத்திடைத் ததும்பித் துளும்ப,

தூராஅய் துற்றிய துருவையம் புழுக்கின்
பராரை வேவை பருகெனத் தண்டிக்
காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
யூழி னூழின் வாய்வெய் தொற்றி
யவையவை முனிகுவ மெனினே சுவைய
வேறுபல் லுருவின் விரகுதந் திரீஇப்

பெருகு மன்பொடு பேணினர். இவ்வண்ணம் உண்டுகளித்த எங்கள் முன்னர்ப் பண்ணமைந்த சிறிய யாழையுடைய ஒண்ணுதலியராய விறல்படப் பாடியாடு மகளிர் பலர் மார்ச்சனையமைந்த முழவின் தாளத்திற்கேற்ப ஆடிக் களிப்பூட்டினர். இங்ஙனம் யாம் ஊனொடு கள்ளுண்டலிலே நாட்கள் பல கழித்தேமாக, ஒருநாள் அப்பெருணவாளர் எங்களை நோக்கிச் சோற்றுணவு கொள்ளுமாறு வேண்டினர். யாங்களும் அவர்க்கு உடன்பட்டோம். உடனே, அவர்கள்,

முகிழ்த்தகை

முரவை போகிய முரியா வரிசி
விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்,

பாலொடு பொரித்த பொரிக்கறிகளுடன் தர, யாங்கள் சாலப் பெற்று, இனிது உண்டிருந்தகாலை, உண்மையைக்கூறின், இளைப் பாற இடம்பெறாது, இரவும் பகலும் வெறுப்புண்டாமாறு இறைச்சி தின்றதன்பயனாய், எம்முடைய பற்களும் கொல்லை நிலத்திலுழுத கொழுவொப்பத் தம் முனைமழுங்கின.

இன்னணம் நாட்கள் பலசெல்ல, ஒருநாள் யாங்கள் அவனை விளித்து, “ஏ, செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய செல்வ! இனி யாங்கள் எம் தொல்பதி செல்குதும்” என மெல்லெனச் சொன்னேம். அதுகேட்டு, அவன், வெகுண்டான் போல் வருத்தம் செய்யும் சிறுபார்வைகாட்டி, “என்னையும், என் ஆயத்தையும் கைவிட்டு விரைந்து போகின்றீர் கொல்லோ?” எனச்

சொல்லினன். பின்னர்ப் பிடியொடுபுணர்ந்த களிறுகளொடு, துடியடியன்னத் தூங்குநடைக் கன்றுகளையும், தான்விரும்பிப் பேணிவந்த ஊர்திகள், ஆடைகள், அணிகலன்கள் முதலியவற்றையும், தான் அறிந்த அளவாலே மேன்மேலும் தாராநிற்ப, என்னுடைய குறைகளை யானறிந்திருந்த அளவு, அவற்றை வாரிக்கொண்டு, இனி யெக்காலத்தும் மிடியில்லை யாமாறு வந்தனென். இக்கூறிய திரண்ட பொருள்களைத்தரும் அத்தலைவனது மாண்பினை யறிய விரும்புதியேல், கூறுவல். கேள்: அவன் வென்றி மிக்க வேலேந்தும், அழகமைந்த பல தேர்களையுடைய இளஞ்சேட் சென்னியின் திருமகன்; முருகக்கடவுளன்ன சீற்றமும் உட்குதலும் பொருந்திய தலைவன்; அன்றியும் அவன் தாய் வயிற்றிலிருந்தே அரசுரிமை பெற்றுப் பிறந்த தனிப்பெருஞ் செல்வன்; பின்னும் அவன்,

"எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்பச்
செய்யார் தேஎந் தெருமரல் கலிப்பப்
பௌவ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்பு படர்ந்தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநல்
நாடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப
ஆளி நன்மான் அணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்(கு)
இரும்பனம் போந்தைத் தோடும் கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்."

இப்பெருந்தகைபாற் சென்று, உறுநர்த்தாங்கிய அவனது மதனுடை நோன்றாளை யண்மி, நீவிர் நுந்தம் வறுமைதோன்ற

முன்னே வணங்கி நிற்பீரேல், அவன் கன்றைக் காண்குறும் காரா வொப்ப, நம் வறுமை நீங்குதற்காய அன்பும் அருளும் ஆர வொழுக நோக்கி, கொட்டைப்பாசியின் வேரொப்ப அழுக்கும் கையதும் அமைந்து குறைந்துள்ள உங்கள் புல்லிய துணிகளைப் போக்கித், தூய்மையும், மென்மையும், திரளமுடிந்த முடிகளும் உடைய பட்டாடைகள் பல தருதலோடு, பெறுதற்கரிய பொற் கலங்களில், "விரும்பியவண்ண முண்பீராக" என்றுசொல்லிப் பூக்கமழ் தேறலை நீவிர் நாடோறும், "சாலும்" என்றமையுமாறு மிகுதியும் தாச்செய்வன்; இப்பாடினிக்கும் பொற்றாமரைப் பூ, பொன்னரிமாலை, முத்துமாலை முதலியவற்றைச் சூடிக்கோடற் களித்தருளுவன். பின்னர், யானைத் தந்தத்தாற் செய்த தாமரை முகை விளங்குந் தேரும், அவற்றிற் கேற்பப் பால் போலும் வெண்ணிறக் குதிரைகள் நந்நான்கும் தந்து, குதிரைகள் தாறு கோலான் முடுக்கப்பெறின், கடுவிசைகோடு மெனவும், அது போது நீவிர் தேர்மிசை யிருத்தலாற்றீர் எனவும் உணர்ந்து, அத்தாறுகோலைக் களைந்து, "இதன்மீது ஏறுதிர்" என உங்கட் குரைத்து, ஏனை யாழ்களில் வீறு பெற்ற யாழ்ப்பாணர்க்குச் செய்யும் சிறப்புக்களை யுங்கட்குஞ் செய்து கடுகவிடுவா னல்லன்.

பின்னர் நம்மை நோக்கி அவன், செல்வம், யாக்கை முதலி யன நிலை நில்லாத இவ்வுலகத்துத் தன் புகழைச் சீர்தூக்கி நோக்கித் தான் வெற்றிவழிப் பெற்ற பொருள்களைப் பிறர் பிறர்க்குக் கொடுத்து "இங்ஙனஞ் செல்வாயாக" என்றுங்கூறி, அங்ஙனம் நீவிர் போதற்கு, நீர் அறாத தண்ணிய மருத நிலத் தூர்கள் மிடைந்த நாடுகளோடு பல யானைகளையுங் குறைவின்றித் தருவன். அவனுறைபும் நாடு சோழநாடு என்பது. எவ்வழியும், ஒரு குற்றமுமின்றி யறநெறி வழாது அந்நெறியை உலகறிதற்குக் காரணமாய செவ்விய கோலானும், தண்ணளி செய்தற் கெடுத்த ஒரு கொற்றக்குடையானும் தனது ஆணையே உலகங் கூறும்படி யாகவும், முதியோர் முரண் செல்லும்படியாகவும் பெரிய நட் புடனே நெடுங்காலம் உலகாண்ட வென்வேலேந்தும் தலைவனை அவனிடம் நீவிர் இன்னே எழுந்து செல்வீராக" என்பது.

இனி, இந்நூற் பெருமையும், அதன் சொற்போக்கும், அதனிடை விளங்கித் தோன்றும் பொருட் பொலிவும் ஆகிய இவற்றை யாராயுங்காற் பெறலாகும் நூலாசிரியரின் அருங் குணங்களும் முறையே தருவிக் காண்டற்கு, முதற்கண் இந் நாற்பொருளைப் பல பகுதிகளாகப் பிரித்துக்கொண் டாய்ந்து சேறலே ஆராய்ச்சி முறையாகலின், முன்னர்ப் பாட்டுடைத் தலைவனைப்பற்றிச் சிறிது நோக்குவாம்.

1. பாட்டுடைத் தலைவன்:

இப்பாட்டுடைத்தலைவன் கரிகாற்பெருவளத்தான்; சோழன் இளஞ்சேட் சென்னியின் திருமகன். இச்சென்னி மிகப்பல தேர்களும், நீண்ட வேற்படைகளுமுடையவன். நிற்க, இக் கரி காலன் நுண்ணிய அறிவும் இடன் அறிந்து வினைசெய்யும் திற னுங் கொண்டவன். இவனைப் பாட்டுடைத் தலைவனாகச் சான் றோர் பலர் நல்லிசைப் பாட்டுக்கள் பல செய்துளார். இவற்றை நோக்குழி, இவன் புலவர்பாடும் புகழுடையவன் என்பது தேற்ற மாகும். இவன் மண்ணுலகில் வாழ்ந்த காலம் கி. மு. முதனூற் றாண்டினிடைப் பட்டதென்ப.

நிற்க, இவனது பிறப்பு வரலாறு மிக்க திப்பியமுடைத் தெனல் வேண்டும். இவன் தாய் இவனைக் கருவுயிர்ப்பான் உயவு நோயால் வருந்துங்காலை, அமையக்கணக்கர் பலர் தோன்றி, "இச்செல்வன் இக்காலத்துப் பிறவாது நல்லோரை வருமளவும் தாழ்த்துப் பிறக்குமேல், இப்பேருலகிற் பெறலருஞ் சிறப்பெய் துவன்" என்றனர். கேட்டவள், அவ்வண்ணமே அவனை நல் லோரை வருமளவும் தடைசெய்து பின்னர்ப் பெற்றாள். இங்ங னம் அருமைப் பிறவி வாய்ந்த இவன் இளமைப் போதில் நெருப் பாற் சுடப்பட்டுக் கால் கரியாயினன். இது பற்றியே இவற்குக் கரிகாலன் எனும் பெயர் வரலாயிற்று.

பலர்புகழும் வெங்கதிர்ச் செல்வன், காலையிற் கடற்கண், தன் ஒள்ளிய கதிர்களைப் பரப்பித் தோன்றிப் பின்னர் விசும்பில் மெத்தெனச் சென்றதை யொப்ப இவன் குழவிப் பருவத்தே யாவரானும் புகழப்பெறும் தகுதி மேம்பட்டு, அரசுரிமை யெய்

றிப் பகைப்பிருள் துமித்து விளங்கினன். அக்காலை, இவனது வலியறியாத தெவ்வர்கள், அதனைப் பின்னரறிந்து இவன் ஏவலைக் கேட்டு நின்றனர்; நில்லாதார் அடலழிந்தொழிய, அவர் தேயங்கள் அலமந்தன.

இவன் தவழுக்கற்ற நாட்டொட்டே, இவனிடம் ஆண்மை, அடல், கூற்றினுமிக்க வலி முதலியவை அடைவே வளரத் தொடங்கின. அவற்றின் பயனுக், இவன் அரசு கட்டிலேறிய சிறிது நாட்குட் பெரும் போரொன்று நிகழ்த்துதல் நேர்ந்தது. அக்காலத்து இவற்குப் பகையானுர் கரிய பனங்குருத்தி லலர்ந்த வலப்பக்கத் தோலையாற் றொடுத்த மாலை சூடிய சேரனும், வாள் வாய் போலும் விளிம்பினையுடைய வேப்பந்தளிராற் றகைந்த பிணையலணிந்த பாண்டியனும் ஆவார். இப்போர் வெண்ணியென்னுமூரின்கண் நிகழ்ந்தது. அப்போர் முகத்துப் பான்மண மாறுத ஆளிக்குருளை யொன்று முதன்முதலாக இரை வேட்டைக்குச் சென்று ஒரு பெருங்களிறறைக் கொன்றதை யொப்ப, அவர்களது படையை யறவே சாடி, அம்மன்னர்களை முறியடித்து வெந்நிடச் செய்தனன்.

இன்னணம், பிறப்பானும், போர்த்திறத்தானும் தன்பெருமை உலகிற் பிறங்கச் செய்ததோடு, அரசவையினும் தன் பேரறிவை வெளியிட்டனன். அதுவருமாறு:—

"தம்முள் மறுதலை யாயினு ரிருவர் முறைவேண்டி, மன்னனிடம் வந்தனராக, ஆண்டுற்ற சான்றோர் சிலர் சிலசொன்னுல் அச்சொன் முடிவு கண்டேஆராய்ந்து முறைசெய்யும் அறிவு நிரம்பாத இளம்பருவத்தா னன்றோ அரசனென்றுரைபுற்றனர். இதனையுணர்ந்த இவன், அந்நரைமுதுமக்க ளுவக்கும்வகை நரைமுடித்து வந்து முறைவேண்டி வந்த இருதிறத்தாரும் சொல்லிய சொற்கொண்டே ஆராய்ந்து முறைசெய்தனன்."

இவன் ஆண்டநாடு சோழவளநாடு என்பது.

(தொடரும்.)

உ

தமிழர் வீரம்.

திரு. சாமி. சிதம்பரனார் அவர்கள், ஆசிரியர் அரசர்மடம்.

(முற்றொடர்ச்சி. (276-ம் பக்கம்).

இனி உலகங்கொண்டாடும் ஒரு பெரியவர், பொது நிலைக் கொள்கையை உலகில் நிலை நிறுத்தியவர், தமிழ்மொழியின் சிறப்பிற்குக் காரணமா யிருக்கின்றவர்; எம்மதத்தினரும் தம்மதத்தரெனக் கொள்ளும் இறைவர்; மறைநூல் தந்த மாதவர்; என்று கொண்டாடத்தக்க தமிழ்ப் பெரியாராகிய தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரின் வீரத்தைக் காணப்புகுவோம்.

நமது நாட்டில் ஆரியர் கொள்கைகள் மிகுதியாகப் பரவத் தொடங்கிய காலத்திற்றான் திருவள்ளுவர் தோன்றியிருத்தல் வேண்டும் என்பது எமது உறுதியான நம்பிக்கை. அதற்குக் காரணம் திருவள்ளுவர் ஆரியர் கொள்கை பலவற்றை அஞ்சாது எதிர்த்துரைப்பதே யாகும். ஆதலால் யாம் இதுபோது திருவள்ளுவரை ஆரியர் கொள்கைகளை எதிர்த்துப் போர்புரிந்து தொலைத்துத் தமிழர் மேன்மையை நிலைநிறுத்திய ஒரு வீரரென்று கூறுகின்றோம்.

இனி, திருவள்ளுவர் ஆரியர்களின் எந்தெந்தக் கொள்கைகளை மறுக்கின்றார் என்பதைப்பற்றிச் சில கூறுகின்றோம். ஆரியர்களின் அறநூல்களில் உயர்ந்தோர்க்குக் கொடுப்பதே சிறந்த அறம் என்பது கூறப்படுகின்றது. அன்றியும், ஆரிய மிருதி நூல்களில் இழிபிறப்பினன், பிணியாளன், உறுப்புக் குறைபுடையவன் போன்ற ஏழைமக்களுக்குக் கொடுப்பது பாவம் எனவுங் கூறப்படுகின்றது. நமது பொய்யா மொழியாரோ அக்கொள்கைகளை மறுத்து

வறியார்க்கொன் றீவதே யீகை (குறள். 221)

எனத் தேற்றகாரங் கொடுத்துக் கூறுகின்றார்.

அன்றியும், ஆரியர்கள் பிறவுயிர்களைக் கொல்லுதலாகிய வேள்வியை மிகவும் சிறப்பித்துக் கூறுகின்றனர். அவ்வேள்வியைப் பற்றிக்கூறும் நூல்களைக் கடவுள் கூறியதாக மொழிகின்றனர். வேள்வி செய்வதனால் தேவராக ஆகலாம் என்பது ஆரியர் கொள்கை. திருவள்ளுவரோ,

அவிசொரிந்(து) ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்(து) உண்ணாமை நன்று (குறள். 259)
தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிற(து)
இன்னுயிர் நீக்கும் வினை (குறள். 327)

என்ற பாடல்களால் ஆரியர் கொள்கையைக் கண்டிக்கின்றார். ஆரியர் தேவராவதற்குப் பிறவுயிர்களைக் கொன்று செய்யுந் தொழிலைச் சிறந்ததெனக் கொள்கின்றனர். திருவள்ளுவர் பிறவுயிர்களைக் காப்பாற்றுவதாகிய தொழிலை மேற்கொள்வதனாலே தேவவுருவம் பெறலாம் என்றும், தேவர்களால் சிறப்புச்செய்யுமாறு பெருமை யடையலாமென்றும் கூறுகின்றார். இதனை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (குறள். 50)
செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு (குறள். 86)

என்ற அருமைத் திருக்குறள்களால் அறியலாம்.

தமிழர்கள், மக்கள் அனைவரும் பிறப்பினால் ஒரு தன்மையுடையவர்களே; பிறப்பினால் உயர்வு, தாழ்வு என்பன அவர்களுக்குள் இல்லை; என்ற கொள்கையுடையராக விருந்தனர். (இஞ்ஞான்றும் உண்மைத்தமிழர்கள் அவ்வாறே இருக்கின்றனர்.) ஆரியர்கள் பிறப்பினாலே உயர்வு தாழ்வு உண்டு என்று தாமே சிற் சில புனைந்துரைகளை எற்படுத்திக்கொண்டு, அக்கொள்கையைத் தமிழர்களிடத்திலும் புகுத்தி நிலைநாட்டத் தொடங்கினர். திருவள்ளுவராகிய நமது தமிழ்வீரர் அக்கொள்கையை மறுத்துப்,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், (குறள் 972)

என்ற அருமைக் குறட்பாவைக் கூறியிருக்கின்றார்.

மற்றும் ஆரியர்கள் நான்கு சாதியினர்க்கும் தனித்தனியே வகுத்திருக்கும் அறுவகைத் தொழில்களில் உயர்ந்தசாதி எனப் படுவோர்க்கு இரத்தலையும் ஒரு தொழிலாக அமைத்திருக்கின் றனர். ஆனால் திருவள்ளுவரோ,

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (குறள். 1062)

என்னும் திருக்குறளால் கண்டிக்கின்றார். தமிழர் கொள்கைக்கு முரண்பட்ட பிறர்கொள்கையை, நாட்டில் மிகவும் பெருமை பெற்றிருந்த ஒரு கூட்டத்தாரின் கொள்கையை, எத்தகைய அறி வுடையவர்களையும் தமக்குள் அகப்படச்செய்து தமது வேலையை நிறைவேற்றிக் கொள்ளும் திறமை மிகுந்த ஒரு குழுவினர் கொள்கையை, வடநாட்டு ஆரியர் கொள்கையை இங்ஙனம் எதிர்த்துரைத்துத் தமது கொள்கையை நிலைநாட்டிய திருவள் ளுவர் ஒரு தமிழ்வீரர் என்பதற்கு யாது தடை? இவருடைய வீரம் உண்மைத் தமிழ்வீரமாகும். இத்தகைய வீரர் பிறந்தத னாற்றான்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று சொல்லும் பெருமையை நமது நாடு பெற்றது.

இனித் திருமால் அடியார்களைப்பற்றியும், சிவனடியார்களைப் பற்றியும் சிறிது ஆராய்வோம். அவர்களைப்பற்றிப் பிறர் எவ் வாறு கூறினுங் கூறுக. யான் அவர்கள் எல்லோரையும் வீரர்க ளென்றே விளம்புவேன். சிலரை மக்களூழியஞ் செய்வதில் தலை சிறந்து நின்ற வீரர்களென்றும் மொழிவேன். அவர்கள் ஒவ்வொருவரும் தாம் தாம் கொண்ட கொள்கையை உறுதியுடன் நிறைவேற்றினமையால் வீரர்களாவார்கள். ஐம்பொறிகளாகிய யானைகளைத் தத்தம் புலன்களிற் செல்வாமல் அடக்கியாண்டமை யால் வீரர்களாவார்கள். தமிழர்களின் அன்பு மதத்தை உலகில் நிலைநிறுத்தப் பாடுபட்ட வீரர்களாவார்கள். இனி அவர்களிற் சிலருடைய செயற்கரும் வீரச்செயல்களை நோக்குவாம்.

திருமங்கையாழ்வார் என்னும் வீரர் ஒரு படைத்தலைவன் பிள்ளையா யிருந்து, தமது திறமையாலும், சோழமன்னன் தம் மீது கொண்ட அன்பினாலும் ஒரு குறுநில மன்னரானவர். இவர் தமது அரசியலும், செல்வமும் தன்னைவிட்டு நீங்கின போதும், திருமாலடியார்களுக்குத் தாம் நடத்திவந்த பணியை வழிக்கொள்ளையடித்த பொருளைக் கொண்டு நடத்தினர். இவர் தமிழ்ப் பழங்குடிகளில் ஒன்றாகிய கள்ளர் குடியிற் பிறந்தமையா லன்றோ திருட்டுத் தொழில் செய்தாயினும் தாம் கொண்ட கொள்கையை நிறைவேற்றும் எண்ணங்கொண்டு அவ்வாறு செய்தார்? திருமாலும் அவர் மனைவியும் மக்களுருவங் கொண்டு வழிநடந்து வந்தபோது அவர்கள் அணிந்திருந்த அணிகளை அச்சுறுத்தி வாங்கிக்கொண்ட வீரச்செயலுக்கும், உறுதிக்கும் உவந்தே திருமால் எட்டெழுத்து மறையைக் (அட்டாக்கா மந்திரம்) கூறினாரென்றால், இவர் வீரம் எத்தகைய சிறப்புடையதாகும்? இவர் வீரம் தமிழர் வீரமென்று அறிதல் வேண்டும்.

இனித் தமிழ்நாட்டுப் பெருந்தகையாளராகிய இராமாநுசரின் வீரத்தைச் சிறிது சிந்திப்போம். இவர், பார்ப்பனர்களின் உரிமை மிகுந்தும், உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற வேறுபாடு மிகுந்தும், தந்நலங் கருதுவோரின் சூழ்ச்சிகள் மிகுந்தும் இருந்த காலத்தில், எல்லோரும் பிறப்பினால் ஒரு தன்மையரே; சாதி வேற்றுமை இல்லை; எல்லா நூல்களையும் யாவரும் கற்கலாம்; எட்டெழுத்து மறைபோன்ற உயர்ந்த பொருள்களை யாவரும் உணர்ந்து கொள்ளலாம்; யாவரும் கோயிலுக்குட் சென்று இறைவனை வழிபடலாம் என்பன போன்ற உயரிய கொள்கைகளை உலகில் நிலைநிறுத்தித் தாமும் தமது கொள்கையின்படி நடந்து காட்டினார். இவர் தமிழ் நாட்டிற் றமிழந்தணர் குடியிற் பிறந்தமையாற்றான் இத்தகை உண்மை வீரராக விளங்கினார். ஆதலால் இராமநுசர் வீரத்தையும் தமிழர் வீரம் என்றே யாம் கொள்ளுவோம். இராமாநுசரைப் போற்றும் வைணவர்கள் இந் நாளில் அவர் உணர்த்திய உயரிய கொள்கைகளின்படி நடக்கின்றார்களா? அவரைத் தங்கள் மதப்பெரியார் என்று வாய்ச்சொல்லளவில் கூறுகின்றார்களேயன்றி உண்மையாக அவர் கொள்கை

களைக் கடைப்பிடித்தொழுகுவார் இல்லையென்றே கூறலாம். ஒருவர் இருவர்தாம் உளரோ இலரோ என்பதை யாமறியேம்.

இனி, நாயன்மார் சிலரைப்பற்றிய வீரத்தை நினைவுகூர்வோம். திருநாவுக்கரசு நாயனாரைப்பாருங்கள்! இவர் தொடக்கத்தில் சைவமதத்தி லிருந்தார். அப்பொழுது அவருக்குச் சைனமதமே உயர்ந்ததாகத் தோன்றியது. அவர் மனச்சாட்சியும் நம்பியது. ஆதலான் உடனே தன் மனச்சாட்சி விரும்பியவாறு சைன மதத்தை மேற்கொண்டார். தன் மனச்சாட்சியின்படி நடந்ததனால் இது தமிழர் வீரமேயாகும். பின்னர்ச் சைவமதத்தை விடச் சைனமதம் உயர்ந்தது அன்று என்ற உண்மையை உணர்ந்தார். மீண்டும் சைவராயினர். இதுவும் தமிழர் வீரமேயாகும். சைனமதத்தை விட்டுச் சைவமதத்தைத் தழுவியவுடன் இவரைச் சைனர் பலவாறு துன்புறுத்தினர். அந்தோ! அக்கொடுஞ்செயல்களை இஞ்ஞான்று நினைப்பினும் எமது நெஞ்சம் நடுங்குகின்றது. அவ்வாறிருந்தும் தமது உறுதியை விடாதிருந்ததனால் சிவபெருமான் திருவருளால் சைனர் செய்த கொடுஞ்செயல்களினின்றும் சிறிதும் தீங்கின்றித் தப்பினர். "நாம் ஆர்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்று கூறிய இவர் எத்துணைச் சிறந்த வீரரா யிருத்தல்வேண்டும்! இத்தகைய வீரமே தமிழர் வீரமாகும்.

இனிச் சம்பந்தரை எடுத்துக்கொள்ளுங்கள்! இவர் சைனர் செய்த தீங்குகளனைத்தையும் ஒழித்துத் தமது சைவசமயத்தை நிலைநாட்டிய வீரத்தை அறியாதார் யார்? இச்செயலைத் தமிழர் வீரம் என்று கூறுதல்வேண்டாவோ? "தந்தது(உ)ன்றன்னைக் கொண்டது (எ)ன்றன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர்" என்றும், "இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவ தினியே" என்றும் கூறும் மணிவாசகர் தமிழ்வீரர் அன்றோ? "ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட் டாட்கொண்டவனைக் கொண்டே, இருமணத்தைக் கொண்டருளும் வல்லாளன்" என்று பாராட்டிக் கூறப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனார் ஒரு பெரிய தமிழ்வீரர் அன்றோ? இவ்வாறே ஆராய்வோ

மாயின் ஒவ்வொரு அடியாரையும் தமிழ்வீரராகவே காணலாம் என்பது திண்ணம்.

இனித், தமிழ் நாட்டுப்பெண்மக்களின் வீரத்தை யாராய்வோம். பொன்முடியார் என்னும் தமிழ்நாட்டுப் பெண்மணி தன் பிள்ளையைப்பற்றிக் கூறும்போது "பிள்ளையைப்பெற்று வளர்த்துவிடுதல் எனது தலைமையான கடமையாகும். அப்பிள்ளையை அறிவுடையவனாகச் செய்வது தந்தையின் கடமையாகும். அப்பிள்ளைக்கு வேற்படையைக் கூர்மையாகச்செய்து கொடுத்தல் கொல்லனுடைய கடமையாகும். அப்பிள்ளையை நன்னெறியிற் செலுத்துதல் அரசன் கடமையாகும். (நாட்டின் நலத்திற்காக) ஒளி பொருந்திய வாளைக் கையிற்கொண்டு, போரில் யானையைத் தொலைத்து வெற்றிபெற்று மீளுதல் என் பிள்ளையின் கடமையாகும்" என்று கூறுகின்றாள். இதனை

ஈன்றுபுறந் தருதல் என்தலை கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

என்ற பாடலால் அறியலாம். (புறம். 312)

மற்றொரு தமிழ் வீரப் பெண்மணி, போர்க்களத்திற்குச் சென்ற தன்மகன், பகைவருடன் போர் செய்து, தன் படைகள் அழிந்தவுடன் திரும்பி ஓடிவந்து விட்டான் என்று சிலர் சொல்லக் கேட்டாள். உடனே அவள் "என் மகன் போர்க்களத்தில் பகைவர்க்கு அஞ்சி ஓடியது உண்மையானால் அவன் பாலுண்ட எனது மார்பை வாள் கொண்டு துணித்திடுவேன்" என்று சூளுரைத்துப் போர்க்களத்தை யடைந்து அங்குக் கிடந்த பிணங்களைப் புரட்டிப்பார்த்தாள். தன் மகன் இறந்து கிடப்பதைக் கண்டு அவனைப் பெற்றபோதடைந்த மகிழ்ச்சியைவிட மிகவும் மகிழ்ந்தாள். இவ்வரலாற்றை,

நாம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க் கு(உ)டைந்தனன் ஆயின் உண்டவென்
முலையறுத் திடுவேன் யான்எனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே (புறம். 278)

என்பதனாற் காண்க. இப்பெண்மணியின் வீரம் தமிழர் வீரம் அன்றோ?

ஒரு பெண் மேனாள் நடந்த போரில் தனது தந்தை போர்க்களம் புகுந்து யானையை எறிந்து மடிந்திருக்கவும், முதல் நாட் போரில் தனது கொழுநன் பெரும்பசு நிரையை மீட்கச் சென்றவிடத்துப் பட்டிருக்கவும், அவற்றை யெண்ணாது, போர்ப்பறையைச் செவி மடுத்தவுடன், தனது ஒரே பிள்ளையை யழைத்து, அவன் கையில் வேற்படையைக் கொடுத்து, வெள்ளாடையை விரித்து, உடுத்திப் பரந்து கிடக்கும் தலை மயிர்க்கு எண்ணெயிட்டுச் சீவி "நீ இப்பொழுதே செருமுகம் நோக்கிச் செல்க" என்று விடுத்தனள். அன்பர்களே! இத்தமிழ்த்தாயின் வீரத்தை எண்ணுங்கள்! இத்தகைய தாய்மார்களைப்பெற்ற நம் நாட்டின் பெருமையென்னே, இஞ்ஞான்று இத்தகைய தாய்மார்கள் இருக்கின்றனரா? இருப்பார்களாயின் ஏன் நாம் இந்த நிலையில் இருக்கின்றோம்? 'ஏ தமிழ்நாடே! நீ இனியேனும் பண்டைக்காலத்திலிருந்த வீரத் தாய்மார்களைப்போல இப்பொழுது இருக்கும் தாய்மார்களையும் ஆக்குவாய்' என்று வேண்டிக்கொள்வதன்றி நம்மால் வேறு என்னசெய்தல் இயலும்? மேற்கூறிய பெண்மணியின் வீரத்தை,

கெடுக சிந்தை! கடிது இவள் துணிவே!
மூதின் மகளிர் ஆதல் தகுமே!
மேனாள் உற்ற செருவிற்கு இவள்தன் ?
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே!

நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே!
இன்றும்,
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே! (பு. நா. 279)

என்று ஒக்கூர் மாசாத்தி என்னும் புலவர்பெருமாட்டியின் பாடலால் அறிகின்றோம்.

இனி,

போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றுந்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகி யென்பாள்மன்னோ

என்று இளங்கோவடிகளாற் பாராட்டப்பெற்ற கண்ணகியின் வீரத்தைச் சிறிது சிந்திப்போம். கோவலன் இறந்தான் என்ற சொல்லைக் கேட்டவுடன் அவன் வெட்டுண்டு கிடந்த இடத்தையடைந்து அவனை உயிர்ப்பித்து அவன் வாய்மொழியை யறிந்து பின்னர், அஞ்சாது பாண்டியன் அவைக்களம்புகுந்து மன்னனுடன் வழக்காடி அவன் செய்தது குற்றமென உணர்த்தி அவன் தானே இறக்குமாறு செய்ததை முன்பு பாண்டியன் நெடுஞ்செழியனைப்பற்றிக் கூறுமிடத்திற் புகன்றோம். பாண்டியன் இறந்தபின் மதுரையைத் தீக்கிரையாக்கி, வையைக் கரைவழியே மலைநாட்டை யடைந்து, திருச்செங்குன்றென்னும் மலைமீதேறி, ஒரு வேங்கை மரத்தின் நிழலில் நின்றாளாக, அது பதினான்காம் நாளின் மாலைக்கால மாதலின் மதுரைத்தெய்வம் தனக்குரைத்தவாறு "நமது கொழுநரைக் கண்டு வணங்கி வானுலகடையும் நாள் இது" என்று கருதினாள். உடனே கோவலனும் தேவ வுருவுடன் விமானத்தில் வந்தனன். கண்ணகி அவனை வணங்கித் தானும் அவ்விமானத்தில் ஏறிக்கொண்டு அவனுடன் விண்ணுல

கடைந்தாள். இச்செயலை அறிந்த குறவர்கள் அக்கண்ணகியைத் தங்கள் குலதெய்வமாகக் கொண்டாடினர். பின்னர் ஆண்டுப் போந்த சோரன் செங்குட்டுவன் என்னும் மன்னனுக்கும் இதனைத் தெரிவித்தனர்.

நமது வீரக்கண்ணகியின் வரலாற்றைக் குறவர் வாயிலானும், கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனர் என்னும் புலவர் வாயிலானும் அறிந்த செங்குட்டுவன் வடநாடுசென்று தனது வீரத்தை நிலை நிறுத்திப் பனிவரைக் கல்லைக் கங்கையில் நீர்ப்படை செய்து கொணர்ந்து கண்ணகியின் உருவமைத்து அதனை நட்டுக் கோயில் எடுப்பித்து கடவுளாகக்கொண்டு வழிபாடாற்றினன். இச்செய லறிந்த இலங்கைக் கயவாகு மன்னனும் தனது நாட்டிற் கண்ண கிக்குக் கோயிலமைத்து வழிபட்டான். அக்காலத்திற் றமிழ்நாடு முழுவதும் கண்ணகிக்குக் கோயில்கட்டிப் பத்தினித்தெய்வத்தை வழிபட்டதாக அறிகின்றோம். இஞ்ஞான்றும் சில விடங்களிற் காணப்பெறும் பத்தினியம்மன் கோயில் என்பன நமது வீரக் கற்புக்கண்ணகியின் கோயில்களாகத்தா னிருக்கவேண்டுமென்று யாம் எண்ணுகின்றேம். அந்தோ! இந்நாளில் தமிழர்கள் தமது அன்னையாகிய கண்ணகியின் வழிபாட்டை நெகிழவிட்டு, தமது நாட்டு ஒழுக்கப்படி வீண்மகளிராக எண்ணத்தகும் பிறநாட்டுப் பத்தினிபெண்டிரைத் தெய்வங்களாகக் கொண்டாடுவதை நினைக்க நினைக்க எம் நெஞ்சந் துடிக்கின்றது! நம் தமிழர்களின் அறியா மைக்கு வருந்தாமலிருக்க முடியவில்லை. என்றுதான் தமிழர் தம்முணர்ச்சியுடையராவரோ? "ஓ, கண்ணகியம்மையே! நீதான் தமிழர்க்கு நல்லறிவுகொளுத்தி நல்வழியிற் செலுத்தல்வேண்டும்" என்று வேண்டிக்கொள்வதன்றி எம்மால் வேறு என்னதான் செய்தலியலும்?

இனி, காரைக்காலம்மையார் என்னும் வீரப்பெண்மணி யைப்பாருங்கள்! இவர் தன் கொழுநன் தன்னை மனையாள் முறையில் விரும்பவில்லை என்பதைக் கண்டார். உடனே காதல னால் விரும்பப்படாத உடலைப் பிறமாந்தர் விரும்புமாறு வைத் திருப்பதஃற் பயனின்றெனக் கருதினர். அதனால் சிவபெருமானை

வேண்டித்தனது அழகிய புலாலுருவை விழித்துப் பார்ப்பவர் வெருளத்தக்க பேயுருவைப் பெற்றாள். இச்செயல் கற்புடைமை என்னும் வீரச்செயலன்றோ? நமது திருவள்ளுவர் கற்புடைமையைக் கூறும்போது "மகளிரைச் சிறைசெய்து காக்கும் காவல் என்ன பயனைத்தரும்? அவள் தனது கற்பால் தன்னைத்தானே காத்துக்கொள்ளுதலே முதன்மையான கற்புடைமையாகும்" என்ற பொருளடங்க

சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை (குறள். 57)

என்று கூறியிருக்கின்றார். தமது கற்பைத் தாமே காத்துக் கொள்ளுதல் தான் தமிழர் கற்பாகும். அங்ஙனம் காத்துக் கொள்ளுதல் வீரமன்றோ? அத்தகைய வீரந்தான் தமிழ்த்தாய்மார் களிடம் குடி கொண்டிருந்தது.

இனி, "மானின் நேர்விழி மாதராய்! வழுதிக்கு மாபெருந் தேவி!" என்று திருஞான சம்பந்தரால் விளிக்கும் பேறுபெற்ற மங்கையர்க் கரசியாரின் வீரச்செயலையும் நினைவு கூருங்கள்! மங்கையர்க்கரசியார், தம் நாட்டில் உள்ளார் பலரும், தமது மதுரை நகரில் உள்ளார் அனைவரும், தமது கொழுநனும், சமணர்களின் பாற்பட்டு அம்மதத்தை மேற்கொண்டனராக, தாமும் அமைச்சராகிய குலச்சிறையாரு மட்டில் சைவமதத்தில் இருந்து கொண்டு, சைனர்களின் அச்சுறுத்தலுக்குச் சற்றும் பின்னிடாமல், காழி வள்ளலை ஆலவாய்க்கழைத்துச் சமணர்களின் கொட்டத்தை யடக்கிச் சைவமதத்தை விளங்கச் செய்தார். அழிந்து வீழ்ந்தது என்று விளம்பத்தக்க நிலையிலிருந்த சைவசமயத்தை நின்று விளங்க நிலை நிறுத்திய இம்மங்கையர்க் கரசியார் வீரமும் தமிழர் வீரமேயாகும். இவ்வீரத்தாயை மங்கையர்க்கரசியார் என்று கூறாமல் வேறு எப்பெயரிட்டழைத்தாலும் ஏற்புடைத் தாகா தன்றோ?

இனி, திலகவதியாரென்னும் மற்றொரு தமிழ்த்தாயின் திறலைச் சிறிது எண்ணுவோம். இவ்வம்மையார், தமது தம்பியாராகிய மருணீக்கியார் சமணமதம் நன்றெனக்கண்டு அதிற்

புகுந்து தருமசேனர் என்னும் உயரிய பட்டம் பெற்று வாழ்ந் திருத்தலைக்கண்டு, அவரை எவ்வாறாயினும் மீண்டும் சைவமதத் தில் சேர்க்க வேண்டுமென எண்ணினர். இறுதியிற் சிவபிரான் வேண்டுகோளால் தருமசேனருக்குச் சூலைநோ யுண்டாகுமாறு செய்து மீண்டும் சைவமதத்திற் சேர்த்துத் திருநாவுக்கரசராக்கி னர். இத்தகைய செயற்கருஞ் செயல் செய்த இம்மங்கையார் வீரத்தாயன்றோ ?

* * * * *

இனிப், பண்டைத்தமிழர்கள், நமது நாட்டில் போர்க்களத்தில் அஞ்சாது நின்று பொருதுமடிந்த வீரர்களுக்கும், பத்தினிப் பெண்களாகிய வீரர்களுக்கும், சான்றோராகிய வீரர்களுக்கும், உருவச்சிலை செய்து கோயிலில்வைத்து விழாநடத்தி கடவுளாகக் கொண்டு வணங்கிவந்தனர் என்பதையும், அத்தகைய வீரர்கள் தான் இக்காலத்தில் நம்மால் வணங்கப்பெறும் சிறு தெய்வங்கள் என்பதையும் கூறுகின்றேன்.

ஆசிரியர் தொல்காப்பியனர் போரிற்சிறந்த வீரன் இறந்த பின் அவனுக்குக் கல்நடுதல்பற்றி ஆறுசெய்திகள் கூறுகின்றார். அவை கல்லிருக்கும் இடத்தைக்கண்டு உருவமைப்பதற்குரிய கல்லைத் தேர்ந்துகொள்ளுதல், அவ்வாறு தேர்ந்தெடுத்த கல்லை உருவாக்கிக் குறிப்பிட்ட வீரனது பெயரையும் பெருமையையும் வரைவதற்கு நன்னாள் கொள்ளுதல், நன்னாள்கொண்டபின் கல்லை நறுநீராட்டித் தூயதாக்குதல், தூய தாக்கியபின் அக் கல்லைக் குறிப்பிட்டவிடத்தில் நாட்டுதல், நட்டபின்னர் அக் கல்லையே தெய்வமாகக்கொண்டு அதற்குப் பெருஞ்சிறப்புடன் விழாவெடுத்தல், விழாவெடுத்து யாவரும்கூடி வாழ்த்துதல், என்பனவாம். இவ்வறுவகைச் செய்திகளையும் தொல்காப்பியம் புறத்திணையியலில் "வெறியறி சிறப்பின்" (5) என்று தொடங் கும் நூற்பாவில்

காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்
சீர்த்த சிறப்பிற் பெருங்கடை வாழ்த்தல்

என்ற அடிகளால் அறியலாம். இதற்கு உரையெழுதிய நச்சினார்க் கினியர் இவ்வொன்றையும் இரண்டிரண்டாகப் பகுத்து எழுது

கின்றார். பின்னூலாகிய "புறப்பொருள் வெண்பாமாலை"யிற் கல் நடும் இச்செய்தி விரிவாகக் கூறப்படுகின்றது. அதனையுங் காண்போம்.

கற்காண்டல், கற்கோள்நிலை, கல்நீர்ப்படுத்தல், கல்நடுதல், கல்முறைபழிச்சல், இற்கொண்டுபுகுதல் என்பன ஆறும் புறப்பொருள் வெண்பாமாலையிற் கூறிய துறைகள் ஆகும். அவற்றின் விரிவு வருமாறு.

கற்காண்டல்.

ஆனாவென்றி அமரில் வீழ்ந்தோர்க்குக்
கானநீளிடைக் கற்காண்டன்று.

(இதன் பொருள்). கெடாத வெற்றியை யுடைய போரில் இறந்தோனுக்காக நீண்ட காட்டிடைச் சென்று அவனுருவஞ் செய்வதற்குத் தக்க கல்லைக் கண்டது.

கற்கோள்நிலை.

மண்மருளத் துடிகறங்க
விண்மேயாற்குக் கற்கொண்டன்று.

(இதன் பொருள்). உலகம் மயங்குமாறு பறையொலிப்ப, விண்ணுலகடைந்த வீரனுக்காக கண்ட கல்லைக் கைக்கொள்ளுதல்.

கல்நீர்ப்படுதல்.

வண்டுசூழ் தாமம் புடையே யலம்வரக்
கண்டு கொண்ட கல்நீர்ப் படுத்தன்று.

(இதன் பொருள்). வண்டுகள் மொய்க்கும் மாலை பக்கத்திலே அசைந்து வருமாறு சென்று கண்டு, கைக்கொண்ட கல்லை நீரிலே யிடுதல்.

கல்நடுதல்.

அவன்பெயர் கன்மிசைப்பொறித்துக்
கவின்பெறக் கல்நாட்டின்று.

(இதன் பொருள்). இறந்த வீரன் பெயரைக் கல்லின் மீது எழுதி அழகு பொருந்த அக்கல்லை நடுதல்.

கல்முறைபழிச்சல்.

நிழலவிழ் எழின்மணிப்பூண்
கழல்வெய்யோன் கல்வாழ்த்தின் று.

(இ-தன் பொருள்). நிழல்விடும் அழகிய மணிப்பூணினையும், வீரக்கழலையும் அணிந்த போரில் விருப்பமுடையான்றன் கல்லைப் புகழ்தல்.

* இற்கொண்டு புகுதல்.

வேத்தமருள் விளிந்தோன் கல்லென
எத்தினர் துவன்றி இற்கொண்டு புக்கன்று.

(இ-தன் பொருள்) அரசருக்காகச் சென்று போரில் இறந்தவனுடைய கல்லென்று சொல்லி, யாவருங்கூடி வாழ்த்திக் கோயிலமைத்துப் போதல்.

மேற்கூறியவாற்றால் வீரர்களுக்கு உருவச்சிலை செய்து நட்டு அவர்களைக் கடவுளாக வழிபடும் வழக்கம் தமிழர்க்குண்டு என்பதை யறியலாம். பெண்களுக்கும் கல்நடும் வழக்கம் உண்டென்பதைச் சேரன் செங்குட்டுவனும், இலங்கைக் கயவாகு மன்னனும், கண்ணகிக்குக் கல்நட்டுப் பத்தினித் தெய்வமாகக்கொண்டு வணங்கியதனுலறியலாம். புலவர்களாகிய வீரர்களுக்கும் கோயிலமைத்து வழிபாடு செய்யும் வழக்கம் உண்டென்பதை, மதுரையில் சங்கப்புலவர்க்குக் கோயிலிருப்பதனாலும், நக்கீரர்க்குத் தனிக்கோயிலிருப்பதனாலும், மயிலாப்பூரில் திருவள்ளுவருக்குக் கோயிலிருப்பதனாலும், நாயன்மார்கள் ஆழ்வார்கள் ஆகிய புலவர்களுக்கு எங்கும் கோயில்கள் காணப்படுவதனாலும் அறியலாம்.

(தொடரும்.)

---

* புறப்பொருள் வெண்பா மாலையில், வீரன் புகழைக் கல்லிலெழுதும் செய்தியும், கல்நடுஞ் செய்தியும் ஒரே துறையாகக் கூறப்படுகின்றன. தொல்காப்பியத்தில் கல்நடுதல் ஒரு துறையாகவும், அவன் புகழ் பொறித்தல் மற்றொரு துறையாகவும் வேறுவேறு கூறப்படுகின்றன. 'இற்கொண்டு புகுதல்' என்னும் துறை தொல்காப்பியத்திற் காணப்படவில்லை. இதனால் தொல்காப்பியர் காலத்தில் கோயில் கட்டும் வழக்கம் இல்லை என்பதை துணித்தறியலாம்.

உ

முதலாம் குலோத்துங்கசோழன்.

திருவாளர்: T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்,
தமிழாசிரியர், கும்பகோணம்.

முதல் அதிகாரம்.

சோழரும், சளுக்கியரும்.

நம் தமிழகம், சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டி மண்டலம் என்னும் மூன்று பெரும்பகுதிகளை யுடையதாக முற்காலத்தில் விளங்கிற்று. இவற்றுட், சோழமண்டலம் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு முதலான ஜில்லாக்கள் அடங்கிய ஒருநாடாகும். இது குணபுலம் எனவும் வழங்கப்பெறும். இதனைப் பண்டைக்காலமுதல் ஆட்சிபுரிந்து வந்தோர் தமிழ் வேந்தர்களுள் ஒருவராகிய சோழமன்னர் ஆவர். இவர்கள் வீற்றிருந்து செங்கோல் செலுத்திய தலைநகரங்கள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் என்பன. பிற்காலத்துச் சோழமன்னர் களது ஆட்சிக் காலங்களில் தஞ்சாவூரும், கங்கைகொண்டசோழபுரமும் தலைநகரங்களாகக் கொள்ளப்பட்டன. சோழர்களுக்குரிய அடையாள மாலை ஆத்தியாகும்; கொடியும் இலச்சினையும் புலியாம். வடவேந்தரை யொப்ப இன்னோர் சூரிய குலத்தின ரென்றும் காசிப கோத்திரத்தினரென்றும் தமிழ்நூல்கள் கூறுகின்றன.

பரசிராமர் அரசகுலத்தினரை அழித்தொழிப்பதையே தம் பெருநோன்பாகக் கொண்டு இப்பரதகண்டம் முழுவதும் சுற்றி வந்த நாட்களில், காவிரிப்பூம்பட்டினத்தில் காந்தமன் என்ற சோழமன்னன் ஒருவன் அரசாண்டு வந்தான். அவன் பரசிராமரது வருகையைக் கேட்டுப் பெரிதும் அஞ்சி, அகத்திய முனிவர்பாற் சென்று, தான் உய்யும்வழி யொன்றுணர்த்துமாறு அவரைப் பணிவுடன் வேண்டினன். அப்பெரியார் அவனது காதற்

கணிகையின் புதல்வனாகிய ககந்தனுக்கு முடிசூட்டிவிட்டு அவனைக் காந்துறையுமாறு அறிவுறுத்தினர். (மணிமேகலை. 22-ஆம் காதை) அவனும் அங்ஙனமே காந்துறைதலும், சோணாடு சென்ற பரசிராமர் அரியணையில் வீற்றிருந்த அரசாளுவோன் அரசகுலத்தினன் அல்லன் என்பதை யறிந்து கணிகையின் புதல்வனாகிய அவனைக்கொல்லுதல் தம் நோன்பிற்கேற்றதன்று எனக் கருதி அந் நாட்டைவிட்டகன்றனர். பரசிராமர்க்குப் பயந்து காந்துறைந்த இக்காந்தமன் என்பவனே காவிரியாற்றைக் கொணர்ந்த பெருந்தகையாளன் என்று பழைய தமிழ்நூலாகிய மணிமேகலை கூறுகின்றது. பிற்றைநாளில், அப்பரசிராமர் இராமபிரான் திருமணஞ்செய்துகொண்டு மிதிலைமாநகரினின்று திரும்புங்கால் அவரை எதிர்த்துத் தோல்வியுற்று அரசகுலத்தினரை வேருடன் களைதற்கெண்ணிய தமது எண்ணத்தை முற்றிலும் ஒழித்து மலைச்சாரல்சென்று தவம்புரிந்தனர் என்பது இராமாயணத்தால் அறியக்கிடக்கின்றது.

இனி, இராமாயணகாலத்தில் சோழமன்னருள் ஒருவன் மலயமலையிலிருந்த அகத்தியமாமுனிவரது ஆணையால் மக்களது இன்னலைப் போக்குமாறு, வானத்தின்கண் அசைந்துகொண்டிருந்த மூன்றுமதில்களை அழித்தனன்; அக்காரணம்பற்றியே சிலப்பதிகாரமும் (வாழ்த்துக்காதை), புறநானூறும் (புறம். 39) அவனைத் 'தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்' என்று புகழ்ந்துகூறுகின்றன.

பாரதப்போர் நிகழ்ந்த நாட்களில் ஒரு சோழமன்னன் போர் முடியும்வரையில் தருமன் படைக்கு உணவளித்து உதவி புரிந்தனன் என்று கலிங்கத்துப்பரணி (181) யுரைக்கின்றது.

ஆகவே, இராமாயண பாரதகாலங்களிலும், அவற்றிற்கு முந்திய நாட்களிலும் சோழகுலத்தினர் மிகச் சிறப்புற்று விளங்கினர் என்பது இனிதுணரப்படுகின்றது.

கி. மு. மூன்றும் நூற்றாண்டில், மகதநாட்டில் செங்கோற் செலுத்திய அசோகனது ஆணையை யுணர்த்துங் கல்வெட்டுக்களிலும் சோழரைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. கி. பி. முதல்

நூற்றாண்டில், மேனாட்டினின்றும் தமிழ்நாடு போந்த யவன ஆசிரியனாகிய தாலமி என்பானது வரலாற்றுக்குறிப்பிலும் மேனாட்டு வரலாற்று ஆசிரியன் ஒருவனால், அப் பழையகாலத்தில் எழுதப் பெற்ற 'பெரிப்ளஸ்' என்ற நூலிலும் சோழரைப்பற்றிய உயரிய செய்திகள் காணப்படுகின்றன. எனவே, கிரேக்கரும் உரோமரும் மிக உயர்நிலையிலிருந்த நாட்களில் நம் சோழரும் அன்னாருடன் வாணிபத்தொடர்புடையராய்ப் பெருமையோடு வாழ்ந்து வந்தனர் என்பது பெறப்படுகின்றது.

இவற்றையெல்லாம் ஆராய்ந்து உண்மைகாணுமிடத்து, சோழ குலத்தினர் நம்மனோரால் ஆராய்ந்து அளந்து காணமுடியாத அத்துணைப் பழங்காலமுதல் நம் தமிழ்நாட்டின் கீழ்ப்பகுதியாகிய சோழவளநாட்டில் வீற்றிருந்து, அதனைச்சிறப்புடன் ஆண்டு வந்த அரசகுலத்தினர் ஆவர் என்பது நன்குவிளங்குதல் காண்க.

இனிச் சளுக்கியர் என்பார், வடநாட்டினின்றும் போந்து, பம்பாய் மாகாணத்தின் தென்பகுதியிலுள்ள இரட்டப்பாடி நாட்டை, வாதாபிபுரம், மாணியகேடம், கலியாணபுரம் முதலான நகரங்களில் வீற்றிருந்து அரசுபுரிந்துவந்த ஓர் அரசகுலத்தினர் ஆவர். சீனதேசத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த வழிப்போக்கனாகிய 'யுவான் ச்வங்' என்ற ஆசிரியன், சளுக்கியரது போர்வன்மையைத் தன் நூலுட் புகழ்ந்திருத்தலோடு வடவேந்தனாகிய 'அர்ஷவர்த்தனனை'த் தென்னாட்டிற்குச் செல்லாதவாறு போர்புரிந்து விலக்கிய இரண்டாம் புலிகேசி என்பவன் இச்சளுக்கிய குலத்தில் தோன்றிய மன்னன் என்று பாராட்டிக்கூறியுள்ளான்.

இரண்டாம் புலிகேசியின் தம்பியாகிய 'குப்ஜவிஷ்ணு வர்த்தனன்' என்பான் கிருஷ்ணை கோதாவரி என்ற இருபேராறுகளுக்கும் இடையிலுள்ள வேங்கிநாட்டின்மேற் படையெடுத்துச் சென்று அதனைக் கைப்பற்றிக் கீழைச்சளுக்கிய நாடொன்றை அமைத்தான். இது நிகழ்ந்ததுமுதல், சளுக்கியர் கீழைச்சளுக்கியர் மேலைச்சளுக்கியர் என்ற இரு கிளையினராயினர்.

இன்னோர் சந்திர்குலத்தினர் என்றும் மானவியகோத்திரத்தார் என்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவர்களுக்குரிய கொடியும் இலச்சினையும் பன்றி என்பர்.

பத்து, பதினொன்றாம் நூற்றாண்டுகளிற் சோழருக்கும், மேலைச் சளுக்கியருக்கும் அடிக்கடி பெரும்போர்கள் நடைபெற்றன; ஆனால், கீழைச்சளுக்கியர் சோழமன்னரது பெண்களை மணஞ்செய்துகொண்டு அன்னோர்க்கு நெருங்கிய உறவினராய் நட்புற்று வாழ்ந்துவந்தனர். இவ்வுண்மையை அடுத்த அதிகாரத்தில் நன்கு விளக்குவாம்.

இரண்டாம் அதிகாரம்.

குலோத்துங்க சோழனது முன்னோரும் பிறப்பும்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னர் தென்மதுரையில் நடைபெற்ற தமிழ்ச்சங்கத் திறுதிக்காலத்தில் நிலவிய சில சோழமன்னரது பெயர்கள் அச்சங்கத்துச் சான்றோர் இயற்றியுள்ள பாடல்களாலும் நூல்களாலும் தெரிகின்றன. அவர்களுட் சோழன் கரிகாலன், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருநற்கிள்ளி, செங்கணான் முதலினோர் சிறந்தவராவர். இன்னோருட் சோழன் கரிகாலன் என்பான் காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறந்த துறைமுகப்பட்டினமாகக்கட்டி, அதனை வாணிபத்திற்கேற்ற வளநகராக்கியவன்; காவிரியாற்றின் இருமருங்கும் கரையெடுப்பித்துச் (கலிங்கத்துப் பரணி. 184) சோணாட்டை வளம்படுத்திச் 'சோறுடைத்து' என்று அறிஞர்கள் புகழுமாறு செய்தவன். இதுபற்றியே இவ்வேந்தர்பெருமானைக் கரிகாற் பெருவளத்தான் என்றும், திருமாவளவன் என்றும் மக்கள், பாராட்டிக் கூறுவாராயினர். பத்துப்பாட்டிலுள்ள பொருநராற்றுப்படையும், பட்டினப்பாலையும் இம்மன்னன்மீது பாடப்பெற்ற நூல்களேயாம். இவற்றுட் பட்டினப்பாலையை இயற்றிய ஆசிரியர் கடியலூர் உருத்திரங்

கண்ணனுர்க்கு இவ்வேந்தன் பதினறு நூறாயிரம் பொன் பரிசில் அளித்து அந்நூலைக் கொண்டான் என்று கலிங்கத்துப்பரணியின் ஆசிரியராகிய சயங்கொண்டார் கூறியுள்ளார் (பரணி. 185). இதனல் இவன் நல்லிசைப்புலவர்பால் கொண்டிருந்த பெருமதிப்பு நன்குவிளங்கும். இம்மன்னன் இமயமுதல் குமரிவரையில் தன் வெற்றியையும், புகழையும் பரப்பிய பெருவீரன் என்பது ஈண்டு அறியத்தக்க தொன்றும்.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தமிழ்ப்புலமையிற் சிறந்தவன்; (புறம். 173) புலவர்க்கும், இரவலர்க்கும் வேண்டியாங்களித்த பெருங்கொடைவள்ளல்; தமிழகத்தில் தன் வெற்றியைப் பரப்பி வீரனய் விளங்கியவன்.

பெருநற்கிள்ளி என்பான் உறையூரிலிருந்து சோழவள நாட்டை ஆட்சிபுரிந்து கொண்டிருக்கும் நாளிற், புகார் நகரத்து வணிகனகிய கோவலனது மனைவி கண்ணகிக்கு உறையூரின்கண் பத்தினிக்கோட்டம் எடுப்பித்து விழாநிகழ்த்தினன். (சிலப்பதிகாரம்-உரைபெறுகட்டுரை).

பொய்கையார் என்ற நல்லிசைப்புலவரால் பாடப்பெற்ற களவழி நாற்பது என்னும் நூல்கொண்டவன் சோழன் செங்கணன் ஆவன். இங்ஙனம் பெருமையுடன் வாழ்ந்துவந்த சோழரது நிலையும் கி. பி. நான்காம் நூற்றாண்டில் தளர்வுற்றது. அக்காலத்தில் போர்விருப்பம் வாய்ந்த பல்லவர் தமிழ்நாட்டிற் புகுந்து தொண்டை மண்டலத்தையும் சோழ மண்டலத்தையும் கைப்பற்றிக் காஞ்சிமாநகரையும் மாமல்லபுரத்தையும் தலைநகரங்களாகக் கொண்டு ஆட்சிபுரியத் தொடங்கினர். இவர்களது ஆளுகையும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதிவரையில் சோழ மண்டலத்தில் நிலைபெற்றிருந்தது. பல்லவரது ஆட்சிக்காலத்தில் சோழரின் வழியினர் குறுநில மன்னராகிய அன்னேர்க்குத்திறை செலுத்திவந்தனர். கி. பி. 849-ல் விசயாலயன் என்ற சோழ மன்னன் ஒருவன் பல்லவர்களோடு போர்புரிந்து சோழமண்டலத்தின் ஒரு பகுதியைப்பற்றிக்கொண்டு தஞ்சாவூரில் வீற்றிருந்து முடிமன்னனக அதனை அரசாளத் தொடங்கினன். இவனையே

தொண்ணூற்ாறு புண்கள் மார்பிலே கொண்ட வீரன் என்று தமிழ்நூற்கள் புகழ்ந்து கூறுகின்றன என்பர். இவன் காலத்தே தான் தஞ்சாவூர் சோழமண்டலத்திற்குத் தலைமை நகரமாயிற்று. இவனது புதல்வன் முதலாம் ஆதித்த சோழன் எனப்படுவான். இவன் தன் நண்பனாகிய இரண்டாம் வரகுண பாண்டியனைத் துணையாகக் கொண்டு பல்லவர்களோடு பல விடங்களில் பெரும் போர்கள் புரிந்தனன். இறுதியில் கி. பி. 880-ஆம் ஆண்டிற் கணித்தாகத் திருப்புறம்பியத்தில் நிகழ்ந்த போரில் பல்லவர் முற்றிலும் தோல்வியுறவே ஆதித்தன் வெற்றி யெய்தினன். இப்போரின் பயனாகச் சோழமண்டலம் முழுவதும் ஆதித்தனுக்கு உரித்தானதோடு தொண்டைமண்டலமும் அவனது ஆட்சிக்குள்ளாயிற்று. அன்றியும் தொண்டைமண்டலம் ஆதித்தனால் வென்று கொள்ளப்பட்டமையின் சயங்கொண்ட சோழமண்டலம் என்னும் புதியதோர் பெயரையும் எய்திற்று. பல்லவரும் குறுநிலமன்னராய்ச் சோழமன்னர்கட்குத் திறை செலுத்தும் நிலையை அடைந்தனர். ஆதித்தனும் 27-ஆண்டுகள் அரசாண்டு கி. பி. 907-ல் இறந்தான்.

இவ்வாதித்தனது புதல்வன் முதலாம் பராந்தக சோழன் என்பான். இவன் காலத்தில் சோழரது ஆட்சி உயர்நிலையை யடைந்தது. இவன் பாண்டிய நாட்டையும் ஈழ நாட்டையும் வென்று தன்னடிப்படுத்தியவன்; இவனை 'மதுரையும் ஈழமுங் கொண்ட கோப்பரகேசரிவர்மன்' என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இவன் தில்லையம்பலத்தில் பொன்வேய்ந்து அதனை உண்மையில் பொன்னம்பலமாக்கிய செய்தியொன்றே இவனது அளப்பரிய சிவபத்தியை நன்கு விளக்குகின்றது. இவன் கி. பி. 907 முதல் கி. பி. 948 வரை அரசாண்டனன்.

இவ்வேந்தனுக்குப் பின்னர் இவனது புதல்வராகிய கண்டராதித்த சோழர் கி. பி. 955 வரை ஆட்சிபுரிந்தனர். இவரது ஆளுகையில் குறிக்கத்தக்க நிகழ்ச்சிகள் இல்லையாயினும் இவரது சிவபத்தியின் மாண்பும், செந்தமிழ்ப் புலமையும் பெரிதும்போற்றற் குரியனவாம். சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்றாகிய

ஒன்பதாந் திருமுறையில் தில்லைச் சிற்றம்பலத் தெம்பெருமான் மீது இவர் பாடியருளிய திருப்பதிகம் ஒன்றுளது. எனவே ஒன்பதாந்திருமுறையினை யருளிச்செய்த நாயன்மார் ஒன்பதின் மருள் இவ்வரசர்பெருமானும் ஒருவர்ஆவர். கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள திருமழபாடி என்னுந்தலத்திற்கு மேற்கே ஒரு மைல்தூரத்திலுள்ள கண்டராதித்தச் சதுர்வேதிமங்கலம் என்ற நகரம் இவர் அமைத்ததேயாகும். இவரது மனைவியாராகிய செம்பியன் மாதேவியாரது சிவபத்தியும் அளவிட்டுரைக்குந்தரத்த தன்று. இவ்வம்மையார் திருப்பணிபுரிந்து நிபந்தங்கள் அமைத்துள்ள சிவன்கோயில் பலவுள்ளன. கண்டராதித்த சோழரது படிமம் இவரது மனைவியாரால் கட்டுவிக்கப்பெற்ற கோனேரிராசபுரம் சிவன்கோயிலில் இன்றும் உளது.

இவ்வரசருக்குப் பின்னர் இவரது தம்பியாகிய அரிஞ்சயன் என்பான் சில மாதங்கள் ஆண்டனன். பிறகு இவனது புதல்வனாகிய இரண்டாம்பராந்தகன் கி. பி. 955 முதல் கி. பி. 970 வரை அரசு செலுத்தினான். இவனைச் சுந்தரசோழன் என்றும்வழங்குவர். அன்றியும் இவனைப் 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்' என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவனது மனைவி வானவன் மாதேவி என்பாள். இவ்விருவருடைய படிமங்களும் தஞ்சாவூரிலுள்ள இராசராசேச்சுரத்தில் இவர்களது மகளாகிய குந்தவையால் எழுந்தருளுவிக்கப்பெற்றுப் பூசனைக்கு நிபந்தங்களும் விடப்பட்டுள்ளன.

பின்னர், கண்டராதித்தரது திருமகனாகிய உத்தமசோழன் கி. பி. 970ல் பட்டத்திற்கு வந்தான். இவனுக்கு மதுராந்தகன் என்றபெயரும் உண்டு. இவனது ஆட்சிக்காலத்தில் இரண்டாம் பராந்தகசோழனது மகனாகிய ஆதித்த கரிகாலன் என்பான் சயங்கொண்ட சோழமண்டலத்திற்கு அரசப்பிரதிநிதியாகி அதனை ஆண்டுவந்தான். அந்நாளில் இவனைப் பார்த்திவேந்திரவர்மன் என்று வழங்கினரென்பது தெரிகிறது. வீரபாண்டியன் தலைகொண்ட கோப் பார்த்திவேந்திரவர்மன் என்று தொடங்கும் கல்வெட்டுக்கள் அப்பகுதிகளில் காணப்படுகின்றன. சில ஆண்டு

களில் இவன், சோழருக்குப் பகைவனாய்க் காலங்கருதிக்கொண்டிருந்த ஒரு பல்லவகுலத் தலைவனால் கொல்லப்பட்டான் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். கி. பி. 985ல் உத்தமசோழன் இறக்கவே, இரண்டாம் பராந்தகசோழனது இரண்டாவது மகனாகிய முதலாம் இராசராசசோழன் அரியணை ஏறினன்.

சோழமன்னருள் பல்வகையானும் பெருமையுற்றுப் பெருவீரனாய் விளங்கியவன் இவ்வேந்தனே என்று கூறுவது சிறிதும் புனைந்துரையாகாது. இவனது ஆளுகையில் சோழமண்டலம் மிக உயரிய நிலையை எய்திற்று. திருநாரையூரில் வாழ்ந்த ஆதிசைவராகிய நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியாரைக்கொண்டு சைவசமய குரவர்களது திருப்பதிகங்களைத் திருமுறைகளாகத் தொகுப்பித்தவன் இம் மன்னனேயாவன். இவனுக்கு அக் காலத்தில் இட்டுவழங்கிய சிவபாதசேகரன் என்ற பெயரொன்றே இவன் சைவசமயத்தில் எத்துணை ஈடுபாடுடையவனாயிருந்தனன் என்பதை நன்குவிளக்குகின்றது. ஆயினும் இவன் புறமதத்தினரை என்றும் துன்புறுத்தியவ னல்லன்; அன்னோர்க்கு மிக்க ஆதரவுகாட்டி யொழுகிவந்தனன் என்பதற்கு எத்துணையோ ஆதாரங்கள் உள.

சோழமன்னர்களது பெருமைக்கும், புகழுக்கும், அக்காலத்திய சிற்ப நுட்பத்திற்கும் ஓர் அறிகுறியாய் இப்போது தஞ்சை மாநகரின் கண் விளங்குகின்ற 'இராசராசேச்சுரம்' என்ற பெரிய கோயிலை எடுப்பித்தவன் இம்மன்னர் பெருமானே யாவன் என்பது ஈண்டு அறியத்தக்கது. இவ்வேந்தன், வேங்கி, கங்கப்பாடி, நுளம்பப்பாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழம், இரட்டப்பாடி முதலான நாடுகளை வென்று தன்னடிப்படுத்திப் புகழெய்தியவன். இவற்றுள் வேங்கி என்பது கிருஷ்ணை கோதாவரி என்ற இருபேராறுகளுக்கு மிடையில் கீழ்க்கடலைச் சார்ந்துள்ள தொருநாடு என்பதை முன்னரே கூறியுள்ளோம். இது கீழைச்சளுக்கியரது ஆட்சிக்குட்பட்டது. கி. பி. 972 முதல் 989 வரை இந்நாடு உண்ணாட்டுக் கலகங்களால் அல்லலுற்றிருந்தது. முதலாம் இராசராசசோழன் அச்சமயமே அந்நாட்டைக் கைப்

பற்றற்குத் தக்க தெவக் கருதிப் பெரும் படையுடன் தன் மகனாகிய முதலாம் இராசேந்திரசோழனை அவ்வேங்கிநாட்டிற்கு அனுப்பினான். அவன் அந்நாட்டை வென்றதோடு அமையாமல் மேலைச்சளுக்கிய மன்னனாகிய விமலாதித்தனையும் சிறைபிடித்துக் கொண்டு தஞ்சைக்குத் திரும்பினான். விமலாதித்தனும் தஞ்சை மாநகரில் பல ஆண்டுகள் தங்கியிருந்தனன்.

பிறகு, முதலாம் இராசராசசோழன் தன் மகள் குந்தவையை அவனுக்கு மணஞ்செய்து கொடுத்ததோடு வேங்கி நாட்டை யாட்சிபுரியும் உரிமையும் அளித்து அந்நாட்டிற்கு அவனைத் திரும்ப அனுப்பினான். விமலாதித்தனும் அந்நாட்டைக் கி. பி. 1015 முதல் 1022 வரை அரசாண்டான். அவனுக்கு இராசராசநரேந்திரன், விசயாதித்தன் என்ற இரு மக்கள் இருந்தனர். அவர்களுள் இராசராசநரேந்திரன் என்பவனே விமலாதித்தன் இறந்த பின்னர்க் கி. பி. 1022-ல் முடி சூட்டப்பெற்றான். முதலாம் இராசராசசோழனது மகனாகிய முதலாம் இராசேந்திர சோழன் தன் மகள் அம்மங்கை தேவியைத் தன் உடன் பிறந்தாளது மகனும் வேங்கிநாட்டு வேந்தனுமாகிய இராசராச நரேந்திரனுக்கு மணம்புரிவித்தனன். மணமக்கள் இருவரும் வேங்கிநாட்டில் வாழ்ந்து வந்தனர். அந்நாளில் பட்டத்தரசியாகிய அம்மங்கைதேவி கருப்பமுற்றுத் தன் பிறந்தகமாகிய கங்கைகொண்ட சோழபுரஞ்சென்று அங்குக் கி. பி. 1043-ஆம் ஆண்டில் ஒரு நன்னாளில் ஒரு தவப்புதல்வனைப் பெற்றாள். திருமகன் பிறந்த நாளிலே பல நன்னிமித்தங்கள் காணப்பட்டன. அவற்றைக் கண்ட நகரமாந்தர் எல்லோரும் இறும்பூதுற்று, முன்னாளில் இலங்கையை யழித்துப் பின்னாளில் பாரதப்போர் முடித்த திருமாலே இப்புவியின்கண் மறம் நீங்க அறம் வளருமாறு இந்நாளில் அம்மங்கைதேவியின் ஆலிலைபோன்ற திருவயிற்றில் தோன்றியுள்ளார் என்று கூறிப் பெருமகிழ்வுற்றனர். முதலாம் இராசேந்திர சோழனது பட்டத்தரசியும் இவற்றையெல்லாம் கண்டு களிப்பெய்தித் தன் காதற்பேரனைக் கைகளில் ஏந்திப் பாராட்டியபோது ஓர் ஆண்டிற்கு முன் காலஞ்சென்ற தன் நாயகனது அடையாளங்கள் பல அக்குழந்தையின்பா லிருத்தல்கண்டு 'இவன்

எமக்கு அருமகனாகி எங்கள் இரவி குலத்தைத் தளராது தாங்குவானாக!' என்றுரைத்து அம்மகவிற்கு 'இராசேந்திரசோழன்'* என்று பெயரிட்டாள். இவ்வரசிளங்குமரனும் அங்கேயே வளர்ந்து வந்தான். இராசேந்திரனும், இளமையில் கல்விகற்றுப் பலகலைகளிலும் தேர்ச்சியுற்று அறிஞர் யாவரும் 'கற்றுத் துறைபோய நற்றவக்குரிசில்' என்று புகழ்ந்து பேசுமாறு கல்வியில் உயர்நிலையை யடைந்தான். பிறகு இவ்வரசிளங்குமரன் உலகங்காக்கும் கடமை பூண்ட தன் குலத்திற்குரிய படைக்கலப் பயிற்சியும் பெற்று, யானை ஏற்றம் குதிரை ஏற்றங்களும் பயின்று, தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்ந்தனன். இவனது அம்மான்மார்களாகிய இராசாதிராசசோழன், விசயராசேந்திர சோழன், வீரராசேந்திரசோழன் முதலானோர் இவனிடத்து மிக்க அன்புடையவர்களாக நடந்துவந்தனர். இவனது ஆற்றலை யுணர்ந்த சான்றோர் தந்தையின் சந்திர குலத்தையும் தாயின் சூரிய குலத்தையும் ஒருங்கே பெருமையுறச் செய்து, அவற்றைப் புகழுக்கு நிலைக்களமாக்க வந்த உபயகுலோத்தமன் என்றே இவனைப் பெரிதும் பாராட்டிப் பேசுவாராயினர்.

மூன்றாம் அதிகாரம்.

வேங்கிநாட்டில் குலோத்துங்கன் முடிசூடுதல்.

நம் இராஜேந்திரன் பலகலைகளிலும் வல்லவனாய்ப் பல்லோரும் புகழுமாறு கங்கைகொண்ட சோழபுரத்தில் வாழ்ந்துவரும் நாட்களில், வேங்கிநாட்டில் ஆட்சிபுரிந்துகொண்டிருந்த தன் தந்தையாகிய இராசராசநரேந்திரன் நோயுற்று வருந்திக்கொண்டிருக்கின்றனன் என்று ஒரு திருமுகம் வரப்பெற்றனன். இதனைக்

* இந்த இராசேந்திர சோழனே நம் வரலாற்றுத் தலைவனாகிய முதலாங் குலோத்துங்க சோழன். இப்பெயர் இவனுக்குக் கி. பி. 1075-க்குப் பின்னர் வழங்கத் தொடங்கிற்று.

கண்டதும் அவன் பெருங் கவலையுற்றுத் தன் மாமன்மாரிடம் விடைபெற்றுக்கொண்டு விரைவில் வேங்கிநாட்டை யடைந்தான்; அங்குப் பிணியுற்றுக்கிடந்த தன் தந்தையின் நிலைமையைக்கண்டு பெரிதும் மனமுடைந்து, அவனைவிட்டகலாது அணுக்கத் தொண்டனையமர்ந்து, வேண்டியன புரிந்துவந்தான். அந்நாளில் சளுக்கிய இராசராசனும், தனக்குக் கடவுள் அமைத்த வாழ்நாள் முடிவுற்றமையின் கி. பி. 1062-ஆம் ஆண்டில் வானுலகஞ்சென்றனன். தந்தையின் பெரும்பிரிவிற் காற்றாது வருந்திய இராசேந்திரனும் மகன் தந்தைக்கு ஆற்றவேண்டிய திக்கடன் நீர்க்கடன் முதலியவற்றை முடித்து, அம்மான்மாரும் ஆன்றோரும் ஆறுதல்கூற, ஒருவாறு அத்துன்பத்தினின்றுந் தேறி நீங்கினான். பின்னர், அமைச்சரும் சுற்றத்தினரும் அவனுக்கு முடிசூட்டு விழா நடத்தற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யத்தொடங்கினர்.

இஃது இங்ஙனமாக, கீழைச்சளுக்கியரது தாயத்தினரான மேலைச்சளுக்கிய மன்னர்களுள் ஆறும் விக்கிரமாதித்தன் என்ற ஓர் அரசன் இருந்தான். பெரிய போர்வீரன். அவனுக்கும் சோழருக்கும் அடிக்கடி பெரும் போர்கள் நிகழ்ந்துவந்தன. சோழர்கள் தெற்கேயுள்ள பல மன்னர்களை வென்று தம்மடிப் படுத்தித் தாம் முடிவேந்தர்களாய் மேன்மையுற்று விளங்கினர். அங்ஙனமே மேலைச்சளுக்கியரும் தக்கணத்தின் வடபாகத்தில் பெருமையுடன் நிலவினர். இதனால் போாண்மையும் பெருவீரமும் படைத்த இவ்விரு அரசகுலத்தினரும் ஒருவரையொருவர்வென்று கீழ்ப்படுத்தவேண்டுமென்ற எண்ணமும், முயற்சியும் உடையவாகவே இருந்தனர். இதற்கேற்ப, முதலாம் இராசராசசோழன் காலமுதல் சோழர்கள் கீழைச்சளுக்கிய மன்னர்களுக்குத் தம்பெண்களை மணஞ்செய்துகொடுத்து அன்னோரைத் தமக்கு நெருங்கிய உறவினராகச் செய்துகொண்டதோடு தம் ஆட்சிக்குட்பட்டிருக்குமாறும் செய்துவந்தனர். இதனால் கீழைச்சளுக்கியரது உதவி மேலைச்சளுக்கியருக்குக் கிடைக்காமற் போயிற்று. அன்றியும் சோழர்களது வலிமையும், பெருமையும் வளர்ச்சியுறலாயின. இதனை யுணர்ந்த மேலைச்சளுக்கிய மன்னனாகிய ஆறும் விக்கிரமாதித்தன் தன் தாயத்தினரான

கீழைச்சளுக்கியரைச் சோழர்களின்ன்று பிரித்துத் தன்பால் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்ற கருத்துடையவனுய்க் காலங் கருதிக் கொண்டிருந்தான். அதற்கேற்ப அவன், வேங்கியின் மன்னனுகிய இராசராசநரேந்திரன் இறந்ததையறிந்து, அதுவே தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கோடற்குத் தக்ககாலம் என்று கருதித் தன் தண்டநாயகனை சாமுண்டராயன் தலைமையில் ஒரு படையை வேங்கிநாட்டிற் கனுப்பினன்.

இச்செய்தியை யறிந்த வீரராசேந்திரசோழன் தன் முன்ஞேர்கள் காலமுதல் நெருங்கிய உறவினல் பிணிக்கப்பட்டிருந்த வேங்கி வேந்தரையும், தங்கள் ஆட்சிக்குள்பட்டிருந்த வேங்கி நாட்டையும் இழப்பது தன் ஆண்மைக்கும் வீரத்திற்கும் இழிவையே பயக்குமென்று துணிந்து ஒருபெரும் படையொடு அந் நாட்டை நோக்கிச்சென்றுன். அங்குக் கடும்போர் நடைபெற்றது. அப்போரில் மேலைச்சளுக்கியரது தண்ட நாயகனை சாமுண்டராயன் என்பான் கொல்லப்பட்டான். அவனது படைகள் எல்லாம் சிதறுண்டு நாற்றிசையிலும் ஓடியுய்ந்தன. வெற்றியெய்திய வீரராசேந்திரசோழன் தன் மருகனுகிய இராசேந்திரனுக்கு வேங்கிநாட்டில் ஒரு நன்னுளில் முடிசூட்டி அந்நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் மகிழ்வுறச் செய்தான். அக்கீழைச் சளுக்கிய நாட்டின் ஒழுகலாற்றின்படி, நமது இராசேந்திரன் ஏழாம் விஷ்ணு வர்த்தனன் என்னும் பெயரை முடிசூட்டுநாளில் எய்தித் 'தந்தையினும் சதமடங்கு தனயன்' என்ற ஆன்றேர் உரைக்கு இலக்காக அரசு செலுத்தி வந்தான். அக்காலங்களில் அவனுக்கு உசாத்துணையாயிருந்து அவனது பேரன்பிற் குரியவனுய் ஒழுகி வந்தவன் விசயாதித்தன் என்ற அவனது சிறிய தந்தையே யாவன். அவனது ஆட்சிக்காலத்தில் வேங்கிநாடு மிகச் செழிப்புற்றிருந்தது, குடிகளும் இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

நான்காம் அதிகாரம்.

குலோத்துங்கன் சோழமண்டலத்திற்கு இளவரசன் ஆதல்.

முதலாம் இராசராசசோழன் கி. பி. 1012ல் விண்ணுலகெய்திய பின்னர் அவனது புதல்வனாகிய முதலாம் இராஜேந்திர சோழன் அரியணை ஏறினான். இவனைக் கங்கைகொண்ட சோழனென்றும் வழங்குவர். இவனது ஆளுகையில் சோழமண்டலம் ஈடும் எடுப்புமற்ற நிலையையடைந்தது. மற்றைச் சோழமன்னர்களது ஆட்சிக்காலங்களில் இச்சோழமண்டலம் இத்தகையதொரு சிறப்பும், பெருமையும் எய்தவில்லையென்றே கூறலாம். இவ்வேந்தன், மண்ணைக்கடக்கம், ஈழம், இரட்டப்பாடி, கோசலைநாடு உத்தரலாடம், தக்கணலாடம், வங்காளம், கடாரம், பம்பாளம், இலாமுரிதேசம் முதலான நாடுகளையும், கங்கையாற்றைச் சார்த சில பகுதிகளையும் வென்று பெரும்புகழுடன் விளங்கினான். இவனைப் 'பூர்வதேசமுங் கங்கையுங் கடாரமுங்கொண்ட கோப்பர கேசரிவர்மன்' என்று கல்வெட்டுக்கள் கூறும். இவன் வடநாட்டு வேந்தர்களைவென்று கங்கைநீர் நிரம்பிய குடங்களை அவர்களது தலைகளில் ஏற்றிச் சோழமண்டலத்திற்குக் கொண்டுவரச்செய்து திருச்சிராப்பள்ளிச் சில்லாவில் பெரியதோர் ஏரி வெட்டுவித்து அக்கங்கைநீரை அதில் ஊற்றி அதற்குச் 'சோழகங்கம்' எனப் பெயரிட்டான். இந்த ஏரியின் பக்கத்துள்ளோர் இதனைப் பொன்னேரி என்று இப்போது வழங்குகின்றனர். இதனருகில் இவ்வேந்தன் தான் வடநாட்டில் அடைந்த வெற்றிக்கு அடையாளமாக ஒருநகர் அமைத்து அதற்குக் கங்கைகொண்ட சோழபுரம் என்று பெயரிட்டனன். இவன் காலமுதல் இப்புதிய நகரமே சோழர்களுக்குத் தலைநகராயிற்று. இங்கு இம்மன்னனால் எடுப்பிக்கப்பெற்ற கங்கைகொண்ட சோழேச்சரம் என்ற சிவன்கோயில் ஒன்றுளது. இஃது ஒன்பதாம் திருமுறையாசிரியருள் ஒருவராகிய கருவூர்த்தேவரால் பாடப்பெற்றது. பழையாறை என்று தற்காலத்து வழங்கும் முடிகொண்டசோழபுரத்தும் இவ்வேந்தனுக்குப் பெரியதோர் அரண்மனை இருந்தது. முடிகொண்டான் என்ற பெயருடன் தஞ்சாவூர் சில்லாவில்

இப்போதுள்ள முடிகொண்டசோழப் பேராற்றை வெட்டுவித்த வனும் இவ்வரசனே யாவன். இவ்வேந்தன் கி. பி. 1042 ஆம் ஆண்டில் இறந்தான்.

பிறகு இவனது மக்கள் தம்முள் முதல்வனாகிய முதலாம் இராசாதிராச சோழன் பட்டத்திற்கு வந்தான். இவன் தன் தந்தையைப்போன்ற பெருவீரன். இவன் மேலைச்சளுக்கியரோடு அடிக்கடி போர்புரிந்து இறுதியில் சளுக்கியமன்னனான ஆகவமல்லனோடுபுரிந்த கொப்பத்துப்போரில் கி. பி. 1053ல் உயிர்துறந்தான். பின்னர், இவனது தம்பியாகிய விசயராசேந்திரசோழன் பொருகளத்திலே முடிகவித்து, அப்போரை நடாத்தி வெற்றிபெற்றான். இவன் தன் தந்தையையும் தமையனையும்போலவே சிறப்புடன் அரசாண்டுவந்தான், இவனும் மேலைச்சளுக்கியரோடு தொடர்ந்து போர்செய்துவந்தான். இவனைக் 'கலியாணபுரமும் கொல்லாபுரமும் கொண்டருளி ஆனைமேல் துஞ்சியருளிய பெருமாள் விசயராசேந்திரதேவன்' என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. எனவே இவனும் சளுக்கியரோடு நிகழ்த்திய போரொன்றில் உயிரிழந்தனன்போலும்.

பின்னர், இவனது இளவலாகிய மும்முடிச்சோழன் என்பான் இராசமகேந்திரன் என்ற பெயருடன் பட்டம் பெற்று அரசாளத் தொடங்கினான். இவன் சோழமண்டலத்தின் ஆட்சியை அடைவதற்கு முன்னர்த் தன் தந்தையாகிய கங்கைகொண்ட சோழனது ஆணையின்படி சேரமண்டலத்திற்கும் பாண்டிமண்டலத்திற்கும் அரசப் பிரதிநிதியாயிருந்து சோழபாண்டியன் என்ற பட்டத்துடன் அவ்விரண்டையும் ஒருங்கே ஆண்டவன். இவன் தன் காலத்தில் சோழமண்டலத்திலுள்ள மக்கள் எல்லோரும் அமைதியாக வாழ்ந்து வருமாறு நன்னெறி வழாது செங்கோல் செலுத்தினான். இத்தகைய பெருங்குண வேந்தனும் சில ஆண்டுகளில் துஞ்சினான்.

பிறகு, இவனது தம்பியாகிய வீரராசேந்திரசோழன் கங்கைகொண்ட சோழபுரத்தில் கி. பி. 1063-ஆம் ஆண்டில் அரசு கட்டிலேறினான். இவ்வேந்தன் பேராற்றலும் பெரு வீரமும் படைத்

தவன். இவன் முடிமன்னர்களான தன் தமையன்மார்களுக்கும், அன்னோரது மக்களுக்கும் மேலைச்சளுக்கியர்களால் நேர்ந்த ஆற்றொணா இன்னல்களை மனத்திற்கொண்டு பெருஞ்செற்றமுடையவனாய் அவர்களைப் பழிக்குப் பழிவாங்கவேண்டுமென்ற எண்ணத்தோடு பெரும்படையைத் திரட்டிக்கொண்டு அவர்களது இரட்டப்பாடி நாட்டின்மேற் சென்றான். இவன், இங்ஙனம் ஐந்துமுறை படையெடுத்துச்சென்று மேலைச்சளுக்கியரது நாட்டைப் பலவிடங்களிற் கொள்ளையிட்டும் பலவிடங்களில் அழித்தும் பாழ்படுத்தினான். இம்மானக்கேட்டைப் பொறாத மேலைச்சளுக்கியர் தம் படையைத் திரட்டிக்கொண்டு இவனோடு பலவிடங்களில் போர் புரிந்தனர். இறுதியில் கிருஷ்ணையும் துங்கபத்திரையும் கூடும் இடமாகிய கூடல் சங்கமத்தில் கி. பி. 1064-ல் இருபடைகளும் கைகலந்து பெரும் போர் செய்தன. அப்போரில் மேலைச்சளுக்கிய மன்னர்களாகிய ஆகவமல்லன், விக்கிரமாதித்தன் முதலானோர் தோல்வியுற்றுப் புறங்காட்டி ஓடி ஒளிந்தனர். சளுக்கிய சாமந்தர்களுட் பல்லோர் போர்க்களத்தில் உயிர்துறந்து புகழ்கொண்டனர். வீரராசேந்திரசோழனும் தன்னுடன்பிறந்த முன்னவர் எண்ணம் முடித்து வெற்றித்திருவை மணந்து, தனது தலைநகராகிய கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மகிழ்வுடன் சென்று இனிது செங்கோல் ஓச்சுவானாயினன்.

இங்ஙனம் சோழருக்கும், மேலைச்சளுக்கியருக்கும் நிகழ்ந்துவந்த போர்களில் சோழகுலத்துதித்த முடிவேந்தர் சிலரும் அரசிளங்குமரர் பலரும் இறந்தொழிந்தனர். இறுதியில் எஞ்சியவர் வீரராசேந்திரசோழனும் இவனது மைந்தனை அதிராசேந்திரசோழனுமே யாவர். அதிராசேந்திரனும் வீரராசேந்திரனது பட்டத்தரசியின் மைந்தன் அல்லன். ஆதலால் அவன் அரசாளும் உரிமையைப் பெறுதற்கு ஏற்றவனல்லன் ஆயினான். அன்றியும், தன் பாட்டனான முதலாம் இராசராசசோழன் காலத்தில் உயர்நிலைக்குக் கொண்டுவரப்பெற்றுத் தன் தந்தையாகிய கங்கைகொண்ட சோழனால் மிகச்சிறிய நிலைக்கு உயர்த்தப்பெற்றுத் தன் தமையன்மார்களாலும், தன்னாலும் நன்கு பாதுகாக்கப்பட்டுவந்த சோழமண்டலத்தை அதன்பெருமை குன்றாத

வாறு காத்து ஆட்சிபுரியவல்ல ஆற்றலும் வீரமும் ஆதிராசேந்திரனுக்குச் சிறிதும் இல்லை என்பதை வீரராசேந்திரன் நன்குணர்ந்திருந்தான். இதனால் இவன் அதிராசேந்திரனுக்கு இளவரசப் பட்டஞ் சூட்ட விரும்பவில்லை. அன்றியும் ஆண்மையும் ஆற்றலும் ஒருங்கேயமையப்பெற்று ஒப்பற்ற வேந்தன் ஒருவனே சோழமண்டலத்தின் சக்கரவர்த்தியாகத் தனக்குப் பின்னர் முடிசூட்டப்பெறுதல் வேண்டுமென்றும் இவன் கருதினான்; இதற்கு எவ்வாற்றானும் தகுதியமையப்பெற்றவன் தன் உடன்பிறந்தாளது மைந்தனும், வேங்கிநாட்டு வேந்தனுமாகிய இராசேந்திரனே என்று துணிந்து, தன் ஆட்சிக்காலத்திலே அவனை வேங்கியினின்று வருவித்துச் சோழமண்டலத்திற்கு இளவரசுப் பட்டங்கட்டினான். இளவரசனான இராசேந்திரனும் தான் முன்னர் ஆட்சிபுரிந்துவந்த வேங்கிநாட்டைத் தன் சிறிய தாதையாகிய விசயாதித்தன் என்பவனை அரசப்பிரதிநிதியாயிருந்து ஆண்டுவருமாறு ஏற்பாடுபுரிந்துவிட்டுத் தனது அம்மானாகிய வீரராசேந்திரனோடு சோணாட்டில் வசித்துவந்தான்.

அந்நாளில் இளவரசனான இராசேந்திரன் வடபுலத்திலுள்ள சக்கரகோட்டமண்டலத்தை அரசாண்டுவந்த தாராவர்ஷனை அடக்கிவருவதற்கும், திக்குவிசயம் செய்தற்கும் எண்ணி வெற்றியைத்தரவல்ல பெரும் படையுடன் கங்கைகொண்ட சோழபுரத்தினின்று புறப்பட்டு வடபுலம்நோக்கிச் சென்றான். சென்றவன் மத்தியமாகாணத்திலுள்ள வயிராகரம் என்ற ஊரில் எண்ணிறந்த யானைகளைக் கைப்பற்றிக்கொண்டு அவ்வூரையும் எரியூட்டினான்; பின்னர், அம்மாகாணத்திலுள்ள சக்கரகோட்டமண்டலத்தை ஆண்டுவந்த தாராவர்ஷன் என்னும் வேந்தனோடு போர்புரிந்து அவனைத் தனக்குத் திறைசெலுத்தும்படி செய்தான். இங்ஙனம் இராசேந்திரன் வடபுலத்தில் பெருவீரத்துடன் போர்செய்துகொண்டிருக்கும் நாட்களில் தலைநகராகிய கங்கைகொண்டசோழபுரத்தில் வீரராசேந்திரசோழன் விண்ணுலகெய்தினான்.

ஐந்தாம் அதிகாரம்.

குலோத்துங்கன் சோழமண்டலத்தில் முடிசூடுதல்.

வீரராசேந்திர சோழன் இறந்ததையும் அதனால் சோழமண்டலத்தில் அரசனில்லாதிருத்தலையும் சளுக்கிய விக்கிரமாதித்தன் கேள்வியுற்றுத் தான் விரைந்து கங்கைகொண்ட சோழபுரஞ் சென்று அதிராசேந்திரசோழனுக்கு முடிசூட்டி நாட்டை ஆண்டுவரச் செய்தான். வீரராசேந்திரனது புதல்வியைச் சளுக்கிய விக்கிரமாதித்தன் மணந்திருந்தமையால், அவன் தன் மைத்துனனாகிய அதிராசேந்திரன் இளவரசுபட்டம் பெறாதவனாயிருத்தலை யுணர்ந்தும் அவனையே சோழமண்டலத்திற்கு அரசனாக்க முயன்று தன் கருத்தையும் நிறைவேற்றிக்கொண்டான். அன்றியும் இளவரசனாக முன்னரே முடிசூட்டப் பெற்றிருந்த இராசேந்திரன் என்பான், வீரராசேந்திரன் இறந்தபோது தலைநகரில் இல்லாமல் வடபுலஞ் சென்றிருந்தது சளுக்கிய விக்கிரமாதித்தன் தான் எண்ணியதை எண்ணியாங்கு முடித்தற்கு நலமாகவும் இருந்தது. வேங்கிநாட்டு வேந்தனாகிய இராசேந்திரன் சோணாட்டையும் பெறுவானாயின், இவ்விருநாடுகளும் ஓர் அரசனது ஆட்சிக் குள்ளாகிவிடு மென்றும், தன் பகைஞனாகிய அவன் தன்னினும் பெருவலிபடைத்த பேரரசனாகிவிடுவா னென்றும் அவ் விக்கிரமாதித்தன் கருதியே அவன் சோழநாட்டின் ஆட்சியைப் பெறாதவாறு தன் மைத்துனனாகிய அதிராசேந்திரனை அரசனாக்கினன் என்பது ஈண்டு அறிந்து கொள்ளுதற் குரியதாகும்.

மேலைச்சளுக்கிய வேந்தனாகிய விக்கிரமாதித்தன் தான் கருதியதை நிறைவேற்றியமையா லுண்டான பெருமகிழ்வோடு தன் நாட்டிற்குச் சென்றான். அதிராசேந்திரனும் சோழநாட்டை ஆண்டுவந்தான். அவனது ஆட்சியில் மக்கட்குண்டான வெறுப்பினாலோ அல்லது வேறு எக்காரணத்தாலோ உண்ணாட்டிற் பெருங்கலகம் உண்டாயிற்று. அக்கலகத்தை யடக்கி நாட்டை நன்னிலையில் நிறுத்தற்கேற்ற ஆற்றலும் ஆண்மையும் அரசன்பால் இல்லாமற்போயின. சோழமண்டலத்திலிருந்த சிற்றரசர்

களும் அந்நாட்களில் அவனுக்கு உதவிபுரிந்தாரில்லை. சேய்மை யிலுள்ள இரட்டப்பாடிநாட்டில் அரசாண்ட விக்கிரமாதித்தனும் இக்கலக நிகழ்ச்சியை யுணர்ந்து தக்ககாலத்தில் வந்து உதவி செய்தற்கியலாதவன் ஆயினன். ஆகவே உண்ணாட்டில் நிகழ்ந்த அப்பெருங்கலகத்தில் அரசனை அதிராசேந்திர சோழன் கொல்லப்பட்டான். கொல்லப்படவே, சோணாடு அரசனின்றி அல்லலுற்றது. குறுநிலமன்னரது கலகம் ஒருபுறமும், உண்ணாட்டுக் குழப்பம் மற்றொருபுறமும் மிக்கெழவே சோழநாட்டுமக்கள் எல்லோரும் அமைதியான வாழ்வின்றி ஆற்றொணப்பெருந்துன்பத்துள் ஆழ்ந்தனர். கலிங்கத்துப்பரணியின் ஆசிரியராகிய சயங்கொண்டார்,

"மறையவர் வேள்வி குன்றி மனுநெறி யனைத்து மாறித்
துறைகளோ ராறு மாறிச் சுருதியு முழக்க மோய்ந்தே
சாதிக ளொன்றோ டொன்று தலைதடு மாறி யாரும்
ஓதிய நெறியி னில்லா தொழுக்கமு மறந்து போயே
ஒருவரை யொருவர் கைம்மிக் கும்பர்தங் கோயில் சாம்பி
அரிவையர் கற்புச் சோம்பி யாண்களு மழிய வாங்கே
[கலியிருள்பரந்தது"]

என்று இக்குழப்பத்தை அந்நூலிற் கூறியுள்ளார். அன்றியும் சோழநாடு அக்காலத்தில் அரசனின்றி அல்லலுற்றிருந்த செய்தியை முதலாம் குலோத்துங்க சோழனது மெய்க்கீர்த்திகளிலும் பரக்கக்காணலாம்.

இங்ஙனம் சோழநாடு நிலைகுலைந்திருந்த செய்தியை வடபுலத்திற் போர்புரிந்து கொண்டிருந்த இளவரசனாகிய இராசேந்திரன் அறிந்தவுடன் தலைநகராகிய கங்கைகொண்ட சோழபுரத்திற்கு விரைந்து சென்று முடிசூடிக்கொண்டான். உடனே உண்ணாட்டுக் குழப்பமும் கலகமும் ஒழியவே சோழமண்டல மெங்கும் அமைதி நிலவிற்று. அப்பொழுது சிற்றரசர்கள் அவன் அடிமிசை அறுகெடுத்திட்டு வணங்கினர்; அந்தணர் 'அரசர் பெருமான் நீடு வாழ்க' என்று வாழ்த்தினர்; மனுநெறி எங்கும் தலையெடுக்கவே அவன் புகழ் யாண்டும் பரவுவதாயிற்று.

நிழலிலடைந்தன திசைகள்
நெறியிலடைந்தன மறைகள்
கழலிலடைந்தன ருதியர்
கடலிலடைந்தனர் செழியர்
பரிசில்சுமந்தன கவிகள்
பகடுசுமந்தன திறைகள்
அரசுசுமந்தன விறைகள்
அவனிசுமந்தன புயமும்.

(தொடரும்)

கல்வி.

திருவாளர். பண்டிதர் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.

பண்டை நாளிலிருந்த பெரியோர்கள் உயிர்களை ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர் என அறிவு வகையாற் பாகுபாடு செய்து வைத்திருக்கின்றனர். அவற்றுள் ஏனைய வெல்லாம் பொறிகளான் அறியும் அறிவே உடையனவாக, மக்களுயிர் ஒன்றும் மனத்தான் எண்ணியறியும் அறிவினையும் உடையதாகின்றது. "மக்கள்தாமே ஆறறிவுயிரே" என்று தொல்காப்பியர் கூறுதல் காண்க. அதனாற்றான் எல்லாப் பிறப்பினும் மக்கட் பிறப்பு உயர்ந்ததாகக் கொள்ளப்படுகின்றது. மக்களுள்ளும் உயர்வு தாழ்வுகள் அறிவு விளக்கத்திற் கேற்பவே அமைகின்றன. குணம் செயல்களும் உயர்வு தாழ்வுகட்குக் காரணமாயினும் அவை அறிவைச் சார்ந்தே நிகழ்தலின் அத னுள் அடங்கற் பாலனவாகும். அறிவுவிளக்கம் பொருள்களை ஆராய்ந்து அறிதலால் உண்டாவது. நிலம், நீர், தீ, வளி, விசும்பு என்னும் ஐம்பூதங்கள், அவற்றானய உலகங்கள், உலகி னுள்ள பொறிகளானறியும் பருப்பொருளும் அவற்றானறியலாகா நுண்பொருளுமாகிய எண்ணிறந்த உயிர் உயிரல்பொருள்கள், அவற்றின் குணம் செயல்கள், தோற்ற நிலை யொடுக்கங்கள்,

அவற்றை ஒழுங்குபடுத்தமைத்து மக்கள் பயன் கொள்ளும் நெறிகள், மக்களின் இன்ப துன்ப விளைவுகள், அவற்றின் காரணங்கள் என்றிவற்றோரன்ன பலவும் ஆராய்ந்தறியற்பாலனவாய பொருள்களாம். அவற்றை ஆராய்ந்தறிதல் என்பது அறிவு அநுபவமுடைய பெரியோர்களாலே தொன்றுதொட்டு அவ்வத்துறையில் இயற்றப்பெற்றுள்ள நூல்களைக் கற்றலானே கைவரப்பெறுவது. அங்ஙனம் கற்றலாகிய தொழிலும், கற்கப்படுவனவாகிய நூல்களும், கற்றலானெய்தும் அறிவும் கல்வியென்னும் பெயரால் வழங்கப்படுவனவாகும். கல்வி என்பது நூல், நூலறிவு என்னும் பொருள்களிலேயே பயின்று வழங்குகின்றது. 'கல்வி கரையில' என்புழி நூலும், 'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி' என்புழி நூலறிவும் பொருளாதல் காண்க. மக்கள் நூல்களைப் பயிலும் அளவிற்கேற்பவே அவர்களறிவு நுட்பமும் பெருக்கமும் எய்துகின்றது;

'தாங்கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு'

'தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு'

என்னும் முதுமொழிகள் இவ்வுண்மையை அறிவுறுத்து நிற்கின்றன.

இனி, மக்கள் நூல்களைக்கற்றலின்றியே பொருள்களை நேரிற் கண்டு, அவற்றினியல்புகளைத் தம் இயற்கை யறிவால் ஆராய்ந்தறிந்து அறிவு விளக்கமெய்துதல் சாலாதோ எனின், சாலாது; என்னை? மக்கள் யாவரும் பிறந்தபொழுது எதனையும் தாமாக அறியும் அறிவின்றியிருந்து பின் ஒரோவொன்றாகப் பிறருதவியால் அறிந்துவருதல் கண்கூடாகலின், அங்ஙனம் அறிந்த ஓரளவு அறிவும் ஊனும் பெற்றவழியன்றி இயற்கையறிவால் ஆராய்ந்தறிதல் என்பதற்கு இடனேயின்று; பின்னரும், எட்டுதற்கரிய கால இடங்களிற் பட்டவற்றை அறிதற்கு இயற்கையறிவு கருவியாதல் இல்லை; நிகழ்காலத்தே அணிமைக்கண் உள்ளதொன்றும் பொறிகளான் அறியலாகா நுண்பொருளாயின் அஃது அவ்வறிவிற்குப் புலனாகாது; நேரிலுள்ள பருப்பொருளை ஆராயப்

புகுந்தவழியும் அதனியல்புகளை ஒருதலையாக அறியலாமென்னும் உறுதிப்பாடின்று; அறியலாமெனினும் மக்களின் சிறிய வாழ்நாளில் யாதானும் ஒன்றிரண்டு அறியக்கூடுமன்றிப் பல பொருள்களை ஆராய்ந்தறிந்து நிறைந்த அறிவைப்பெறுதல் அமையாது; அங்ஙனம் அறியும்வழி நேரும் இடர்ப்பாடுகளும் இன்னல்களும் பலவாம். ஞாயிற்று மண்டிலத்தின் அளவு, அதிற் கலந்துள்ள பொருள்கள், அதன் ஒளியும் வெம்மையும் சென்று பொருந்தும் இடங்கள் என்பவற்றை வேறு கருவியின்றித் தன் இயற்கையறிவால் ஆராயப்புகுந்தானொருவன் அவற்றைப்பற்றி எத்துணையறிவு கைவரப்பெற்றவனாவன்? பல்வேறு வகையான பூடுகள், அவற்றின்வித்து வேர் தோல் தழை பூ காய் கனிகள் இரும்பு முதலிய தாதுப்பொருள்கள் என்னும் இவைமுதலானவற்றின் தனித்தனியான பண்புகளையும், அவற்றின் கலப்பாலுண்டாகும் தன்மைகளையும் ஆராய்ந்தறிந்து, இவ்வேதுவாலுண்டாய இந்நோய்க்கு இதனால் இன்னவாறு மருந்தமைத்து உண்க என மருத்துநூலோர் கூறியிருப்பவற்றைக் கொள்ளாது விடுத்து, ஒருவன் தன் இயற்கையறிவால் அவையனைத்தையும் ஆராய்ந்து காண்பல் எனப் புகுவனேல், அவன் பெறும் அறிவும் எய்தும் இன்னலும் எத்துணையவாகும் என்பதனை ஓர்மின்கள். ஒவ்வொரு துறையிலும் தொல்லோர் கண்டறிந்தவற்றை விடுத்துப் புதுவதாக ஆராய்ச்சியைத் தொடங்குவார் நிலைமை இப்பெற்றியதே. இப்பொழுதுள்ள மக்களின் அறிவுகளும் செய்கைத்திறங்களும் உலகிலே தொன்றுதொட்டுத் தொடர்ச்சியாய் வந்துகொண்டிருக்கிற அறிவின் விளைவேயன்றி வேறில்லை. இப்பொழுது மக்களனைவரும் தொல்லோரின் அறிவனைத்தையும் கைடகன்று, இயற்கை யறிவொன்றுகொண்டு நிற்பரேல் அவர் நிலைமை பேரிருளில் விடப்பட்ட கண்ணிலாக்குழவிகளின் நிலைமையையே ஒக்கும்.

‘இருளே யுலகத் தியற்கை இருளகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை’

என்னும் முதுமொழி இவ்வுண்மையை அறிவுறுத்தல் காண்க. கற்ற அறிவுடைமை என்றால் பல்வேறு காலதேயங்களிலிருந்த

எண்ணிறந்த பெரியார்களின் அறிவனைத்தையும் ஒருங்கேபெற்று அறிவுடையராதல் என்பதேயாகின்றது. இங்ஙனம் பல்லாயிரவர் அரிதின் உழந்து தேடிய பேரறிவுப் பொருட்குவை யனைத்தும் பெற்று நுகரும்பேறு கற்றறிவுடையார்க்கே வாய்ப்பதாகவும், மக்களாய்ப்பிறந்தாருள்ளே பலர் கல்விகல்லாது கண்ணிலிகளாய் முகத்திற் புண்கொண்டு 'தனக்குப் பாழ் கற்றறிவில்லா வுடம்பு' என்றபடி பாழான உடலைச்சுமந்து திரிந்துழல்வது தகுதியாமோ?

இனி, மக்களாய்ப் பிறந்தாரனைவரும் கல்விகற்கவேண்டுமென்பதும், அங்ஙனம் கற்றலின் பயனாவது அறிவு பல்குதலென்பதும் மேற்கூறியவாற்றால் விளக்கமாம். சுருங்கக்கூறின், கல்விக்குப் பயன் அறிவு எனல் அமையும். எனவே கற்பாரின் நோக்கமும் அறிவுப்பெருக்கமெய்துதலே யாகல்வேண்டுமென்பது போதரும். இக்காலத்திலோ மிகவும் புல்லியதோர் நோக்கங்கொண்டு பெரும்பாலும் கற்குந்தொழில் நடைபெறுகின்றது. இஃதொழிந்து முற்கூறிய பெருநோக்குடன் கல்வி பயிலப்பெறுங் காலத்திற்றான் உண்மையான கல்வி இந்நாட்டில் நிலவுவதாகும். கல்விக்குப்பயன் அறிவுடைமை யெனவே, அறிவால் எய்தலாகாததொன்றின்மையின் கல்வியுடையார் எல்லா நலங்களும் எய்துதற்குரியராவ ரென்பது பெறப்படும். கல்வியின் பயனைக்குறித்து,

கைப்பொருள் கொடுத்துங்கற்றல் கற்றபின் கண்ணுமாகும்
மெய்ப்பொருள் விளக்குநெஞ்சின் மெலிவிற்கோர் துணையுமாகும்
பொய்ப்பொருள் பிறகள் பொன்னும்புகழுமாம் துணிவியாக்கும்
இப்பொருளெய்தி நின்றீ ரிரங்குவ தென்னை யென்றான்"

என்று திருத்தக்கதேவரும்,

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை"

என்று குமரகுருபரவடிகளும் கூறியன தெளிந்த உண்மையாகும்.

இனி, கல்வியானது பொருள் பயக்குமாறெங்ஙனம் எனின், பொருளொன்றே கருதிப் பெரிதும் கல்வி பயிலப்பெற்று வரும்

இற்றை நாளில் அஃதிவ்வாறு பயக்குமென் றெடுத்துரைத்தல் மிகை. அன்றியும், கல்வியானது 'கேடில் விழுச்செல்வம்' என்பதனையும் ஏனையது பொய்ப்பொருள் என்பதனையும் சிந்திப்பின் அது பொருளெலாம் பயக்குமென்றுரைத்தல் கல்வியின் சிறப்பைக் குறைத்தலேயாகும்.

கல்வி ஒளியையும் புகழையும் நல்குதல் குன்றின்மேல் விளக்குப்போலும். கற்றாரை விரும்பிப் பேணாதாரிலர். மக்களிடத்து இயற்கையன்புடைய தாயும் சிறப்பின் பாலால் மனந்திரிந்து கற்றமகன்பாலே கழியன்புடையளாகின்றாள். வீட்டில் இங்ஙனமாக, நாட்டிலோ எனில், விறகிற்பற்றி யெரியும் அழல் பெரிதாயினும் அதனை யெள்ளித் திரியிற்பற்றியெரியும் சிறிய அழலை வணங்குதல் போலக் கல்லாத மூத்தானைக் கைவிட்டுக் கற்ற இளைஞனையே யாவரும் போற்றுகின்றனர். நாட்டினையாளும் வேந்தனும் ஆண்டில் முதியனை வருகவென் றழையாது இளையனாயினும் கல்வியறிவுடையோனை அழைத்துச் சிறப்புச்செய்து அவன் வழியிற் செல்லுதலும் உடையனாகின்றான். கற்றார்க்குத் தம்மூர் என்ப தொன்றில்லை; அவர்க்கு யாதும் ஊரே; யாவரும் கேளிர். ஒரு நிலத்தினை ஆளும் அரசனுக்கும் அவனது நாட்டிலே தான் சிறப்பு; அங்கும் அன்புடன் சிறப்புப் பெறுவது மிக்க அருமை. கற்றார்க்கோ சென்ற இடமெல்லாம் சிறப்பு. புவியாளும் வேந்தர்களும் கவியரசர்கட்குச் சிவிகை சுமந்தது முதலிய செய்திகள் கேட்கப்படுகின்றன. ஒப்புயர்வற்ற கல்வியாளரின் புகழுக்கு எல்லையேது? திருவள்ளுவர், கம்பர் முதலாயினாரின் புகழ் உலகம் அழியினும் அழிவதாமோ? புலவராயினார் தம் புகழை நிலைநிறுத்துவதுடன், செங்கோன்மை, கொடை, வீரம் முதலியவற்றாற் சிறப்பெய்திய பிறருடைய புகழையும் தாம் இயற்றும் நூல்களால் நிலைபெறச் செய்கின்றனர். புலவரென்பார் இல்லையாயின் முற்காலத்திற்கும் பிற்காலத்திற்கும் என்ன தொடர்ச்சியுண்டு? அப்பொழுது உலகமென்பது இருள் செறிந்ததோர் வனமேயன்றோ?

இனி, கல்வியால் விளையும் இன்பத்தைச் சிறிது நோக்குவோம். உலகினர் 'பலராலும் நன்குமதிக்கப்படுதலே இன்பம்

விளைப்பதொன்று. ஆயின், உண்மைக் கல்வியுடையார்க்கு அங்ஙனம் தம்மைப் பிறர் மதித்தல் முதலியவற்றான் உண்டாகும் இன்பம் அத்துணைப் பெரிதன்று. பிற்றை நாளில் உலகெலாம் போற்றும் பெரும் புலமையெய்தினார் சிலர் தாம் உயிர்வாழு நாளில் யாராலும் மதிக்கப்படாதிருத்தலும், அவர் அம்மதிப்பை யொன்றாகக் கொள்ளாது புலமை நடாத்திச் சேறலும் கண்டும் கேட்டும் அறியற்பாலனவே. கல்வியுடையார் முன் அறியாத நுண்பொருள் பலவற்றைத் தமது கலையுணர்வால் அறியுந்தோறெய்தும் இன்பமே சாலவும் பெரிது. மற்று, நல்லிசைப் புலவரின் சுவை கனிந்த செய்யுட்களில் உள்ளம் அழுந்திநின்று, அவற்றின் சொற்பொருள் விழுப்பங்கண்டு தம்மையுமறந்து நுகரும் இன்பத்திற்கு ஓர் எல்லையுண்டோ? 'கூடலினாய்ந்த ஒண்டீந் தமிழின் றுறை வாய் நுழைந்தனையோ' என மாணிக்கவாசகப் பெருமானும் கண்டு கூறிய கற்றலின் வருத்தத்திற்கு அதனால் விளையும் இன்பமன்றே பரிசிலாக நின்று அவரை மேலும் அத்துறையில் ஊக்காநிற்பது.

எண்ணெயு நானமு மிவைமூழ்கி யிருடிருக்கிட்
டொண்ணறுந் துகிற்கிழி பொதிந்துறை கழித்தனபோற்
கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்
வண்ணப்போ தருச்சித்து மகிழ்வானாத் தகையவே.

என்னும் சிந்தாமணிச் செய்யுளையாதல்,

ஓதிம மொதுங்கக் கண்ட வுத்தம னுழைய ளாகுஞ்
சீதைதன் னடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவ டானு மாண்டு வந்துநீ ருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்.

என்னும் கம்பராமாயண விருத்தத்தையாதல்,

யாழுமெழுதி யெழின்முத்தெழுதி யிருளின் மென்பூச்
சூழுமெழுதியொர் தொண்டையுந் தீட்டியென்றொல்பிறவி
ஏழுமெழுதா வகைசிதைத் தோன்புலி யூரிளமாம்
போழுமெழுதிற்றொர் கொம்பருண் டேற்கொண்டு போதுகவே

என்னும் திருக்கோவை மணியையாதல்,

எழுந்துலகை நலிந்துழலு மவுணர்கடம் புரமூன்று மெழிற்கணுடி
உழுந்துருளு மளவையினொள் ளெரிகொளவெஞ் சிலைவளைத்தோ [னுறையுங்கோயில்
கொழுந்தாள நகைகாட்டக்கோகநத முகங்காட்டக்குதித்துநீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம் வாய்காட்டு மிழலையாமே.

என்னுந் தேவாரத் திருப்பாட்டையுாதல்,

கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ வறியேனென் றதிசயித்தார்.

என்னும் பெரியபுராணத் திருச்செய்யுளையாதல் படிக்கும்பொழுது செந்தமிழ்ப்புலவர் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் இன்பம் இனைத் தென்பது அன்னார்க்கேதெரியும். பெரிதும் உவகைச்சுவை பற்றி யனவே இங்கே காட்டப்பெற்றன. வீரம், வியப்பு முதலிய ஏனைச்சுவை பற்றியனவும் இங்ஙனமே கொள்க. இத்தகைய இன்பங்கருதியே

'ஆயுந் தொறுந்தொறு மின்பந் தருங்கல்வி'

என்று தனிகைப்புராணமுடையாரும்,

'தேருந் தொறுமினி தாந்தமிழ் போன்று'

என்று தஞ்சைவாணன் கோவையுடையாரும் கூறிப்போந்தனர். தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரோ

'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

என்றதன்றியும், நற்குணமுடையாரது நட்புப் பழகுந்தோறும் இனிதாகுமென்பதற்கு உவமையாக

'நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு'

எனக்கூறியருளினர். கம்பநாடர் தாம் நுகர்ந்த செய்யுளின் பத்தைப் பலவிடத்துங்காட்டிச் செல்கின்றவர் சீதாபிராட்டி யையே

'செஞ்சொற் கவியின்பம்'

என்று பாராட்டுகின்றார். இங்கே காட்டியவற்றிலிருந்து கல்வி யால் விளையும் இன்பம் எத்தகையதென ஒருவாறு புலனாதல் கூடும்.

இனி, 'பிறந்தோருறுவது பெருகிய துன்பம்' என்றபடி, இவ்வுலகிலே அடைந்தாரைப் பிரிதலினாலும், பொறுத்தற்கரிய பிணியாலும், பொருட்கேட்டினாலும், பிறவாற்றாலும் மக்களுக் குத் துன்பமுண்டாதல் இயல்பே. கல்வியில்லாதார் ஊழானே தமக்குத் துன்பம் நேர்ந்தவிடத்து அதனுள் அமிழ்ந்து கரை காணாது வருந்துவர்; முன்னறிந்து காக்கத்தகும் துன்பங்களை யும் அவர்கள் காக்கவல்லுநரல்லர்; அன்றி,

"அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது"

என்றபடி, பகைவர்பலர் கூடிச்செய்யவொண்ணாத இன்னல்களைத் தாமேயும் தமக்கு ஆக்கிக்கொள்வர். கல்வியுடையாரோ என்றால் துன்பங்களின் காரணங்களை நன்கு அறிந்திருத்தலின், அவை வாராமற்பெரிதும் காக்கவல்லுநர்; ஊழான் ஒரு துன்பம் உற்ற விடத்தும், கடவுட்பணி முதலியவற்றால் அதன் வலியைக்குன்று விப்பர்; பண்டு, இராமன், அறன்மகன் முதலாயினார்க்கும் கொடிய துன்பங்கள் நேர்ந்தமையும், அவர்கள் அவற்றான் மாழ் குதலின்றி நோன்று இன்பதன்பங்களை ஒருபெற்றியே நோக்கி அவற்றை வென்று திகழ்ந்தமையும் முதலிய வரலாறுகளைச் சிந்தித்தும் அதனைப்பொறுப்பர்; இருவினைப்பயன்களுள் நல் வினையின் பயனாகிய இன்பம் வந்தபொழுது அதற்களமந்திருந்த யாம் தீவினைப்பயனாகிய துன்பம் வந்தபொழுது அதனைப்பொறாது அல்லற்படுவது தகுதியன்றென்பது உன்னியும், ஊழான் எய்தற் பாலதாய துன்பத்தை ஒருதலையாக நுகர்ந்தே யாகல்வேண்டு மென்பதும் அதுகுறித்து அல்லலுற்றழுங்குதல் அதற்குத் தீர் வாகாதென்பதும் கருதியும் அதனான் வருந்தாதிருப்பர்; துன்ப மாவது அறிவின் ஓர் திரிபே என்பதும், அதனை மாறி நினைக்க

அஃதொழியுமென்பதும் ஓர்ந்தும் அவ்வாறு அதனை மாற்றுவர்; துன்பமானது உள்ளத்திற் புகுந்து வருத்துதற்கு அற்றம்பெறுவாறு இடையறாது நூற்பொருளை ஆராய்தலினாலும் அதனையொழிப்பர்; தனக்குவமையில்லாதான் றிருவடிகளைச் சிந்தித்தலினாலும் அதனைப்போக்குவர். நெஞ்சு ஒங்குபரத்துறந்தோராகிய அன்னோர் உடற்குவரும் இடர்முதலியன அடுக்கும் ஒருகோடியாயினும் நடுக்கமுறுதலிலர். இவையெல்லாம் கருதியே ஆன்றோர்கள்,

'நெஞ்சின் மெலிவிற்கோர் துணையுமாகும்' எனவும்,
'மம்ம ரறுக்கு மருந்து' எனவும்,
'உறங்கவலோன் றற்றழியுங்கைகொடுக்கும்' எனவும்,
'உற்றுழி யுதவுங்கல்வி' எனவும் கூறிப் போந்தனரென்க.

இனி, கல்வியானது அறத்திற்குக் கருவியாதல் யாங்ஙனமெனின், இடையறாது நூற்பொருளை ஆராய்தலினாலே தவஞ்செய்வார்போன்று மனம் ஒருங்கி நிற்றலானும், நல்லமியாமென்னும் நடுவுநிலையுடையராய் வாய்மை பேசுதலானும், அன்பும் அருளுமுடையராய் எவ்வுயிர்க்கும் இன்னாசெய்யாமையானும் கல்வியுடையார் அறம்வளரும் செழுநிலனாதல் தேற்றம். மற்று, அவர் யாதொரு பழி பாவத்திற்கும் இடனின்றி வாழ்நாள் முழுதும் இரவு பகல் உழுந்து தேடியதும், எல்லா நலங்கட்கும் காரணமாயதும், நிலைபேறுடையதும் ஆகிய கல்விப்பொருளை ஏனையர்க்கு வரைவின்றி வழங்கும் பேறுமானது பெரும்பாலும் தீவினையால் எய்தப்பெறுவதும், இன்பமேயன்றித் துன்பமும் விளைப்பதும், நிலையற்றதும் ஆகிய ஏனைப்பொருளை வழங்கும் அறத்தினும் எத்துணையோ மடங்கு பெரிதாமென்பதற்கு ஐயமின்று. பொருளால் அறஞ்செய்யுமிடத்தும், கல்வியில்லாதார் இக்காலத்து இவ்விடத்து இவ்வறம் செய்யற்பாலதென்றும், அது செய்யும் முறைமை யிதுவென்றும், அதனால் எய்தும் பயன் இன்னதென்றும் ஓர்ந்துணராது செய்தலின் அவ்வறம் திட்பமுடையதாகாது.

'பன்னும் பனுவற் பயன்றே ரறிவிலார்
மன்னு மறங்கள் வலியிலவே'

என்று சிவப்பிரகாசவடிகள் கூறுதலுங்காண்க. அறத்தின் பயனளவு பொருளளவிற்று அன்றென்பது

'இணைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்'

என்னும் திருக்குறளாலும்,

'அறப்பயனும்,
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்'

என்னும் நாலடியார்ச் செய்யுளாலும் ஓர்ந்துணரப்படும். எனவே, கல்வியில்லாதார் பெரும் பொருள் செலவிட்டும் எய்தலர்காத அறத்தினைக் கற்றவர் சிறிது பொருள்கொண்டும் எய்துதற்குரியராவர் என்பது பெறப்படும்.

இனி, வீடுபேற்றுக்குக் காரணமாவது மெய்புணர்வாகலானும், மெய்புணர்வு கல்வியானெய்தற்பாலதாகலானும் கல்வி வீடும் பயக்குமெனல் அமைவுடைத்தே. இதனை,

'கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணரும் கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரும் மந்நெறி
இப்பா லுலகத் திசைநிறீஇ யுப்பால்
உயர்ந்த வுலகம் புகும்'

என்னும் நான்மணிக்கடிகைச் செய்யுள் நன்கு விளக்குதல் காண்க. இக்கருத்தானே,

'எல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே'

என்ற திருமந்திரமும்,

'கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை'

என்று திருவிசைப்பாவும் கூறுவவாயின. இங்ஙனம் எல்லாப் பேற்றுக்கும் அடிப்பட்ட கருவியாயிருப்பது கல்வியென்னும் இவ்வுண்மை, கல்வியிற் பெரியராய கம்பரால் அயோத்திமாநகரைச் சிறப்பித்துரைக்கும் ஓர் செய்யுளில் வைத்து நன்குவிளக்கப் பெற்றுளது. அது,

'ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகம் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே'

என்பது. கல்வியென்னும் ஓர் முளை, முதலில் முளைத்துக் கேள்வி யாகிய கிளைகளைவிடுத்து அரிய தவமென்னும் தழைதழைத்து அன்பாகிய அரும்பரும்பி அறமென்னும் மலர் மலர்ந்து போக மாகிய பழமொன்று பழுத்ததுபோலும் அந்நகர் என்னும் இத னால், மக்களெய்தும் முடிந்தபயனாகவுள்ளது இன்பப்பேறு என் பதும், அதற்குப் பரம்பரையிற் காரணமாகவிருப்பது கல்வி யென்பதும் பெறப்படுதல் காண்க. போகம் என்பது இம்மை யின்பம், மறுமையின்பம், வீட்டின்பம் என்னும் மூன்றையுங் குறிப்பதாகக்கொண்டு, அவற்றிற்கேற்ப அறம் முதலியவற்றிற் கும் பொருள் கொள்ளுதல்வேண்டும்.

இனி, இதுகாறும் கல்வியின் பேறுகளை விரித்துரைத்தன கொண்டு, கல்லாதார்க்கு எவ்வாற்றானும் உய்தியில்லை; அவர் எப்பேறும் அற்றவரே யென்றுதல், கற்றவரென்பார் அனைவரும் எல்லாப்பேறும் ஒருங்குபெற்றவ ரென்றுதல் கோடலமையாது- கல்லாராயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகுதலானும், கேள்வியா யானும் நல்லறிவு தலைப்படுதலும், அதனால் அறம் பொருளின் பங்கள் எய்துதலும், துன்பத்தினீங்குதலும் கூடும்.

'கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை'

என்பது பொய்யாமொழியன்றோ? கற்றாருள்ளும் முற்கூறிய பேறுகள் அற்றாரும், எவ்வமுழப்பாருமுளர். எனினும், அவ் விழப்பிற்கும் உழப்பிற்கும் காரணம் அவரது கல்வியன்றென்பது கடைப்பிடிக்க. மக்கள் இம்மையில் எய்துமீ துன்பத்திற்குக் காரணம் முன்னரே செய்துகொண்ட வினையும், பலபிறப்பினும் பயின்றுவந்த வாதனைவலியால் எளிதிலே தவிர்க்கவொண்ணாது இப்பொழுது செய்யும் வினையுமாம். கல்வி எவ்வகையிலும் அத் துன்பத்தை யொழிப்பதற்கே கருவியாகின்றது.

(தொடரும்)

உ

தமிழ்த்தாய் துணை.

கல்லூரி நிகழ்ச்சிகள்.

மாதொரு பாகனார்தம் மன்னிய பேருளால் சென்ற பிரபவ, புரட்டாசி ௰அ, ௰௯, ௨௰ (4, 5, 6–10–27) ஆம் நாட்களில் பஞ்சாபகேசன் சபை ஆண்டுவிழா, கலைமகள்விழா, கல்லூரி ஆண்டு விழா ஆகிய இவை மூன்றும் முறையே கீழ்க்குறிக்கப்பெறும் பெருந்தகைகளின் தலைமையின் கீழ் இனிது நடைபெற்றன.

1. பஞ்சாபகேசன் சபை.

இது, கல்லூரிமாணவர்கள் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாலையில் கூடிச் சொற்பொழிவாற்றல் பெறற்பொருட்டு நிறுவப் பெற்றதோர் கழகமாகும். புரட்டாசி ௰அ ஆம் நாளொடு இச் சபையின் முதலாண்டு இனிது நிறைவுற்றது. இவ் விழாக்

காலத்துத் தஞ்சைத் தூயபேதுரு உயர்தரக்கல்லூரியின் துணையாசிரியர், திருவாளர்: A. பால் அவர்கள் B.A., L.T., தலைமையின்கீழ், மாணவர்கள் விளையாட்டுப்பந்தய விழா எல்லாச்சிறப்பும் ஒருங்கே அமைய நிகழ்வுற்றது. அதுபோது, கண்டார் நெஞ்சம் களிபெருவகைகூர, மாணவர்கள் தம் அறிவு, ஆற்றல், உடல் வலிமுதலிய பல்வேறு வழிகளால் நம் கல்லூரியின் உடற்பயிற்சி மேன்மையை நன்குவெளிப்படுத்தினர். பின்னர் மாலை 7 மணிக்குச் சபையமைச்சர் தலைவருக்கு நன்றிகூறி மலர்மாலை சூட்ட, இவ்விழா மிக்க சிறப்புடன் நிறைவேறியது.

2. கலைமகள் விழா.

புரட்டாசி, ௰௯. மாலை 4 மணிக்கு இவ்விழாத் தொடங்கிற்று. முன்னரே செய்தற்பாலனவாய வழிபாடு, பூசனை முதலியன நடைபெற்றதும், தஞ்சைக் கல்விக் கழகத்தலைவர், திருவாளர், ஐ. குமாரசாமிப் பிள்ளையவர்கள் B.A., தலைமைபூண்டு நம் கல்லூரியின் வளர்ச்சிக்குரிய பல அரிய முறைகளை உணர்த்தினர். பின்னர்ப் பஞ்சாபகேசன் சபையமைச்சர் ஆண்டு அறிக்கை வெளியிட்டனர். "ஔவையார்" என்னும் பொருள்பற்றித் திருவையாற்று நாட்டாண்மைக் கழகக்கல்லூரித் தலைமையாசிரியர் திருவாளர். நா. விசுவநாதையரவர்களும், "ஆய்" என்பது பொருளாக விண்ணமங்கலம் தமிழாசிரியர் திருவாளர் மு. தண்டாயுதபாணிக் காடவராயரவர்களும் எல்லா நலங்களும் அடைவே விளங்க சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பின்னர்த் தலைவர், சொற்பொழிவாற்றியோர், அவைக்கு வந்து அதனைச் சிறப்பித்தோர் முதலியோர்களுக்கு நன்றி கூற, கலைமகள்விழா நன்கு நிறைவெய்தியது.

3. கல்லூரி ஆண்டு விழா.

புரட்டாசி, ௨௰ ஆம் நாள் மாலை 4 மணிக்கு இவ்விழாக் கால்கொளத் தொடங்கியது. முதற்கண் பஞ்சாபகேசன் சபைவிழாவன்று நிகழ்ந்த மாணவர் பரிசில் விளையாட்டில் வெற்றிபெற்ற மாணவர்கட்குத் திருவாளர், A. பால், B.A., L.T., அவர்களால் பரிசுகள் வழங்கப்பெற்றன.

இவ் விழாக் கல்லூரியின் பன்னிரண்டாம் ஆண்டுவிழா வாகும். ஈண்டுத் தலைமைதாங்கி விழாவைச் சிறப்புறச் செய்தார் திருவாளர். A. T. பன்னீர்ச்செல்வம் BAR-AT-LAW அவர்களாவர். பின்னர் முறையே நிகழற்பாலனவாய கடவுள்வாழ்த்து அறிக்கை படித்தல் முதலியன கல்லூரித்தலைமை யாசிரியரால் இனிது நிகழ்த்தப்பெறலும், "ஆத்திசூடி" என்னும் பொருள் பற்றி உரத்தநாட்டு உயர்தரக்கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர். வீ. நாராயணசாமிப்பிள்ளையவர்களும், "தமிழர்மாண்பு" என்பது பொருளாக, அரசர்மடம், தமிழாசிரியர், திருவாளர் சாமி. சிதம்பரனர் அவர்களும், "நாடகம்" என்னும் பொருள்பற்றித் தஞ்சை நாட்டாண்மைக்கழகக் கல்லூரிக் கண்காணிப்பாளர், திருவாளர். த. வே. இரத்தனசாமிப் பிள்ளையவர்களும் முறையே, கேட்போர் நெஞ்சத்து இன்பங் கிளர்ந்தெழ, சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பின்னர், மாணவச்சிறார் திரு. இரா. தா. வேணு கோபாலன், சே. சின்னதம்பி, ச. சகதீசன் என்பவர்கள் முறையே பிசிராந்தையார், மனுச்சோழன், நீரின்பெருமை என்பனவற்றைப்பற்றிச் சொற்பொழிவாற்றினர். அவைத்தலைவர் அவர்கட்கும், சொற்பொழிவாளர், வந்திருந்த பேரவையோர் முதலியோர்கட்கும் நன்றிகூறி மலர்மாலை சூட்ட, தமிழ்த்தாயின் வாழ்த்தொலி இமிழ்கடலின்மிக்கெழ, தமிழ்த்தாயின் அருட்பெருக்கால், விழா மிக்கசிறப்புடன் நிறைவுற்றது. தமிழ்த்தாய் வாழ்க.

சிவ. குப்புசாமி,

தலைமையாசிரியர்.

மதிப்புரை.

நமது பொழிலின் மதிப்புரைகட்கு வரப்பெற்ற நூல்கள், திங்களிதழ்கள், செய்தித்தாள்களுள் மிகச்சில தங்கியிருக்கின்றன. எடுத்துக்காட்டின், சுக்கிரநீதி என்றதோர் அரிய நூல் நமது கையில் நெடிது தங்கியிருக்கின்றது. அதனை முழுவதும் பார்த்து அதன் அருமை பெருமைகளை எடுத்துக்காட்டல் வேண்டுமெனும் பெரிய அவாவும் நமது சிறிய ஓய்வுமே அது தங்கிநிற்றற்குரியவையாகும். அவ்வரியநூலை, சிறந்த மொழிபெயர்ப்பு, இத்தகைய அச்சுநலமுடையது, இத்துணை அளவினது, இன்னவிலையினது, இவ்விடத்திற் கிடைப்பது, வேண்டினோர் ஆண்டேனும் யாண்டேனும் பெறுக, அன்றிப் பெறுதொழிக என்றெலாம் எழுதிவிட எழக்கு மனம் வரவில்லை. மொழிபெயர்ப்பாளர் அரிய வடசொற்களை உரியதமிழ்ச் சொற்களாக மாற்றுவதிலும், அந்நூற் பொருளோடொத்த பழைய தமிழ்நூற் கருத்துக்களை எடுத்துக் காட்டுவதிலும் கொண்டுள்ள உழைப்பினையும், இவை போன்ற பிறவற்றிற் கொண்டுள்ள உழைப்பினையும்—முற்றும் எடுத்துக்காட்டுவதியலாதெனினும்—இயன்றவாறு எடுத்துக் காட்டும் விருப்பம் உடையேம். இங்ஙனமே வேறு சிற்சிலவும் தங்கியிருக்கின்றன. இவைபற்றிய தாழ்ச்சிகளைப் பொறுக்குமாறு அவ்வவ்வாசிரியர்களை வேண்டுகின்றேம். இவையெலாம் அடுத்த மலரில் வெளிவரும்.

சிவநேசன்.

சிவநேசன் என்னும் அரிய செய்தித்தாள் ஒன்று தமிழ்ப் புலமும், தமிழ்த்தொண்டும், தமிழறிஞர்க்குப் பயன்படத்தக்க பெருந்திருவும் படைத்த திருவாளர், பலவான்குடி, ராம. கு. ராம. இராமசாமிச் செட்டியாரவர்களைத் தலைவராகக்கொண்டு நாட்டுக்

கோட்டை நகரங்களுள் ஒன்றாகிய பலவான்குடியிலிருந்து வெளிவருவது கண்டு பெருமகிழ்வுற்றோம். இதன் துணையாசிரியராகத் திருவாளர், தமிழ்ப்பண்டிதர், அ. சரவணமுதலியாரவர்கள் அமைந்திருப்பதுணர, இன்னும் பெருமகிழ்வுற்றோம். தக்க தமிழறிஞர்களும் சமயப்பற்றுடையர்களுமாய இத்தகையோர்களால் நடத்தப்பெறும் செய்தித்தாள், இக்காலை நாட்டுக்கோட்டை நகரங்கட்கேயன்றி, வேறிடங்கட்கும் மிக இன்றியமையாததொன்றாகும். இச்செய்தித்தாள், அரசியற் கிளர்ச்சிகளி லீடுபடுமுகத்தால், சமயப்பற்றுக் குறைந்தொழிந்துவரும் இன்னல் நிலையினை விரைந்து போக்குமென்பது திண்ணம். இக்காலத்தே அரசியலிலோ, குடிவாழ்க்கையிலோ தங்கள் பண்டை உரிமையையிழந்து நிற்பார், அவ்வுரிமையைப் பேணிக்கோடல் எவ்வாற்றானும் பிழையாகாது; நீதியுங் கடமையுமாகும். ஆயினும், அதுபற்றிச் சிலர் சமயப்பற்றினை இழத்தல், அந்தோ, உயிர் ஒன்றே வேண்டி மானம் விடுவது போலாகும்! இந்நிலையில் உயிரையும் மானத்தினையும் ஒருங்கே போற்றுவார்போன்று, தமிழ்மக்கள் தங்கள் உரிமைகளையும் சமயப்பற்றினையும் ஒருங்கே பேணிக் கொள்ளல்வேண்டும். சமயப்பற்றினை வளர்த்துவரும் சிவநேசனும் நாட்டின் உரிமைகளைப்பெறப் பாடுபடும் சிறப்புடைய நாட்டுத் தொண்டர்களைப் பேணி, அவர்கட்கு உதவிபுரிந்து வருதலும் தனது கடமையெனக் கொள்ளல் நலமாகும். சிவநேசன் நெடிது இனிது வாழ்வதாக. இதனைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பெற்றுப் பயனுறுவார்களாக.

பொழிற்றொண்டர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

கரு, கசு-ஆம் ஆண்டுவிழா.

"தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர் அன்பராயின், அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே" எனத் தமிழ்ப்பெருமையே நாளும் போற்றித் திகழும் இச்சங்கத்தின் கரு, கசு-ஆம் ஆண்டு விழா ஆடித்திங்கள் அ, கூ-ஆம் நாட்களில், உயர்திரு. சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள்தம் சீரிய தலைமையின் கீழ் நடைபெற்றது. தமிழ்நாட்டின் நாற்புறத்துமிருந்து தமிழ் நலங்கெழுமிய உள்ளத்து மக்கள்பலர், ஆயிரக்கணக்கினர், வந்திருந்தனர். விழாவிற்கு இன்றியமையாதனவாய முன்முயற்சிகளும், வினைகளும் காண்பார் கட்புலனெல்லாங் கவரும் வண்ணம் பொலிந்து விளங்கின. யாங்கணும் தமிழர் கூட்டம்! யாண்டும் தமிழின் பெருமை! எம்மருங்கும் தண்டமிழ்ப்புலவர்; எப்புடையும் தொண்டர்படை; எச்சிறையும் தமிழ்ச்சிறார்; எச்சாரினும் தமிழ்மாண்புரைப்போர் ஆகத் தமிழ்ப் பெருந்தகைகள் விழவைச் சிறக்கவைத்தனர். பூணியின்றியும் பொறியினியங்கும் மாணமர் வையம் பல நின்றெழில்செய, எருத்தத்தியாத்த எழினுண்மணி கறங்க, மாத்தாள் விடைபூண்ட பண்டிகள் பல பத்திபத்தியாய் நின்று திசழ, புள்ளுறைபுஞ் சோலைகளும் பூங்கமலவாவிகளும் உள்ளும் புறமும் இனிது உறைந்தார் உயர் தமிழோர்.

முதனாள் விழா.

ஆரியமும் ஆங்கிலமும் அடைவே புணர்ந்தெங்கள் தீந்தமிழாம் பெருங்கடலிற் றிளைத்தாடும் பெருமகன், இவ்விழாவிற்குத் தலைமை தாங்கவந்த திருமகன் உறையுளுக்கு, எங்கள் தலைவன், இயல் இன்னிய மியம்ப, மாணவர்கள் தமிழ்த்தொண்டின்

மாண்புரைக்க, "தமிழ்நாடு வாழ்க! எங்கள் தண்டமிழ்த்தாய் வாழ்க" என உடன் போந்தோர் வாழ்த்தொலி போய் விண்ணூடு படரச்சென்று, அடிகளார் அடிவேண்டித் திருவீற்றிருந்த தெருவழித் திருவுலாச்செய்வித்து, விழாக் கால்கொண்ட வியன் கொட்டகையில், தலைமைதாங்குமாறு வேண்டிநின்றாராக, வரவேற்பு, ஆண்டறிக்கை படித்தல் முதலியன நன்கனம் நிகழ்ந்தன.

பின்னர் அடிகள்தம் சீரிய கூரிய தீஞ்சொற்களால் தமிழ் மக்களாய நம் முன்னோரது நாகரிகத்தின் சிறப்பினையும், செய்கை அறிவு முதலியவற்றின் திட்பநுட்பங்களையும், தொல்காப்பியப் பெருமணியின் அருளொளிகொண்டு ஆய்ந்து பேரவையோர் மனங்கொளப் பேணியுரைத்தனர்.

பெருநாவலாசிரியர்க்குள்ள அமைதிகள் முற்றவும் அமையப் பெற்றுத் தெய்வத்தமிழ்க்கவிபாடும் சேக்கிழார் பெருமானார் செவ்விதின் அளித்தருளிய பெரியபுராணத்துட்கண்ட தொண்டரது அளவிலாப் பெருமையை மிக்க அழகும் தெளிவும் அமைய, தமிழ்ப்பேரறிஞர் திருவாளர் சி. எஸ். இராசுப்பிள்ளையவர்கள் அரிய சொற்பொழிவொன்றின் வழியே இனிது விளக்கிநிற்ப, "நாட்டார்" என்ற சொல்லளவிலே, கேட்டார் மனத்துக் கிளர்ந்து தோன்றுவாரும், தமிழ்நாட்டுப் பேரறிஞர்தம் தலைமைப் புலமை பூண்டாருமாய, திருவாளர். ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் "பழைய உரையாளர்" எனும் பொருள்பற்றி, கற்பாரறிவைத் தெளிவிப்பதும், கற்றார்க்குற்ற ஐயங்களை யறுப்பதுமாய சிறந்ததோர் சொற்பொழிவாற்றினர். திரு. நாட்டாரவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் ஒழுக்கம் மேனாட்டுப் பெரும் புலமை வாய்ந்தாரது ஒழுக்கத்தைப் பெரும்பாலும் சிவணியும், சிறப்பான்மை அதனை விஞ்சியும் நின்றது. "நச்சினார்க்கினியார், பரிமேலழகர், பேராசிரியர் முதலியோரது உரையினும் ஆராய்ந்து மறுத்தலும் செய்கின்றனரே இவர்" என எண்ணுவாரு முளராகலின், அன்னோர்க்கு "அது தக்கதே" என உணர்த்திய எழுந்த அப்பேருரையின் மாண்பு நினைத்தொறும் இன்பம் பயக்கும் சீர்மைத்து.

பல்லாண்டுகட்கு முன்னர் நடந்த சிலப்பதிகார நிகழ்ச்சியை இன்று நிகழ்வுற்றதெனக் காண்பார் கருதுமாறும், தீதிலாக் கற்புடைய தெய்வக் கண்ணகியைக் காளியாக்கி, கற்புநெறியே தனக்கு உற்றநெறியென அதனை உயிரினுஞ் சிறக்கப்பேணிப் போற்றினால் "மறுவில் கற்பின் மாதவி" எனச் சிறப்பிக்கப் பெறும் மாதவியை வன்கண்மைமிக்க மாதகியாக்கி, இவ்விருவர் தம் மனக்கினிய காதலனாய் விளங்கிய கோவலனைக் கோவிலனாக்கி, சிலப்பதிகார உண்மை நிகழ்ச்சியைப் பொய்க்கதையாகவுமாக்கி நடித்துத்திரியும் கல்லா மாந்தருக்கு உண்மை நிகழ்ச்சியை யுணர்த்துமாறும் சங்கக்கல்லூரி மாணவர்கள் "கோவலன் மாதவியைப் பிரிந்து, தன் மனைவி கண்ணகியுடன் மதுரையடைதல்" ஆய பகுதியைச் செவ்விய தமிழ்முறையில் நடித்துக்காட்டினர். அதுபோது, அங்குமிங்கு மலைந்து திரியும் அறியா விளைஞரும் அந்நிகழ்ச்சிச் செல்வைக்குறித்து அழுது தேம்பினரெனின் வேறு கூறுவதென்னை!

பின்னர்த் தலைவரவர்கள் தமிழ் ஆராய்ச்சியின் இன்றியமையாமை, புலவர், உரையாசிரியர் முதலியோரைப் போற்றவேண்டியவிடத்துப் போற்றல், மறுக்கின்றவிடத்து மறுத்தல், இவை போன்றனபலவும் கருப்பொருள்களாக ஒரு பின்னுரை நிகழ்த்தி, சிலப்பதிகாரத்தின் சிறப்பையும், கண்ணகி, மாதவியாகிய இருவரது திண்ணியகற்பின் பெருமையையும், கோவலனது காம நிலையையும் விரித்து விளக்கியருளினர். இந்நிலையில், விழாவின் முதனாட் பகுதி சிறப்பெய்தியது.

இரண்டாம்நாள் விழா.

இங்ஙன் தமிழ்ப்போன்னையின் திருவிழாவின் முற்பகுதியிற் பகலினும் இரவினும் உவகைக்கடலுட்டினைத்தாடிய புலவர் குழாத்தினர், மறுநாட்காலை ஒன்பது மணிக்கு, விழாநிகழிடம் போதர, தலைவரவர்களும் போவைக்கண் எய்தித் தலைமைதாங்கியிருந்தனர். தமிழ்த்தாயின் வாழ்த்தொலியும், தமிழ் மக்களின் கடவுள் வாழ்த்தும் தனிப்பெருஞ்சிறப்பினொடு நிகழ்ந்தேறின.

பின்னர், திருவாளர். டி. எஸ். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள், அரசவாழ்க்கையும் நிலையுடைத்தன்றெனவெறுத்து, தமிழ்த் தாய்த்தொண்டே தக்கதொண்டாமென விழைந்து நின்ற நல்லிசைப்புலமைமிக்க இளங்கோவடிகளாரும், அடியார்க்கு நல்லாரும் இயற்றிய நூலுரைகளை ஆராய்ந்துகொண்டு "தாமின் புறுவது உலகின் புறக்கண்டு—காமுறுவர் கற்றறிந் தார்" என்னும் தமிழ்மறைக்குப் போதிய சான்றாய் நின்று, மேற்கூறியோராது பெறலரும் புலமையினையும், அவர்தம் நான்மாண்பையும், பொருளாகக்கொண்டு அருஞ் சொற்பொழிவொன்று நிகழ்த்தினர்.

தமிழ்நாட்டிற்குத் தனிப்பெருமணிகலனாய்த், தமிழர்க்கோர் பொன்றாப் புகழைத்தரும் பொருணிலையமாய், அறம், பொருள் இன்பம், வீடென்னும் நால்வகைப் பொருட்பயனையும் கைம்மேற்றருங் கவினுடையதாய் விளங்கும் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரியற்றிய திருக்குறண்மறையையும், யாம் மேலே விதந்து கூறிய பெரியபுராணப்பெருமையையும் கருவியாகக் கொண்டு, ஆசிரியர், திருவாளர். அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள் "திருவள்ளுவரும் சேக்கிழாரும்" என்பது பொருளாகச் சுவை மலிந்த சொற்பொழிவு செய்தருளினர். பின்னர்த் தலைவரவர்கள் இவ்விரு சொற்பொழிவுகளின் பொருண்மாண்பு குறித்தும், அவற்றின்கண் வலியுறுத்தற்பாலனவற்றையும், வேண்டுவன பிறவற்றையும் குறித்தும் முடிப்புரை வழங்கினர்கள். தமிழ்மறையும் தமிழ்த்தாய் வாழ்த்தும் ஒருங்குநிகழ, இரண்டாம் நாளைய முற்பகல் விழா நிறைவெய்தியது.

மாலை மூன்றரைமணிக்குப் பிற்பகுதி விழாக்கால்கொண்டது. வாழ்த்தும் வணக்கமும் மாண்புடன் நிகழ, தமிழ்கூறும் நல்லுலகத்து மக்கட்குப் பண்டைப்புகழுடையதாய், இன்றும் நின்று வயங்குவதாய், என்றும் அவர்க்குப் பேரின்பம் நல்கும் பெருநிலையாய் விளங்கும் சமயநெறியினை, தமிழரது வரலாற்றினையாராய்ந்து கண்ட முடிபுகளைத் துணையாகக்கொண்டு, திருவாளர். ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் "தமிழர் சமய வாழ்க்கை" என்னும் செம்பொருட்டலைப்பின்கீழ் ஓர் அரிய சொற்பெருமழை தேனொழுக்கெனப் பொழிந்தனர்.

இதற்குள் நாழிகை சென்றது; அவையோர் கூட்டமும் வர வர மிகுந்தது; "உழுந்திட விடமில்லை" என்றதற்குச் சான்றாய் மக்கட்டொகை மிக்கது; உயர்நிலையினரும், சமநிலையினரும் ஒரு நிலையினராய் நிற்றற்கேனு மிடங்கிடைப்பின் சாலுமெனு மெண்ணத்தராய் நின்றனர். அதுபோது, புலவர்பெருமகனார் பண்டிதமணி, திருவாளர். மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தமிழ் மறைதந்த திருவள்ளுவரும் அவர்தம் உளங் கண்டுதவிய பரிமேலழகரும் என்பது பொருளாக, தென்னுண் டேனிற் றேக்கிய செஞ்சொன்மாரி பொழிந்தருளினர்.

பின்னர்த் தலைவரவர்கள் இவ்விருபெருஞ் சொற்பொழிவுகளை நிகழ்த்திய தமிழ்த் திருவாளர்களின் உரைகட்கு முடிப்புரை தந்து, முடிவில் இவ்விரு நாட்களாகத் தம்மைத் தலைமையில் வைத்துப் போற்றிய சங்கத்தார்க்கும், தக்க சொற்பொழிவுகள் நிகழ்த்தி யவையைச் சிறக்கச்செய்த தமிழ்ப் பெருந்தகைகட்கும், அவைக்கண் எய்தி அமைதியமைய யமைந்து விழாவைச் சிறப்பெய்துவித்த பேரவையோர்க்கும் தம் நன்றியறிவைக்கூறி யமர்ந்தனர்.

பின்னர் எங்கள் சங்க அமைச்சர், திருவாளர் R. வேங்கடாசலம்பிள்ளையவர்கள், திருவிருந்த பேரவைக்கு வந்தெய்திச் சிறப்பித்த பெருந்தகைகள் அனைவருக்கும் நன்றிகூற, தமிழ்த்தாய் வாழ்க! தமிழ்த்தாய் வாழ்க!! என்னும் வாழ்த்தொலி எங்கணும் எழுந்து நிகழ, ஆண்டுவிழா தமிழ்மணங் கமழ்ந்து நிறைவெய்தியது. விழாக்காலத்தே நிகழ்ந்த அரிய விரிவுரைகளையும் அவைத்தலைவர் முன்னுரை பின்னுரைகளையும் எழுதித்தருமாறு அவரவர்களை வேண்டியுள்ளோம். வர, வர வெளியிட்டு வருவோம்.

ஔவை. சு. து.

தமிழ்த்தாய்
வாழ்க.

462

உ

பிழை திருத்தம்.

மூவர் தமிழ்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
359	...	(9) (5) (6) (7) (8) (முறையே)	(5) (6) (7) (8) (9).
360	28	பெண்டு பிள்ளை யென்னும்	மண் பெண் பொன் எனும்
361	14	இஃது இப்பெரியார்	இப்பெரியார்
,,	18	விளங்கும். நான்மறை	விளங்கும் 'நான்மறை'
,,	21	இவ்விளைய	இச்சிறிய
363	3	வேறுபாட்டின் இயைபு	பேதாபேதச்சம்பந்தம்
,,	12	பொருளின் வழி	பொருளின் மூலம்
,,	17	நாற்பொருணூலை	நாற்பொருணூலை
,,	(அடிக்குறிப்பு)	நட்டபாடை	நட்டராகம்
,,	,,	திருசிரபுரம்	திருச்சிரபுரம்
365	9	முற்காட்டியபடி உற்று நோக்கித்திருந்துவாராக.	முற்காட்டியபடி பலருக்கு உரியவேதம் எவ்வாறு மறையாம்?
,,	(அ—கு)	திரு.........மடல்	கபிலரகவல்
368	18	கூறப்படாத	அஃது கூறப்படாத
,,	25	தமிழுல்	தமிழில்
376	(அ—கு)	பக்கம் 15	பக்கம் 157
384	23	(14)	,,
,,	24	(15)	(14)
,,	(அ—கு)	(15) சுந்தரர் தக்கேசி திருவொற்றியூர் 7	,,